

குலோத்துங்கன் சபதம்
விக்கிரமன்

# ப • தி • ப் • பு • ரை

கற்கோயில்களையும் கோட்டைகளையும் அரண்மனைகளையும் காணும்போது நம்மையும் அறியாமல் நம் கற்பனைச் சிறகுகள் விரியும். நமது விழித்திரையில் ஆயிரம் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முந்தைய வரலாற்றுக் காட்சிகள் உயிர் பெற்று வண்ணத் திரைப்படங்களாய் ஓடும். இது எல்லோருக்கும் எப்போதாவது வாய்க்கும் சுகமான அனுபவம்தான்...

ஆனால் வரலாற்றுப் புதினங்களை வாசிக்கும் போதே இன்னும் அற்புதமான அனுபவத்துக்கு நாம் ஆட்படுகிறோம். வாழ்ந்து மறைந்த சரித்திர கதாபாத்திரங்கள் கம்பீரமாக உயிர் பெற்று நடமாடுகின்றன. தாய்நாட்டின் வளமும் அறவழி நின்று நல்லாட்சி புரிந்த அரசர்களின் ஆளுமையும், குறையின்றி மக்கள் நலமாக வாழ்ந்த வாழ்க்கையும் நம் கண்முன்னே மீண்டும் நடப்பதுபோல் விவரிக்கப்படுகின்றன. தேசத்தை வீழ்த்த அன்னிய சக்திகள் செய்யும் சதிகளும், அதை அறிந்து தன்னுயிரை துச்சமென நினைத்து சதியை முறியடிக்கும் சாணக்கிய சம்பவங்களும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

வாசிப்பவரைக் கையைப் பிடித்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றுக்குள் அழைத்துச் செல்லும் எழுத்து என்பது சாதாரணமானதன்று. தமிழகத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில படைப்பாளிகளே சரித்திரப் புதினம் படைப்பதில் சரித்திரம் படைத்திருக் கின்றனர். அவர்களுள் 'கலைமாமணி விக்கிரமன்'

அவர்களின் இளமை துள்ளும் ராஜலட்சணம் ததும்பும் எழுத்துகள் வசீகரமானவை. அதனால் தான் அவருக்கென்று ஒரு ரசனைமிகுந்த வாசகர் வட்டம் உருவாகியிருக்கிறது. இளைஞர்களும் கல்லூரி மாணவ மாணவியரும் தொடர்ந்து இவருடைய வாசகர் வட்டத்துக்குள் வந்த வண்ணமே உள்ளனர். இவருடைய நூல்கள் பதிப்பகங் களுக்குக் கௌரவமான விற்பனையைப் பெற்றுத் தருகின்றன.

கங்கை கொண்ட சோழன் நிர்மாணித்த கங்கா புரியில் தொடங்கும் இந்த வரலாற்றுப் புதினத்தை வாசிக்க எடுத்தால் கீழே வைக்கத் தோன்றாத சுவாரஸ்யம் நிறைந்தது. வாருங்கள், நமது மூதாதையர் பெருமைப்பட வாழ்ந்த ஒரு சாம்ராஜ்யத்துக்குள் நுழைவோம். சற்றே நிகழ் காலத்தை மறந்து கடந்த காலத்தின் வரலாற்றுக்குள் சுகமாக காலடி எடுத்து வைப்போம்....

மகிழ்வுடன்
பதிப்பகத்தார்

CONNEMARA PUBLIC LIBRARY
15 NOV 2010
CHENNAI-600 008.

# நுழைவாயில்

பெரும் கோட்டைக்குள் சென்று மாளிகையையும், சபை மண்டபத்தையும், மந்திராலோசனைக்கூடத்தையும், அந்தப்புரத்தையும் காணவேண்டுமானால் நுழைவாயில் வழியே சென்றுதான் ஆகவேண்டும்,

தமிழ்ப்பெருமக்களை இந்தச் சரித்திரப் புதினத்தைக் காண நுழைவாயில் வழியே அழைத்துச் செல்கிறேன். வாயிற் கபாடம் திறந்துவிட்டது. உள்ளே பார்த்தோமானால் இன்றைக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழகத்து நிலை தெள்ளெனத் தெரிகிறது.

கரிகால் பெருவளத்தானும், சிபியும், கோச்செங்கண்ண னும் கட்டி வளர்த்த சோழ சாம்ராஜ்யம், பல்லவப் பேரரச காலத்தில் காவிரிக் கரையருகே கையகல நாடாகப் பெருமை இழந்து விளங்கியது. இழந்த பெருமையை மீண்டும் நிலைநாட்ட விஜயாலய சோழதேவர் தோன்றி னார். உடலில் பல விழுப்புண்களைப் பெற்று வெற்றிக் கொடி நாட்டிப் பகைவரைப் புறமுதுகிட்டோடச் செய்த அந்த மாவீரன் தஞ்சைபுரியை சோழநாட்டின் தலை நகராக்கினான். அவனது புதல்வர்கள் புத்துயிரூட்டி சோழ நாட்டின் எல்லையை விரிவுபடுத்தி புலிக்கொடியின் மரபிலே மாபெரும் வீரன் இராசராசன் உலகத்து மாபெரும் சக்கரவர்த்திகள் வரிசையில் சமமாக எண்ணத்தக்க அளவுக்குப் புகழுடன் ஆண்டான். தஞ்சைப் பெரியகோயில் இன்றும் அவன் பெருமையைக் கம்பீரமாக நின்று புகழ்ப் பரணி பாடுகிறது. தமிழகத்தின் பொற்காலத்திற்கு எழுஞாயி றாக விளங்கிய இராசராசன் மகன் இராசேந்திரன் தந்தையை விட ஒருபடி மேலேயே சென்றுவிட்டான்.

கடல் கடந்த நாடுகளில் சோழர்தம் வீரத்தை நிலை நாட்டினான். வடக்கில் கங்கைவரை சென்று மங்காப்

புகழை வென்று வெற்றியின் சின்னமாகக் கங்கைகொண்ட சோழபுரம் எனும் நகரத்தை நிறுவினான்.

கங்கைகொண்ட சோழன் நிர்மாணித்த கங்காபுரியில் தான் நம் கதை தொடங்குகிறது. இன்றைய வாழ்க்கையும், சம்பவமும் நாளைய சரித்திரம். இராசராசன் விதைத்து, இராசேந்திரன் வளர்த்து அவனது மக்கள் ஒருவர்பின் ஒருவராகக் கட்டிக் காத்த சோழ நாட்டிற்கு ஒரு சமயம் பெரும் ஆபத்து நெருங்கியது. சோழ பரம்பரைக்கே முடிவு ஏற்பட்டுவிடுமோ? எனும் அச்சம் எங்கும் எழுந்தது. பகைவர்கள் சமயம் பார்த்துக் கத்தியைத் தீட்டிக்கொண்டிருந்தார்கள். உள் விரோதிகள் சதிவீரர்களாக மாறி கவிழ்க்கக் காலத்தை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்த யுக சந்தி வேளையிலே ஓர் இளைஞன் தோன்றினான். அவனுக்கு நியாயமாகச் சேரவேண்டிய நாடுகூடக் கிடைக்கவில்லை. போர் முனைகளிலேயே காலங்கழித்து சாம்ராஜ்ய நினைவே இல்லாமல் இருந்த வீரன் மாபெரும் சோழ சாம்ராஜ்யம் சின்னாபின்னா மாகாது காப்பாற்றினான்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என்றாலும் மனித குல ஆசாபாசங்கள், எண்ணங்கள், பழக்கங்கள் யாவும் என்றைக்கும் மாறாமலிருப்பவைதாம். சோழநாட்டின் விஜயாலயர் வழிவந்த அதிராசேந்திரனையும், கீழைச் சாளுக்கிய விசயாதித்தனையும் அவன் மகன் சத்திவர்மனையும், அரச குடும்பத்துப் பெண்களான அம்மங்கை தேவியையும், இளவரசி மதுராந்தகியையும் இன்னும் எத்தனையோ பேரையும் இந்த நாவலில் சந்திக்கப் போகிறீர்கள்.

அவர்களை யெல்லாம் காண அதிக நேரம் தடையாயிராமல் நுழைவாயிலின் தாளைத் திறந்து அழைக்கிறேன், வணக்கம்.

சென்னை-33. விக்கிரமன்

CONNEMARA PUBLIC LIBRARY
15 NOV 2010
CHENNAI-600 008

# குலோத்துங்கன் சபதம்

## 1. படகோட்டி

சோழகங்கப் பேரேரி பரந்து விரிந்து கிடந்தது. உதய சூரியனின் தங்கக் கதிர்கள் ஏரி நீரில் பாய்ந்து, அதைப் பொன்னேரி ஆக்கிக் கொண்டிருந்தன. அதுவும் ஒரு கடலோ என்று எண்ணுமாறு சிறு சிறு அலைகள், பாய்ந்து வரும் குதிரையைப் போல் துள்ளி வந்து கரையில் மோதின.

ஏரிக்கரை ஓரங்களில் மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. தென் மேற்குத் திசையில் ஏரியின் கோடியில் பெருங்காடு இருந்தது. காட்டை ஒட்டினாற்போல் குறுக்குப்பாதை வழியே சென்றால் உறையூரை அடையலாம். அடர்ந்த காடுகளின் மரநிழல், ஏரி நீரில் இருள்போல் பரவி இருந்தது. அந்த நிழல், ஏரியின் பயங்கர ஆழத்தைப் புலப்படுத்துவது போல் தோன்றியது.

கண்ணுக்கெட்டிய தொலைவுவரை ஒரே நீர்ப்பரப்பாய்த் தெரிந்த அந்த ஏரியில் சிறு சிறு பரிசல்களும் ஓடங்களும் சென்று கொண்டிருந்தன.

சிற்சில வேளைகளில் அரச குடும்பத்தார் ஏறிச் செல்லும் ராஜ ஹம்ஸப் படகும் செல்லும். கேளிக்கையாகச் செல்பவர்களும் ஏரியின் மறுகரையிலுள்ள சிற்றூர்களுக்குச் செல்பவர்களுமாக ஏரியில் கலகலப்பு நிறைந்திருக்கும்.

அன்று இளங்காலைப் போதில் ஏரியின் வடகரையின் அருகேயிருந்த சிறு குடிசையின் வாயிலில் ஓர் முதியவரும் இளம் வாலிபனொருவனும் வந்து நின்றார்கள்.

முதியவரின் கேசம் தும்பைப் பூவைப்போல் வெளுத்து நரை கண்டிருந்தது. கையில் தடியொன்றை ஊன்றிக் கொண்டிருந்தாலும் அந்த ஊன்றுகோல் இல்லாமலேயே நடமாடக் கூடிய சக்தி அவருக்கு இருந்ததென்பது அவருடைய தோளின்

திரட்சியிலிருந்து தெரிந்தது. மேலுக்கு நீண்ட சால்வையைப் போர்த்தியிருந்தார். பச்சை வண்ணமுடைய அந்த அங்கியில் விசித்திரமான சித்திர வேலைப்பாடுகள் நிறைந்திருந்தன. நீண்ட நாசியும், ஆழ்ந்த கண்களும், விசாலமான நெற்றியும் அவரை மதிப்பு மிகுந்தவராக ஆக்கிக் கொண்டிருந்தன. அவர் பெயர் அத்திமல்லர். சோழ நாட்டுச் சிற்றரசர்களுள் பலம் பொருந்திய சிற்றரசு, சேதி நாடு. சேதிநாட்டுத் தலைநகரான கிளியூரிலிருந்து ஆண்டு வந்த சேதிராயர் குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். அவருடன் வந்த இளைஞன் துடிப்பு மிகுந்தவனாகக் காணப்பட்டான். பார்வையில் துறுதுறுப்பும், நடையில் துள்ளலும் ஒரு நொடி கூட அமைதியாயிராமல் சுறுசுறுப்புடன் இங்கும் அங்கும் பார்ப்பதும், வழியேயுள்ள மரக்கிளைகளின் இலைகளைத் தாவிப் பறிப்பதும், சிறு கல்லை எடுத்து ஏரிநீரில் வீசி எறிவதுமாக முதியவரைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

"இந்த வழியாக நாம் எங்கே போகிறோம்?" என்று கேட்டான் அந்த வீர இளைஞன். முதியவர் மெல்ல நகைத்தார். இளைஞன் பக்கம் திரும்பி, "இராசேந்திரா! என்னுடன் வர உனக்குப் பயமாக இருக்கிறதா? கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று வந்த பிறகு நீ தைர்யமுடன் திகழ்வாய் என்று நினைத்தேன்... உன்னிடம் சந்தேகம் குடி கொண்டு விட்டதா? சந்தேகம் யாருக்கு ஏற்படும் தெரியுமா? கோழைகளுக்குத்தான்..." என்றார் அத்திமல்லர்.

இராஜேந்திரன் திடுக்கிட்டான். பெரியவரின் முன்னால் போய் நின்று, "பாட்டா, நான் கேட்டதைத் தவறாக நினைத்து விட்டீர்களா? எனக்கு ஏன் சந்தேகம் ஏற்படப் போகிறது? கிளியூரிலிருந்து தங்களுடன் எல்லா இடங்களுக்கும் வந்தேன், ஏன் - எங்கே என்று கேட்டேனா? எங்கோ முக்கியமான இடத்திற்கு என்னை அழைத்துச் செல்வதாகச் சொன்னீர்களே, அந்த இடமோ இது என்றுதான் எனக் கேட்டேன்..." அவன் முகத்தில் தோன்றிய மரியாதையும், தவறாக ஏதாவது பேசிவிட்டோமா எனும் அச்சமும் ஒருங்கு சேர்ந்திருப்பதை ஒரு நொடியில் கண்ட முதியவர், வெண் தாடியினின்று காவிப் பற்கள் வெளியே தெரிய மெல்ல நகைத்து, "முக்கியமான இடத்திற்குத்தான் உன்னை அழைத்துச் செல்லப் போகிறேன். இல்லாவிடில் ஊரில் எனக்கிருக்கும் அவசரக் காரியங்களை விட்டுவிட்டு உன்னை எதிர்பட்டிருப்



பேனா... இராசேந்திரா! உன்னுடன் பேசவேண்டியவை நிறைய இருக்கின்றன... வா... போவோம்..." என்றார்.

ஏரிக்கரைக்கு அருகிலிருந்த மாந்தோப்பின் நடுவே குடிசையொன்றிருந்தது. அந்தக் குடிசை வாயிலில் வந்து, "காளிங்கா, காளிங்கா" என்று அத்திமல்லர் குரல் கொடுத்தார்.

அத்திமல்லருக்குக் காளிங்கனை நன்றாகத் தெரியும். காளிங்கனைப் போன்ற உண்மை ஊழியர் அரசாங்கத்தில் ஒரு சில பேர் இருந்தால் போதும் என்று அவ்வப்போது கூறுவார்.

குடிசைக்கு வெளியே மாந்தோப்பு நிழலில் காளிங்கன் கஞ்சியைச் சுவைத்துக் குடித்துக் கொண்டிருந்தான். கஞ்சியின் சுவையுடன் அதை அவன் கரங்களில் ஊற்றும் அவன் அன்பு மனைவி கோமதியின் காதல் சுவையும் கலந்திருந்ததால், காளிங்கனின் களைப்பு நொடியில் பறந்துவிட்டது. மேலே மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டு சின்னஞ்சிறு குருவி இரண்டு ஒன்றை ஒன்று கொத்தி விளையாடின. சிறகைப் படபடவென்று அடித்தன. பொதுவாகக் காளிங்கனை அந்த நேரத்தில் குடிசையில் காண முடியாது. அவன் படகை ஒட்டிக்கொண்டு நடு ஏரியிலோ அல்லது ஏரியின் மறு கரையிலோ சென்று கொண்டிருப்பான். சூரியன் உச்சிக்கு வரும் வேளையில்தான் அவனைத் திரும்பவும் கரையில் காணமுடியும். படகைக் கரையில் மர வேரில் கட்டிவிட்டு மாந்தோப்புக் குடிசைக்கு வந்துவிடுவான். அவனுக்குப் பசி வந்தால் தாங்காது. அவன் ஆசையுடன் கொஞ்சும் கோமதியிடங்கூட அவன் பசிவேளையில் கோபமாகப் பேசுவான். வயிற்றில் கஞ்சியோ, சோறோ விழுந்துவிட்டால் கோபம் ஓடிவிடும்.

முதல்நாள் பொழுது சாயும்போது ஏற்பட்ட கடும் வேலை அப்போதுதான் தீர்ந்தது. கேரளாந்தகன் மாளிகையில் வேலை செய்யும் அவனுக்குத் தெரிந்தவரொருவர் அவனை நெருங்கி மறு கரைக்குப் படகோட்டிச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவன் சம்மதித்தான். அப்போதிருந்து அவன் இந்த நேரம்வரைத் துடுப்பைத் தள்ளினான். யார் யாரோ மறுகரைக்குப் போகவேண்டும் என்று வந்தார்கள். முண்டாசு கட்டியவர்கள்; அடர்ந்த மீசைக்காரர்கள்; கூர்மையான மூக்குடையவர்கள் - இப்படியாகப் பலர். அவர்களைக் காளிங்கன் இதுவரையில் கண்ட

தில்லை. அவர்கள் மறுகரைக்குப் போய் இறங்கினார்கள். ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளவில்லை. நான்கு பேர் ஐந்து பேராக வந்து கொண்டேயிருந்தார்கள். சுளுந்து வெளிச்சத்தில் படகோட்டும் நிலை நடு இரவில் ஏற்பட்டது. மறுகரையில் இறங்கி அவர்கள் கொடி வழியின் மூலம் எங்கோ சென்றார்கள்.

காளிங்கனுக்கு ஆவல் தாங்கவில்லை. அந்த இருட்டு வேளையில் இவ்வளவு பேர் எங்கே செல்கிறார்கள் என்று கேட்டு விட்டான். சரியான மறுமொழி கூறாமல் சுற்றி வளைத்து அவர்கள் கூறியவை அவனுக்குத் திருப்தி அளிக்கவில்லை. மாளிகை வேலைக்காரன் சொல்லியிராவிட்டால் அவன் படகோட்டச் சம்மதித்திருக்கமாட்டான்.

பொழுது புலரும் வரை மறுகரையிலே சித்திர மண்டப வெளித் தாழ்வாரத்தில் ஏதேதோ யோசித்த வண்ணம் உட்கார்ந்து இருந்தான். இரவு வீடு திரும்பாததால் கோமதி துடிதுடித்துப் போயிருப்பாள் என்று அவனுக்குத் தெரியும். அவன் அவளை மணந்து இந்த நாள் வரை இரவில் அவளைப் பிரிந்திருந்ததே கிடையாது.

பொழுது விடிந்ததும் பசியுடனும், களைப்புடனும் விரைந்து வந்த காளிங்கனை எதிர்பார்த்துக் குடிசை வாயிலில் காத்திருந்த கோமதியின் முகம் மலர்ந்தது.

"கஞ்சி குடித்துவிட்டுப் பேசுவோம்!" என்று கோமதி அழைத்தாள்.

"ஒரே புழுக்கமாயிருக்கிறதே! மாமரத்தடியில் உட்கார்ந்து பேசிக்கிட்டே குடிக்கிறேன்" என்று காளி கூறினான். கோமதி நாணம் நிறைந்த விழிகளுடன் அவனைப் பார்த்தாள். "அங்கே இப்போ என்னத்துக்கு? குடிசைக்குள்ளேயே சுடச் சுடக் கஞ்சி காய்ச்சித் தருகிறேன்" என்றாள். அவளுக்குக் காளிங்கனின் குறும்புத்தனம் தெரியும். காளிங்கன் தலை முண்டாசை அவிழ்த்து விட்டுக் கொண்டு, கோமதியின் கையைப் பிடித்துச் சிறு குழந்தையைப்போல் இழுத்துக் கொண்டு மாமரத்தடிக்குச் சென்றான்.

கஞ்சியைச் சுவைத்துக் குடித்த காளிங்கனுக்குக் களிப்புக் கூத்தாடியது. "ஆமாம்........ கஞ்சிக்குத் தொட்டுக்க ஒண்ணுமே கொண்டு வரவில்லையே" என்றான். கோமதி அவன் அருகே நெருங்கி உட்கார்ந்து கொண்டாள்.



"ஓகோ! உன்னைத் தொட்டுக் கொண்டால் போதும் என்கிறாயா?" என்று கூறி 'ஹோ ஹோ' என்று நகைத்தான்!

*"சுவையாய் இருக்குதடி*
*சோர்வெல்லாம் போச்சுதடி*
*உப்பைத்தான் போட்டாயோ?*
*உயிர் சேர்த்துப் போட்டாயோ?"*

என்று பாடத் தொடங்கி விட்டான்.

"ஆமாம் இப்பப் பாடுவே! நேற்று ராத்திரி முழுவதும் உன்னைக் காணாமே துடித்த துடிப்பில் உயிர் போகாமல் இருந்ததே! எங்கே போயிட்டே?" என்றாள் கோமதி. காளிங்கன் ஏதும் பேசாமல் அவள் கன்னத்தை இலேசாகத் தட்டி, தன் இடுப்பிலிருந்த தங்க நாணயத்தை எடுத்துக் காட்டி, "இராக்கண் முழிச்சதற்கு இதோ பார்!" என்றான். கோமதியின் முகம் மலர்ந்தது. ஆனால் அடுத்த கணமே காளி, "ஆனால் எனக்கென்னமோ, இரவில் படகில் சென்றவர்கள்மேல் சந்தேகமாயிருக்கிறது. இந்தத் தங்க நாணயத்தைத் தொடக்கூட மாட்டேன். அவர்கள் எல்லாம் நம்ம ராசாவை எதிர்த்துக் கலகஞ் செய்யத் திட்டம் போடுறாங்க போலிருக்கு" என்றவுடன், கோமதி கடுகடுப்புடன் "அப்படிப் பட்டவங்களை எல்லாம் நடு ஏரியிலே கவிழ்த்திருக்கக் கூடாது?" என்று கடிந்தாள்.

காளிங்கன், அவள் கரங்களை மெல்லத்தடவி, "என் ராசாத்திக்குக் கோபம் வரும்போதுகூட அழகாய்த்தானிருக்கிறது!" என்று கூறியவாறு மெல்ல அவள் மடியில் தலையை வைத்துப் படுத்து, "இன்னிக்கு என் மனசுலே சந்தேகம் விழுந்துடுத்து; இனிமே நான் விடுவேனா? நீயும் கவனத்தோட இரு... இங்கே யாராவது புது மனுசங்க நடமாடினா எங்கிட்டே சொல்லிடு...?" என்றான். கோமதியும் அவன் நெற்றியை மெல்லத் தடவினாள். அப்போதுதான் குடிசை வாயிலில் 'காளிங்கா, காளிங்கா' என்று அத்திமல்லர் குரல் கொடுத்தார். காளிங்கன் பரபரப்புடன் எழுந்தான். "சேதிநாட்டுச் சின்னவர் குரல் போலிருக்கிறதே" என்று கூறி விரைந்தான்.

குடிசை வாசலில் நின்று கொண்டிருந்த அத்திமல்லரையும், இராசேந்திரனையும் கண்டு ஒருகணம் காளி திகைத்தான். உயர்ந்த பட்டாடைகளும், வைர வைடூரிய ஆபரணங்களும் இளவரசுக்கு

உரிய கிரீடமும் அணிந்திருக்க வேண்டிய இராசேந்திரன், சாதாரண வீரனொருவனின் தோற்றத்தில் காணப்பட்டான்.

[வாசக அன்பர்களுக்கு: இராசேந்திரனை இதுவரை அறிமுகம் செய்து வைக்காமல் அவனை ஏரிக்கரை மீதும் மாந்தோப்பின் மீதும் நடந்து வரச்செய்து விட்டோம். குடிசை வாயிலில் சிறிது நேரம் காத்திருக்குமாறும் செய்து விட்டோம். அதற்காக இளவரசர் இராசேந்திரன் நம்மீது கோபப்படமாட்டார். இன்றைக்குச் சுமார் தொள்ளாயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு சோழ நாட்டின் புகழ் உலகெல்லாம் அறியச் செய்த மாபெரும் மன்னர் இராசேந்திர சோழ தேவர், கங்கை கொண்ட சோழபுரத்தில் வீற்றிருந்து ஆண்டார். அவருக்கு மூன்று குமாரர்களும் ஒரு பெண்ணும் இருந்தனர். ஒரே மகளான அம்மங்கை தேவியாரைச் சாளுக்கிய மன்னர் இராசராச நரேந்திரனுக்கு மணம் புரிந்து கொடுத்திருந்தார். அம்மங்கை தேவியின் திருக்குமாரன் தான் நம் இராசேந்திரன். கங்கை கொண்ட சோழரான இராசேந்திர னின் மகள் வயிற்றுப் பெயரன் இராசேந்திரன்.

சோழநாட்டிலும், கீழைச் சாளுக்கிய நாட்டிலும் இளவரசு மதிப்புடன் திகழவேண்டிய இராசேந்திரன், கால்களில் சக்கரம் இருந்ததுபோல் நாடெங்கும் சுற்றி அலைந்து கொண்டிருந்தான். பல நாட்களைப் போர்க்களங்களில் கழித்திருக்கிறான்.

இராசேந்திரனைச் சிறுவயதில் கங்கைகொண்ட சோழபுரத்து அரண்மனையில் காளிங்கன் பார்த்திருக்கிறான். அதன் பிறகு இராசேந்திரனை மறந்து விட்டான். அரண்மனையில் எவ்வளவோ அரசகுமாரர்கள் - அவர்கள் அனைவரையும் நினைவில் கொள்ள முடியுமா?

இராசேந்திரனை ஒரு தடவை கண்ணை இமைக்காமல் பார்த்தான் காளி. கோமதி, மரத்தின் மறைவில் போய் நின்று கொண்டாள்.

"என்ன காளி! என்ன அப்படிப் பார்க்கிறாய்? இளவரசன் இராசேந்திரன்தான்-மறந்து விட்டாயா? எவ்வளவு தடவைகள் சின்னஞ்சிறு வயதில் உன் தோளில் இளவரசரைச் சுமந்து படகில் ஏற்றியிருக்கிறாய்?" என்றார் அத்திமல்லர்.

காளி சிரித்தவாறு, "இளவரசரை நான் அடையாளம் தெரிந்து கொண்டு விட்டேன்... தாங்கள் குரல் கொடுக்காவிடில்



தங்களை அடையாளம் காண்பதேது? இந்த வேடம் எவ்வளவு நாட்களாக?" என்றான்.

அத்திமல்லர் மெல்ல நகைத்து, "என்னை நீ சந்தித்து ரொம்ப நாட்களாகி விட்டன. அதனால் இதை என்னுடைய வேடம் என்கிறாய்! வேடம் இல்லை காளி; என் தோற்றமே இப்போது இப்படித்தான்! வயது ஆகிக் கொண்டிருக்கிறதே. சோழ நாட்டிற்கு இப்போது இந்த நிலை வராவிடில் நான் எப்போதோ காசி, ராமேச்வரம் என்று போயிருப்பேன்" என்றார்.

காளி சற்று நேரம் மௌனமாயிருந்தான். பிறகு, "ஆமாம் சாமி! நாட்டு நிலை ரொம்பவும் கெட்டுத்தான் போயிருக்கு. யார் யாரோ முகம் தெரியாதவர்களெல்லாம் வருகிறார்கள். இரவு முழுவதும் துடுப்புத் தள்ளி என் தோள் இரண்டும் விட்டுப் போவது போல் வலிக்கிறது..." என்றான்.

"இன்னும் கொஞ்சம் வலிக்கட்டுமே என்று உன்னைத் தொந்தரவு செய்யத்தான் வந்திருக்கிறோம். அது சரி, இரவெல்லாம் தென்கரைக்குச் செல்ல அவ்வளவு பேர் வந்தார்களா? நல்ல வருமானம் என்று சொல்லு" என்று மெல்லக் கேட்டார் அத்திமல்லர்.

"சாமி! அவர்களைப் பார்த்தால் எனக்கு என்னவோ சந்தேகமாய்த்தான் இருக்கிறது. சிலரைப் பார்த்தால் பெரிய மனிதரைப் போல் தோணுது. சிலருக்கு இந்தத் தேசமே இல்லை போலும் தோணுது. ஏன் சாமி, ஊரெல்லாம் பேசிக் கொள்கிறார்களே, மகாராசாவுக்கு தேகநிலை எப்படி இருக்கிறது? வாய் பேச முடியாமல் அடைத்து விட்டதாமே..." என்று கேட்டான் காளி.

"ஆமாம்... ஆமாம்... என் காதுகளிலும் அப்படித்தான் வீழ்ந்தது. என்னைக் கூப்பிட்டு மன்னர் நிலையைச் சொல்ல யார் இருக்கிறார்கள்? சரி... சரி...... நேரமாகிறது, போய்க்கொண்டே பேசுவோம். இளவரசருக்குச் சித்திர மண்டபத்தைக் காட்ட வேண்டும்... படகை எடு... போய்விட்டு உடனே திரும்பி விடலாம்..." என்றார் அத்திமல்லர்.

காளிங்கன் உடனே புறப்பட ஆயத்தமானான். அப்போது தான் அங்கே வந்த அவனது பாட்டி, இளவரசர் இராசேந்திரனைப் பார்த்தவுடன் திகைத்து நின்றாள். "ஆ... மகாராசா" என்று அவள் வியப்புடன் கூவியது அனைவர் செவிகளிலும் வீழ்ந்தது.

அந்த மூதாட்டியார் வியப்படைந்ததில் ஆச்சரியமில்லை. மூதாட்டியார் சிறுவயதில் கங்கைகொண்டு புகழ்பெற்ற இராசேந்திர சோழ தேவரை நேரே கண்டிருக்கிறாள். இளவரசன் இராசேந்திரனுக்கு இப்போது என்ன வயதோ அதே பிராயமுடைய இராசேந்திர சோழ மன்னர் கம்பீரமாகக் குதிரை மீது ஆரோகணித்து வருவதைக் கண்டிருக்கிறாள். அரிமா போன்ற பிடரி; கூர்ந்து நோக்கி எதிராளியின் உள்ளத்தை அறியக்கூடிய சக்தி வாய்ந்த கண்கள்; சிவந்த மேனி. 'ஆகா! இராசேந்திர சோழ மன்னரை அப்படியே மீண்டும் அச்சில் வார்த்தது போன்று இருக்கிறானே இந்த இளைஞன். ஒருவேளை கங்கை கொண்ட சோழர் மீண்டும் பூமியில் அவதரித்து விட்டாரோ?' மூதாட்டி ஒரு முறை கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள்.

காளிங்கனும், இளவரசன் இராசேந்திரனும், அத்திமல்லரும் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்ற மூதாட்டி, தன் மருமகள் கோமதியை நோக்கி, "என் கண்களில்தான் கோளாறா? கங்கை கொண்ட சோழர் மீண்டும் இந்த நாட்டில் உலாவுகிறாரா? யார் இந்தப் பிள்ளை?" என்று கேட்டாள்.

கோமதி பரபரப்புடன், "அவர்தான் இளவரசர், அவர்தான்......" என்று மேலும் சொல்ல வாயெடுத்தவள், எதையோ கண்டதால் மேலே வார்த்தையெழாமல் திகைத்தாள். இவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்துக்கு அருகே இதுவரை மறைந்து கேட்டுக் கொண்டிருந்த ஓர் உருவம் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

## 2. ஏரியின் மறுகரை

காளிங்கனுக்குப் பெருமை தாங்கவில்லை! இளவரசரையும், அத்திமல்லரையும் படகிலே ஏற்றிக்கொண்டு செல்லும் களிப்பில் அவன் உடல் களைப்பைக்கூட மறந்தான்! அவனை அறியாமல் அவனிடமிருந்து உற்சாகமான பாடல் எழுந்தது.

*"வானத்தின் மீதேறி எங்கள் மகராசா*
*வரிசைகள் கொண்டு வருவோம்!*
*கூனப் பிறை யடைந்து மகராசா-புலிக்*
*கொடியை நாட்டி வருவோம்"*



இந்தப் பாடலைக் கேட்டு இராசேந்திரனுக்கு உற்சாகம் தாங்கவில்லை! அவன் தோள்கள் விம்மியிருக்க வேண்டும்!

"பாட்டா! புலிக்கொடிக்குத்தான் என்ன மகத்துவம் பார்த்தீர்களா? கடாரப் படையெடுப்பில் புலிக்கொடியைக் கண்டவுடனே எதிரிகள் மறுபேச்சுப் பேசாமல் சரண் அடைந்தனர். சரண் அடையாதவர்கள் உயிருக்கஞ்சி ஓடி ஒளிந்தனர். காளிங்கன் பாடும் இந்தப் பாட்டு எனக்கு முன்பே தெரிந்திருந்தால் நான் கடலில் வரும்போது கப்பலின் மேல் தளத்தில் நின்று உற்சாகமாகப் பாடியிருப்பேன்..." என்று பெருமை தாங்காமல் பேசினான்.

அத்திமல்லர் சிரித்தார். அந்தச் சிரிப்பிலே ஏளனம் இருந்திருக்க வேண்டும். காளிங்கன் பாடலை நிறுத்தினான். இராசேந்திரன், அத்திமல்லரை நோக்கினான்.

"இராசேந்திரா! புலிக்கொடியின் பெருமையைப் பற்றிக் காளிங்கன் ஒருவன்தான் பாடுகிறானா? சங்க காலத்திலிருந்தே அதற்குக் குறைவில்லை! இன்று என்ன நிலை? உன் மாமன் வீரராசேந்திரன் கட்டளையைச் சிரமேற் தாங்கிக் கடாரம் சென்றாய். வீரராசேந்திரன் எவ்வளவோ கனவுகள் கண்டான். நீ திரும்பி வருவதற்குள் தன் மனத்திலிருப்பதை வெளியே தெரிவிக்காமல் அவன் காலமானான்... அப்படித்தான் எல்லாரும் நினைத்திருக்கிறார்கள். ஆனால், அவன் ஒருமுறை எனக்கு எழுதிய ஓலை என்னிடமிருக்கிறது..." என்று சொல்லிச் சற்று நிறுத்தினார் அத்திமல்லர்.

இராசேந்திரன், தன் விழியில் ததும்பிய நீரை மெல்லத் துடைத்துக் கொண்டு, "தாத்தா நான்கூட எதிர்பார்க்கவில்லை. கடாரம் வென்று வெற்றிப் புகழுடன் வரும் என்னை அவர் வரவேற்றுப் பாராட்டுவார் என நினைத்தேன். புகழ்ச் செய்தியைக் கேட்காமலேயே அவர் இறந்து விடுவார் என நான் நினைக்கவில்லை... கடாரத்தினின்று திரும்பியதும் என் சிற்றப்பாவிடம் சொல்லி, என் நாட்டை எனக்கே ஆள வழி செய்வதாக வாக்களித்திருந்தார்..." என்று விம்முங் குரலில் கூறினான்.

அத்திமல்லருக்கு ஏனோ எதற்கோ சிரிப்பு பொங்கி வந்து கொண்டிருந்தது. 'சளக் சளக்' என்று துடுப்பின் ஒலிக்குப் போட்டியாக அவர் சிரிப்பொலி எழுந்தது. "இராசேந்திரா! உனக்குக் கீழைச் சாளுக்கிய நாட்டை வாங்கித்தருவதாக அவர் வாக்களித்திருந்தாரா! வேடிக்கைதான்! உயிரோடு அவர் இருந்தால்

இந்தச் சோழ நாட்டை அவருக்கு வாங்கித்தர யாராவது வந்து குதிக்க வேண்டும்..." என்று கூறிய அத்திமல்லர், குரலில் சற்றுக் கவலையை ஏற்றி, "கம்பீரமாகப் பறந்த புலிக்கொடிக்குத் தாழ்வு ஏற்படும் போலிருக்கிறதே இராசேந்திரா! இங்கேயே இந்த நிலை என்றால், நீ உன் நாட்டைப்பற்றிப் பேசத் தொடங்கி விட்டாய்..." என்றார்.

கவலை தோய்ந்த முகத்துடன் இராசேந்திரன், "தாத்தா எனக்கு ஒன்றுமே புரியவில்லை! நீங்கள் சொல்வது ஒவ்வொன்றும் மூடு மந்திரம் போல் இருக்கிறது. இந்தச் சோழ நாட்டிற்கு அப்படி என்ன ஆபத்து வந்துவிட்டது சொல்லுங்கள்..." என்று கேட்டான்.

"உனக்கு எல்லாவற்றையும் புரிய வைக்க வேண்டும் என்பதற்காகத்தானே கிளியூரைவிட்டு உன்னுடன் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வந்தேன். உன்னுடைய நிலையின் பரிதாபத்தைப் புரிந்து கொண்ட நான், என்னை மதிக்காத இந்த நகரத்தின் வாசலை மிதிக்கத் துணிந்தேன்?"

"அதனால்தான் மாளிகைக்குள் வரமாட்டேன் என்கிறீர்களா?"

"உம்; வராமலா போகப் போகிறேன். சோழ நாட்டைப் பங்கு போட்டு விழுங்கி விடவேண்டும் என்று சிலர் மனப்பால் குடிக்கிறார்கள். அத்தகையவர் எண்ணத்தைச் சிதற அடிக்கத் தானே நான் புறப்பட்டிருக்கிறேன்..."

"தாத்தா, நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பெரும் ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது எனத் தெரிகிறது..."

"ஆபத்து ஒன்றும் நெருங்கிவிடவில்லை... இப்போதுதான் உதயமாகிக் கொண்டிருக்கிறது இராசேந்திரா! அதைப் பற்றிய கவலை உனக்கு இப்போது வேண்டாம். உன்னைச் சித்திர மண்டபத்துக்கு அழைத்துச் செல்லும் நோக்கமே, உன் கடமையொன்றை உனக்கு வற்புறுத்தத்தான்..."

"கடமையா...?"

"ஆம், இராசேந்திரா... எல்லாம் விபரமாகச் சொல்கிறேன்" என்றார் அத்திமல்லர்.

ஏரியின் மறு கரையைப் படகு வந்தடைந்தது. படகினின்று இறங்கிய அத்திமல்லரும், இராசேந்திரனும் மெல்ல நடந்து சித்திர மண்டபத்தை நோக்கிச் சென்றார்கள். சித்திர மண்டபம் அமைந்திருந்த இடம் அற்புதமாக இருந்தது. அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்த இராசேந்திர சோழரின் கலைப் புலமையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால், அவர் காலத்திற்குப் பிறகு அந்த மண்டபத்தைப் பழுது பார்க்க யாரும் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை.



மண்டபத்தின் வெளிச் சுவரின் காரைகள் பெயர்ந்து விழுந்திருந்தன. அரசமரக் கன்றுகள் மண்டபக் கூரையில் தாங்கள்தான் அரசவாரிசு என்பது போல் முளைத்திருந்தன. மண்டபத்திற்குப் போகும் வழியெல்லாம் புதர் மண்டி ஒற்றையடிப் பாதை ஒன்றுதான் நடப்பதற்கு ஏற்றதாக இருந்தது.

"இது என்ன மண்டபம் தாத்தா?" என்று இராசேந்திரன் கேட்டான்.

"இதுதான் சித்திர மண்டபம். உன் தாய்வழிப் பாட்டனார் கங்கைகொண்ட சோழர் கட்டியது. தன் தந்தைக்கு இணையாக இங்கே ஒரு நகரமும், பெருவுடையார்க் கோயிலைப் போன்று பெருங்கோயிலும் படைத்தவராயிற்றே! தஞ்சைக் கோயிலிலுள்ள சித்திரங்களைவிடச் சிறந்த சித்திரங்களைத் தீட்டவேண்டும் என்பதற்காக இம்மண்டபத்தைக் கட்டினார்..."

"நான் சோழ மாளிகையில் சிறிய வயதில் இருந்தபோது கூட எனக்கு இந்த மண்டபத்தைப் பற்றித் தெரியாதே..."

"உனக்கு எதுவும் தெரியக்கூடாதென்றுதானே உன் பாட்டிமார்களும், மாமன்மார்களும் வளர்த்து வந்தார்கள். அந்தச் சித்திரங்களைப் பார்த்த பிறகு உன் மனநிலையை எனக்குச் சொல்லு" என்று கூறி, அத்திமல்லர் பேச்சை நிறுத்தினார்.

சித்திர மண்டபத்தை நெருங்கியபோதுதான் அங்கே வாயிலில் இரு புரவிகள் கட்டப்பட்டிருப்பதையும், சிவிகையொன்று இருப்பதையும் அவர்கள் கண்டார்கள்.

"யாரும் நடமாடாத இடம் இது என்று சொன்னீர்கள்; இந்த இடத்தில் அரச குடும்பத்துப் பல்லக்கு நிற்கிறதே..." என்று கேட்டான் இராசேந்திரன்.

"நானும் அதைப்பற்றித்தான் யோசிக்கிறேன். மாளிகையிலிருந்து இந்த நேரத்தில் யார் வந்திருப்பார்கள் என்று சிந்திக்கிறேன்... ஹும்" என்றார் அத்திமல்லர்.

அவர் சொல்லி வாய் மூடும் முன்பு சித்திர மண்டபத்திலிருந்து இரு இளம் பெண்கள் வெளியே வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து இரு வீரர்கள் வந்தார்கள். சிவிகை சுமப்போர் நால்வர் கையில் எரியும் சுளுந்துடன் வந்தார்கள்.

"ஓ! மதுராந்தகியா? எப்படி வனப்புடன் வளர்ந்துவிட்டாள்?" என்று அத்திமல்லர் முணுமுணுத்துக் கொண்டார். அவ்விரு பெண்களுள் கம்பீரமான தோற்றமும், அழகும் நிறைந்த மதுராந்தகி, சிவிகையில் ஏறு முன்பு சுற்று முற்றும் நோக்கினாள். அவள் கண்கள் இராசேந்திரனைக் கண்டன. வியப்பால் அந்த விழிகள் ஒரு கணம் சுழலாமல் இருந்திருக்க வேண்டும். இமைகள் படபடக்காமல் ஒரு கணம் இருந்திருக்க வேண்டும்.

மதுராந்தகியால் இராசேந்திரன் மேல் வீழ்ந்த பார்வையை அவ்வளவு எளிதில் திருப்ப முடியவில்லை.

## 3. நாட்டிய மண்டபம்

இளவரசி மதுராந்தகி, சிவிகையில் ஏறி அமர்ந்து விட்டாள். திரை மறைவில் தெரிந்த அந்த வட்ட முகமும் மறைந்து விட்டது. வளையல் குலுங்கும் ஒலியும், தலையில் சூடியிருந்த மலரின் மணமும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தன.

இராசேந்திரன், சிவிகை செல்லும் திக்கை நோக்கி நின்று கொண்டிருந்தான். அத்திமல்லர், அவன் தோளில் மெல்ல தன் கரத்தை வைத்து, "இராசேந்திரா! சித்திரமண்டபத்துச் சித்திரங்களை அல்லவா பார்க்க வந்தோம்..." என்று கூறி மெல்ல நகைத்தார். இராசேந்திரனும் தன் நிலையுணர்ந்து வெட்கி, "ஆமாம், ஆமாம், பாட்டா, சித்திரங் காணத்தான் வந்தோம். ஆனால், இந்த மண்டபத்திலிருந்து சித்திரமே உயிர் பெற்று வெளியே நடந்து வந்து விட்டதோ என்று திகைத்து விட்டேன்"என்று கூறி மென்னகை புரிந்தான்.

அத்திமல்லர் பெருமூச்சு விட்டபடி, "இராசேந்திரா, அது யாராயிருக்கும் என்று யூகித்துச் சொல் பார்க்கலாம்?" என்று கேட்டார்.

"பாட்டா, எனக்கு எல்லாமே புதுமையாகத்தான் இருக்கிறது. கங்காபுரி புதிய ஊராகத் திகழ்கிறது. மாளிகை புதிதாக இருக்கிறது.



நான் இளம் வயதில் பழகிய இடங்கள், விளையாடிய இடங்கள் எல்லாம் இப்போது மாயாபுரிபோல் மாறியிருக்கின்றன."

"இவளும் அப்படித்தான் மாறிவிட்டாள். அதிலும் பெண்களின் வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது."

"யாரைச் சொல்கிறீர்கள்...?"

"உன் தாய் மாமன், உன் பெயர் கொண்ட பரகேசரி இராசேந்திர சோழ தேவரை உனக்குத் தெரியுமா?"

"புரிந்து விட்டது. புரிந்து விட்டது... மதுராந்தகியா? அப்பா! எப்படி வளர்ந்திருக்கிறாள்? நேற்று அரண்மனைக்குச் சென்ற போதுகூடக் காணவில்லையே. சின்ன வயதில் விழி தாமரை போல் விரியக், களுக்கென்று நகைப்பாள். அது இன்றும் நினைவிருக்கிறது."

"இராசேந்திரா, உன் எதிரே அவ்வளவு எளிதில் அவள் தென்படமாட்டாள், தோன்றவும் விடமாட்டார்கள் உன் மாமிமார்கள். இப்போது எங்கு வந்து செல்கிறாள் என்று தெரியவில்லை" என்று கூறிவிட்டுச் சித்திர மண்டபத்திற்குள் நுழைந்தார்.

சித்திர மண்டபத்தினுள்ளே கோயில் பிரகாரம்போல் சுற்றுப் பகுதி கட்டப்பட்டிருந்தது. நடுவே கரு அறையில் ஆடவல்லான் திரு உருவம் விளங்கிற்று. அதற்குப் பூசை செய்ய கங்கை கொண்ட சோழன் சில நிலங்களை அளித்திருந்தும், நிலத்தை யாரோ அநுபவித்துக் கொண்டு பூசையில்லாமல் செய்து விட்டனர்.

சுற்றுப் பிரகாரத்தின் முதல் சித்திரத்தில் சிபி சக்ரவர்த்தியின் வீரத் திருஉரு தீட்டப்பட்டிருந்தது. கையில் சுளுந்து வெளிச்சம் இல்லாமல் ஓவியங்களைக் காணமுடியாது போலிருந்தது.

"வெளிச்சம் கொடுப்பதற்காக மேலே இடைவெளியிருந்தது. அதையும் யாரோ அடைத்து விட்டார்கள் போலிருக்கிறது. காளிங்கனிடம் வரும்போது தீவர்த்தி கொண்டு வரச் சொல்லாமல் இருந்து விட்டோமே" என்று அத்திமல்லர் வருத்தப்பட்டுக் கொண்டார்.

"இப்போது இளவரசி மதுராந்தகியுடன் வந்த காவலர்கள் வைத்திருந்த சுளுந்துகளைக் கேட்டு வாங்கியிருக்கலாமே..." என்றான் இராசேந்திரன்.

அத்திமல்லர் ஏதும் பேசவில்லை. இங்கும் அங்கும் பார்த்தார். அப்போது காளிங்கன் வேகமாக வந்து கொண்டிருந்தான்,

அத்திமல்லரை நெருங்கி, "ஐயா, ஐயா, இப்படி வாருங்கள்..." என்று அவசரம் அவசரமாக அழைத்தான். அத்திமல்லர், அவன் அருகே சென்றார். அவர் காதருகில் காளி ஏதோ கூறினான். அவர் இராசேந்திரன் அருகே மீண்டும் திரும்பி வந்து, "இங்கேயே சிறிது நேரம் இரு. நான் நொடியில் வந்து விடுகிறேன். சும்மாயிருக்கத் தோன்றாவிடில் சித்திர மண்டபத்துள்ளே சென்று ஏதாவது சித்திரம் புலப்படுகிறதா என்று பார்த்துக் கொண்டிரு" என்றார்.

அத்திமல்லர் கூற்று, இராசேந்திரனுக்குப் புரியவில்லை. அவருக்கு ஏதாவது சித்தப்பிரமையோ என்றுகூட அவனுக்குத் தோன்றியது.

"நீங்கள் இல்லாமல் மண்டபத்தில் என்ன பார்க்கப் போகிறேன்? நானும் தங்களுடன் வருகிறேன்..." என்றான்.

"இல்லை; நான் சொல்வதுபோல் இப்போது மட்டும் கேள். ஒரு முக்கிய காரியம். நான் போய் வந்து சொல்கிறேன். நீ வந்தால் அங்கு கூடியிருப்பவர்கள் விழித்துக் கொண்டு விடுவார்கள்..." என்று அத்திமல்லர் சொல்லவும், இராசேந்திரன் திகைத்தவனாக அங்கிருந்த மர வேரில் அமர்ந்தான்.

அத்திமல்லரும், காளிங்கனும் அங்கிருந்த ஒற்றையடிப் பாதை வழியாக விரைந்தனர். சற்றுத் தொலைவு சென்றதும் பாழடைந்த மண்டபம் ஒன்று காணப்பட்டது. மண்டபந்தான் பாழடைந்திருந்ததேயொழிய, அங்கு அடிக்கடிப் பலர் வருவதால் நடமாடும் பாதை தெளிவாக அமைந்திருந்தது. மண்டபத்திற்குச் சற்றுத் தொலைவில் வரும்போதே, உள்ளேயிருப்பவர்கள் பேசுவதும், சிரிப்பதும் 'ஹா ஹா' என்று முழங்குவதுமாகச் சப்தம் கேட்டது.

அத்திமல்லர் சற்று நின்றார். காளி அவரை நெருங்கி, "பார்த்தீர்களா! ஓநாயும், கழுதைப் புலியும் தங்கும் இடத்தில் மனிதப் பேய்கள் இடும் கோஷத்தை" என்றான்.

மண்டபத்திற்குள் ஒரே குதூகலம்! மண்டபத்தின் நடுக்கூடத்தில் ஒரு காலத்தில் கங்கை கொண்ட சோழர் வந்திருந்து, தனிப்பட்ட முறையில் நாட்டியத்தையும், இசையையும் ரசித்திருக்கிறார். பல நாட்டிலிருந்து வந்த இசையணங்குகள், தங்கள் திறமையைப் புலப்படுத்திப் பரிசுகள் பெற்றுச் சென்றிருக்கின்றனர். கங்கை கொண்ட சோழருக்குப் பிறகு சித்திர மண்டபம் கவனிக்கப்படாதது போலவே, நாட்டிய மண்டபமும் கவனிப்பாரற்றுப்



போய்விட்டது. முன்பே கானக சூழ்நிலையில் அமைந்திருந்த அந்த மண்டபம், இன்னும் பயங்கரமாக அடர்ந்த புதர்களுக்கும், மரங்களுக்கும் இடையே தனியே சோர்ந்து காட்சியளித்தது.

அந்த மண்டபத்திற்கு இன்று மீண்டும் புத்துயிர் ஏற்பட்டது போல் பாதச் சதங்கை ஒலி கேட்டது. கொச்சையான மொழியில் ஏதோ பாட்டும், அதைத் தொடர்ந்து தாளச் சப்தமும், பாராட்டிச் சிரிக்கும் ஒலியும் கேட்டன. இரவு முழுவதும் அங்கே பாட்டோசையும், நடன ஒலியும் கேட்டவண்ணமிருந்தன. நாட்டியம் ஆடும் அந்நங்கை சோழ நாட்டைச் சேர்ந்தவளாகத் தோன்றவில்லை.

அவள்-சந்திரகுமாரி-கீழைச் சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவள். சிறிது நாட்களுக்கு முன்பு கங்கை கொண்ட சோழபுரம் வந்து, நடு இரவில் இப்படி நாட்டியமாடுவோம் என்று அவள் நினைக்கவில்லை. அவள் உடன் வந்த அவளுடைய தாய் மாமன் கங்கபீமன், அவளுக்கு எவ்வளவோ வாக்குறுதிகளை அளித்து அழைத்து வந்திருந்தான்.

அந்த மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் சாதாரண மனிதர்களல்லர். ஒவ்வொருவரும் தனித்தனி அந்தஸ்துடன் கூடியவர்கள். தனிக்கொடி, விருது, படை இவ்வளவும் உடையவர்கள். அவர்கள் பாழ்மண்டபத்திலே கூடவே வேண்டாம். அவர்கள் விரும்பினால், கங்காபுரியின் மாளிகையில், இரத்தினம் இழைக்கப்பட்ட கூடத்தில் சகல சௌகரியங்களுடன் தக்க வசதி கிடைக்கும். இட்ட வேலை செய்ய பணி ஆட்கள் காத்திருப்பார். ஆனால், அவர்களுக்கு எதிர் காலத்து இன்பவாழ்வு எனும் அசட்டு நம்பிக்கை பிறந்திருக்கும் போது அவர்கள் சோழ அரண்மனையில் சந்திக்கத் துணிவார்களா?

மாளிகையில் படுத்த படுக்கையாகக் கிடக்கும் அதிராசேந்திர சோழ தேவரைக் காணவருவது போன்று வந்து, காட்டின் நடுவே நாட்டிய மண்டபத்தில் அவர்கள் ஒன்று கூடினர் என்றால், அதில் அந்தரங்க நோக்கம் இருக்கத்தான் செய்தது. அந்தக் குறுநில மன்னர்களும் அவர்களுடைய பிரதிநிதிகளும் பல காத தூரத்திலிருந்து வந்திருந்தவர்கள். அவர்கள் வந்திருந்த சமயத்தில் அவர்களை ஒன்றுசேர்க்கும் முயற்சியில் இறங்கியவன் சீயகங்கன். கங்கபாடி நாட்டின் ஒரு சிறுபகுதியை அரசாளும் சிற்றரசன்.

சீயகங்கன் அளிக்கும் விருந்துக்கு ஏரியின் தென்கரைக்கு எல்லா குறுநில மன்னர்களும் வந்தனர். முதல் தரமான விருந்து.

பலருக்கு விருந்து நடந்த மண்டபம்தான் பிடிக்கவில்லை. சுளுந்து வெளிச்சமும், அந்த வெளிச்சத்தில் ஆடி அசையும் ஒட்டடைகளும், மேல் விதானத்தில் பதுங்கி உட்கார்ந்திருக்கும் ஆந்தைகளும் அருவருப்பை அளித்தன. ஆனால், விருந்து முடிந்தவுடன் சந்திரகுமாரியின் சதங்கை ஒலியுடன் கூடிய நாட்டியமும், போதை தரும் மதுவும், அதைவிட போதை தரும் நாட்டியக்காரியின் தோற்றமும், சிறு அசௌகரியங்களையும் மறக்கச் செய்தன.

வயது முதிர்ந்த தகடூர் நாட்டுச் சிற்றரசருக்கு சந்திரகுமாரியின் நாட்டியம் மயக்கத்தை ஊட்டியது என்றால், கொங்கு மண்டல கேரள கேசரிக்குக் கேட்க வேண்டுமா? அவர் அங்கேயே அழைப்பு விடுத்துவிட்டார்- தன் மாளிகையிலும் அவள் வந்து ஆட வேண்டும் என்று.

இரவு கழிந்து பொழுது விடிந்ததே அவர்களுக்குத் தெரியவில்லை. பாண்டிய நாட்டு மன்னன் சீவல்லபனுடைய பிரதிநிதி எழுந்து தொண்டையைக் கனைத்துக் கொண்டு, அங்குக் குழுமியிருந்தவர்களைத் தன்பக்கம் திருப்பப் பலமாகக் கூவினான்.

அத்திமல்லரும், காளிங்கனும் நாட்டிய மண்டபத்துப் பின்புறமாக வந்து, அங்குக் கூட்டத்தில் இருண்ட தூணோரம் நின்று கொண்டனர்.

சந்திரகுமாரி களைப்பால் துவண்டாள். அவள் பாதங்கள் கெஞ்சின. காமம் பொழியும் அவள் விழிகள், சோர்ந்து போய்ச் சுழன்றன. மேளம் தட்டுபவனையும் உறக்கம் மெல்ல ஆட்கொண்டதால், அவன் தப்புத் தாளம் போட ஆரம்பித்தான். சீவல்லபனுடைய பிரதிநிதி சந்திரகுமாரியின் அருகே சென்று, "நீ நிறுத்தினால்தான் அவர்கள் என் பேச்சைக் கேட்பார்கள்" என்றான். சந்திரகுமாரியால் நிற்க முடியவில்லை. மெல்ல அவன் தோள் மேல் சாய்ந்தாள்.

"என்ன பாண்டியரே, நீரும் அவளுடன் சேர்ந்து ஆடப் போகிறீரோ?" என்று கொங்கு தேவர் கேட்கவும், அங்கே 'ஹோ' என்ற சிரிப்பொலி எழுந்தது.

சீவல்லபனுடைய பிரதிநிதி, சிரித்தவர்களைப் பார்த்துச் சீறினான். "நாம் இங்கே நாட்டியம் ஆடக் கூடியிருக்கவில்லை" என்றான்.



"நாம் ஆட வரவில்லை என்பது உண்மைதான். நாம் ஆடினால் யார் பார்ப்பார்கள்? அதோ அந்தத் தேவமாதின் நாட்டியத்தைக் காணத்தான் வந்திருக்கிறோம். ஆடு மகளே ஆடு" என்று வாய் குழறிப் பேசினார் தகடூர் மன்னர்.

அத்திமல்லர் தலையில் அடித்துக் கொண்டார். 'கிழவனுக்கு இந்த வயதில் இப்படியொரு புத்தியா' என்று முணுமுணுத்தார். அப்போது சீயகங்கன் எழுந்து சொன்னான். "நன்றாக உண்டோம்; நாட்டியம் அனுபவித்தோம்; பொழுது விடிந்துவிட்டது. நமது திட்டத்தைப் பற்றி ஆலோசிக்க வேண்டாமா?" என்று உரத்த குரலில் பேசினான்.

நாட்டியம் நின்றது. சதங்கை ஒலி மறைந்தது. தாள சப்தம் ஓய்ந்தது. கண் சுழல பாதி உறங்க முற்பட்டவர்கள், நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டனர், சீவல்லபப் பாண்டியனின் பிரதிநிதி சொல்லப் போவதைக் கேட்பதற்காக.

## 4. வாளும் விழியும்

அத்திமல்லர் சென்ற பிறகு சிறிது நேரமே இராசேந்திரன் மர நிழலில் அமர்ந்திருந்தான். அவனுக்கு அப்படி உட்கார்ந்திருப்பது பிடிக்கவில்லை. சித்திர மண்டபத்திற்குள் நுழைந்தான். அவனுக்குச் சித்திரங்களைப் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லை. சற்று நேரத்திற்கு முன்பு அங்கிருந்து சென்ற பேசும் பொற்சித்திரத்தின் முகம்தான் அவன் கண் முன்னே நின்றது.

'மதுராந்தகி' என்று ஒருமுறை கூறிக் கொண்டான். என்ன இனிமையான பெயர். சிறுவயதிலே அந்த இனிமை தெரியாமல் போய் விட்டதே! சிறு தேர் இழுத்துக்கொண்டு அவன் அரண்மனைக் கூடத்தில் ஓடும்போது, தாயின் இடுப்பில் இருந்தவாறு 'அந்தத் தேர்தான் வேண்டும்' என்று அவள் அடம் பிடித்து அழுதது அவனுக்கு இப்போது நினைவுக்கு வந்தது.

கங்கை கொண்ட சோழபுரத்து மாளிகை மிகப் பிரம்மாண்டமானது. நான்கு இடைநிலைகளும், மாடங்களும், விசாலமான கூடங்களும், அரண்மனைப் பெண்டிர் வசிக்கத் தனி இடமும், சுற்றிலும் நந்தவனமும், செயற்கை வாவிகளும், அவற்றின் நடுவே மண்டபங்களுமாக கங்காபுரியின் அழகையும், கம்பீரத்தையும் உயர்த்தின.

பிள்ளைப் பிராயத்து விளையாட்டை நினைத்துக் கொண்ட போது அவனுக்குப் பல பசுமையான நினைவுகளும், வருத்தம் தரத்தக்க சம்பவங்களும் ஏற்பட்டன.

அரண்மனையில் மற்ற அரசகுமாரர்களோடு ஒருவனாகவே அவன் வளர்ந்தான். தன் தந்தை ஆண்டு வந்த கீழைச் சாளுக்கிய நாட்டுத் தலைநகராகிய வேங்கிக்குச் செல்ல வேண்டும் எனும் எண்ணமே தெரியாதபடி, அவனது பாட்டிமார் அவனை வளர்த்து வந்தனர். அவன் தாயான அம்மங்கை தேவியைப் பெற்றெடுத்த வீரமாதேவி, வீர சுவர்க்கம் அடைந்துவிட்டாள்.

கங்கைகொண்ட சோழனான இராசேந்திர சோழ தேவருக்கு மனைவியர் ஐவர் உண்டு. அவர்களுள் முக்கோக்கிழானடிகள் நம் இளைஞன் இராசேந்திரன் மீது மிக்க அன்பு கொண்டிருந்தாள். வேங்கிக்குச் சென்று தாயுடன் வசிக்காமல் கங்காபுரியிலேயே இளைஞன் இராசேந்திரன் வசிப்பதற்கு அந்தத் தேவியாரின் அன்பே பெரிதும் காரணம். அவனுக்கு இன்றுகூட பசுமையான நினைவு ஏற்படுகிறது, முக்கோக்கிழானடிகள் மற்றவர்களிடம் பேசிக் கொண்டிருந்தவை. "இவன் அப்படியே பாட்டனாரை எல்லா விதத்திலும் கொண்டிருக்கிறான்" எனும் சொல்.

அப்போது சிறுவன் இராசேந்திரனுக்குப் பாட்டனார் கங்கை கொண்ட இராசேந்திர சோழரைப் பற்றி ஏதும் தெரியாப் பருவம். அவன் பிறப்பதற்குச் சில நாள்கள் முன்புதான் அவர் இறந்து போனார். அவர் இறந்த சில நாள்களுக்குள் பிறந்தவனாதலால், அவரே மீண்டும் அவதரித்து விட்டார் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் பரவியிருந்தது. பாட்டியாரின் அன்பு, மற்றவர் தரும் மரியாதை எல்லாம் சேரவே, சிறுவன் இராசேந்திரன் கம்பீரமாக அரண்மனையில் உலவினான். அந்த நினைவுகள் இன்னும் பசுமையாக அவன் மனத்தில் நிலவின. அதேபோல அவன் தந்தை நரேந்திரன் இறந்ததும் அவனுக்கு நியாயமாகச் சேரவேண்டிய கீழைச் சாளுக்கிய நாட்டை அளிக்க அவன் சிறிய தந்தை விஜயாதித்தன் மறுத்ததும் அவன் மன அரங்கிலிருந்து அழிந்து விடவில்லை. பிறகு போர்க்களங்கள். கடல் கடந்த நாடுகளுக்குப் பயணம் எல்லாம் அவனைக் கங்காபுரியின் நினைவை மறக்கச் செய்தாலும், இப்போது கங்காபுரிக்கு வந்தவுடன் இன்று கண்ட மதுராந்தகியின் விழிகள் அவனை மீண்டும் பழைய சிந்தனையில் ஆழ்த்தின.



'அடடா. இளவரசியுடன் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் போய் விட்டோமே!' என்று அவன் வருத்தப்பட்டுக் கொண்டான். 'அத்திமல்லர் இல்லாதிருந்தால் இளவரசியின் சிவிகையைத் தொடர்ந்தே போயிருப்பேனே, ஹூம்!'

இராசேந்திரனின் மனத்தைச் சற்று முன் தோன்றி மறைந்த விழிகள் கலக்கியிருக்க வேண்டும். அவை ஒரு புதுவித உணர்ச்சியை அவனுடலில் தூவியிருக்க வேண்டும். ஏன்-அவன் உடல் ஒரு சமயம் இப்படிப் படபடக்கிறது? எழுந்து வேகமாக ஓடிப் போய் 'தேவி, சௌக்கியமா?' என்று கேட்டுவிட வேண்டும் என்று ஏன் மனம் துடிக்கிறது?

காட்டுச் சூழ்நிலையில் இதைவிட நல்ல வாய்ப்பு எப்போது ஏற்படப்போகிறது? நழுவ விட்டு விட்டோமே?

இராசேந்திரன் சித்திர மண்டபத்தினின்று மீண்டும் ஏரிக் கரையை நோக்கி நடந்தான். இதற்குள் சிவிகை ஏரிக்கரையை அடைந்திருக்கும்; அங்கே ஆயத்தமாக இருக்கும் ராஜ ஹம்ஸப் படகில் அவள் ஏறியிருப்பாள். கரையிலிருந்தவாறு அவள் முகத்தை மற்றொரு முறை காணலாமல்லவா? 'அவள் ஒரு வேளை திரும்பிப் பார்க்கலாம். என்னை அடையாளம் கண்டு கொள்ளலாம்'-இராசேந்திரன் இவ்வாறாக எண்ணிக் கொண்டு வேகமாக நடந்தான்.

'அங்கேயே இரு! விரைவில் வந்து விடுகிறேன்' என்று கூறிச் சென்றாரே அத்திமல்லர் - 'அவர் வருவதற்குள் ஏரிக் கரையினின்று திரும்பிவிடுவோம்'-இராசேந்திரன் இவ்வாறு எண்ணியபடி இன்னும் விரைந்து நடந்தான்.

ஏரிக்கரை அருகே 'கிணிங் கிணிங்' என்று வாள்கள் மோதும் சப்தமும், யாரோ கிரீச்சிட்ட ஒலியும் கேட்டன. ஒரு கணம் இராசேந்திரன், தன் கண்களையே நம்பவில்லை. யாராவது வாள் வித்தைப் பழகுகிறார்களா? மல்யுத்தம் கற்றுக் கொள்கிறார்களா? அப்படியானால் மதுராந்தகியும், அவள் தோழியும் அஞ்சிப் போய் நடுங்கியவாறு சற்றுத் தொலைவில் நிற்பானேன்?

சிவிகை, ஏரிக்கரையை அடைந்தவுடன் மதுராந்தகியும், அவள் தோழியும் இறங்கினார்கள். அவளுடன் வந்த காவல் வீரர்கள் இருவரும் ஏரிக்கரையில் ராஜ குடும்பத்துப் படகு

இருக்கிறதா என்று பார்த்தனர். காணவில்லை. அதற்கு மாறாகக் காளிங்கன் படகுதான் இருந்தது.

"இந்த நேரத்திற்குப் படகை ஆயத்தமாக வைத்திருக்க வந்துவிடுமாறு அரண்மனைப் படகோட்டியிடம் சொல்லியிருந் தேன்" என்றான் ஒரு வீரன். "பின் ஏன் வரவில்லை? வரவர எல்லோருக்கும் தத்தம் பணியில் அசிரத்தை ஏற்படுகிறது" என்றான் இரண்டாவது வீரன். அவன் சற்று வயதானவன். சிவிகை சுமப்போர் சற்று ஒதுக்குப்புறமாக நின்றனர்; அவர்கள் மீண்டும் உறையூர் செல்ல வேண்டியவர்கள்.

"ஏன் எந்தப் படகாயிருந்தால் என்ன? சீக்கிரமாக நாம் மாளிகைக் குப் போக வேண்டாமா? படகோட்டியை அழைப்போமே" என்று கரையிலிருந்து படகைச் சுட்டிக் காட்டினாள் தோழி.

"யார் அங்கே?" என்று வீரன் குரல் கொடுத்தான், படகோட்டியை அழைக்க. காளிங்கன் அங்கு வந்திருப்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

வீரன் குரல் கொடுத்தவுடன் படகோட்டி வருவதற்கு மாறாக, மரத்தின் மீதிருந்து இருவர் குதித்தனர். வீரர்கள் மீது பாய்ந்தனர். அவர்களைக் கண்டவுடனேயே சிவிகை சுமப்போர் சிவிகையை விட்டுவிட்டு ஓடி மறைந்தனர். தங்களைத் திடீரென்று யாரோ தாக்கியதும் ஒரு கணம் நிலைகுலைந்த சோழ வீரர்கள், நொடியில் தங்கள் பலத்தைப் பிரயோகித்தனர். வாளோடு வாள் மோதின! எதிர்பாராத இந்த நிகழ்ச்சியால் மதுராந்தகியும், அவள் தோழியும் கலங்கி விட்டனர். 'கிரீச்' சிட்டு ஓலமிடுவதைத் தவிர அவர்களால் ஏதும் செய்ய முடியவில்லை.

மரத்தினின்று குதித்த இருவரும் பாண்டி நாட்டைச் சேர்ந் தவர்கள். சோழ நாட்டில் கலவரம் விளைவிப்பதற்காக நூற்றுக் கணக்கானவர்களை முன்கூட்டியே அனுப்பியிருந்தான் பாண்டியன் சீவல்லபன். உறையூரினின்று வரும் சோழ இளவரசியைத் தாக்கிக் கலவரப்படுத்தி, அதைப் பற்றியே எங்கும் அச்சத்துடன் பேசுமாறு செய்ய வேண்டுமென்பது அவர்கள் நோக்கம். இயன்றால் இளவரசியை அபகரித்துச் சென்று விடுவது என்றும் திட்டமுண்டு.

சோழ வீரர்கள் இருவரும் முயன்றுப் போரிட்டாலும், திட்ட மிட்டவாறு வந்திருக்கும் எதிரிகளின் பயங்கர ஆயுதங்களின் எதிரே அவர்களால் ஏதும் செய்ய முடியவில்லை. ஒரு வீரன் பலத்த காயமடைந்தான். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இராசேந்திரன் அங்கே தோன்றினான். முதலில் நடப்பது என்ன வென்று புரியாமல் திகைத்தாலும், நொடியில் ஆபத்தை உணர்ந்த வீரன் இராசேந்திரன் வாளெடுத்து ஹூங்காரமிட்டுப் பாய்ந்தான்.



"யாரடா? என்ன துணிவு? சோழ நாட்டில் வழிப்பறியா?" என்று இராசேந்திரன் கர்ஜித்தான்.

இராசேந்திரன் இடையே வந்து குதித்தவுடனேயே எதிர்த்த வீரர்கள் பின்வாங்கினர். இப்படி அப்படிப் போக்குக் காட்டித் தப்பி ஓட முயன்றனர். இராசேந்திரன் விடவில்லை. அவர்கள் யார்- எங்கிருக்கிறார்கள் என்பதை அறியும் ஆவேச எண்ணத்துடன் அவர்களைத் துரத்தினான். முள்ளும், புதரும், பாறைகளும் முன்பே அறிந்துப் பழக்கப்பட்டவர்கள்போல் அவர்கள் விரைந்தனர். இராசேந்திரனும் விடாமல் தொடர்ந்தான். இளவரசியை வழிமறித்தவர்களை அவ்வளவு எளிதில் விட்டுவிடுவதா எனும் ஆவேசம் அவனைப் பீடித்தது.

காட்டின் சிக்கலான ஓரிடத்திற்குச் சென்றதும், தப்பி ஓடிய இருவரும் திடீரென எதிர்க்கத் திரும்பினர். இராசேந்திரனைத் தாக்கினர். சிறிது நேரம் துவந்தப் போர் நடந்தது. தோளும், கன்னமும், மார்பும், தலையுமாக இராசேந்திரனின் வாளுக்கு இலக்காகி அவ்விரு எதிரிகளின் உடலெங்கும் இரத்தம் வடிந்தது. அதைப்போல் இராசேந்திரன் உடலெங்கும் காயம். போர்க்களத் தில் கூட அவனுடலில் சிறு கீறல் பட்டதில்லை. அவ்விருவரின் இடைவிடாத தாக்குதல் இராசேந்திரனை நிலைகுலையத்தான் செய்தது. அவன் கரங்கள் சோர்ந்தன. எதிரிகளும், தப்பினால் போதும் என்று ஓடி மறைந்தனர்.

இராசேந்திரன் தட்டுத்தடுமாறி நின்றான். அவன் ஆடை கள் கிழிந்து விட்டன. காயங்களினின்று இரத்தம் கசிந்தது. அங்கேயே சிறிது நேரம் இளைப்பாறிய பின் செல்லலாம் என எண்ணினான். ஆனால் மறுகணம் அவன் தலை சுழன்றது. அருகிலிருந்த மரத்தின்மேல் சாய்ந்தவன், அப்படியே மெள்ள மெள்ள நழுவிக் கீழே வீழ்ந்தான்.

யாரும் எளிதில் வாராத அந்த இடத்தில், இராசேந்திரன் வீழ்ந்து கிடந்ததை யார் கவனிக்கப் போகிறார்கள்?

# 5. சேனாதிபதியின் உத்தரவு

கண நேரத்தில் எதிரிகள் ஓடி ஒளிந்ததைக் கண்ட மதுராந்தகி, அச்சம் நீங்கி மெல்லக் காயமுற்று வீழ்ந்திருந்த சோழ வீரன் அருகே வந்தாள். அவள் கண்கள், திடீரென ஆபத்துதவி போல் வந்து குதித்த இராசேந்திரனைத் தேடின. எதிரிகளைச் சிறிது தொலைவு ஓட்டிவிட்டு வந்து விடுவார் என எண்ணினாள். அவள் இராசேந்திரனை மறந்து விட்டிருந்தாள். ஆனால் களை வடியும் முகத்துடன் கூடிய அவ்விளைஞர் மனத்தில் பதிந்து விட்டதால், மற்றொருமுறை அவனைக் காணவேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது. எங்கோ பார்த்திருந்தது போலும் அவள் எண்ணினாள். அவளுக்கு நினைவுக்கு வரவில்லை. முன்பிறவியில் ஒருவேளை சந்தித்திருப்போமோ என்றும் எண்ணினாள்.

"தேவி, நல்ல வேளையாக அதோ படகு வருகிறது" என்று தோழி சுட்டிக் காட்டினாள். அப்போதுதான் ராஜ ஹம்ஸப் படகு வந்து கொண்டிருந்தது.

"அப்பாடா பிழைத்தோம். எனக்கு இங்கு இருப்பதற்கே பயமாக இருக்கிறது" என்றாள் தோழி. பிறகு தொடர்ந்து, "ஏன், தேவி, சோழ நாட்டில்கூட இத்தகைய ஆபத்து இருக்கிறதா? நள்ளிரவில் ஒரு பெண் சோழ நாட்டில் எங்கு வேண்டுமானாலும் நிர்ப்பயமாகச் சென்று வரலாம் என்று தங்கள் பாட்டி கூறுவார்களே?" என்றாள் தோழி.

"ஹூம்... அந்தக் காலம் போய்விட்டதுபோல் தோன்றுகிறதடி! எனக்கென்னவோ நாட்டு நடப்பு இப்போது துளிக்கூடப் புரியவில்லை. அவரவர்கள் வேலையை அவரவர்கள் ஒழுங்காகச் செய்வதில்லை" என்று பெருமூச்சு விட்டாள் மதுராந்தகி.

"நீங்களே இப்படிச் சொன்னால்? தாங்கள் உடனே மன்னரிடம் சொல்லி, வேலை செய்யாதவர்களைத் தண்டிக்கச் செய்ய வேண்டும்" என்றாள் தோழி.

மதுராந்தகி மெல்ல நகைத்தாள். "மன்னரிடம் யார் சொல்வது? மன்னரை நெருங்கவிடாமல் தடுத்து வருகிறார்களே. அவர் நோய்



வாய்ப்பட்டது முதல் அவரது தேவிகூட, அவரைச் சந்திக்க முடியவில்லை" என்றாள்.

மதுராந்தகி சொன்னது முற்றிலும் உண்மை.

கங்கை கொண்ட இராசேந்திர சோழ மன்னரின் மூன்றாவது திருக்குமாரர் இராசகேசரி வீரராசேந்திர சோழர் திடீரென இறந்த பிறகு அவரது புதல்வர் அதிராசேந்திரன் பரகேசரி எனும் பட்டம் பூண்டு அரியணை ஏறினார். வீரராசேந்திரன் உயிருடன் இருந்த வரையில் கட்டிய மனக்கோட்டை வேறு, தீட்டிய திட்டங்கள் வேறு. தன் மகன் வீரராசேந்திரன் சோழ நாட்டின் பரம்பரை அரியணையில் ஏறுவதற்குத் தகுதியற்றவன் என்று முடிவு செய்திருந்தார். எப்போதும் உடல் பிணியால் துன்புற்று அடிக்கடி படுத்த படுக்கையாகிவிடும் தன் மகனால் சோழ நாட்டிற்கு ஏது பயனும் இல்லை என்று எண்ணினார். எண்ணினாரேயொழிய அவர் அதை யாரிடம் சொன்னார்?

அவர் திடீரென இறந்தார். முறைப்படி அவர் புதல்வன் அதிராசேந்திரன் மகுடாபிஷேகம் செய்து கொண்டான். அப்பொழுதே பெரும் அதிகாரிகளிடமும், மந்திரி மண்டலத்தாரிடமும் முணுமுணுப்பு இருந்து வந்தது. முக்கியமாக, உடன் கூட்டத்ததிகாரியான பிரமாதிராயர், மன்னரைக் கேளாமலே அரசாங்கக் காரியமாகத் திருமந்திர ஓலை எழுதுவோர்க்கு உத்தரவிட்டு வந்தார்.

அதிராசேந்திரனால் அதிகம் கவனிக்க இயலாது போகவே பிரமாதிராயர் வைத்தது சட்டமாக இருந்து வந்தது. இந்த நிலையில் மன்னன் நோய்வாய்ப்படவே, அவர் இருப்பிடம் சுற்றிப் பலத்த காவல் வைத்து, யாரும் மன்னரை அணுகவிடாமல் தகுந்த உத்தரவைத் தானே இட்டு வந்தார்.

மதுராந்தகியும், அவள் தோழியும் பரபரப்புடன் படகில் ஏறி அமர்ந்து கொண்டனர். காயமடைந்த வீரனை மற்றவர்கள் உதவியுடன் மற்றொரு வீரன் படகில் ஏற்றினான். படகோட்டிக்கு ஏதும் புரியவில்லை. மாளிகையிலும் ஒரே பரபரப்பு. திடீரென ஓர் வீரன் தோன்றி விரோதிகளை விரட்டியிராவிடில் மதுராந்தகியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் என்று தோழி தெளிவாகக் கூறிடவே, மாளிகையில் உள்ள மற்றப் பெண்டிர் வருத்தமுற்றனர். பிரமாதிராயரே தேடிக் கொண்டு அங்கு வந்துவிட்டார். மதுராந்தகி சீறினாள். "நன்றாக நடக்கிறது ஆட்சி. காலை வேளையிலேயே

வழிப்பறி செய்யுமளவுக்கு நமது மக்கள் துணிந்து விட்டனரா?" என்று கூவினாள் மதுராந்தகி.

"நம் மக்கள் என்று சொல்லாதீர்கள். அவர்கள் வேறு எவரேனுமாய் இருப்பர்" என்று இடைமறித்தார் பிரமாதிராயர்.

"உங்களுக்கு யார் என்று தெரியும் போலிருக்கிறது. நான் உயிர்வாழ வேண்டும் என்பது தங்களுக்குப் பிடிக்கவில்லையோ? அடுத்து நான்தான் இந்த நாட்டு வாரிசு என்பதால் என்னைத் தீர்த்துவிடச் சதியோ?"

"பெண்களுக்குப் பட்டம் கொடுப்பது நம் நாட்டு வழக்க மில்லை.... அதனால் உங்களைத் தீர்ப்பதிலும் பலனுமில்லை. நீங்கள் கலியாணம் செய்து கொண்டு தீர்க்காயுளுடன் இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம்."

"பின், எப்படி ஏரிக்கரையில் இவ்வாறு நேர்ந்தது? அந்த வீரன் மட்டும் இல்லாவிடில், என் நிலை என்ன ஆகியிருக்குமோ?"

"யார் அந்த வீரன்? அங்கு எப்படி வந்தான்?"

"யாருக்குத் தெரியும். அந்த வீரரொருவரே தன்னந்தனியராய் என்னை வழி மறித்த இருவரையும் ஈடுகொடுத்தார். கடைசியில் அவ்விரோதிகள் பயந்து ஓடினர்."

"அந்த வீரன் எங்கே?"

"விரோதிகளைத் துரத்தி ஓடினார்!"

"அவன் யாரென்று தெரியுமா?"

பிரமாதிராயரின் இந்தக் கேள்விகளுக்கு மதுராந்தகியால் ஏதும் மறுமொழி கூறமுடியவில்லை. யார் என்று அவள் கூறுவாள்? மௌனமாக நின்ற அவளுக்குப் பிரமாதிராயரே விடை கூறினார்:

"சிலரை விட்டுத் தாக்குவதுபோல் தாக்கச் செய்து, உதவிக்கு வருவதுபோல் நடிக்கப் பலர் புறப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சோழ நாட்டு விரோதிகள்."

"இல்லை, இல்லை. அவர் சோழநாட்டு விரோதியல்லர். என் கூக்குரலைக் கேட்டுச் சித்திரமண்டபத்திலிருந்து அவர் ஓடி வந்தார்..."

"அவரைச் சித்திர மண்டபத்தினருகே பார்த்தீர்களோ?"



பிரமாதிராயர் இப்படியெல்லாம் குறுக்குக் கேள்விகள் போட்டுக் கேட்டுக் கொண்டிருப்பது மதுராந்தகிக்குப் பிடிக்க வில்லை. அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"உங்களுடன் விவாதித்துக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள். அவள் துணிந்து அதிராசேந்திரனைக் காண முடிவு செய்தாள்.

அதிராசேந்திர சோழ தேவர் அவளுக்குச் சகோதரர் முறையாக வேண்டும். அவரையும் பார்த்துப் பல நாள்களாகியிருந் தன. துணிந்து அவள் அவர் நோயுற்றுப் படுத்திருக்கும் மண்ட பம் நோக்கி விரைந்தாள்.

மண்டபத்திற்குள் நுழையும்போதே, 'அண்ணா' என்று அழைக்க வேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது. வெளி மண்டபத்தில் சற்று வயது முதிர்ந்த ஒருவர் உட்கார்ந்திருந்தார். தலையிலே படைத்தளபதிக்கு உரிய மகுடம். முறுக்கி விட்ட மீசை. காதிலே அசையும் குண்டலங்கள். குன்றென நிமிர்ந்த தோள்கள். சோழ நாட்டுப் படைத்தளபதி பெரிய தன்மபாலர் அவர்தான் என்று மதுராந்தகி நொடியில் புரிந்து கொண்டாள்.

இளவரசி தோழிகள் குழாம் இன்றி விரைந்து வருவதைக் கண்ட தன்மபாலர், மரியாதை கொடுக்க எழுந்து நின்றார். தலை வணங்கி "வரவேண்டும் இளவரசியாரே, வரவேண்டும்" என்று கூறி வரவேற்றார்.

"நான் மன்னரைக் காண வந்தேன்" என்று படபடப்புடன் கூறினாள் மதுராந்தகி.

"தெரிகிறது தேவி! தாங்கள் தோழிகள் புடை சூழாமல் தனியே வருவதினின்றே தெரிகிறது..."

"முக்கியமான செய்தி அரசரிடம் கூற வேண்டும்!"

"அவர் தொடர்ந்து, "முக்கியச் செய்தியைக் கூறத் தாங் களே வரவேண்டுமா? யாரிடமாவது சொல்லியனுப்பினால் அதைக் கேட்டுப்போக நானே ஓடோடி வந்திருப்பேனே..."

"நன்றி சேனாதிபதியாரே! மன்னருக்குத் தெரிவிக்க வேண்டிய முக்கியச் செய்தி அது..."

"ஓகோ!"

"அதை மன்னரிடம்தான் சொல்ல வேண்டும்..."

"நன்றாகச் சொல்லலாம். மன்னர் இப்போதுதான் அயர்ந்து உறங்குகிறார். இன்னும் ஒரு நாழிகைக்கு எழுப்ப முடியாதே......"

"நான் காத்திருக்கிறேன்......"

"தாராளமாக இருக்கலாம். தங்களுக்கு இல்லாத இடமா? தாங்கள் கூறப்போகும் அவசரச் செய்தி என்னவென்று எனக்குத் தெரியும். ஏரிக்கரையில் தங்களை வழி மறித்தவர்களைப் பற்றித் தானே? அவர்களை உடனே சிறைப்படுத்தி வருமாறு கட்டளை பிறப்பித்து விட்டேன்....."

"அவர்களைப் பிடிக்க முடியாது. அவர்கள் ஓடி விட்டனர். அவர்களைத் தொடர்ந்து..."

"ஆம்; தொடர்ந்து ஓடிய வீர இளைஞனையும் உடனே பிடித்து வருமாறு கட்டளையிட்டு விட்டேன். ஏரிக்கரைக் காட்டில் எங்கிருந்தாலும் சிறைப்பிடிக்குமாறு உத்தரவிட்டுள்ளேன்."

ண்மைபாலர் இப்படிக் கூறியதும், மதுராந்தகி அவளையும் அறியாமல் 'ஆ' என்று கூவி விட்டாள்.

## 6. அத்திமல்லர் அறிவுரை

சீவல்லப பாண்டியனின் பிரதிநிதியாக அந்த நாட்டிய மண்டபத்திற்கு வந்திருந்த இளைஞன், சோழநாட்டின் அப்போதைய நிலையை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறினான். ஆட்சி புரியும் அதிராசேந்திர சோழ மன்னர் இன்றோ நாளையோ என்று படுத்த படுக்கையாக இருப்பதையும் நினைவூட்டி, இந்த அருமையான சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவன் கூறினான்.

தகடூரார் கிண்ணத்திலிருந்த மீதி மதுவையும் குடித்து விட்டு, மீசையைத் தள்ளிவிட்டுக் கொண்டு, மண்டப நுழை வாயில் வழியை ஒரு விநாடி பார்த்துப் பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ஆடிய மங்கை சந்திரகுமாரி தன் ஆடைகளைச் சரிசெய்து கொண்டு தாளமிடுவோர்... தொடரச் சென்று கொண்டிருப்பது தெரிந்தது. அவள் அந்த மண்டபத்தை விட்டுப் போன பிறகுதான் தகடூராருக்கு மற்ற நிகழ்ச்சிகளில் கவனம் சென்றது.



"என்ன சொல்கிறாய் தம்பி? அரசருக்கு முடிவு காலத்தை நீ நிர்ணயித்து விட்டாயா?" என்றார் கரகரத்த குரலில்.

"நான் என்ன பிரம்ம தேவனா நிர்ணயிப்பதற்கு? அரண்மனை வைத்தியர் சொன்னதைத்தான் சொல்கிறேன்" என்றான் பாண்டிய நாட்டுப் பிரதிநிதி.

"அவர்களேகூட மருந்தில் விஷம் கலந்துவிடுவார்கள்" என்று கூறி நகைத்தான் சீயகங்கன்.

"நம் எல்லோரையும்விட வடங்கை, இடங்கைக் கோஷ்டியாளர்கள்தாம் மன்னரின் முடிவை எதிர்பார்க்கிறார்கள்" என்றார் வாணகப்பாடி வாணகோவரையர்.

"ஆமாம்; இதெல்லாம் நாம் இங்கு பேசி என்ன முடிவு செய்யப் போகிறோம்?" என்றார் தகடூரார்.

நாட்டியப் பெண் அங்கிருந்து போய்விட்ட பிறகு அவருக்கு ஏதும் ருசிக்கவில்லை. கொங்கு நாட்டவர் குபீரென நகைத்தார்.

"தகடூரார் காலமெல்லாம் கங்காபுரிக்கு வந்து கப்பம் கட்ட வேண்டும் என்ற ஆசையிலிருக்கிறார். நாம் பேசுவது அவருக்குப் புரியாது; பிடிபடாது" என்றதும் தகடூரார் சீறி, "என்ன சொல்லி விட்டீர்? கப்பம் கட்டுவது எனக்கு ஆசையா? நான் அதியமான் நெடுமானஞ்சியின் பரம்பரையில் வந்தவன் தெரியுமா?" என்றார்.

"ஆகா! தெரியுமே! அவர் கொடையளிப்பதில் வள்ளல். நீங்கள்... செலுத்துவதில் வள்ளல்" என்றான் சீயகங்கன்.

தகடூரார் சீற்றத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு, "சரி சரி, வீண் பேச்செதற்கு? இப்போது என்ன செய்ய வேண்டும் எனக் கூடியுள்ளோம்?" என்று கேட்டார்.

"அப்படிக் கேளுங்கள்... நாம் எவ்வளவு காலம் சோழ நாட்டிற்குத் திரை செலுத்திக் கொண்டிருப்பது? நாம் சுதந்திரமாக வாழ வேண்டாமா? அதற்கு இப்போது ஓர் முடிவு செய்ய வேண்டும்" என்றான் சீயகங்கன்.

பாண்டிய நாட்டவன் குறுக்கிட்டு, "அது மட்டுமன்று; பாண்டிய மண்டலத்தைச் சோழ நாட்டினின்று மீட்கப் படை திரட்டப் போகிறோம். அதற்கு உங்கள் ஒத்துழைப்பு மிகத் தேவை. காவிரியின் தென்கரை வரையில் எங்கள் நாட்டுக்கு

உரிமை என்பது தங்களுக்குத் தெரியாதா? அதை நாங்கள் மீட்பது நியாயமானதல்லவா?'' என்றான்.

"நியாயமானதுதான்; நியாயமானதுதான்'' என்று எல்லாரும் கூவினர்.

"எங்கள் படையெடுப்புக்குத் தாங்களும் உதவவேண்டும் என்பது எங்கள் மன்னரின் வேண்டுகோள்'' என்றான் பாண்டியப் பிரதிநிதி.

இப்போது சிறிது மௌனம் நிலவிற்று.

கொங்கு நாட்டவர் மௌனத்தைக் கலைத்து, "என்னைப் பொறுத்தவரை படை கொடுத்து உதவ ஆயத்தமாக இருக்கிறோம். எங்கள் முன்னோர்கள் சோழர்களுக்கு வேண்டிய அளவு உதவி யிருக்கிறார்கள். அந்த நன்றியை மறந்து விட்டார்கள், புலிக் கொடியார். அதனால் இப்போது நான் பாண்டியர்க்கு உதவுவது மூலம் எனது சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொண்டேன்'' என்று கூறிக் கடகடவென நகைத்தார்.

அதைத் தொடர்ந்து பலர் சம்மதம் தெரிவித்தனர். தகடூர் மன்னரும் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டு, "எல்லாரும் ஒரு முகமாகச் சொல்லும்போது நான் மட்டும் வேறா? ஆனால் சேதி நாட்டவரைக் காணோம்; கொடும்பாளூரார் வரவில்லை... முக்கிய மாகக் கிளியூரிலிருந்து தகவல் வரவேண்டுமே! அவரை விட்டு விட்டு நாம் செய்யும் முடிவு சரியாக இராதே'' என்றார்.

"கிளியூர் மலையமானுக்குச் சொல்லித்தான் அனுப்பினோம். பெரியவர், தான் வராவிடினும் தன் தம்பிகள் எவரையாவது கலந்து கொள்ளச் சொல்வதாகச் செய்தி அனுப்பினார். வரக் காணோம்...'' என்றான் பாண்டிய இளைஞன்.

"மலையமான் சொன்னால் சொன்னபடி நடப்பாரே'' என்றார் கொங்கு நாட்டவர்.

"உண்மைதான். ஆனால் அவருக்குச் சோழநாட்டின் மீது பிரியம் அதிகம்'' என்றான் சீயகங்கன்.

"இருக்கட்டுமே! நாம் மட்டும் விரோதியா? நாம் சுதந்திரமாக வாழ விரும்புகிறோம். பலமற்ற சோழ மன்னரிடம் சிற்றரசராக ஏன் இருக்க வேண்டும்?'' என்றார் தகடூரார்.



தகடூரார் திடீரென முழுமூச்சுடன் சம்மதம் தெரிவித்தது வியப்பை அளித்தது. மேலும் தகடூரார் சொன்னார்: "சேதி நாட்டவர் வராதது எனக்கும் வியப்பாக இருக்கிறது. இவ்வளவு பேர்கள் வந்து மனம்விட்டுப் பேசும்போது, அவர் வராததன் காரணம் தெரியவில்லை. இன்றே ஊர் திரும்பும்போது கிளியூர் வழியாகச் செல்கிறேன். அங்கே பெரிய உடையாரைச் சந்திக்கிறேன். 'அடிமையாக வாழ உனக்கு ஆசையா?' என்று குத்திக் காட்டுகிறேன்'' என்றார். "அப்படியே கேளுங்கள்; அப்படியே கேளுங்கள்'' என்று எல்லாரும் ஒருமுகமாக முழங்கினர்.

அப்போது எல்லாரும் திடுக்கிடும்படி ஒரு செயல் நடந்தது. இதுவரையில் மண்டபத்தில் இருண்ட பகுதியில் தூண் மறை வில் நின்று கொண்டிருந்த அத்திமல்லர், நடுக் கூடத்தில் திடீரெனப் பிரவேசித்து, "தகடூராரே! உமக்கு அந்தச் சிரமம் வைக்க நான் விரும்பவில்லை. எமக்கும் அடிமையாக வாழ ஆசை யில்லை. அதிகமான் நெடுமானஞ்சி பரம்பரையினர் நீங்கள் என்றால், நாங்கள் மலையமான் மரபினர். மிலாடுடையார் எனும் புகழ் பெயருடையவர்கள். நாங்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லை எனும் அவப் பெயர் வேண்டாம்'' என்று உரத்த குரலில் பேசினார். இதுவரை அவர் அணிந்திருந்த நரை முடியும், தாடியும், மீசையும் காணோம். கைத் தடியையும் காணோம். அடர்ந்த கரிய மீசை. உருண்டு திரண்ட கண்கள்.

தூணின் மறைவில் கையிலே பொய்த்தாடி, மீசை உபகா ணங்களுடன் மறைந்திருந்த காளிங்கன் வியந்தான், அத்திமல்லரின் துணிவைக் கண்டு. அங்கே வீற்றிருந்தவர்களும் ஒரு கணம் திடுக்கிட்டனர். ஆனால் மறுகணம் தகடூரார், முகபாவத்தை மாற்றிக்கொண்டு "ஆகா! வாரும் கிளியூர் மலையமான் நானூற்ற வன் அத்திமல்லரான இராசேந்திர சோழச் சேதிராயரே? உம்மைச் சந்தித்து எவ்வளவு காலமாகிறது? நீங்கள் நலமா? பிள்ளை பெண்டுகள் நலமா?'' என்று வம்சத்தினருக்கு உண்டான விருதுப் பெயருடனும், குடும்ப நலன் கேட்டு, அத்திமல்லரை வரவேற்றார். மலையமான் அத்திமல்லர் அவர்கள் நடுவே கம்பீரமாக அமர்ந்தார்.

"இதோ வந்து அமர்ந்துவிட்டேன். சொல்லுங்கள். பொழுது உச்சிக்குப் போவதற்கு முன்பு, நாம் நமது முடிவை எடுத்துக் கொண்டு புறப்பட வேண்டாமா?'' என்றார் அத்திமல்லர்.

தகடூரார், அத்திமல்லர் அருகே நெருங்கி வந்து உட்கார்ந்து கொண்டு, அவரை ஏறஇறங்கப் பார்த்து, "அத்திமல்லா! நலமாகத் தான் இருக்கிறாயா? நீ வரக்காணோமே என்று ஆரம்பத்திலேயே விசாரித்தேன்" என்றார்.

"நான் வந்துவிட்டேன். உங்கள் விருந்து எனக்குப் பிடிக்காது. நான் சுத்த சைவம். கீரைத்தண்டும் சுத்தரிக்காயும் எனக்குப் போதும். அதோடு நாட்டியத்தை அநுபவிக்கும் கலை ருசியும் கிடையாது. அதனால் அப்படி அந்த இருட்டுப்புறமாக நின்று கொண்டிருந்தேன். சோழ சாம்ராஜ்யம் ஆட்டம் கண்டுவிட்டது என்பது உண்மை. ஆனால் அதற்காக கோழைத்தனமாக ஒருவருமறியாது கூடி இங்கே நாட்டியம் ஆடிப் பங்கு போடப் பேசுவதுதான் எனக்குப் பிடிக்கவில்லை" என்றார் அத்திமல்லர்.

இதைக் கேட்டுப் பாண்டிய இளைஞன் சீறினான், "அது பற்றி முன்பே முடிவாகி விட்டது. தாங்கள் புதிதாக பிரச்சனையைக் கிளப்பவேண்டாம்; எங்கள் பகுதியை மீட்டுக் கொள்வதற்கு, நீங்கள் உதவப் போகிறீர்களா இல்லையா? அதுதான் பிரச்சனை. இப்போது வந்து மீண்டும் குழப்பாதீர்கள்" என்றான்.

அத்திமல்லர், அவனை அமைதியுடன் ஏற இறங்கப் பார்த்து, "தம்பி! நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். அதற்கு மற்றவரைக் கூட்டுச் சேர்க்கப் பார்ப்பானேன்? பாண்டியன் நாடு பிடிக்க மற்றவரைப் பலியிடுவதா? பாண்டியர்கள் நிலை வேறு; எங்களைப் போன்றோர் நிலைவேறு என்பது உன் போன்ற சிறுவர்களுக்குப் போகப் போகத்தான் தெரியும். நீங்கள் பேரரசு. ஆனால் வலுயிழந்து சோழநாட்டிடம் மண்டியிட்டிருக்கிறீர்கள். நாங்கள் அடிபணிந்தோரல்லர்; சோழநாட்டுக்கு நீங்கள் அடிமை என்றால் எங்களைப் போன்ற சிற்றரசர்களுக்கும் சேர்த்து நீங்கள் அடிமைதான். நாங்கள் சோழநாட்டிற்குப் படைகளைத் தருகிறோம். கப்பம் என்பதன் மூலம் பல உதவி தருகிறோம். எதற்காக? உங்களைப் போன்ற விரோதிகளின் எதிர்ப்பு வரும் சமயம் சோழர்கள் மேலும் புதுப்பலத்துடன் எதிரிகளைத் தாக்குவதற்காக; அப்படிப்பட்ட எங்களை உங்களுடன் சேரச் சொல்கிறாயா? சேர்ந்தால்-சோழர்களிடம் செலுத்திக் கொண்டிருந்த கப்பத்தைப் பாண்டியர்களிடம் செலுத்தவேண்டும்; அவ்வளவுதானே? உங்கள் நல்வாழ்வுக்கு நாங்கள் பலியாக வேண்டுமா? எங்கள் பிரச்சனை அதுவன்று.



இனியும் நாங்கள் தகடூர், கொங்கு, கொடும்பாளூர், வாணகப்பாடி, நடுநாடு, கங்கநாட்டவர்கள், வேறு ஒருவருக்குக் கப்பம் கட்ட வேண்டியதுதானா? என்பதை முடிவு செய்ய வேண்டும். அது தானே நம் முன் உள்ள பிரச்சனை! என்ன, தகடூராரே, நான் சொல்வது?" என்று மூச்சுவிடாது பேசி நிறுத்தினார் அத்திமல்லர்.

எல்லாருக்கும் ஒரு கணம் ஒன்றும் பேசத் தோன்றவில்லை. தகடூரார் தொண்டையைக் கனைத்துக் கொண்டு சொன்னார்: "அத்திமல்லர் சொல்வது சரி; நாம் எதற்காகப் பாண்டியர்களுக்கு உதவ வேண்டும்?" என்று கேள்விக் குறியை எழுப்பி, ஒருமுறை மற்றவர்களைப் பார்த்தார்.

கொங்கு நாட்டவரும் 'ஆமாம்' என்றார். ஆனால் சீயகங்கன் ஆத்திரத்துடன், "நொடியில் மாறிவிடுகிறீர்களே! உங்களுக்கு நாக்கு ஒன்றுதானா? நாம் இப்போது பாண்டியர்களுக்கு உதவி புரிந்தால் நமக்கு ஏற்படும் அவசரக் காலத்தில் பாண்டியர்களின் முழுப்படையும் நம் உதவிக்கு வரும். நம்மிடம் ஒரு நாளும் பாண்டியன் சீவல்லபன் கப்பம் கேட்கமாட்டான். நாளைக்கே சாளுக்கிய விக்கிரமாதித்தன் படையெடுத்து வந்து நம் எல்லாரையும் அடிமைப்படுத்திவிட்டால் என்ன செய்வீர்கள்?" என்றான்.

அத்திமல்லர் நகைத்தார். "உங்களைப் போன்றவர்கள் இருந்தால் விக்கிரமாதித்தனும் வருவான்; கலிங்க மன்னரும் வருவார். சோழநாட்டிற்கு இன்று என்ன வந்துவிட்டது? மன்னருக்கும் உடல்நிலை சரியில்லை; மந்திரி மண்டலத்தாரிடையே அபிப்பிராய பேதம். வடங்கை-இடங்கைப் படைகளிடையே முணுமுணுப்பு அதிகமாகிவிட்டது. அடுத்து பட்டமேற வேண்டியவருக்கு இளவரசுப்பட்டம் சூட்டப்படவில்லை. இவ்வளவுதானே? இவற்றை நாம் ஆலோசித்து முடிவு செய்ய முடியாதா? நமக்குப் பொறுப்பில்லையா? கடமையில்லையா? நாம் வணங்கும் தெய்வச் சிலையின் அங்கம் ஒன்று பழுதுபட்டால் அதைத் தூக்கி வெளியே எறிந்து விடுவோமா?" என்று அழுத்தந்திருத்தமாகப் பேசினார்.

கொங்குவேளும், தகடூராரும், வாணகப்பாடியாரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். அத்திமல்லர் மீண்டும் தொடர்ந்தார்: "நாம் இன்றே மன்னரை எப்படியாவது சந்திக்க முயல்வோம். என்னைக் கண்டாலே சோழ அரண்மனையில் ஒருவருக்கும் பிடிப்பதில்லை. இருந்தாலும் நான் வருகிறேன்.

அடுத்து யாருக்கு இளவரசுப்பட்டம் சூட்டப் போகிறீர்கள் என மன்னரிடமே கேட்போம்... பிறகு நாம் கூடிப்பேசுவோம். அதை விட்டு, இப்படிப் பாண்டியனுடன் சேர்ந்து படையெடுப்பைப் பற்றிப் பேசுவதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது" என்றார்.

பாண்டி நாட்டவன் கோபக்குரலில், "நீங்கள் யார் ஒப்புக் கொள்ளாமல் இருப்பதற்கும், ஒப்புக்கொள்வதற்கும்? சேதிநாட்டு மன்னன் சொன்னால் ஒப்புக்கொள்வீர்களோ? நீங்கள் அந்த நாட்டு வாரிசா? ஐயா, இவர் பேச்சு சந்தேகத்தை அளிக்கிறது..." என்று படபடத்தான்.

தகடூரார் கையமர்த்தி, "நாமே ஒருவருக்கொருவர் சண்டை யிட்டுக் கொள்வது சரியன்று. நாம் இரண்டுபட்டால் நாமே அழிந்து விடுவோம். நாம் மறுபடியும் சிந்தனை செய்வோம். இப்படிக் காட்டு மண்டபத்தில் கூடாமல் நாட்டிலேயே கூடு வோம்" என்றார்.

கொங்கு நாட்டவருக்கும் இது சரியென்றே பட்டது. மீண்டும் கூடுவதென்று அவர்கள் முடிவு செய்தனர். எங்கே சந்திப்பது என்ற விவாதம் சிறிது நேரம் நடந்தது.

வரும் பௌர்ணமியன்று காஞ்சிநகரில் சந்திப்பது என்று எல்லாரும் ஒரு முடிவுக்கு வந்தனர். தகடூரார், "சந்திர குமாரி எங்கே?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து சென்றார். அத்திமல்லருக்குக் குறுநில மன்னர்களின் மனப்பான்மையே புரியவில்லை. அவர் இராசேந்திரனைத் தேடிக் கொண்டு சித்திர மண்டபத்தை நோக்கி விரைந்தார்.

## 7. வீரனைக் கண்ட விழிகள்

அத்திமல்லர் சித்திர மண்டபத்தருகே வந்து பார்த்தார். இளவரசன் இராசேந்திரனைக் காணவில்லை. ஒரு வேளை உள்ளே சித்திரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பானோ என்ற எண்ணத்தில், 'இராசேந்திரா, இராசேந்திரா' எனக் கூப்பிட்டார். அந்த மண்டபத்திலிருந்து எதிரொலியைத் தவிர, வேறு மறு மொழி இல்லை.



"காளி, உள்ளே போய் பார்த்துவா, இளவரசர் இருக்கிறாரா என்று"- எனக் காளியை அனுப்பினார். காளிங்கன் வேகமாகச் சித்திர மண்டபத்து உள் சுற்றை ஒருமுறைப் பார்த்துவிட்டு வந்தான். இராசேந்திரனைக் காணவில்லை.

"காளி, இளவரசர் எங்கே போயிருப்பார்? ஐயோ, நான்தானே அழைத்து வந்தேன். சித்திர மண்டபத்துச் சித்திரங்களை அவருக் குக் காட்டிச் சோழநாட்டின் பழம் பெருமையைத் தெரிவிக்கலாம் என எண்ணியிருந்தேனே!" என்று சோர்வுடன் கூறினார் அத்திமல்லர். நாட்டிய மண்டபத்தில் நடந்த சதிக் கூட்டம் அவர் எதிர்பாராதது. அங்கே செல்லாமல் இருந்திருந்தால் இராசேந்திரனுக் குச் சித்திர மண்டபத்தைக் காட்டியிருக்கலாம். சித்திர மண்டபத் தைப் பார்த்து விட்டால் இராசேந்திரன் நிச்சயம் புதிய பிறவி எடுத்தவனாவான் என்று எண்ணிய அத்திமல்லர், இங்கும் அங்கும் பரபரப்புடன் உலவினார். பிறகு ஏதோ யோசித்தவராய், "காளி, வா ஏரிக்கரைக்கே போவோம். அங்கே ஒருவேளை இளவரசர் காத்திருக்கலாம்" என்று அழைத்தார்.

காளிங்கனுக்கு ஒரு சந்தேகம். "ஏன் சாமி, சோழ மாளிகையில் மற்ற இளவரசர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகமாயிருக்கின் றன. பட்டுப்பட்டாடைகளும், முத்துமணிகளும் அணிந்து ஆடம் பரமாக உலவுகிறார்கள். இவர் மட்டும் ஏன் சாமி, இப்படிச் சாதாரண மக்களோடு மக்களாக இருக்கிறார்?" என்று கேட்டான்.

அத்திமல்லர் மெல்ல நகைத்தார். "நன்றாகக் கேட்டாய் காளீ. இராசேந்திரன் இந்த நாட்டில் மிகவும் போற்றிப் புகழப்பட வேண்டியவன். தவறிப் போய் கீழைச்சாளுக்கிய நாட்டில் பிறந்து விட்டதால் அவனுக்கு எந்தவித மதிப்பும் மரியாதையும் இல்லாமல் போய்விட்டது...'' என்றார்.

காளிங்கனுக்கு அவர் கூறியது நன்றாகப் புரிந்து விட்டதாகச் சொல்லமுடியாது. அவன் மனத்தில் ஏதோ ஐயம் இருந்தது. அதைக் கேட்பதற்கு இப்போது சரியான சமயம் அல்லவென்று எண்ணினான். ஏரிக்கரையை நோக்கி அத்திமல்லரும், காளிங்கனும் சென்றனர்.

ஆனால், இராசேந்திரன் அங்கேயா இருந்தான்? அவன் துரத்தி வந்த இரு விரோதிகளின் கையாட்களால் தாக்கப்பட்டு மயங்கி விழுந்ததுதான் அவனுக்குத் தெரியும். ஒரு நாழிகைக்

கழித்துக் கண் விழித்தவுடன் குடிசையொன்றில் தான் படுத்திருப்பதை உணர்ந்தான்.

இராசேந்திரன் மயங்கி வீழ்ந்திருந்த இடத்தின் வழியாகத் தான் சந்திரகுமாரியும், தாளம் தட்டுபவனும், அவள் தாய் மாமன் கங்கபீமனும் வந்து கொண்டிருந்தனர். கங்கபீமன் அங்கே சிறு குடிசை கட்டியிருந்தான். சிறிது காலத்திற்கு அந்தக் குடிசையில் தங்கியிருந்துச் சமயம் பார்த்துக் கங்காபுரி மாளிகைக்குச் சென்று விடலாம் என அவன் முடிவு செய்திருந்தான்.

கங்கபீமன் சொல்வதைத்தான் சந்திரகுமாரி சிறிது காலம் கேட்டு வரவேண்டிய நிலையிருந்தது. நாடுவிட்டு நாடு வந்த அவள், யாரை நம்பி கங்கபீமனை விரோதித்துக் கொள்ள முடியும்? புதிய குடிசை கட்டி அதில் சந்திரகுமாரியைத் தங்கச் சொன்னான். உணவுக்கும் உடைக்கும் அவன் குறை வைக்கவில்லை. அவனுடைய திட்டங்களைக் கேட்டுச் சந்திரகுமாரியே வியந்தாள். அவை நிறைவேறினால் சந்திரகுமாரி கங்கை கொண்ட சோழபுரத்தில் சகல சௌக்யங்களுடன் பெரும் மாளிகையில் வாழலாம்! ஆனால், திட்டம் நிறைவேற வேண்டுமே!

நாட்டிய மண்டபத்திலே இரவெல்லாம் விதவிதமான நாட்டியங்களை ஆடித் தன் பருவ எழிலைச் சிற்றரசர்கள் பார்த்து மகிழச் செய்து, உடல் துவள சந்திரகுமாரி, கொடிவழி வழியே குடிசைக்குத் தள்ளாடி வந்து கொண்டிருந்தபோது, ஒரு தடவை கங்கபீமனைப் பார்த்து, "மாமா! அங்கே வந்திருந்தவர்கள் எல்லாம் பெரும் மன்னர்கள் என்றா சொல்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"பெரும் மன்னர்கள் இல்லாவிடினும் மன்னர்களை ஆட்டி வைக்கும் சிற்றரசர்கள் அவர்கள். அவர்கள் எல்லாரையும்தான் நீ ஒரு கணத்தில் ஆடச் செய்து விட்டாயே" என்றான் கங்கபீமன் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு.

கன்னங்குழிய, ஆனால் முத்துப்பல்வரிசை வெளியே தெரியாமல் ஒருவிதப் புன்னகை பூத்துத் தன் விழியை ஒருமுறை சுழலவிட்டுத் தன் தள்ளாடிய நடைக்கு ஊன்றுகோலாக, கங்கபீமனின் தோள்மீது மெல்லத் தன் இடக்கரத்தை ஊன்றிக் கொண்டாள்.

"சந்திரா! நீ வேண்டுமானால் பார்! நம் குடிசையைத் தேடிக் குபேரர்கள் போன்ற இந்தக் குறுநில மன்னர்கள் வருவார்கள். உன் காலடியில் வீழ்ந்து கெஞ்சுவார்கள்" என்றான் கங்கபீமன்.



"என் காலடியிலா? எதற்காக?" என்று தேன் குரலில் பேசி, மான் விழியை உருட்டினாள். இலேசாக அவள் கன்னத்தைத் தட்டிய கங்கபீமன், "எதற்கு என்றா கேட்கிறாய், திருடி! எல்லோரையும் பைத்தியம் பிடித்தவர்களைப்போல் ஆக்கிவிட்டுக் கேட்பதைப்பார் கேள்வியை!" என்றான். அங்கேயே சந்திர குமாரியைத் தழுவிக் கொண்டு விட வேண்டும் எனும் ஆத்திரமும் அவசரமும் அவனுக்கு ஏற்பட்டது.

சந்திரகுமாரியின் வனப்பில் மயங்கி அவளை அடைய வேண்டும் என்ற எண்ணத்திற்காகவா அவன் கங்கை கொண்ட சோழபுரம் வந்தான்? அவளைக் கைப்பாவையாக வைத்துக் கொண்டு சோழ மாளிகையையே ஆட்டிப் படைத்து, பிறகு குந்தள நாட்டு மன்னன் விக்கிரமாதித்தனுக்குக் கங்காபுரியைக் காணிக்கையாக்கி, அதன் பிறகு சந்திரகுமாரியைத் தனக்குரியவளாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதன்றோ அவனுடைய மாபெரும் எண்ணம்!

இருந்தாலும் அவனால், அவள் விழிவேகத்தைத் தாங்க முடியவில்லை. அவள் நடந்து செல்லும் அழகும், சரிகைப் பட்டாடை பூமியில் புரள அவள் அதை ஒரு கையில் தாங்கியவாறு நெகிழும் ஆடையின் சதியை வெல்லப் பார்ப்பதும் அவனை நிலை குலையச் செய்தன. குலுங்கியவாறு அவள் நடக்கையில் அவள் மார்பகக் கச்சைக்கும் இடையை மறைக்கும் ஆடைக்கும் இடைப்பட்ட பகுதி யானைத் தந்தம் போல் விளங்கியது. இல்லை... இல்லை-வெண்ணிலவுச் சாறெடுத்து அவள் மேனியெங்கும் பூசிக்கொண்டிருப்பதுபோல் தோன்றியது.

சந்திரகுமாரி, தன் இடக் கரத்தை அவன் தோள் மேல் வைத்துத் தாங்கிக்கொண்டபோது, மெல்ல அவளின் பருவப் பூரிப்பின் சின்னங்கள் அவன்மேல் அசைந்ததால் ஏற்பட்ட இன்பம், கங்கபீமனுக்குச் சாம்ராஜ்யத்தைப் பெறச் செய்யும் சதியெல்லாவற்றையும் தொலைத்து மூழ்கி, சந்திரகுமாரியுடனே அந்தக் காட்டில் வாழ்ந்து விடலாமா என்ற எண்ணத்தை ஊட்டியது.

மேளம் தட்டுபவன் முன்னே சென்றுவிட்டான். கங்கபீமன் தன் கரத்தை மெல்ல அவள் இடையைச் சுற்றி வளைத்து அணைத்துக் கொள்வதைப்போல் முயன்று, 'சந்திரகுமாரி...' என்று வார்த்தை சிதையப் பிதற்றவும், அவள் வெகு லாகவமாக அவனிட

மிருந்து விடுபட்டு, அருகே மரத்தின் தாழ்ந்த கிளைகளில் பூத்திருந்த இளமலரைக் கொத்துடன் பறித்து அவன் முகத்தில் தடவி, "மாமா, அந்தப் பாண்டி நாட்டு இளைஞன் பொல்லாதவன்" என்று கூறி உதட்டைக் குவித்துக் கொண்டாள்.

"என்ன, என்ன? என்ன செய்து விட்டான் அந்தப் பயல்? இன்றே ஏரியில் அவனை மூழ்கடித்து விடுகிறேன்" என்று பரபரப்புடன் சொல்லி, அவள் முகத்தை ஆசையுடன் பார்த்தான் கங்கபீமன்.

"இப்போது நீங்கள் செய்தீர்களே, அதுபோன்ற குறும்பைத்தான் செய்தான். நாட்டியம் ஆடியவுடன் துவண்டு அவன் மேல் சாய்ந்தது என் குற்றம்தானே..." என்று கேட்டுத் தளிர் இலைக் காம்பை பீமன் காதில் இலேசாக சொருகினாள். அதனால் குறுகுறுப்புற்ற பீமன், "போகட்டும், போகட்டும் சின்னப்பயல்... இன்னும் அந்தக் கிழடுகள் என்னவெல்லாம் குறும்புகள் செய்யப் போகின்றனவோ... சந்திரகுமாரி..." என்று கூறிப் பெருமூச்சுவிட்டு நிறுத்தினான்.

"என்ன மாமா?"

"கொஞ்ச நாளைக்கு நாம் இப்படி வேடம் போட வேண்டும்!"

"என்ன வேடம்...?"

"அறியாதவள் போல் நடிக்கும் அந்தக் குறும்புதானே வேண்டாம். ஒன்றும் புரியாத குழந்தை போலக் கேட்கிறாயே. உன்னிடம் மது உண்ட மந்திபோல் அந்தச் சிற்றரசர்கள் அடி பணிந்துச் செய்யும் சேஷ்டைகளை நீ கொஞ்ச காலம் பொறுத்துக் கொள்ள வேண்டும்... பிறகு நீ இட்ட கோட்டை அவர்கள் தாண்ட மாட்டார்கள்..."

"ஏன் அவர்கள் காலை முறித்து விடுவீர்களோ, மாமா?"

"காலையா? அவர்கள் மூளையையே முறித்து விடுவேன்... என்ன... நான் சொல்பவை நினைவிருக்கட்டும்..."

"தகடூருக்கு வந்து ஆடவேண்டும் என்று அழைத்திருக்கிறாரே, அவருக்கு நாட்டியத்தின் மீது மிகவும் ஆசையோ?"

"ஆகா! நாட்டியத்தின் மீது மட்டுமா ஆசை! அந்தக் கிழத்துக்கு இன்னும் எதிலும் ஆசை நீங்கவில்லை. அவர் பெரும் வள்ளல் தெரியுமா?"



"மாமா... அந்தப் பாண்டியக் குமாரன் என்னைத் தேடிக் குடிசைக்கு வருவானா? அவனது கரியமேனி, திரண்ட தோள்கள்..." சந்திரகுமாரி தன் விழிகளைக் கீழே தாழ்த்திப் பார்த்தவாறு கேட்க, கங்கபீமன், "சீச்சீ... அவன் சாதாரணப் பயல்... உன் எதிரே அந்தப் பாண்டிய மன்னனையே கொண்டு வந்து நிறுத்தட்டுமா?" என்றான்.

முன்னால் வேகமாகச் சென்று கொண்டிருந்த தாளம் தட்டுபவர் சட்டெனத் திகைத்து நின்றார். விரைந்து வருமாறு சைகை காட்டினார். அங்கே இராசேந்திரன் மயங்கி விழ்ந்து கிடந்ததைச் சந்திரகுமாரியும், கங்கபீமனும் கண்டனர்.

இராசேந்திரன் நாசிக்கருகே விரலை நீட்டி மூச்சு இருக்கிறது என்றுணர்ந்து, "யார் இந்த வாலிபன், தெரியவில்லையே..." என்றான் கங்கபீமன்.

சந்திரகுமாரி வைத்த விழி வாங்காது இராசேந்திரனின் அழகு ததும்பும் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு, "யாராயிருந்தால் என்ன? காயமுற்றுக் களைத்து வீழ்ந்திருக்கும் இவரை நாம்தான் காப்பாற்றுவோமே... மெல்லத் தூக்குங்கள்... குடிசைக்கு எடுத்துச் செல்வோம்..." என்றாள்.

## 8. பிரமாதிராயர் சீற்றம்

மன்னரைக் காணச் சென்ற இடத்தில், சேனாபதி பெரிய தன்மபாலன் கூறிய உத்தரவைக் கேட்டதும் மதுராந்தகி திடுக்கிட்டுக் கூவியதோடன்றி, மனத்திலே வேதனையும் கொண்டாள். மறுகணம், தான் அப்படிக் கத்தியது உணர்ந்து வெட்கினாள்.

யாரையோ சிறை செய்ய சேனாபதி உத்திரவிட்டால் நாம் ஏன் வருத்தப்பட வேண்டும் என்று எண்ணினாள். ஆனால் அவளால் அந்த வீர இளைஞனை மறக்க முடியவில்லை. 'அவன் முகத்தை ஒரே கணம்-இல்லை இல்லை இரு கணங்கள்-கண்டோம், சித்திரமண்டபத்தருகே. பிறகு, பிறகு, ஏரிக்கரையருகே...' என்று அந்த முகத்தை முதன்முதலில் சந்தித்ததை நினைவுப்படுத்திக் கொண்டாள்.

தன்மபாலன், அவள் முகத்தில் ஏற்படும் சலனத்தைத் தன் கூரிய கண்களால் ஆராய்ந்தவாறு, அவள் கவனத்தைத் திருப்ப

முயன்று, "தேவி, தங்களுக்கு இடையூறு செய்பவர்கள் எவரையும் நான் சும்மா விட்டுவிட முடியுமா?" என்றார்.

மதுராந்தகி சட்டெனத் திரும்பி, "உதவி செய்ய வந்தவர்களையும் தண்டிப்பது உங்கள் விருப்பமோ?" என்றாள். தன்மபாலன் சிரித்து, "அப்படியொன்றும் இல்லை; உதவி செய்ய வந்த அந்த வீர இளைஞன் யார்? எங்கிருந்து வந்தான்? ஏன் வந்தான் என்பதையும் நாங்கள் அறிந்து கொள்ள வேண்டாமா? காலம் கெட்டுப் போய் இருக்கிறது, தேவி..." என்றார்.

"ஆமாம்; ஆமாம். காலம் மிகவும் கெட்டுப்போய் பொல்லாததாயிருக்கிறது. அவரவர்கள் கடமையை அவரவர்கள் செய்வதில்லை. குறித்த நேரத்தில் படகு வந்திருந்தால் யாரும் எனக்கு ஒன்றும் செய்திருக்க முடியாது."

"படகில் ஏறியிருந்த உங்களைக் குறிபார்த்து வேலெறிந்திருந்தாலோ?"

தன்மபாலன் இப்படிக் கேட்டதும் மதுராந்தகியின் உடல் நடுங்கியது. எனினும் அதைப் புலப்படுத்தாமல், "ஓகோ! என் உயிர்மீது கவனஞ் செலுத்துமளவுக்குச் சோழ நாட்டில் விரோதிகள் பெருகிவிட்டனரா? ஆட்சி சீர் குலைந்து விட்டதா?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள்.

தன்மபாலன் அமைதியாக, "தேவி! இந்த இடத்தில் அவற்றைப் பேசுவது அவ்வளவு உசிதமாகப்படவில்லை. எனக்கே புரியாத அளவுக்குச் சோழ நாட்டில் இப்போது சிக்கல் வளர்ந்திருக்கிறது. அதனால்தானே நான் மன்னனின் மாளிகையிலேயே இருக்கிறேன். மன்னருக்கு ஏற்பட்டிருக்கும் தீராத நோயைப் பயன்படுத்திக் கொண்டு பலர் பலவிதமான திட்டங்களை வகுக்கிறார்கள். இதையெல்லாம் தங்களிடம் நான் ஏன் சொல்கிறேன் என்பதற்குப் போகப் போகக் காரணங்களைப் புரிந்து கொள்வீர்கள். ஆனால் தேவி, முன்போல் எங்கும் தக்க பாதுகாப்பின்றி மட்டும் செல்லாதீர்கள் என்று மட்டும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

மதுராந்தகி சிரித்தாள். அதில் ஏளனமும் அலட்சியமும் கலந்திருந்தன. தன்மபாலன் அதை உணராமலில்லை. "நீங்கள் சிரிப்பதன் மறைபொருள் எனக்குப் புரிந்துவிட்டது. தங்கள் உயிரின் மதிப்புப் பற்றித் தங்களுக்கே இப்போது தெரியாது. நாம்



எதுவும் இங்கே பேச வேண்டாம். நான் பிறகு தங்களைச் சந்திக்கிறேன். தங்கள் மாளிகைக்கும் காவலுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அதைக் குறித்துச் சிலர், 'அரச குடும்பத்தினரைச் சிறை செய்திருக்கின்றனர்' என்று அவதூறு பேசுவர். தயவு செய்து அவற்றைப் பொருட்படுத்தாதீர்கள். அதோ பறக்கும் புலிக்கொடியின் மேல் ஆணையாக......"-தன்மபாலர் குரல் தழுதழுத்தது.

மதுராந்தகி மௌனமானாள். பிறகு அவள், சிந்தனை பல மனத்தில் கொண்டவளாய் அங்கிருந்து தன் இருப்பிடம் நோக்கி நடந்தாள்.

தன்மபாலனுடன் மதுராந்தகி பேசிவிட்டுச் செல்வதை உடனே ஒரு பணியாள் பிரமாதிராயரிடம் சென்று தெரிவித்தான். பிரமாதிராயர் குறுக்கும் நெடுக்குமாகச் சிறிது நேரம் அந்த இடத்தில் நடந்துவிட்டு, ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராய் வானவன் பல்லவரையரிடம் விரைந்தார்.

பல்லவரையர் திருமந்திர ஓலைநாயகமாகப் பணிபுரிபவர். மன்னர் வாய்மொழியாக இடும் உத்தரவுகளையும், செய்திகளையும் குறித்துவைத்து, அவை நிறைவேறும் வகை செய்பவர். "திருமந்திர ஓலை" எனும் சிறப்புப் பெயருடன் பணிபுரிபவர். வானவன் பல்லவரையர் பல ஆண்டுகளாக அப்பதவியில் இருந்து மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார். பிரமாதிராயரின் வருகையைக் கண்டவுடனேயே வானவன் பல்லவரையர், தான் படித்துக் கொண் டிருந்த ஓலையொன்றைச் சட்டென மறைத்துக் கொண்டு, "வாருங்கள் வாருங்கள் பிரமாதிராயரே" என்று முகமலர்ச்சியுடன் வரவேற்றார்.

பிரமாதிராயர் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு, "பல்லவரையரே! உங்களை ஒன்று கேட்பதற்காக வந்தேன். இப்போது சற்று ஓய்வுதானே?" என்று கேட்டுவிட்டு, அருகேயிருந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

"ஓய்ச்சல் ஒழிவு ஏது பிரமாதிராயரே! உங்களுக்குத் தெரியாதா? சிற்றரசர்கள் பலரிடமிருந்து கப்பத் தொகை பாக்கி வரவில்லை. தீர்வைத் தொகை நிலுவை வேறு இருக்கிறது. கடற்கரையில் வந்து இறங்கும் பொருள்களின் சுங்கத்தை வசூலித்துப் பொக்கிஷத்திற்குக் கொண்டு சேர்க்காமல் இடையிலேயே தீர்த்து விடுகிறார்கள்..." என்று சொல்லிக் கொண்டே போனார் திருமந்திர ஓலைநாயகம்.

"அது சரி தான் ஐயா! உமக்கு ஓய்ச்சல் ஒழிவு இல்லை என்று யார் சொன்னது? பொக்கிஷம் குறைந்து வருகிறது என்றவுடன் நாம் ஏகப்பட்ட வரிச்சுமையை மக்கள் மீது ஏற்றி வருகிறோமே, அதைக் கேட்கவில்லை ஐயா; மன்னர் சொன்ன உத்தரவுகள் இருக்குமே, அவற்றையெல்லாம் எழுதிவிட்டு அமைதியாக உட்கார்ந்திருக்கிறீர்களா? அல்லது இனிமேல்தான் எழுதப் போகிறீர்களா?" என்றார் பிரமாதிராயர்.

"ஓய் ராயரே! சுற்று வழியில்லாமல் நேரிடையே கேளும்... அரசர் இன்று என்னென்ன கட்டளைகள் இட்டுள்ளார்? அதைச் சொல்லும் என்று என்னைக் கேட்பதுதானே...?" என்று நகைத்துக் கொண்டே சொன்னார் திருமந்திர ஓலைநாயகமான வானவன் பல்லவரையர்.

"ஆமாம் ஐயா; மன்னரைத்தான் நேரிடையே காணமுடிய வில்லை. அவரைப் பார்க்கக்கூடாது என்று மருத்துவர் கூறிவிட் டார் என்கிறீர்கள். எனக்குச் சில முக்கிய விஷயங்களைக் கேட்க வேண்டுமானால் உம்மைத்தானே நாடி வர வேண்டியிருக்கிறது. எப்போதும் அரசன் அருகேயிருந்து அவர் சமூகம் காண என்னை நாடிப் பலர் காத்திருந்த காலம் போக, நான் இப்போது உம் முகம் பார்க்க வேண்டியிருக்கிறது... ஹூம்" என்றார் பிரமாதிராயர்.

"உமக்கு மட்டும்தான் அந்த உத்திரவு என்று எண்ணுகிறீர் களா? மருத்துவர் உத்தரவு மட்டும் இல்லை ஐயா, மன்னரின் விருப்பமும் அதுதான். அவர் ஏனோ யாரையும் காண விரும்ப வில்லை. அவர் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்து கொண்டேயிருக்கிறது. மருத்துவர் கண் நோய் என்கிறார். நான் மனநோய் என்கிறேன். மனநோய் அவருக்கு இருப்பதால் தான் யாரையும் அவர் காண விரும்பவில்லை. தேவியைக்கூட அவர் காண மறுக்கிறார்..." என்று சோகம் ததும்பும் குரலில் கூறினார் திருமந்திர ஓலைநாயகம்.

"இப்படியே இருந்தால் என்ன செய்வது? சற்று முன்னர் மதுராந்தகி தேவியார் மன்னரைக் காண வந்திருந்தார்..."

"அநுமதித்திருக்கமாட்டார்களே! சேனாதிபதி தன்மபாலரே நேரிடையே காவல் பொறுப்பை ஏற்படுத்திக் கவனித்து வருகிறார்..."

"இருக்கட்டுமே; தன்மபாலருக்கு யார் ஐயா, காவல் போடுவது?"



"என்ன ராயரே, புதிர் போடுகிறீர்கள்....."

"புதிர் இல்லை ஐயா, என் மனத்தில் படுவதைச் சொல்கி றேன். மன்னரை மற்றவர் காணக்கூடாது எனக் காவலா, மன்னர் மற்றவரைக் காணக்கூடாது எனக் காவலா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை, வடங்கை-இடங்கைப் படை களின் தலைவர்களிடையே ஏதோ கருத்து வேற்றுமை ஏற்பட்டி ருக்கிறதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. அதனால் யாருமே தன்னைக் காண வேண்டாம் என்பது மன்னர் விருப்பம்... ஏன் வடங்கை-இடங்கை தகராறு வந்திருக்கிறது தெரியுமா?" என்று கேட்டார் பல்லவரையர்.

"தெரியவில்லையே...... எல்லாம் அவர்களுக்குள் பதவிப் பூசல்....."

"இல்லை... இல்லை... இந்தச் சாம்ராஜ்யத்தின் அடுத்த வாரிசு பற்றிய பட்டத்துப் பூசல்!"

"அவர்கள் ஏன் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும்? வாரிசு நியமிப்பது மன்னர் விருப்பமல்லவா?"

"அவர்கள் மட்டுமா பூசலிட்டுக் கொள்கிறார்கள்? பட்டி தொட்டி தோறும் இப்போது இளவரசுப் பட்டம் யாருக்கு என்பதைப் பற்றியே கட்சிப் பிரதிகட்சிகள் ஏற்படச் செய்கிறார்கள்..."

"வாரிசு பற்றிக் கருத்து வேற்றுமைக்கே இடமிருப்பதாகத் தெரியவில்லை. தொண்டை மண்டல அரசப் பிரதிநிதி சோழேந்திரன் மன்னரின் நேர் அடுத்த சகோதரர்தானே... அவனை இளவரசுப் பட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கலாமே..."

"யாரைச் சொல்கிறீர்கள், சோழேந்திரனையா? அரசியலில் அநுபவம் வரவேண்டும் என்றுதானே சுவர்க்கஸ்தராகிய வீரராசேந்திர சோழர், தன் இரு புதல்வர்களையும் தொண்டை மண்டலத்திலும், பாண்டி மண்டலத்திலும் பிரதிநிதியாக நியமித் தார். அவர்களுக்கு அரசுரிமை சேர்வதனால், அப்படி உரிமை கொண்டாடக்கூடியவர்கள் பலர் முன் வருவார்களே..."

திருமந்திர ஓலைநாயகம் இவ்வாறு கூறியவுடன், பிரமாதிராயர் பெருமுச்சு விட்டார். இராசகேசரி வீரராசேந்திர சோழரின் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அவர் ஒரு பிடி உயர்ந்துவிடுவார்.

வீரராசேந்திர சோழ தேவரின் உடன் கூட்டத்து அதிகாரியாயிருந்த பிரமாதிராயர் அக்காலத்தில் செல்வாக்கு மிக்கவர். வீரராசேந்திரன் பல போர்க்களங்களில் வெற்றி வாகை சூடியதற்குப் பிரமாதிராயரின் தேர்ந்த திட்டங்களே காரணம். அவர் திடீரென இறந்த பிறகு, அவரது புதல்வரும் இப்போது ஆட்சி நடத்தி வருபவரும், படுத்த படுக்கையாக நோயுற்று இருப்பவருமான அதிராசேந்திர சோழ தேவரின் உடன் கூட்டத்து அதிகாரியாய் இல்லாவிடினும் வயதும், அநுபவமும் காரணமாக முக்கியஸ்தராக விளங்க இவர்கள்தான் சிறப்போடு விளங்கக் காரணமாயிருந்த இராசகேசரி வீரராசேந்திர சோழ தேவரின் பெயரைக் கூறியவுடனே, அவர் பெருமூச்சு விடாமல் என்ன செய்வார்?

"அப்போதே நான் வீரராசேந்திர உடையாருக்குக் கூறினேன்: 'தாங்கள் அடுத்துப் பட்டங்கட்டுவதாயின் தங்கள் இரண்டாவது திருக்குமாரனுக்குச் சூட்டுங்கள். தங்கள் மூத்த குமாரனின் உடல்நிலையைக் கவனித்தால் எனக்கு எதிர்காலம் பயங்கரமாய்த் தோன்றுகிறது' என்றேன். அவர் கேட்கவில்லை. அதிராசேந்திர உடையார் என்ற தன் மூத்த மகனுக்கு அபிடேகப் பெயர்சூட்டி அடுத்த வாரிசு எனத் தீர்மானித்தார். அதன் விளைவு பார்த்தீர்களா? இவர் பட்டத்தமர்ந்து சில மாதங்கள்கூட ஆகவில்லை. ஹூம்..." என்று கூறி மீண்டும் பெருமுச்சு விட்டார்.

திருமந்திர ஓலைநாயகம் நிமிர்ந்து உட்கார்ந்து, "ஐயா பிரமாதிராயரே! அப்போது தாங்கள் அரசருடன் வாதிட்டது எனக்கும் தெரியும். அவரது இரண்டாவது குமாரர் மதுராந்தகனுக்கு இளவரசுப் பட்டம் கிடைக்க நீங்கள் எவ்வளவோ முயன்றீர்கள் என்பதும் தெரியும். அதற்கான உங்கள் உள் எண்ணமும் எனக்குத் தெரியும். உமது மகள் மீனலோசனி மதுராந்தகன் மீது மையல் கொண்டிருந்தாள். இப்போதும் மதுராந்தகன் பிறர் அறியாமல் காஞ்சியினின்று உமது வீட்டிற்கு வந்து செல்வதும் எனக்குத் தெரியும். மதுராந்தகனைப் பட்டமேற்றினால் உம் மகள் பட்டத்து அரசி! ஆகிவிடுவாள் இல்லையா? ராயரே! சொந்த விருப்பு வெறுப்புக்கு நாட்டைப் பாழாக்கலாமா சொல்லுங்கள்! தர்மசாத்திரம் படித்தவராயிற்றே, நீங்களே சொல்லுங்கள்!" என்றார்.

பிரமாதிராயருக்கு 'ஜிவ்'வென்று ஆத்திரம் பொங்கியது. உட்கார்ந்த இடத்தை விட்டு விருட்டென்று எழுந்து, "ஓய்,



பல்லவரையரே! உமது சூழ்ச்சியும் எனக்குத் தெரியும். விரைவில் அதைப் பகிரங்கப்படுத்துவேன். என் வழியில் குறுக்கே நின்றவரெவரும் இதுவரை வாழ்ந்ததில்லை. அப்படி வாழ வைத்தால் என் பெயர் வீரராசேந்திர பிரமாதிராயன் இல்லை" என்று கோபமாகக் கூறிவிட்டு வேகமாக வெளியேறினார்.

## 9. கங்கபீமன் திட்டம்

இளவரசன் இராசேந்திரன் கண்விழிக்காமல் சந்திரகுமாரியின் குடிலில் கிடந்தான். பஞ்சணை மஞ்சத்தில் உறங்க வேண்டிய அவ்விளங்குமரன், வைக்கோல் பரப்பப்பட்ட தரையில் கிடந்தான். அவன் உடலில் பல பகுதிகளில் காயம் ஏற்பட்டிருந்தது. கடாரத்தில் நடத்திய போரில்கூட இராசேந்திரனுக்கு அத்தகைய புண் ஏற்படவில்லை. சதிகாரர்கள்-பதுங்கித் தாக்கவல்லவர்கள்-இராசேந்திரனைக் காயப்படுத்தித் தாமும் தப்பி ஓடி விட்டனர். கத்தி முனைகளில் விஷம் இருந்ததா? பின் ஏன் இராசேந்திரனுக்கு அவ்வளவு சோர்வும் மயக்கமும் ஏற்படுகின்றன?

சந்திரகுமாரி, கண் திறவாமல் கிடக்கும் இராசேந்திரனை இமை கொட்டாமல் பார்த்தவாறிருந்தாள். பகல் கழிந்து இரவு வந்தது. இரவு கழிந்து மீண்டும் பகல் வந்தது.

"சந்திரகுமாரி, நீ ஏன் இப்படிக் கண் விழிக்கிறாய்? உன் உடலுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் என்ன செய்வது? இங்கு வந்தது முதல் உனக்குத் தக்க உணவு இல்லை. உன் எழில்தானே எனக்குத் துணை சந்திரா! அதைப் பாழ்படுத்திக் கொண்டு நீ ஏன் இப்படி இவன் அருகே அமர்ந்திருக்கிறாய்?" என்றான் கங்கபீமன்.

அவனும்தான் இராசேந்திரனைக் கண்டான். அந்த இளைஞன் அழகு அவனைக் கவர்ந்தது. முகத்திலே ததும்பிய வீரம் அவனைச் சிந்திக்க வைத்தது. நீண்ட கரங்கள்; இடையிலே வாள்; அகன்ற புஜம்-கங்கபீமன் சிறிது நேரம் அவன் யாராயிருக்கும் எனச் சிந்தித்தான். "யாராயிருந்தால் என்ன! ஆபத்தில் உதவினோம். கண் விழித்ததும் அனுப்பிவிடுவோம்" என்று எண்ணினான். இரக்க சிந்தையோடுதான் சந்திரகுமாரி அந்த வீரனுக்கு உதவவேண்டும் என முடிவு செய்தாள் என எண்ணினான். ஆனால் அவள், அவனை விட்டகலமாட்டேன் என்கிறாளே!

தன் நிலை தெரியாமல் கிடக்கும் இராசேந்திரனைப் பார்க்கும் போதெல்லாம் சந்திரகுமாரியின் உடல் ஏனோ சிலிர்க்கும். உள்ளம் விம்மும். அவனையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்போல் தோன்றும்.

கங்கபீமன் கங்காபுரி நகரத்திற்குள் சென்று, உணவு சமைக்கத் தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டு, அதனுடன் சில மூலிகைகளையும் வாங்கி நடுப்பகலில் குடிலுக்குத் திரும்பிய போதும், சந்திரகுமாரி, இராசேந்திரன் அருகே கவலையுடன் தலை மாட்டில் அமர்ந்திருப்பதைக் கண்டான்.

"சந்திரகுமாரி, மற்ற வேலைகளை நீ மறந்து விடுவாய் போலிருக்கிறதே" என்று கூறிக்கொண்டே தோளில் சுமந்து வந்த மூட்டைகளை இறக்கி வைத்தான்.

"எனக்கு இந்த நடுக்காட்டில் என்ன வேலை வைத்திருக் கிறீர்கள் மாமா? புலிவேட்டை ஆடச் சொல்கிறீர்களா? நேற்று முன்தினம் மகாராசாக்களுக்கு எதிரே ஆடியதால் ஏற்பட்ட களைப்பு நீங்கவே நான்கு நாட்கள் ஆகும் போலிருக்கிறது. ராஜாவாம் ராஜா; எல்லாரும் வெறியர்கள். பாவம்! இவர் உடலில் ஏற்பட்டிருக் கும் காயத்தால் ஏற்பட்ட களைப்பு நீங்கிக் கண் திறக்கவே ஒரு யுகம் ஆகும் எனத் தோன்றுகிறது" என்றாள் சந்திரகுமாரி.

கங்கபீமன் ஒரு கணம் அவளை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, ஏதோ சொல்ல வாயெடுத்தவன் அதை அடக்கிக் கொண்டு, மூட்டையிலிருந்து மூலிகைகளை எடுத்து வைத்து, "காலை யிலிருந்து இவன் கண் விழிக்கவில்லையா? யாரோ எவனோ, இவனுக்காக நம் உயிரை விட வேண்டியிருக்கிறது. எவ்வளவு நாள்கள் இவன் அருகே இருப்பாய் சந்திரகுமாரி?" என்று கவலை யுடன் கேட்டவன், மூலிகைகளைக் காட்டி, "இவற்றைச் சுடுநீரில் கொதிக்க வைத்து, அதைக் கொண்டு ஒத்தடம் கொடுத்தால் மயக்க நிலை மாறுமாம்..." என்றான்.

"எங்கே போய் வாங்கி வந்தீர்கள்?" என்று சந்திரகுமாரி கேட்டாள்.

"ஊருக்குள் சென்றேன். வீதிகளில் சுற்றினேன். அப்பாடா! எவ்வளவு பெரிய நகரம்! கல்யாணபுரத்தைப்போல் நான்கு பங்கு! வேங்கியைப்போல எட்டுப் பங்கு! சந்திரகுமாரி! நகரத்தில் ஒரு வீட்டைக்கூட நமக்காக அமர்த்திவிட்டேன். கோயிலில் சிறிது



காலம் கணிகையாக நீ இருக்கலாம். ஹூம்....... என் திட்டங்கள் ஏராளம், ஏராளம்...... அவை நிறைவேறுவதற்குள் சாளுக்கிய மன்னர் கொடுத்த பொருள் தீர்ந்துவிடும் போலிருக்கிறது..." என்று என்னென்னவோ பேசிக்கொண்டே போனான்.

சந்திரகுமாரி ஏதும் மறுமொழி பேசவில்லை. மௌனமாக, மூலிகைகளை எடுத்துக் கொண்டுபோய் அடுப்பு மூட்டி, தண்ணீ ரைச் சுடவைத்து, அதில் மூலிகைகளைப் போட்டுக் காய்ச்சி அதை எடுத்து வந்தாள்.

"இப்படிக்கொடு, நான் ஒத்தடம் கொடுக்கிறேன். யாரோ, ஊர்பேர் தெரியாதவனுக்குப் பணிவிடைகள் செய்ய வேண்டியிருக் கிறதே. சோழநாட்டு வீரனாயிருந்துவிடப் போகிறான். என் கரங்க ளால் முடிந்த அளவு சோழர்களைக் கொல்ல எண்ணியிருக்கிறேன். அதற்கு மாறாக இவனுக்கு உதவி செய்து உயிர்ப்பித்துவிடப் போகிறேன்..." என்று அசட்டுச் சிரிப்புடன் கூறினான்.

சந்திரகுமாரி அவனைத் திரும்பிப் பாராமல், பித்தளைப் பாத்திரம் ஒன்றில் வெந்நீரை ஊற்றி, அதில் தன் முந்தானையை நனைத்து ஒத்தடம் கொடுக்கத் தொடங்கினாள். "மாமா, இலையில் சோறு போட்டிருக்கிறேன்; ஆறிவிடப் போகிறது, போங்கள்..." என்றாள்.

கங்கபீமன், அந்த இளைஞனுக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தை எண்ணிப் பெருமூச்சு விட்டபடி, "ஹூம்... நான்கூட இப்படி எங்காவது படுகாயப்பட்டு வந்து படுத்துக் கொள்ளலாமா என நினைக்கிறேன்" என்றான்.

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்...?"

"உன் கரங்களின் ஸ்பரிசம் பெற அவன் முன் பிறவியில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்." கங்கபீமன் இவ்வாறு சொன்னவுடன், சந்திரகுமாரி அவனை எரித்து விடுபவள் போல் பார்த்து, "அப்படியென்றால் நீங்கள் ஏழேழு பிறவியிலும் ஆண்டவ னுக்குத் தேனாபிஷேகம் செய்திருக்க வேண்டும்..." என்றாள்.

"ஏன்......?"

"ஆமாம்; உங்கள் அருகேயே இருந்து உங்களுடன் இந்த இருட்டுக் குடிசையில் தங்குகிறேனே, அதற்கு உங்களுக்கு எப்படி அதிர்ஷ்டம் வந்தது?" என்றாள், ஆத்திரத்துடன்.

அவள் குரல் வேகம் உணர்ந்த கங்கபீமன், வீண் வார்த்தைகளால் பூசலை மூளவிட விரும்பாமல், மெல்ல எழுந்து சோறு படைக்கப்பட்டிருந்த இலையருகே சென்றான்.

கங்கபீமனுக்கு மட்டும் அந்தக் காட்டின் நடுவே இருப்பதற்கு ஆசையா என்ன? அவன் வந்த பணியே வேறு. சாளுக்கிய மன்னர் விக்கிரமாதித்தனால் அனுப்பப்பட்டவன் அவன். கங்கைகொண்ட சோழபுரம் வந்து, அந்த நகரத்து மக்களுள் ஒருவராக மாறி, அந்த நகரத்தின் மூலை முடுக்குகளை அறிந்து, கோட்டைக் கொத்தளத்தின் சிறு நுணுக்கமும் அறிந்து சாளுக்கிய மன்னனுக்குச் சேதி அனுப்ப வேண்டியது அவன் முதல் கடமை. சோழ நாட்டிலே, குறிப்பாகக் கங்கை கொண்ட சோழபுரத்திலே கலக நிலை ஏற்படுவதற்கு வழி செய்வது இரண்டாவது கடமை. மூன்றாவது கடமை- அது கடமையா? பயங்கரச் செயல் அல்லவா? சோழர் குலவாரிசு எவராயினும் அவரைக் கொன்று விடுவது என்பது!

இவ்வளவு பயங்கரத் திட்டங்களோடு, பெரும் பொருள் சாளுக்கியரிடம் பெற்றுக் கொண்டு புறப்பட்ட அவனுக்கு, சந்திரகுமாரி கிடைத்தது பாதி வெற்றிபோல் தோன்றியது. சந்திரகுமாரியின் பெற்றோர்கள் திடீரென இறந்து விட்டனர். கங்கபீமன் அவள் தாய்மாமன். இவ்வளவு நாள்களாக இல்லாத உறவை அப்போது ஏற்படுத்திக் கொண்டு, சந்திரகுமாரியையும் அழைத்துக் கொண்டு கங்கை கொண்ட சோழபுரம் வந்து சேர்ந்தான். சந்திரகுமாரிக்கு நாட்டியம் தெரியுமென்பதை அறிந்து கொண்ட கங்கபீமனுக்கு மிகவும் எளிதாகிவிட்டது. சந்திரகுமாரிக்குப் பல வாக்குறுதிகள் அளித்தான். கங்காபுரி அரண்மனையில் அவளை நாட்டிய ராணி ஆக்கிவிடுவதாகக் கூறினான். அவளுக்கிருந்த கொள்ளை அழகுக்கு ராணியாகக்கூடிய தகுதியும் அவளுக்கு இருப்பதாகப் புகழ்ந்தான்.

ஆனால், இப்படிக் காட்டு நடுவில் குடிசையில் இருப்போம் என சந்திரகுமாரி எதிர்பார்க்கவில்லை. மாளிகையில் மன்னர் முன் ஆடும் வாய்ப்பு இருக்க, பாழ்மண்டபத்தில் ஆட நேரும் எனச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சோர்வுற்ற அவள் மனத்திற்கு இராசேந்திரன் உருவம் புத்துணர்வை அளித்தது.

இளமையும், வீரமும் ஒருங்கே சேர்ந்த இராசேந்திரனின் வடிவைக் காணக் காணச் சந்திரகுமாரியால் அமைதியாக இருக்க முடியவில்லை. மயக்கம் தெளிந்து அவன் எப்போது கண் விழிப்பான் என ஆவலோடு காத்திருந்தாள்.



சந்திரகுமாரியின் மெல்லிய ஸ்பரிசம் பட்டதாலோ என்னவோ, அல்லது மூலிகைகளின் ஆற்றலாலோ என்னவோ, இராசேந்திரன் மெல்லக் கண் விழித்தான். கண் விழித்தவுடன், தன் அருகே இளமங்கை ஒருத்தி அமர்ந்திருப்பதையும் குடிசையொன்றில் தான் கிடப்பதையும் உணர்ந்து திடுக்கிட்டு எழ முயன்றான். ஆனால் இயலவில்லை.

சந்திரகுமாரி பரபரப்புடன் கங்கபீமனை அழைத்தாள். கங்கபீமன் இராசேந்திரன் அருகே வந்தமர்ந்தான். அவன் இராசேந்திரனைக் கேட்பதற்கு முன்பே, இராசேந்திரன் அவர்களை நோக்கி, "நீங்கள் யார்? நான் இங்கே எப்படி வந்தேன்?" என்று கேட்டான்.

கங்கபீமன், சந்திரகுமாரியை நோக்கினான். "என்னை ஏன் பார்க்கிறீர்கள்? நீங்கள்தான் சொல்லுங்களேன்...... யாருமே வராத காட்டுப் பகுதியில் உடலில் பல காயங்களுடன் கிடந்த இவரை நாம் இங்கே கொண்டு வந்தோம் என்று சொல்லுங்களேன் மாமா...... இரு நாள்களாகக் கண் விழிக்காமல் படுத்திருக்கிறார் என்றும் சொல்லுங்கள். நகரத்திற்குப் போய் மூலிகைகளைக் கொண்டுவந்து ஒத்தடம் கொடுத்தோம் என்று சொல்லுங்களேன் மாமா. ஏன் இப்படி வாயை மூடிக்கொண்டு இருக்கிறீர்கள்? அவரை யார் என்றும், எந்த ஊர் என்றும் கேளுங்கள்?" என்றாள் சந்திரகுமாரி.

கங்கபீமன் சிரித்தவாறு, "நீதான் எல்லாம் கேட்டு விட்டாயே. உனக்குத் திடீரென என்ன வெட்கம் வந்துவிட்டது? இரண்டு நாள்களாக இவனருகே உட்கார்ந்து கண் விழித்ததில் குறைவு இல்லை" என்றான். சந்திரகுமாரியின் முகம் 'ஜிவ்'வென்று சிவந்தது.

இராசேந்திரன் மெல்லப் பேச முயன்றான். அவன் தொண்டை வறண்டிருந்தது. அதை அறிந்த சந்திரகுமாரி தண்ணீர் கொண்டு வந்தாள்.

"என்னைக் காப்பாற்றியதற்காக நான் நன்றி தெரிவிக்கிறேன். நீங்கள் யார்... ஏன் இந்தக் காட்டில் வாழுகிறீர்கள்?" என்று கேட்டான் இராசேந்திரன்.

கங்கபீமன் என்னவென்று சொல்வான்? சாளுக்கிய நாட்டு ஒற்றன் என்று தன்னைக் கூறிக் கொள்வானா?

"நான் பிறகு சொல்கிறேன் எங்களைப்பற்றி. நீ யார் தம்பி? இளம் வயது. படைவீரனைப்போல் தோன்றுகிறாய். நீ ஏன் காட்டிற்கு வந்தாய்?" என்று கேட்டான்.

தன்னைப் பற்றி ஒரு கணம் கூறிவிடத் துடித்தான் இராசேந்திரன். வேங்கி நாட்டின் வாரிசு என்றும், கங்கை கொண்ட சோழரின் மகள் வயிற்றுப் பெயரன் என்றும் கூறிவிடத் துடித்தான்.

சந்திரகுமாரியை ஒரு முறை நோக்கினான். இவ்வளவு அழகான இளமங்கை நடுக்காட்டில் உலாவுவானேன்?

"நான்... நானா... நான் ஒரு படைவீரன். சோழியப் படைகளு டன் கடாரம் சென்றுவிட்டு இப்போதுதான் திரும்பினேன்" என்றான். அவனால் அதற்குமேல் பேச முடியவில்லை. கண் இருண்டது. எங்கோ முன்பின் பார்த்திராத ஓர் உலகுக்குப் போவது போன்றதொரு பிரமை மீண்டும் ஏற்பட்டது.

## 10. சந்திரகுமாரியின் நெஞ்சம்

சோழ நாட்டுப் போர் வீரன் ஒருவனைக் குடிசையில் கிடத்தி உதவி செய்து விட்டோமே என்று கங்கபீமன் எண்ணி எண்ணி வேதனைப்பட்டான். மேலும் சந்திரகுமாரி அவனுக்குச் செய்யும் பணிவிடைகளைக் காணும்போது இன்னும் அவனுக்குக் கோபம் வந்தது. தங்களைப்பற்றி அவனிடம் இன்னார் எனப் புலப் படுத்திக் கொள்ளுமுன்பு மீண்டும் அவன் சுய நினைவு இல்லாமல் மயக்கமடைந்துவிட்டது அவனுக்கு மிகுந்த திருப்தியையளித்தது.

கண்களை மூடிக் கொண்ட இராசேந்திரனின் நெற்றியைத் தொட்டுப் பார்த்த சந்திரகுமாரி திடுக்கிட்டவளாய், "மாமா தொட்டுப் பாருங்களேன். நெற்றி எப்படிக் கொதிக்கிறது பார்த்தீர்களா?" என்றாள் பரபரப்புடன்.

"நான் ஒன்றும் பார்க்கவில்லை. நீயே பார்..." என்று வெறுப்பு நிறைந்த குரலில் கூறினான் கங்கபீமன். சந்திரகுமாரி கோபவிழி களை அவன் மீது வீசினாள்.

"உங்களுக்கு ஏன் இப்படி ஆத்திரம் வருகிறது...?"



"நீ இவனிடம் கருணை காட்டுவதால்!"

"அதனால் என்ன தவறு?"

"இவன் சோழநாட்டுப் போர் வீரன்..."

"இருக்கட்டுமே..."

"இருக்கட்டுமா..... நாம் யாரை முறியடிக்க வந்தோமோ அவர்களுக்கே உதவுவதா?"

"என்னிடம் இதுவரை அப்படியொன்றும் உங்கள் திட்டத் தைப்பற்றிச் சொல்லவில்லையே... கங்காபுரியில் என் கலைத் திறமையைப் பெருமைப்படுத்த ஏற்பாடு செய்வதாகக் கூறினீர்கள். மாளிகையில் நடனமாட வழிசெய்வதாகக் கூறினீர்கள். அதற்கும் மேலாக அந்தப்புரத்து அழகு மங்கையருள் நானும் ஒருத்தியாக வாழலாம் என்றீர்கள்..."

"ஆமாம், அவை எல்லாம் நிறைவேற வேண்டுமானால் நான் சொல்வதை நீ கேட்க வேண்டாமா..."

"கேட்டுக்கொண்டேதான் இருக்கிறேன்... இனியும் கேட்பேன்... ஆனால் இவருக்கு உதவக்கூடாது என்று நீங்கள் சொல்லவில்லையே...?"

சந்திரகுமாரி பேச்சில் அவனை இவ்வாறு மடக்கியதும், கங்கபீமன் உதட்டைக் கடித்துக் கொண்டு, தன் கோபக்குரலைச் சற்றுக் குறைத்து, "அதற்காகச் சொல்லவில்லை குமாரி... சோழ நாட்டு வீரனுக்கு உதவத் தொடங்கினால் நம்மால் அந்த நாட்டிற்கு விரோதமாக ஏதும் செய்யமுடியாது... அதனால்தான்..." என்று மெல்ல நகைத்தவாறு கூறினான்.

இவர்களுடைய விவாதக் குரலின் ஆரம்பத்திலேயே இராசேந்திரனின் மயக்கம் தெளிந்து விட்டது. அவர்கள் பேசுவது நன்றாக அவன் செவிகளில் வீழ்ந்தது. சந்திரகுமாரி தன்னை ஆதரிப்பதையும், கங்கபீமன் தன்னை எதிர்ப்பதையும் புரிந்து கொண்டான். சற்றும் அசையாமல் அவர்கள் பேசுவதைக் கேட்க விரும்பினான்.

"என்னையும் விரோதச் செயலில் ஈடுபடுத்தத்தான் அழைத்து வந்தீர்களா?"-சந்திரகுமாரியின் கோபக்குரல், கங்கபீமனை நடுங்க வைத்தது. அந்தச் சமயத்தில் மேலும் விவாதிப்பதும் சரியென்று

894.8113 VIK



அவனுக்குப் படவில்லை. சந்திரகுமாரியின் போக்குப்படி விட்டுப் பிறகு தன் இஷ்டப்படி திருப்ப வேண்டும் எனும் முடிவுக்கு வந்தவனாய், "இதோ பார்! இந்தச் சின்ன விஷயத்துக்கெல்லாம் நாம் கடுமையாக விவாதிப்பது சரியன்று. உன் விருப்பத்திற்கு மீறி நான் ஏதும் செய்ய விரும்பவில்லை. ஆனால், உன்னை நாட்டிய ராணியாக்குவதற்கு நான் போடும் திட்டங்களின் குறுக்கே உன் பிடிவாதம் நிற்கக்கூடாதே என்ற கவலைதான்..." என்று குழைந்து கூறிவிட்டு, அடுத்த வினாடி கடுமையான குரலில், "என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லையென்றால் சொல்லிவிடு; நான் இப்போதே எங்காவது போய்விடுகிறேன்..." என்றான்.

சந்திரகுமாரி திடுக்கிட்டாள். மாமா போய்விட்டால்... காட்டிலே அவள் என்ன செய்வாள்? பேரும், புகழும் அடைவது எப்படி? அவள் பெண். கலை கைவரப் பெற்றவள். சாகஸம் வந்து அவள் முன் நின்றது. மாமாவுடன் தர்க்கம் செய்வது இப்போது சரியன்று என எண்ணினாள். திடீரென அவர் விட்டுவிட்டுப் போய்விட்டால்... நொடியில் தன் முகபாவத்தை மாற்றிக் கொண்டு, கண்களிலே தனிவிதக் கவர்ச்சி களிபொங்க, சிவந்த உதடுகள் முத்துப் பற்களைச் சற்றே வெளிக்காட்ட, கரங்கள் நெளிய, கங்கபீமன் அருகே நெருங்கி, அவன் தோள்களைப் பின்புறமாகப் பிடித்துக் கொண்டு, "கோபிக்கிறீர்களே மாமா... என்னை விட்டுப் போய்விட்டால் இந்தக் காட்டிலே உலவும் கொடிய விலங்கின் எதிரேதான் நான் ஆட வேண்டும். என் ஆட்டத்தைக் கண்டு அவை ரசிக்கும். எங்கிருந்தாவது கரடியொன்று என் ஆட்டத்தை ரசித்துத் தானும் கூத்தாடும். பிறகு என்னை வந்து அணைத்துக் கொள்ளும்..." என்று சொல்லிக் கொண்டே அவன் முதுகில் தன் முகத்தைப் பதியவைத்து, புறாக்கள் கொஞ்சும் குரலில், 'மாமா... மாமா' என்றாள்.

கங்கபீமன் கோபம் பறந்தது. பாவையின் குழைவின் சக்தி தாளாது, உடல் சிலிர்த்தது. அவள் ஸ்பரிசம் பட்டவிடம் தண்ணென்றிருந்தது. அவள் பக்கம் அவன் திரும்பி, "அடடா, உன்னை விட்டு விட்டு நான் போய் விடுவேனா? உன்னை மிகப்பெரிய அரியணையில் ஏற்றி அமர வைத்து விட்டு, உன் காலடியில் வந்தமர்ந்து சந்திரகுமாரி என்று கூப்பிடுவேன். அப்போது உன் கடைக் கண்ணை என்மேல் வீசு, போதும்..." என்றான். அவளை அப்படியே அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற வேகம்



ஜிவ்வென்று எழுந்தது. ஆனால், 'ஹூஹூம்... இப்போது வேண்டாம்...' என்று அவன் உள்ளம் எச்சரித்தது.

அவளுடைய பார்வையின் சக்தி தாளாது அவன் எழுந்து "இதோ நொடியில் வருகிறேன்... கடுஞ்சுரத்துக்கு வைத்தியர் பச்சிலையொன்று கூறினார். அதைத் தேடிக்கொண்டு வருகிறேன். அதைக்கொடு. காய்ச்சல் தீர்ந்ததும் இவனை அனுப்பிவிடுவோம்" என்றான்.

"காய்ச்சல் தீர்ந்தவுடன் அனுப்புவதா? அதுவரை நாம் இங்கேயே இருப்பதா? முடியாது, முடியாது. எனக்குப் பயமாக இருக்கிறது. வீடு ஒன்று பார்த்து வந்திருப்பதாகக் கூறினீர்களே... அங்கே போய் விடுவோம்... இவரையும் நாம் மெல்லச் சுமந்து சென்று விடுவோம்..." என்றாள் சந்திரகுமாரி.

கங்கபீமன் சற்று யோசித்தான். பிறகு, "அப்படியே செய்வோம்" என்று கூறிவிட்டு வெளியே சென்றான். சந்திரகுமாரிக்குக் குதூகலம் பொங்கியது. துள்ளி எழுந்தாள். ஏதோ ஒரு பாடலை முணுமுணுத்தாள். ஒருமுறை சுழன்றாள். அவள் உடலில் இனம் புரியாத உணர்ச்சியொன்று துள்ளியது. ஒரு நொடியும் அமைதியாக இருக்க முடியாது போல் தோன்றியது. பாதங்கள் அவளையறியாமல் தாளமிட்டன. கரங்கள் வளைந்தன. இடை ஒய்யாரமாக அசைந்தது.

இராசேந்திரன் மெல்லக் கண் விழித்தான். சந்திரகுமாரி அதைக் கண்டுவிட்டாள். அவனருகே விரைந்து ஓடி அமர்ந்து, அவன் சற்றும் எதிர்பாராதவிதமாக அவனது தலையைத் தனது மடியின் மீது மெல்ல எடுத்து வைத்துக் கொண்டு, "விழித்துக் கொண்டீர்களா? இனி பயமில்லை. சுரம்கூடக் குறைந்திருக்கிறதே..." என்று ஆவலும் பரபரப்பும் ததும்பப் பேசினாள்.

இராசேந்திரனுக்குத் தாகம் அதிகமாயிருந்தது. அவன் சைகை மூலம் தண்ணீர் கேட்டான். அந்த நொடிகூட அவனை விட்டுச் செல்ல அவளுக்கு மனமில்லை. எனினும் பரபரப்புடன் எழுந்து சென்று தண்ணீர் கொண்டு வந்து, சிறிது சிறிதாக அவனைப் பருகுமாறு செய்தாள். இராசேந்திரனுக்குக் களைப்பு மெல்ல விலகத் தொடங்கியது.

"உங்களுக்கு என் நன்றி..." என்று மெல்லக் கூறினான் இராசேந்திரன். அவன் எழுந்திருக்க முயன்றான்.

CONNEMARA PUBLIC LIBRARY

"ஐயோ... எழுந்திருக்காதீர்கள். நேற்றுத் தாங்கள் இருந்த நிலைக்கு இன்று கண் விழித்தது தெய்வச் செயல்..." என்றாள் சந்திரகுமாரி.

"எல்லாம் தங்கள் உதவிதான் காரணம்."

"தாங்கள்-நீங்கள் என்று இந்த நாட்டியப் பெண்ணுக்கு என்ன அவ்வளவு மரியாதை. நீ என்றே என்னைக் கூப்பிடுங்கள்..." சந்திரகுமாரி மெல்ல நகைத்தாள்.

"ஓ! நீ நாட்டியப் பெண்ணா?-அதனால்தான் சற்று முன்பு குதூகலமாய் ஆடினாயா! அதனால், நான் மயக்கம் தெளிந்தேன்."

"இன்னும் ஆடட்டுமா"

"வேண்டாம்... வேண்டாம்..."

"அதுவும் சரிதான்....... நாளைக் காலையில் நகரத்திற்குப் போகிறோம். அங்குத் தனியே வீடு ஏற்பாடு செய்திருக்கிறார் மாமா. அங்கு உங்கள் விருப்பம் தீர ஆடுகிறேன்..."

"மாமாவா... யார் அவர்...?"

"ஆமாம்... என் தாய்மாமன். அனாதையான என்னைக் காப்பாற்றுகிறவர். இப்போது அவர்தான் துணை... இனி எனக்குக் கவலையில்லை. சோழ நாட்டில் மற்றொருவர் துணையும் கிடைத்துவிட்டது..."

"யார் அவர்...?"

"யாரா? நேற்று நடுக்காட்டில் மயங்கிக் கிடந்து இன்று என்னை மயக்கமடையுமாறு மாயப்பொடி தூவிக் கொண்டு எதிரே இருப்பவர்தான்..."

இப்படிச் சொல்லிவிட்டுச் சந்திரகுமாரி அவன் நெற்றியைத் தொட்டு, "இப்போது எவ்வளவோ தேவலை" என்றாள். பிறகு அவனது தலைமுடியைக் கோதினாள். இராசேந்திரனுக்கு என்னவோ பேச வேண்டும் போலத் தோன்றியது.

"என்ன அழகாக இருக்கிறது..."

"எதைச் சொல்கிறாய்...?"

"உங்கள் தலைக் கேசம் சுருண்டு என் மனத்தைக் கவர்கிறது..."

"பெண்கள் கூந்தலை விடவா?"



"உங்கள் விசாலமான நெற்றியும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் விழிகளும்..."

"ஆகா, உனக்குக் கவிதையும் வருமோ? உன்னை நான் வர்ணித்திருக்க வேண்டும். ஆனால் சொற்கள் வரவில்லை. நீ என்னை மிஞ்சிவிட்டாய்..."

"இல்லை... இல்லை... நாட்டிய மண்டபத்திலிருந்து வரும் வழியிலே நீங்கள் மயங்கிக் கிடந்தீர்கள்... உங்களைப் பார்த்தவுடனேயே உங்கள் அழகிய முகமும், கருணைத் ததும்பும் விழிகளும், அறிவுடையோர்க்கே உரிய நீண்ட நாசியும், நான் பெண், என்ன இருந்தாலும் வெட்கம் விட்டு வர்ணிக்கக் கூடாது... ஆனால் நான் நாட்டியப் பெண். ஓரளவுக்கு நாணமும், கூச்சமும் விலகி விட்டன... தங்கள் அகன்ற புஜத்தைக் கண்டுதான் தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று முடிவு செய்தேன்..."

"ஆகா! சிறப்பாக வர்ணிக்கிறாய்... ஹூம்...... உன் பெயரை நான் கேட்கவில்லையே..."

"சந்திரகுமாரி..."-இதைக் கூறிவிட்டு அவள் ஏனோ தலை குனிந்தாள்.

"சந்திரகுமாரி..... ஆகா! தகுந்த பெயர். சந்திரன் குளுமை வதனத்திலே புகுந்திருப்பதால் அப்பெயரா? எழில் முகத்தின் இரு விழிகளிலிருந்து வீசும் அன்புக் கிரணங்களால் அப்பெயரா...?" இராசேந்திரனுக்கே வியப்பாக இருந்தது. சில வினாடிகளில் அவ்வளவு தூரம் எப்படித் தன்னால் பேச முடிந்தது என்று.

சந்திரகுமாரி கலகலவென நகைத்தாள். அந்தச் சிரிப்பொலி புது உற்சாகத்தை அளிக்கக் கூடியதாயிருந்தது.

"நீங்கள் வீரர் மட்டுமல்லர்... கவிஞருங்கூட என்று எனக்கு இப்போதுதான் தெரிந்தது. படைச் சேவையிலிருந்து விலகி விடுங்கள். நீங்கள் கவிதை பொழியுங்கள்... நான் ஆடுகிறேன்..."- சந்திரகுமாரி நகைத்தாள்! இராசேந்திரனும் மெல்லச் சிரித்தான். அவனுக்கு அங்கு ஏற்பட்டவை புது அனுபவம்!

சந்திரகுமாரிக்குத் துணிவு வந்து விட்டது. இராசேந்திரனின் மெல்லிய கன்னங்களுடன் அவளது மலர் முகம் உறவாட விரும்பி

யது. அவளது துடிக்கும் இதழ்கள், அவனுடைய உதடுகளுடன் ஏதோ நெருங்கிப் பேச விரும்பின. அவள், அவன் செவியருகே ஏதோ கூற முயல்பவள்போல் தன் முகத்தை நெருக்கவும், இராசேந்திரன் நொடியில் நிலையைப் புரிந்து கொண்டு மெல்ல அவள் முகத்தை விலக்க முயன்று, "ஆமாம்... ஏதோ நாட்டிய மண்டபமென்றாயே... அப்படியொரு மண்டபம் இங்கே இருக்கிறதா...?" என்று கேட்டான்.

"உங்களுக்குத் தெரியாதா? முந்தின நாள் இரவு முழுவதும் இதோ இந்தப் பாதங்கள் யார் யார் முன்னிலையிலோ ஆடின. வயது முதிர்ந்தவர்களும், இளம் வயதினர்களுமாக அங்குச் சூழ்ந் திருந்தார்கள்..."

"அவர்கள் என் நாட்டியத்தை ரசிக்கவில்லை...... என் அழகை ரசித்தார்கள்... இளவயதினர் ரசித்தால் களிப்படையலாம்..."

"ஏன் ஒருவர்கூட ரசிக்கவில்லையா?"

"ஏனில்லாமல்... உங்களைப் போன்று ஓர் வீர இளைஞர்... அவர் ரசித்தார். நான் துவண்டபோது என்னைப் பிடித்து நிறுத்தி னார்... மேலும் அவர் ரசித்திருப்பார். அவர்கள் முக்கியமான காரியம் பேச வேண்டியிருந்தது....."

"யாருடன்...?"

"மண்டபத்திலிருந்த சிற்றரசர்களுடன்?..."

"சிற்றரசர்களுடனா?"

"ஆமாம்... பல தேசத்து ராஜாக்கள்..."

"என்ன பேசினார்கள்...?"

சந்திரகுமாரி இதற்கு மறுமொழி கூறுவதற்கு எத்தனிக்கையில், கங்கபீமன் கையில் பச்சிலைக் கொடிகளுடன் உள்ளே வந்தான். அவன் சற்று முன்பே வந்து விட்டான். சந்திரகுமாரி சொல்லியதனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தான். நாட்டிய மண்டபத்தில் சிற்றரசர்கள் பேசிக் கொண்டவை அனைத்தையும் சொல்லிவிடப் போகிறாளே என்று எச்சரிக்க உள்ளே நுழைந்தான்.

"இப்போதுதான் மயக்கம் தெளிந்திருக்கிறது. ஏன் அவரைத் தொந்தரவு செய்கிறாய்...?" என்றான்.

# 11. வாடிய முல்லை

இராசேந்திரன் சிந்தனை எங்கெல்லாமோ தாவியது. யாரும் வராத இடத்திலே சித்திரமண்டபம். அங்கிருந்து சற்றுத் தொலைவில் நாட்டிய மண்டபம். அத்திமல்லர் அங்குதான் விரைந்தாரோ? இந்தப் பெண் என்ன சொல்லுகிறாள் பார்ப்போம் என்ற எண்ணத்தில், திகைப்புடன் கேட்பது போல் 'ஹும்' கொட்டினான்.

அப்போது நுழைந்துவிட்ட கங்கபீமன், கண் ஜாடையால் சந்திரகுமாரியை எச்சரித்தவாறு, "இரண்டு நாள்களாக எப்படி மயங்கிக் கிடந்தார்! அருகே உட்கார்ந்து தொந்தரவு செய்கிறாயே...?" என்று கூறித் தான் கொண்டு வந்திருந்த பச்சிலையைக் காட்டி, சீக்கிரமாகச் சாறு பிழிந்து கொடுத்தால் கடுஞ்சுரம் ஓடிவிடும். இல்லாவிடில் வாடிவிடும்..." என்று கூறினான்.

"இப்போது சுரம் இல்லையே..." என்றாள் சந்திரகுமாரி.

"மறுபடியும் வரலாமல்லவா?" என்றான் கங்கபீமன்.

"வரும்போது பச்சிலைச் சாற்றைக் கொடுப்போம்."

"அப்போது பச்சிலை கிடைக்காதே... நாம்தான் நகரத்திற் குப் போகப் போகிறோமே..."

கங்கபீமன் இப்படிக் கூறியவுடன் சந்திரகுமாரி களிப்புடன் திரும்பிப் பார்த்து, "நிச்சயம்தானா? இவரையும் அழைத்துப் போகிறோமல்லவா?" என்றாள்.

"உனக்குச் சம்மதம் என்றால் எனக்குச் சம்மதம்தான்... ஆனால், இவரைக் கேள், யார் இப்படிக் குரூரமாகத் தாக்கியது என்று. உண்மையிலேயே சோழ நாட்டைச் சேர்ந்த வீரன்தானா இவர்? வேறுநாட்டைச் சேர்ந்த ஒற்றராயிருந்தால் என்ன செய்வது? நாம் செல்லும் இடத்தில் இவருக்குத் தொந்தரவு தருவதன் மூலம் நமக்கும் சங்கடம் ஏற்பட்டால்...?" என்றான் கங்கபீமன்.

இராசேந்திரன் மெல்ல நகைத்தான். 'நான் ஏன் ஒற்றனாகிறேன்...' என்று தனக்குள் கூறிக்கொண்டு, "நான் ஓர் அனாதை. யார் என்னை எந்தப் படையில் சேர்த்துக் கொள்கிறார்களோ அங்கே சேர்ந்துவிடுவேன். கடாரம் போய் வந்தேன். அடுத்த படியாக எங்கே போகச் சொல்கிறார்களோ..." என்றான்.

இதை அவன் கூறியபோது, கங்கபீமன் இராசேந்திரன் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் சலனம் ஏதும் இல்லை. சந்திரகுமாரி பச்சிலையைச சாறாக்கிக் கொண்டுவரச் சென்றாள். கங்கபீமனும் அவளைத் தொடர்ந்தான்.

"அவனையும் அழைத்துச் செல்லுமாறு ஏன் வற்புறுத்து கிறாய்? உன் போக்கு திடீரென மாறிவிட்டதன் காரணம் தெரிய வில்லை" என்றான் கங்கபீமன். சந்திரகுமாரி ஏதும் பேசவில்லை. மௌனமாகச் சாறு பிழிந்து எடுத்துக்கொண்டு திரும்பி வந்தாள்.

"நான் கொடுக்கிறேன். நீ போய் வேறு ஏதாவது வேலை கவனி. வயதுப் பெண் ஒரு வாலிபனுடன் இப்படி நெருங்கிப் பழகலாமா?" என்றான் கங்கபீமன்.

சந்திரகுமாரி அவனைச் சுட்டுவிடுவதுபோல் பார்த்தாள், மறுமொழி பேசாமல் அவனிடம் கிண்ணத்தைக் கொடுத்துவிட்டுச் சற்றுத் தொலைவில் இருந்த பாறையில் போய் அமர்ந்து கொண்டாள்.

கங்கபீமன் மனத்திலும், சந்திரகுமாரி மனத்திலும் பெரும் போராட்டம். மிகவும் வற்புறுத்தினால் சந்திரகுமாரி தன்னைவிட் டுத் தனியே போய் விடுவாளோ என்று அவனுக்கு உள்ளூர பயம்.

மாமா சொல்வதைக் கேட்காவிடில் திடீரென தன்னைத் தவிக்கச் செய்து விட்டுப் போய்விடுவாரோ என்று அவளுக்குத் திகில். இதனால் ஒருவரோடொருவர் பேசாமலேயே அன்றைய பொழுதைக் கழித்தனர்.

காலையில் எழுந்தவுடன் புறப்பட்டு விடவேண்டும் என்பது அவர்கள் திட்டம். சந்திரகுமாரிக்குச் சரிவர உறக்கம் வரவில்லை. கங்கபீமன் ஏதேதோ திட்டமிட்டவாறு நடுச் சாமம் வரை விழித்துக் கொண்டிருந்தான். பொழுது புலருவதற்கு முன் கண்ணைச் சுழற்றிக் கொண்டு உறக்கம் அவனுக்கு வந்தது. சந்திரகுமாரியும் ஏதேதோ நினைவின் மயக்கத்தால் ஏற்பட்ட களைப்பில் கண்ணயர்ந்து விட்டாள்.

கிழக்கு வெளுத்துப் புள்ளினங்கள் சுறுசுறுப்பாகத் தத்தம் பணியைச் செய்ய எழுந்து பறந்த அவ்வேளையில், இராசேந்திரனுக்கு உறக்கம் கலைந்தது. அந்தக் குடிலில் இருக்கவும் பிடிக்கவில்லை. கங்கபீமனுடைய போக்கும், பேச்சும் அவன் மனத்தில் சந்தேகத்தை விளைவித்தன. நாட்டிய மண்டபத்திற்குச் சோழநாட்டைச் சேர்ந்த சிற்றரசர்கள் வரவேண்டும்-இரவெல்லாம் பேசவேண்டும் என்றால் அப்படி என்ன முக்கியமான விஷயம் இருக்கும்? அத்திமல்லரும் அங்கே போயிருப்பார்; படகோட்டியும் போயிருப்பானல்லவா? அவர்கள் எல்லா விஷயத்தையும் அறிந்திருப்பார்கள்-அவர்களைச் சந்திக்க வேண்டும். முக்கியமாக அத்திமல்லரைச் சந்தித்தாக வேண்டும் என்ற எண்ணத்துடன், இராசேந்திரன் படுத்திருந்த இடத்திலிருந்து துள்ளி எழுந்தான். புலரும் பொழுதின் ஒளி மங்கித்தான் கானகத்தில் வீசியது. சந்திரகுமாரி படுத்திருந்தது அந்த வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது. அவள் முகம் அவனை மாயசக்திபோல் ஒருமுறை நிறுத்தியது. அவளுடைய பணிவிடை கள்-அவள் பேச்சு-அவற்றை எல்லாம் விட அவளுடைய எழில்—இராசேந்திரன் ஒரு கணம் அங்கே நின்றான். அவர்களுடனேயே தங்கி விடலாமா என்று எண்ணினான்.



ஆனால் அத்திமல்லருடைய அன்பு, சந்திரகுமாரியின் கண்விழியை விடச் சிறந்திருந்தது.

சந்திரகுமாரியின் அழகு, அத்திமல்லரின் உறுதுணைக்கு நிகராக முடியுமா?

இராசேந்திரன் விரைந்து நடந்தான். கால் போன போக்கில் நடந்தான். மனித நடமாட்டத்தால் சிறிது சிறிது காணப்பட்டத் தடத்தின் வழியே இராசேந்திரன் வேகமாக நடக்க அவன் உடலில் எங்கிருந்துதான் தெம்பு வந்ததோ?

சித்திர மண்டபத்தைக் காணவேண்டும் எனும் ஆவல் அவன் உள்ளத்தில் தீவிரமாக எழுந்துவிட்டது. சோழநாட்டிற்கு ஏதோ ஆபத்து வரப்போகிறது என்பதற்கான சூழ்நிலைகளை இராசேந்திரன் உணரலானான்.

கீழைச் சாளுக்கிய நாட்டின் நியாயமான அரசுரிமையை அவனுடைய சிறிய தந்தை விசயாதித்தன் மறுத்துவிட்டபோது கூட இராசேந்திரன் கலங்கவில்லை. சோழநாட்டில் உட்பகைவர்கள் தோன்றிச் சதித் திட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதை எண்ணும் போது இராசேந்திரன் வருந்தினான்.

தாய் மாமன் வீரராசேந்திரனின் கம்பீரமான தோற்றத்தையும், அவர் ஆட்சி புரிந்தபோது நாட்டிலே ஏற்பட்டிருந்த அமைதியையும் அவன் அறிவான். அந்தத் தீரர் இருந்திருந்தால் பகிரங்கமாக மன்ன ருக்கு விரோதமாக ஒன்றுகூடுவார்களா-அதுவும் சிற்றரசர்கள்—?

இராசேந்திரன் இவற்றை எண்ணிக்கொண்டே சென்றான். அவனுக்கு இன்னும் சோழநாட்டில் உருவாகி வந்த பயங்கரச் சதிப் புயல் தெரியாது... அவற்றின் வாடையைத்தான் அவன் உணர்ந்தான்... முளையிலேயே சதியைக் கிள்ளிவிடவேண்டும் என்ற துடிப்பு அவனுக்கு இருந்தது. அத்திமல்லரைச் சந்தித்தால் எல்லா விபரமும் தெரியும் என்ற ஆவலில் இன்னும் வேகமாக நடந்தான். அவன் கால்களில் இறக்கை இருந்தால்கூட அவ்வளவு வேகமாகச் சென்றிருக்க முடியாது.

சூரியன் உதயமாகி இரண்டரை நாழிகை ஆகிவிட்டது. மெள்ள மெள்ளப் பொற்கதிர்கள் மர இடுக்குகளின் வழியே நுழைந்து, கானக இருளை ஓட்ட முயன்றன. இராசேந்திரன் இரு கைகளாலும் புதர்களை விலக்கிக் கொண்டு விரைந்தான். சித்திர மண்டபத்தை எப்படியாவது கண்டுபிடித்து அங்குள்ள ஓவியங்களைக் கண்டுவிட வேண்டும் எனும் ஆவலில் எங்குச் செல்கிறோமென்ற திசையைக்கூட அவன் உணரவில்லை.

'மகாராசா...' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் இராசேந்திரன். 'மகாராசா' என்றதற்காக அன்று; அக்குரல் கேட்ட குரலாக இருக்கிறதே என்றுதான்.

படகோட்டி காளி மரத்தின்மீது உட்கார்ந்து கொண்டிருந்தான். இராசேந்திரனைக் கண்டவுடன் கீழே குதித்து, "மகாராசா, தங்களை எங்கெல்லாம் தேடுவது? நேற்றெல்லாம் சல்லடை போட்டுச் சலித்து விட்டேன். இரவில் மரத்தின்மீது காலங்கழித்தேன். பொழுது பொன்னாகப் பிறந்தது. தங்களைக் கண்டு விட்டேன். மகாராசா, கண்டு விட்டேன். தங்களைக் காணாமல் எப்படியெல்லாம் துடித்தார் அத்திமல்லர்..." என்று பரபரப்பும் ஆவலும் மிகக் கூறினான்.

காளி, களிப்புடன் இருக்கும்போது, சந்திரகுமாரி ஏரிக்கரையில் வாடிய முகத்துடன் உட்கார்ந்திருந்தாள். காலையில் எழுந்தவுடன், அவள் இராசேந்திரன் படுத்திருந்த இடத்தில் அவனைக் காணாததை அறிந்தவுடன் இங்கும் அங்கும் தேடினாள். கங்கபீமன் புறப்படுவதற்கு அவசரப்படுத்தினான். படகோட்டி ஒருவன் ஏரிக் கரையில் காத்திருப்பான் என்றும் குறித்த நேரத்தில் அங்குச் செல்லாவிடில், படகோட்டி போய் விடுவான் என்றும் துரிதப்படுத்தினான். சந்திரகுமாரி ஏதும் பேசாமல் கங்கபீமனைப் பின் தொடர்ந்தாள்.



ஏரியின் நடுவே, கங்கபீமன் எதிர்பார்த்த படகு வந்து கொண்டிருந்தது. அதுவரையில் சந்திரகுமாரிக்குச் சந்தோஷத்தை யூட்ட கங்கபீமன் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தான். அதற்கெல்லாம் சந்திரகுமாரி செவி சாய்க்கவில்லை.

"எனக்குத் தெரியும் நீ ஏன் இப்படி இருக்கிறாய் என்று. அந்தச் சோழ வீரனை எண்ணித்தானே நீ ஏங்குகிறாய்" என்று கண்டிப்பான குரலில் கேட்டான் கங்கபீமன். சந்திரகுமாரியின் விழிகளில் நீர் தேங்கியது. அவனது அதட்டலால் அவள் மனம் மாறிவிடுமா? அவள் முல்லை முகம் வாடிவிட்டது. அதைக் கண்டு கொண்ட கங்கபீமன் அவளைக் களிப்பூட்ட விரும்பி, "சரி சரி, நகரத்திற்குள் சென்றவுடன் நான் அவனை எப்படியாவது தேடிப் பிடித்து அழைத்து வந்துவிடுகிறேன். அதற்காக நீ ஏன் 'உம்' என்று இருக்கிறாய். எங்கே கொஞ்சம் சிரி பார்ப்போம்... சிரி..." என்றான்.

ஆனால், சந்திரகுமாரியின் முல்லை மலரான முகத்தில் முன்பு இருந்த பழைய களிப்பைக் காணோம். அவை எங்கோ மறைந்து விட்டது. அது மலர வேண்டுமானால் அந்த இளவரச மதியல்லவா தோன்ற வேண்டும்!

## 12. சதிக்குத் துணை

படகோட்டியைக் கண்டதில் இராசேந்திரனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. சித்திர மண்டபத்தை விரைவில் கண்டு விடுவோம் என்ற ஆவல் அவன் உள்ளத்தில் புதுத்தெம்பை ஊட்டியது. களைப்பு என்பது கரைந்தது.

"அத்திமல்லர் எங்கே இருக்கிறார்?" என்று கேட்டான் இராசேந்திரன்.

"மகாராசா! அவர் மாளிகை வசந்த மண்டபத்திலே இருக்கிறார்... தங்களை எங்கிருந்தாலும் தேடி அழைத்து வருமாறு சொன்னார். வாருங்கள் போகலாம்" என்று அழைத்தான் காளி.

"உடனே வரவேண்டியதுதான்... ஆனால் அதற்கு முன்பு சித்திர மண்டபத்துச் சித்திரங்களைப் பார்த்துவிட வேண்டும். மண்டபம் எங்கே இருக்கிறது? வழிகாட்டு, காளி......" என்றான் இராசேந்திரன்.

"களைத்துப்போய் இருக்கிறீர்களே! பிறகு பார்த்துக் கொள்ளலாமே..." என்றான் காளி.

"பிறகா? நான் இனி எப்போது இந்தப் பக்கம் வரப்போகிறேன்_ இன்றே, இப்போதே பார்த்துவிடவேண்டும். மண்டபத்தைக் காட்டு..." என்று அவசரப்படுத்தினான் இராசேந்திரன். குரலில் உறுதி இருந்தது.

இருவரும் நடந்து சென்று சற்றுத் தொலைவிலிருந்த சித்திர மண்டபத்தை அடைந்தனர்.

"மண்டபத்தினுள்ளே ஒன்றுமே தெரியாதே மகாராஜா, நீங்கள் என்ன பார்க்க முடியும்?" என்று காளி கேட்டான்.

அப்படிக் கேட்டானேயொழிய, மண்டபத்திற்குள்ளிருந்து பேச்சுக் குரல் கேட்டதும் ஒரு கணம் திடுக்கிட்டான். பிறகு, "இப்போது இந்தச் சித்திர மண்டபத்திற்குத் திடீரென அதிர்ஷ்டம் அடிக்கிறது. நிறையபேர் வந்து பார்க்கிறார்கள்" என்றான்.

"வேறு யாராவது பார்க்கும்போதே நாமும் பார்த்து விடுவோமே_ அவர்கள் சுளுந்து வைத்திருப்பார்கள்... அந்த வெளிச்சத்திலேயே நானும் பார்க்கிறேனே..." என்றான் இராசேந்திரன். அதுவும் சரியென்று காளிக்குத் தோன்றியது. சீக்கிரமாகச் சித்திரங்களைப் பார்த்துவிட்டு இராசேந்திரனை அழைத்துச் சென்றுவிட விரும்பினான் காளிங்கன்.

சித்திர மண்டபத்துச் சுற்றுப் பிரகாரத்திற்குள் நுழைந்தார்கள். மூன்றடி அகலமும் நாற்பது அடி நீளமும் உடைய அந்தத் திருச்சுற்றில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் பேசின; ஆம், பேசின என்றால், அவை கடந்தகாலச் சம்பவங்களைக் கூறின.

ஓவியங்களைப் பார்க்க வந்தவர்கள் பாதிக்குமேல் பார்த்து விட்டார்கள் என்பது தீவர்த்தி வெளிச்சம் மறுபுறத்தில் ஒளி வீசியதிலிருந்து தெரிந்தது. காளிங்கன் வேகமாகச் சென்றான் அவர்களை நோக்கி. பாண்டிநாட்டுப் பிரதிநிதியும் இன்னும் சிலரும் ஓவியத்தைக் காணும் அந்தக் கோஷ்டியில் இருந்தார்கள்.

"ஆமாம், எதற்காக இவற்றை இங்கே எழுதி வைத்திருக்கிறார்கள்?" என்று அவர்களுள் ஒருவன் கேட்டான்.



"இராசேந்திர சோழருக்கு இவையெல்லாம் பொழுது போக்கு" என்றான் மற்றொருவன்.

பாண்டியப் பிரதிநிதி கடகடவென்று சிரித்து, "கேளிக்கை இல்லை; தற்பெருமையைத் தெரிவிக்கும் சித்திரங்கள்___ அது மட்டுமன்று எங்கள் மன்னர் சொல்லியிருக்கிறார்: இராசேந்திர சோழரும் அவர் தந்தை இராசராசரும் கடைசிக் காலத்தில் பெரும் கருத்து வேற்றுமை அடைந்தார்கள்; போட்டி மனப்பான்மை என்றுகூடச் சொல்லலாம். தஞ்சாவூர் பெருவுடையார்க் கோயிலில் உள்ள சித்திரங்களைவிட மிகமிகச் சிறப்பாகத் தானும் சித்திரம் தீட்ட இராசேந்திர சோழர் சபதம் செய்தார். அதை நிறைவேற்றச் சித்திரமண்டபம் கட்டினார் என்று" என்றான்.

"ஓகோ! தற்பெருமையா! இதோ இந்தச் சித்திரம் எதைத் தெரிவிக்கிறது? யாரோ தலையில் குடத்தைச் சுமந்து வருகிறார்களே, அது எதைத் தெரிவிக்கிறது" என்று அருகே இருந்த ஒருவன் கேட்டான்.

அந்தச் சித்திரம் மிகப் பெரிதாகத் தீட்டப்பட்டிருந்தது. பெரும் காடு ஒன்று; அதன் அருகே கம்பீரமாக மன்னர் ஒருவர் நிற்கிறார். வெண் கொற்றக் குடையைத் தாங்கி அவரருகே பணியாள் நிற்கிறான். புலிக் கொடி தாங்கி ஒருவன் நிற்கிறான். வேல் தாங்கிப் பல வீரர்கள் நிற்கின்றனர். படைத்தளபதியும், பட்டத்து யானையும் அங்கே காணப்படுகின்றனர்.

அடுத்த ஓவியத்தில் காடுகளை அழிக்கிறார்கள். அழகிய நகரம் எழுகிறது. போர் வீரர்கள் வாளும், வேலும் தாங்கி அணிவகுத்துச் செல்கிறார்கள்.

போர்க்களம்; வாளும், வாளும் மோதுகின்றன. புலிக் கொடியை ஒருவன் உயர்த்திப் பிடிக்கிறான், பெரும் நதிக்கரையில் சோழ வீரர்கள் நிற்கிறார்கள். யானைகளை நதியில் இறக்கி நிறுத்தியிருக்கிறார்கள். அதன்மீது மரப்பலகைகளைப் போட்டுப் போர் வீரர்கள் கடக்கிறார்கள்.

அடுத்து வெற்றி மாலையோடு சோழநாட்டுத் தளபதி திரும்புகிறான். போர் வீரர்கள் புடைசூழ, தோற்ற மன்னர்கள் தலையில் குடங்களில் கங்கை நீர் கொண்டு வரப்படுகிறது. கோதாவரி நதிக்கரையில் வெற்றிப் புகழோடு வரும் தனது படைகளைச் சந்தித்து இராசேந்திரன் வரவேற்கிறான்.

கங்கையின் புனித நீரை நகரின் பல பகுதிகளில் தெளிக்கிறார்கள். பிறகு ஏரியில் கொட்டுகிறார்கள். ஏரியும் புனிதமடைகிறது. ஏரிக்கரையில் மக்கள் குதூகலமாகக் குதித்துப் பாடி விழாக் கொண்டாடுகிறார்கள்.

இவற்றை விளக்கிய பாண்டிய நாட்டுப் பிரதிநிதி ஆத்திரத்துடன் பேசினான்:

"இவற்றை ஏன் உங்களுக்குச் சுட்டிக் காட்டுகிறேன் தெரிகிறதா? சோழன் புகழ் எட்டுத் திக்கும் பரவுகிறது. கங்கையைக் கொண்டு வந்த இராசேந்திரசோழனின் புதல்வன் நமது மூதாதையர்களான மூன்று பாண்டியர்களையும் அழித்து நம்மைத் தீராத அடிமையில் ஆழ்த்தியவன். அவர்கள் குலம் விளங்க, நம் குலம் தாழ்வுற்றிருப்பதா? உங்களுக்கு இன்னும் வீர உணர்ச்சி வரவில்லையா? புலிக் கொடியை வீழ்த்த வீறுகொண்டெழ வேண்டாமா? சோழர்களின் பெருமையைக் காட்டியாவது உங்களுக்கு உணர்ச்சி ஊட்டவே இங்கு அழைத்து வந்தேன். சித்திரங்களைப் பார்த்து முடித்து விட்டு, எந்த விதத்தில் சோழநாட்டில் குழப்பம் விளைவிக்க முடியுமோ அவ்வாறெல்லாம் செய்யுங்கள்... ஆனால் உங்களுக்குச் சுறுசுறுப்பே போதாதென்பது என் முடிவு. சோழநாட்டின் பரம்பரைப் பெயர் கூற ஒரே ஓர் இளவரசி-அவளை வீழ்த்தினால் அந்தப் பரம்பரையே ஆட்டங்கண்டுவிடும். அவள் உறையூரினின்று வருகிறாள். அவளை எளிதில் மேலுலகம் அனுப்பியிருக்கலாம்... தப்பவிட்டுவிட்டீர்களே......" என்று ஆத்திரம் பொங்கும் குரலில் மொழிந்தான் பாண்டிய பிரதிநிதியான இளவீரன்.

"நாங்கள் தக்க திட்டத்துடன்தான் இருந்தோம். ஆனால், எங்களுக்கும் முன்பாக ஏரிக்கரையில் யாரோ திடீரென அவர்களைத் தாக்க முயன்று, அது பலிக்காமல் ஓடிவிட்டார்கள்" என்று அங்கு இருந்தவர்களுள் ஒருவன் கூறினான்.

"எப்படியோ, நம்மைப்போல் சோழர்களை வீழ்த்தப் பலர் கங்கணங் கட்டிக் கொண்டு விட்டனர் என்பது தெரிகிறது. மீண்டும் சிற்றரசர்கள் கூடிப் பேசப்போகின்றனர். நாங்கள் பெருந்திட்டம் வகுக்கிறோம். நீங்கள் ஆங்காங்குச் சிறு சிறு கலகங்கள் மூள வழி செய்யுங்கள். இன்னும் ஒரு பட்ச காலத்தில் இதே சித்திர மண்டபத்தில், இங்குள்ள சித்திரங்கள்மீது காரையைப் பூசி, பாண்டிய மன்னரின் புகழைத் தீட்டுவோம்... போவோம் வாருங்



கள்..." என்றான் பாண்டிய இளைஞன். தீவர்த்திகள் மெல்ல நகர்ந்தன. அப்போது காளிங்கன் மெல்லத் தொண்டையைக் கனைத்து, "இப்படி அந்தச் சுளுந்தில் ஒன்றைத் தர முடியுமா? இந்தச் சித்திரங்களைப் பார்த்து நாங்களும் வீர உணர்ச்சி அடைகிறோம். உங்களைப் போன்றே எங்களுக்கும் இந்தச் சோழ ஆட்சியின் மீது மிகுந்த வெறுப்பு" என்றான்.

பாண்டியக் குமாரன் திடுக்கிட்டு, 'யாரது' என்று கூவித் திரும்பினான். ஒரு கையில் தீவர்த்தி வைத்துக் கொண்டு மற்றொரு கரத்தின் மூலம் உடைவாளை உருவினார்கள் மற்றவர்கள். செந்நிற வெளிச்சத்தில் வாட்கள் பளபளத்தன.

"உங்கள் விரோதிகள் இல்லை பாண்டிய இளவரசே! நான்தான் படகோட்டி காளி. நேற்று முன்தினம் எவ்வளவோ தடவை என் படகில் வந்தீர்களே..." என்று பல்லெல்லாம் வெளியே தெரியக் குழைந்தான் காளிங்கன்.

தன்னை 'இளவரசே' என்றழைத்ததில் புளகாங்கிதம் அடைந்துவிட்ட பாண்டிய நாட்டு இளைஞன், "அடடா! படகோட்டியா? ஏதப்பா இந்த நேரத்தில் இந்த இடத்தில்... நல்ல வேளை நகரத்திற்குப் போகப் படகு கிடைக்காதே என எண்ணியிருந்தேன். நீயே இங்கு வந்து விட்டாயே. இதோ தீவர்த்தி தருகிறேன். சித்திரங்களைப் பார்! நன்றாகப் பார்! கர்வம் பிடித்த சோழ மன்னர்கள் சுயப்பிரதாபத்தை வர்ணங்களால் தீட்டியிருப்பதை நன்றாகப் பார்! பார்த்து விட்டுச் சீக்கிரம் வந்துவிடு! நான் படகுத் துறையில் உனக்காகக் காத்திருக்கிறேன்" என்றான்.

அப்படிக் கூறிவிட்டுத் திரும்பியவன், காளிங்கனுக்குப் பின்னால் சற்று மறைவில் இராசேந்திரன் நிற்பதைப் பார்த்து விட்டு, "அது யார்? இன்னொருவரையும் அழைத்து வந்திருக்கிறாயா?" என்று வியப்புடன் கேட்டுத் தீவர்த்தி வெளிச்சத்தை இராசேந்திரன் முகம் நோக்கித் திருப்பினான். அந்த ஒளி இராசேந்திரன் முகம் மீது நன்றாக வீசியது.

பாண்டிய இளைஞன் திகைத்தான். அதே தோற்றத்தை வேறு எங்கோ பார்த்திருந்ததுபோல் அவனுக்குத் தோன்றியது. சில வினாடி நேரம் வைத்தக் கண் வாங்காமல் பார்த்திருந்த அவன், "இது யார்? எங்கோ பார்த்ததுபோல் நினைவுக்கு வருகிறதே!" என்றான்.

காளி சட்டெனப் பேச்சை மாற்ற விரும்பி, சிறிதும் தயங்காமல், "இவரை எங்கும் பார்த்திருக்க முடியாது. சாளுக்கிய நாட்டிலிருந்து நேற்றுத்தான் வந்தார். இங்குள்ள இரகசியங்களை அறிந்து போக வந்திருக்கிறார்" என்றான்.

பாண்டிய இளைஞன் அந்த மண்டபமே அதிரும்படி 'ஹோ ஹோ' என்று சிரித்து இராசேந்திரனைத் தழுவிக் கொண்டு, "எங்களுக்கு உதவியாக மற்றொருவன் கிடைத்திருக்கிறானா! இனி வெற்றிதான்" என்றான்.

## 13. உள்ளத்தின் சலனம்

பாண்டி நாட்டுப் பிரதிநிதியான இளைஞனுக்கு, இராசேந்திரனைக் கண்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. சோழ நாட்டிற்கு மற்றொரு விரோதி கிடைத்து விட்டான் என்று களிப்படைந்தான். அவனை வாழ்த்தி விட்டு, "சீக்கிரமாக சித்திரங்களைப் பார்த்து விட்டு வந்து சேருங்கள். அரசர்கள் பலர் கூடிப் பேசப் போகும் சபையில் உங்களையும் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்" என்றான்.

இராசேந்திரன் ஏதும் பேசவில்லை. காளி தீவர்த்தி ஒன்றை வாங்கிக் கொண்டான். ஒவ்வொரு சித்திரமாகப் பார்த்துவரத் தொடங்கினார்கள். விசயாலய சோழர் காலத்துக்கு முன்பிருந்த சோழ மன்னர்களின் வீரதீரச் செயல்கள் அங்கே தீட்டப்பட்டிருந்தன. பல போர்க்களங்களில் வெற்றிக் கொடி நாட்டப்படும் சோழர்களின் வீரம் புலப்படும்படி வண்ண ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருந்தன. பிறகு பெரிய கோயில் கட்டும் அதிசயம், அந்த ஓவியங்களிலே காணப்பட்டன. கடலிலே பெரும் கலங்கள் செல்கின்றன; அவற்றிலே புலிக்கொடி கம்பீரமாகப் பறக்கின்றது. வில்கொடி பொதித்த கலங்களைப் புலிக்கொடி பூண்ட கலங்கள் அழிக்கின்றன.

அந்த ஓவியங்களைப் பார்க்கும்போது இராசேந்திரன் உடலில் புதிய இரத்தம் ஓடுவது போன்ற உணர்ச்சி எழுந்தது. அவன் காளியை நோக்கி, "பார்த்தாயா! பழம்பெருமைகளையெல்லாம் மறக்காமல் இருப்பதற்காக எப்படிச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார்கள்" என்றான்.

"ஆமாம் இளவரசே! இவற்றைப் பார்க்கும்போது எனக்கும் பெருமை பொங்குகிறது. அப்படிப்பட்ட சோழ மகாராசாக்கள்



இருந்த இடத்தில் சதிகாரர்கள் வந்து சேர்ந்து கலகஞ் செய்யப் பார்க்கிறார்களே..." என்றான் காளி.

"நல்ல வேளை, நீ அவர்கள் எதிரே 'இளவரசே' என்று அழைக்காமல் இருந்தாயே! என்னை எங்கோ பார்த்ததுபோல் தோன்றுகிறது என்று அந்தப் பாண்டி நாட்டான் சொன்னானே, எங்கே பார்த்திருப்பான்"-என்று இராசேந்திரன் ஆவலுடன் கேட்டான்.

"எனக்கும் தெரியவில்லையே, இளவரசே!" என்றான் காளிங்கன்.

ஆனால் அவனுக்குச் சிறிது நேரத்தில் தெரிந்து விட்டது. கங்கைகொண்ட சோழரான இராசேந்திர சோழ தேவரின் கம்பீரமான தோற்றம் வர்ண விசித்திரங்களால் தீட்டப்பட்டிருப்பதைப் பார்த்தவுடனே அவன் ஆவல் துள்ளக் கூவினான். "இளவரசே! இளவரசே! இதோ பாருங்கள்..." என்றான்.

"இந்தச் சித்திரத்தைத்தானே சற்று முன்னர் பாண்டி நாட்டவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்?" என்று கேட்டான் காளி.

இராசேந்திரன் அந்தச் சித்திரத்தைப் பார்த்தான். தஞ்சை பெரிய கோயிலருகே இராஜராஜ சோழ தேவர் நிமிர்ந்து நின்று வானளாவி நிற்கும் விமானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் அருகே திருக்குமாரர் இராசேந்திரன் நின்று கொண்டிருக்கிறார். இளம் வயதினர். ஆனால், கம்பீரமான தோற்றம். வீரநோக்கு.

பார்த்தீர்களா! இதோ தங்கள் பாட்டனார் இராசேந்திர சோழ தேவர். என் பாட்டியார் இந்த மகாராசாவை நேரிலே பார்த்திருக்கிறார். நீங்கள் உங்கள் பாட்டனாரைப் போன்ற தோற்றமளிக்கிறீர்கள். சித்திரத்தைப் பார்த்து விட்டுத் தங்களை நேரே பார்ப்பவர்களுக்குத் தங்களை எங்கோ இதற்கு முன்பு சந்தித்தது போலவே தோன்றும்..." என்றான் காளி.

"ஓகோ... உன் பாட்டியார் கங்கைகொண்ட சோழரை நேரே சந்தித்து இருக்கிறாரா? அவர்கள் பாக்கியசாலி. உங்கள் பாட்டியாரை நான் பார்க்க வேண்டுமே..." என்றான் இராசேந்திரன்.

"இப்போது அங்குதானே போகப் போகிறோம். அத்திமல்லர் என் குடிசையில் காத்திருப்பார்..."

"உன் குடிசையிலா? அப்படியென்றால் உடனே புறப்படுவோம்."

சித்திரமண்டபத்தினின்று வெளியே வரும்போது இராசேந்திர னுக்குப் படபடப்பு நீங்கவில்லை. காணாதது எதையோ கண்டு விட்ட வியப்பு. இதுவரையில் கேட்காதது எதையோ கேட்டுவிட்ட ஆச்சர்யம்; இதுவரையில் தான் அறியாதது ஏதோ ஒன்றை அறிந்து விட்ட குதூகலம்;

படகு கட்டப்பட்டிருந்த இடத்தை நோக்கி இருவரும் நடந்தனர்.

"நாட்டிய மண்டபத்தைக் காண வேண்டும் என்றீர்களே" என நினைவுப்படுத்தினான் காளி.

நாட்டியம் என்றவுடன் சந்திரகுமாரியின் நினைவு இராசேந்திரனுக்கு ஏற்பட்டது.

"வேண்டாம், வேண்டாம். நான் எந்த நாட்டியத்தைக் கண்டு ரசிக்கப் போகிறேன்" என்றான்.

"நமக்காகப் பாண்டிய நாட்டுக்காரர்கள் காத்திருப்பதாகச் சொன்னார்களே" என்றான் காளி. இராசேந்திரன் சற்று நேரம் யோசித்து, அவர்கள் கண்களில் படாமல் வேறுபக்கமாகப் போகமுடியாதா?" என்று கேட்டான்.

"நான் படகைக் கட்டியுள்ள இடம் யாருக்கும் தெரியாது. அங்கே போய் விடுவோம் என்று கூறினான் காளி."

சோழகங்கப் பேரேரியில் காலை இளஞ் சூரியனின் பொற் கதிர்கள் பாய்ந்து அதை உருக்கிய தங்கக் குழம்பு போல் மாற்றிப் பொன்னேரியாக ஆக்கிக் கொண்டிருந்தன. பொன்னீரை கிழித்துக் கொண்டு காளிங்கன் படகு சென்று கொண்டிருந்தது. துடுப்பு தண்ணீரில் அலையும் போது ஏற்படும் ஒலியைத் தவிர வானத்தே பறந்து செல்லும் பறவைகள் சில இடும் ஒலியும் காளிங்கன் மௌனத்தைக் கலைத்தது.

*"வானத்தை அடைந்து விட்டோம்*
*எங்கள் மகாராசா!-வரிசைகள்*
*சேர்த்து விட்டோம் எங்கள் மகாராசா!"*

என்று பாடத் தொடங்கினான்.

கண்ணுக்கு எட்டிய தொலைவுவரை வேறு படகுகளைக் காணவில்லை. இராசேந்திரன் மௌனத்தைக் கலைத்து, "காளி! உன்னைத்தவிர இங்கு இன்னும் எவ்வளவு படகோட்டிகள் இருக்கிறார்கள்!" என்று கேட்டான்.



"இரண்டு மூன்று பேர்கள்தாம்... ஒருவருக்குகே பிழைப்பு நடத்துவது ரொம்ப கஷ்டம்......"

"உனக்கு எப்படி எல்லோரும் பழக்கமானார்கள்?"

"என் படகில்தான் வருவார்கள்... பல ஆண்டுகளாக எல்லா ரையும் தெரியும்..."

பிறகு மௌனம். துடுப்பின் ஒலி மட்டுமே. இராசேந்திரன் புறப்பட்ட கரையை நோக்கினான். மற்றொரு படகு மங்கிய தோற றத்தில் தொலைவில் வருவது தெரிந்தது.

"அதோ பார்!" என்று இராசேந்திரன் காட்டினான். காளி திரும்பிப் பார்த்துவிட்டு, "அவர்கள் வருவதற்கு முன்பு நாம் கரைக் குச் சென்று விடலாம்" என்றான். பிறகு, மீண்டும் வரும் படகைக் கூர்ந்து நோக்கி, "அதில் ஒரு பெண்ணும் வருகிறாள். அந்த நாட்டியப் பெண் போலிருக்கிறது..." என்றான்.

நாட்டியப் பெண் என்றவுடன் இராசேந்திரன், "சீக்கிரம் படகை ஓட்டு. நமக்கு நிறைய காரியங்கள் இருக்கின்றன" என்றான். அப்படிச் சொல்லிவிட்டானேயொழிய, கரையில் இறங்கிச் சிறிது நேரம் அந்தப் படகு வரும் வரையில் காத்திருக்க வேண்டும் எனும் எண்ணம் அவனுக்குத் தோன்றியது.

அதே போல் காத்திருந்திருப்பான். படகு கரையை வந்தடைந்ததும் கரையில் அத்திமல்லர் நின்று கொண்டிருந்தார். இராசேந்திரனைக் கண்டவுடன் அவர் ஆவல் மிகுதியால் அவனை அணைத் துக் கொண்டு, "எங்கே போய் விட்டாய்? எங்கெல்லாம் தேடுவது?" என்றார்.

அத்திமல்லரின் அன்பும், ஆதரவும் அவனை நெகிழவைத்தன.

## 14. தோளுக்குச் சுமை

அத்திமல்லரும், இராசேந்திரனும், காளியும் மாந்தோப் புக்கு நடுவே இருந்த காளியின் குடிசைக்குச் சென்றனர். கோமதிக்கு அப்போதுதான் போன உயிர் வந்தது போன்ற உணர்வு. காளியைக் கண்டவுடன் அவள் முகம் மலர்ந்தது.

"அன்னிக்குக் காலையிலே போனதிலிருந்து திரும்பிவராத தால் எனக்கு இங்கே இருப்பே கொள்ளவில்லை" என்றாள் கோமதி. காளியைத் தொடர்ந்து வந்த அத்திமல்லரையும் இளவரசரையும் பார்த்தவுடன் நாணம் மிகுந்தவளாய்ச் சற்று ஒதுங்கிப்போய் மரத்தின் மறைவில் நின்று கொண்டாள்.

"உன் கணவர் இதோ வந்து விட்டார். தான் மட்டும் வர வில்லை. என்னையும், இளவரசரையும் அழைத்து வந்திருக்கிறார்" என்றார் அத்திமல்லர்.

அத்திமல்லரும், இராசேந்திரனும் தனியே மரத்தடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். தான் ஏரிக்கரையில் இளவரசி யைத் தாக்க முயன்ற எதிரிகளைத் தாக்கித் துரத்தியதிலிருந்து, சந்திரகுமாரியின் குடிசையிலிருந்து சொல்லாமல் புறப்பட்டு வந்தது வரையில் இராசேந்திரன் அத்திமல்லரிடம் தெரிவித்தான்.

அத்திமல்லர் நகைத்தார்.

"அந்த நாட்டிய பெண்ணைப் பற்றி நினைக்கும்போது ஒரு சமயம் கோபம் வருகிறது. இந்த நாட்டின் வீழ்ச்சிக்குச் சதி செய்பவர் களுக்கு அவள் உடந்தையாக இருக்கிறாளே என நினைக்கும் போது கோபம் வருகிறது. உன் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாள் என்பதற்காக அவளைப் பாராட்டத் தோன்றுகிறது" என்றார்.

"தங்களுக்கு அவளைத் தெரியுமா?அங்கு நடந்தவை அனைத்தும் உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான் இராசேந்திரன்.

அத்திமல்லர் பெருமூச்சு விட்டார். "இராசேந்திரா! ஒவ்வொரு நாளும் இந்நாட்டிற்கு விரோதமான செயலில் ஈடுபடுபவர்கள் எண்ணிக்கை அதிகமாகிறது. நமக்கு வேண்டியவர்களே இந்த நாட்டைத் துண்டுபோட்டுப் பங்கிட விரும்புகிறார்கள்..." என்றார்.

"சதிகாரர்களை நாம் ஏன் முறியடிக்கக் கூடாது?"- இராசேந்திரன் பரபரப்புடன் கேட்டான்.

அத்திமல்லர் மௌனமாயிருந்தார். பிறகு, "நான் நினைத்தது ஒன்று. இங்கு நடந்தது மற்றொன்று. அது சரி, சித்திரமண்டபத் தைப் பார்த்தாயா?" என்றார்.

"பார்த்துவிட்டேன்! ஆகா! இவ்வளவு நாட்களாகப் பார்க்கா மல் இருந்துவிட்டேனே..."



"எல்லாவற்றிற்கும் காலம் வரவேண்டாமா? கங்காபுரியை விட்டுச் சென்ற நீ, மீண்டும் இப்போதுதானே திரும்பி வருகி றாய்? உன் பொறுப்பையும் கடமையையும் நீ உணரும் காலம் வர வேண்டாமா?"

"கடமை-நான் எப்போதோ உணர்ந்து விட்டேன். என் மாமா உத்திரவிட்டவுடன் போர்க்களம் புகுந்தேன்... மேலைச் சாளுக்கியருடன் போர் புரியுமாறு என் மாமா கட்டளையிட்டார்..."

"யாரைச் சொல்கிறாய்? வீரராசேந்திர சோழரையா?"

"ஆமாம், ஆமாம்... அவருகேதான் நான் எப்போதும் இருந்தேன்... அவர் கட்டளைப்படிதானே நான் ஒவ்வொரு காரியத்திலும் நடந்து கொண்டேன்..."

இராசேந்திரன் கூறியதை அத்திமல்லர் ஆமோதித்தார். இராசேந்திரன் இளம் வயதிலேயே வேங்கியினின்று கங்கை கொண்ட சோழபுரம் வந்துவிட்டதையும், வீரராசேந்திரனுக்கு இராசேந்திரன் மீது அன்பு மிகுந்திருந்ததென்பதையும் அத்திமல்லர் அறிவார்.

கங்கை கொண்ட சோழரான பரகேசரி இராசேந்திரசோழ தேவர்க்குக் குந்தவை எனும் தங்கை இருந்தாள். அவளைக் கீழைச் சாளுக்கியநாட்டு மன்னர் விமலாதித்தன் மணம் புரிந்து கொண்டான். அவர்களுக்கு இராசராச நரேந்திரன் எனும் மகன் பிறந்தான். இராசேந்திரசோழருக்கு அம்மங்கை தேவி எனும் மகள் பிறந்தாள். கலியாண வயது வந்தவுடன் அவளை இராசராச நரேந்திரனுக்கு மணம் புரிந்து கொடுத்தார் கங்கை கொண்ட சோழர். கீழைச் சாளுக்கிய நாட்டுடன் நல்ல உறவு என்றும் இருக்க வேண்டும் எனும் தீர்க்க தரிசனத்துடன் அவ்வித மாக மணவினைத் தொடர்பு கொண்டார்.

அம்மங்கை தேவிக்கும், இராசராச நரேந்திரனுக்கும் பிறந்த வனே நமது இராசேந்திரன். இராசேந்திரன் மீது அவன் தாய்வழிப் பாட்டி முக்கோக்கிழானடிகளுக்கு அன்பு அதிகம். தன் பெயரனைக் கங்கைகொண்ட சோழபுர மாளிகையிலேயே வளர்த்து வந்தாள். கீழைச் சாளுக்கிய நாட்டில் இராசராச நரேந்திரன் காலமானவுட னேயே வேங்கிக்கு விரைந்தான் இராசேந்திரன். அவன் அப்போது சிறுவன். அவனது சிறிய தந்தை விசயாதித்தன் அவனுக்குத் தக்க வயது வரும் வரையில் வேங்கியிலிருந்து ஆட்சி பொறுப்பைத்

தானே கவனித்துக் கொள்வதாக விருப்பம் தெரிவித்தார். இளைஞன் இராசேந்திரனுக்கும் கங்கை கொண்ட சோழபுரத்தை விட்டுவர மனமில்லை. அதனால் ஆட்சிப் பொறுப்பைச் சிறிய தந்தையிடமே ஒப்படைத்து விட்டு வந்தான். அவன் தாய் அம்மங்கைதேவி வேங்கியிலேயே இருந்தாள். ஒரே மகனைப் பிரிந்து இருப்பதில் அவளுக்கு மிக வருத்தம்தான். எனினும் தன் சகோதரர்கள் இராசேந்திரனுக்குப் போர் முறைகள் பழக்கிக் கொடுப்பதும், உயர்ந்த கல்வி அறிவுக்குத் தக்க பண்டிதர்களை ஏற்பாடு செய்திருப்பதும் அறிந்த அம்மங்கைதேவி, தன் மகனைப் பிரிந்திருப்பதனால் ஏற்பட்ட துயரத்தை மறந்திருந்தாள்.

இவையெல்லாம் அத்திமல்லரும் அறிவார். இராசேந்திரனிடம் இயற்கையாகக் குடிகொண்டிருந்த அறிவையும், ஆற்றலையும் அறிந்து கொண்ட அத்திமல்லர், அவனுக்குள்ள நாட்டின் உரிமையையும் எடுத்துக் கூற விரும்பினார். அதனாலே சோழ கங்கத்தின் மறுகரையிலுள்ள சித்திர மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார். அங்குள்ள சித்திரங்களைக் காட்டி இராசேந்திரனின் பொறுப்பை உணர்த்த விரும்பினார். அவர் அருகேயிருந்து ஓவியங்களை விளக்கவில்லையேயொழிய, இராசேந்திரன் அவற்றைப் பார்த்து விட்டான் என்பதில் மகிழ்ச்சியடைந்தார்.

"சித்திர மண்டபத்துச் சித்திரங்களைப் பார்த்தவுடன் உனக்கு என்ன தோன்றியது?" என்று அத்திமல்லர் கேட்டார்.

"அந்தப் பாழ் மண்டபத்தில் அப்படி என்ன இருக்கப் போகிறது என்று நினைத்தேன்... ஆகா! என் பாட்டனார் என்ன தீர்க்கதரிசனத்துடன் அவற்றை வரைந்துள்ளார் என்பது எனக்குப் புரிந்தது."

"உன் பாட்டனார் உனக்காகத்தான் அந்த மண்டபத்தையே கட்டினார் என்று சொல்லலாம். அவரைப் போன்று அவர் பெயரனும் பெருஞ் சக்கரவர்த்தியாக விளங்க வேண்டும் என்பது அவர் எண்ணமாக இருந்து இருக்கலாம்..."

அத்திமல்லர் இவ்வாறு கூறியவுடன் இராசேந்திரன் சிரித்தான். "ஆ! என் பாட்டனாரின் திறமை எங்கே! என் திறமை எங்கே? அந்த மண்டபத்திலுள்ள சித்திரத்தில் அவரது மகத்தான செயலைக் கண்டேன்; பராக்கிரமத்தைக் கண்டேன். கம்பீரத் தோற்றம் கண்டேன். வான்முகட்டை எட்டும் விமானத்துடன் கூடிய கங்கை கொண்ட சோழீச்சரத்தை அவர் நிர்மாணித்த பெருமை



கண்டேன். மாபெரும் கங்காபுரியை அமைத்த திறமை கண்டேன்! அவர் திறமை எங்கே, என் திறமை எங்கே..." என்றான்.

"இராசேந்திரா! அப்படிச் சொல்லாதே... அந்தச் சித்திர வரிசையைப் பார்த்தாயா? புறாவுக்குத் தன் உடலை ஈந்த சிபிச் சக்ரவர்த்தியின் சித்திரம் முதல், கங்கை கொண்ட சோழீசர் கோயிலில் கருவூர்த் தேவர் பதிகம் பாடுவதும், பல நாட்டுச் சிற்றரசர்கள் பொன்னும் மணியும் கொண்டு குவித்துக் கை கட்டி நிற்பது வரையிலும் தீட்டியிருப்பதைக் கண்டாயா?"

"ஆமாம்......"

"அதற்குப் பிறகு அற்புத நிகழ்ச்சிகள் சோழ நாட்டில் நடைபெறவில்லையா? கங்கை கொண்ட தேவரின் புதல்வர்கள் பராக்கிரமச் செயல்கள் ஏதும் புரியவில்லையா? அவரது புதல்வர்கள் ஒருவர் பின் ஒருவராய்ப் பட்டம் ஏறிச் சிறப்பாக ஆட்சி புரியவில்லையா?"

"ஏனில்லை? என் மாமன்மார்கள் சாளுக்கியர்களை ஓடஓட விரட்டினார்களே! இராசேந்திரச் சோழ மன்னரிடம் தூது வந்தவனை மொட்டையடித்து அவமானப்படுத்தி அனுப்பினரே... கல்யாணப் புரத்தைத் தீயிட்டுக் கொளுத்தினரே......"

"ஏன் அவற்றைச் சித்திரங்களாகத் தீட்டவில்லை? உன் மீது மிகவும் மதிப்பும், அன்பும் வைத்திருந்த வீரராசேந்திரர் கடல் கடந்த நாடுகளில் நமது வணிகர்கள் படும் துயர் தீர்க்கப் படையெடுத்துச் சென்று வெற்றி பெற்ற சம்பவங்கள் இல்லையா? அவற்றை வரையக் கூடாதா? ஏன் வரையவில்லை....?"

அத்திமல்லரின் இந்தக் கேள்விக்கு இராசேந்திரனால் விடைகூற முடியவில்லை. அத்திமல்லர் இதற்கு இராசேந்திரனிடமிருந்து மறுமொழி எதிர்பார்க்கவில்லை; தானே கூறினார்.

"இராசேந்திரா! சித்திர மண்டபம் பாழ்பட்டுப் போனதற்குக் காரணம் என்ன? இங்கே ஒருவரும் வருவதில்லை. புதிய சித்திரங்களைத் தீட்டுவதிலும் கருத்துச் செலுத்தவில்லை. போர்க்களங்கள் ஒன்றே அவர்களது நினைவாக இருந்தன. மேலைச் சாளுக்கியர்களுடனும், ஈழத்துடனும், பாண்டியர்களுடனும் போர் புரிந்து வெற்றிப் பெருமிதத்தில் அமிழ்ந்தனர். அதன் பலனை இனி அனுபவிக்கப் போகிறார்கள். கலியாணபுரத்தை எரித்ததால் பெருமைப்படுகிறாயே. அதற்குப் பழிக்குப் பழி வாங்க மேலைச் சாளுக்கியர்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும்? அடிமையாக இருக்

கும் பாண்டியர் சீறி எழச் சந்தர்ப்பம் எதிர்பார்த்து இருக்கிறார்கள்... சோழ நாட்டிலும் அதிருப்தி. எடுத்ததற்கெல்லாம் வரி; மக்கள் உள்ளத்திலே வெறுப்பு உருவாகி வருகிறது. அதிகாரிகள் கடமையைச் செய்வதில்லை..." என்று சொல்லிக்கொண்டே போகும் போது, இராசேந்திரன் குறுக்கிட்டு, "ஏன், இவற்றை அடக்க முடியாதா? மன்னருக்குத் தெரியாதா?" என்றான்.

"மன்னர்... இதுவரையில் சோழ மன்னர்களில் ஒரு நாள் கூட சபையைக் கூட்டாதவரை இப்போதுதான் பார்க்கிறேன். கடும் நோயால் துன்புறும் அவரைப் பொருட்படுத்தாமல் எல்லாக் காரியங்களும் நடைபெறுகின்றன. அவரைச் சந்திக்கவும் அனுமதியில்லை..." என்றார் அத்திமல்லர்.

"ஏன், நான் அவரைப் போய்க் காண்கிறேன். என் பாட்டியாரைப் பார்க்க வேண்டும்... அப்படியே மன்னரையும் காண்கிறேன்."

"அவசரப்பட்டு விடாதே இராசேந்திரா... மன்னரை உடனே பார்த்து விடுவதால் ஒன்றும் நடந்து விடாது. நிரந்தர முடிவு ஏதாவது செய்ய வேண்டும். அதற்குத் தக்கவர் தலைமை ஏற்க வேண்டும்...."

"சோழ நாட்டின் நலன் கருதும் யார் முன்வருவார்கள்? உடனே அவரிடம் சென்று கேட்டுக் கொள்வோம்... கங்காபுரியில் நடமாடும் விரோதிகளை உடனே முறியடிப்போம்..." என்று ஆவேசத்துடன் இராசேந்திரன் கூறவும், அத்திமல்லர் அவன் தோள்களைத் தட்டியவாறு, "எங்கே சென்று தேடவேண்டும். இதோ என் எதிரே நிற்கும் நீதான் தக்க பொறுப்பு ஏற்க வேண்டும். இராசேந்திரா, இந்தப் பெருமைமிக்க சோழ நாட்டைக் காப்பாற்றக் கூடிய உண்மையான வாரிசு உன்னைத் தவிர வேறு எவரும் இல்லை. உன் தோள்மீது எதிர்காலத்துச் சுமையைத் தாங்க வேண்டும்... அதனால்தானே உன்னைச் சித்திர மண்டபத்துக்கு அழைத்துச் சென்றேன். உன் பாட்டனார் கங்கை கொண்ட சோழர் விட்ட பணியை நீ தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டேனே... அதை நிறைவேற்ற நீ உறுதி பூண வேண்டும்..." என்றார் அத்திமல்லர்.

இராசேந்திரன் உடல் சிலிர்த்தது. அப்போது இளவரசி மதுராந்தகியின் தோழி, காளிங்கன் குடிசைக்கு வந்து, காளிங்கன் மனைவி கோமதியிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தது அத்திமல்லரின் செவிகளில் வீழ்ந்தது.



# 15. இளமை நினைவு

இளவரசி மதுராந்தகியிடம் அவள் தோழி பவழவல்லி வாக்களித்து வந்தபடி, அவள் உள்ளம் புகுந்த அந்த வீர வாலிபனைச் சந்தித்ததைப் பற்றித் தெரிவித்தாள். தான் ஏரிக்கரைக்கு அருகேயிருந்த மாந்தோப்புக் குடிசைக்குச் சென்றதையும், அங்கே படகோட்டி வீட்டில் அந்த வீர வாலிபன் இருப்பதையும் தெரிவித்தாள். எப்படியும் அவரைக் கண்டு பிடித்து விடுவதாக வாக்களித்துச் சென்று கண்டுவிட்டதைக் குறித்து அவளுக்குப் பெருமிதம் பிடிபடவேயில்லை!

"அவரைத்தான் கண்டாயா நிச்சயமாகவா, பவழவல்லி?" என்று பரபரப்புடன் கேட்டாள் மதுராந்தகி.

"அவரையேதான் கண்டேன். உங்களைக் காப்பாற்றினாரே அவரையே கண்டேன்..." என்றாள் பவழவல்லி.

மேலும் கேட்க வேண்டும் போல் தோன்றியது. ஆனால் வெட்கம் வந்து சூழ்ந்து கொண்டது. பவழவல்லிக்கு இளவரசியின் உள்ளம் தெரியாதா?

"அவரையே கண்டேன்... ஆனால் அவரிடம் ஏதும் பேசமுடியவில்லை தேவி. நீங்கள் சொல்லியதுபோல் மன்னிப்பும் கேட்க முடியவில்லை" என்றாள் பவழவல்லி குறும்புப் பார்வையுடன்.

வெட்கம் சூழ, மதுராந்தகி பொய்க் கோபத்துடன், "நான் அவரிடம் என்ன கேட்கச் சொன்னேன்? ஒன்றும் சொல்லவில்லையே... நான் அவரைப் போய்ப் பார்க்கச் சொன்னேனா? சொல்லவில்லையே..." என்றாள்.

பவழவல்லி வியப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு "சரிதான், நீங்கள் சொல்லவில்லை; நான்தான் என் விருப்பப்படி செய்தேன், அப்படியே இருந்து விட்டுப் போகட்டும்... அவரைப் பற்றி விசாரித்ததுகூடத் தவறுதான். இனி ஏதுமே அப்படிச் செய்ய மாட்டேன்..." என்று கூறிச் சாளரத்துக்கு அருகே சென்று விட்டாள்.

மதுராந்தகிக்கு இருப்புக் கொள்ளவில்லை. பவழவல்லியின் அருகே சென்று, "அவரைப் பற்றி விசாரித்தாயா? அவர் எங்கிருக்கிறாரடி?" என்று அவள் முகவாயைத் தொட்டுக் கொஞ்சுவது போல் கேட்டாள்.

பவழவல்லி நகைத்தாள். "நீங்கள் விசாரிக்குமாறு சொல்லவில்லையே..." என்றாள்.

மதுராந்தகி இலேசாக அவள் கன்னத்தில் தட்டி, "விளையாட்டெல்லாம் இப்போது வேண்டாமடி, என் மனம் பல விதத்தில் வேதனையுற்றிருப்பது உனக்குத் தெரியாது. அவரைப் பற்றி நான் நிச்சயம் தெரிந்து கொள்ள வேண்டும். அவருக்கு ஆபத்து ஏற்படுவதிலிருந்து எப்படியும் தடுக்க வேண்டும்" என்றாள்.

"அதெப்படி உங்களுக்குத் தெரியும். அவரை இன்னாரென்று அறியாத உங்களுக்கு அவருக்கு நேரப் போகும் ஆபத்தைப் பற்றி மட்டும் தெரியுமா?" என்றாள் பவழவல்லி வியப்புடன்.

மதுராந்தகி நடந்தவற்றைக் கூறி, ஏனோ, தளபதி அவரைச் சிறைப் பிடித்து வருமாறு உத்தரவிட்டிருக்கிறாராம். பவழவல்லி, எனக்கென்னவோ இப்போது பயஉணர்ச்சி மேலோங்கி இருக்கிறது. என்ன செய்வதென்றே தெரியவில்லை..." என்று சோகம் ததும்பும் குரலில் கூறினாள்.

பவழவல்லி, இளவரசியைத் தேற்றி, "தேவி, இதற்கெல்லாம் பயப்பட முடியுமா? அவரைச் சிறை செய்ய யாராலும் முடியாது. அவர் அரசர்!" என்றாள்.

மதுராந்தகி திடுக்கிட்டு, "அரசரா?" என்று கேட்டாள்.

"ஆமாம், மன்னர் மட்டுமல்லர்... இளவரசரும் கூட."

"என்னடி உளறுகிறாய்! மன்னர், இளவரசர்... என்ன சொல்கிறாய்?"

"ஆமாம் தேவி... அவர் வேங்கியின் அரசர். இந்த நாட்டு இளவரசர்..."

பவழவல்லி இவ்வாறு கூறவும், மதுராந்தகி ஒரு கணம் சிந்தித்து, "அவர் அம்மங்கை அத்தையின் புதல்வரா..." என்று கூறுவதற்குள் வெட்கம் அவளை வந்து சூழ்ந்தது. "நான் யாரோ ஒரு படைவீரர் என்று எண்ணினேன்..." என்றாள். இதைச் சொல்லி விட்டு தோழியின் முகத்தைப் பார்க்க நாணி மஞ்சத்தில் வந்து தலையணையில் முகத்தை மூடிக் கொண்டாள்.

பவழவல்லி அவளருகே வந்து, அவள் காதருகே கேட்குமாறு, "இப்போது அவர் படை வீரர்தான். சோழநாட்டுப் படைவீரர்.



பல ஆண்டுகள் நம் நாட்டுக்காகப் பலப் போர்க்களங்களில் போரிட்டுவிட்டு இப்போதுதான் வந்தார்..." என்றாள்.

மதுராந்தகி மெல்ல எழுந்து, "பாட்டிக்குத் தெரியுமா அவர் வந்திருப்பது? மாளிகைக்கு வராமல் வேறு எங்கோ போய்விட்டு வருகிறாரே, ஏன்..." என்று கேட்டாள்.

"தேவி, அவை எல்லாம் எனக்கு எப்படித் தெரியும்? என்னையும் ஒற்றரைப்போல் தெரிந்து வருமாறு கூறியிருந்தால் தெரிந்து வந்திருப்பேன்..." என்றாள்.

மதுராந்தகிக்குச் சொல்ல முடியா புது உணர்ச்சி உடலெங்கும் பரவியது. அவள் தாயற்ற பெண். அந்த மாளிகையில் அவளுக்குத் தாயென்ற உறவுமுறை சொல்லக் கூடியவர்கள் பலர் இருந்தாலும், தாயன்புடன் அவளைத் தேற்றி, ஆதரவு காட்டக்கூடியவள் அவளது பாட்டியார்தான்.

அம்மங்கை அத்தையின் மகன் வந்திருக்கும் செய்தியைத் தெரிவிப்பதற்காகப் பாட்டியிடம் அவள் செல்ல எண்ணினாள். ஆனால் பவழவல்லி அவளைத் தடுத்து, "தேவி! அவசரப்படாதீர்கள். அவர் வந்திருப்பது அரண்மனையிலிருப்பவர்களுள் எவருக்கும் தெரியாது என நினைக்கிறேன். அவரும் அதைத் தெரிவிக்க விரும்பாததால்தான் குடிசையிலும், மரத்தடியிலுமாகக் காலங் கழிக்கிறார்" என்றாள்.

அதுவும் சரியென்று மதுராந்தகிக்குத் தோன்றியது. எனினும் மனத்திலேற்பட்ட பலவிதச் சலனங்களால் அவளுக்கு என்ன சொல்வதென்றும், என்ன செய்வதென்றும் புரியவில்லை.

அவள், இராசேந்திரன் பெயரை ஒரு முறைச் சொல்லிப் பார்த்துக் கொண்டாள். அந்த அழகிய முகத்தை ஒரு முறை மனக்கண் முன் நிலை நிறுத்தினாள். ஏரிக்கரையில் தன்னைக் காப்பாற்றிய அந்தச் சம்பவத்தை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்தாள்.

"என்னைத் தெரிந்து கொண்டுதான் உதவியிருப்பாரோ?" என்று ஒரு கணம் எண்ணினாள்.

"எனக்கு அவரைத் தெரிந்து கொள்ள முடியாததுபோல் அவரும் என்னை அறிந்து கொண்டிருக்க மாட்டார்" என்று நினைத்துச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அவள் எப்படி இராசேந்திரனின் முகத்தை அதற்குள் மறந்து விட்டாள்? பத்து ஆண்டுகள் நாட்டிலே பல மாறுதல்களை உண்டாக்கியவைபோல் இராசேந்திரன் தோற்றத்திலும் மாற்றத்தை உண்டாக்காமலிருக்குமா? சிறுவன் இராசேந்திரனாக மாளிகைத் தோட்டத்தில் குதித்து விளையாடிக் கொண்டிருந்தவன் தோள் வலிமைமிக்க வீரனாக மாறியவுடன் மதுராந்தகியைச் சந்திக்க அவனால் முடியாமல் போய் விட்டது.

இராசேந்திரனும், மதுராந்தகியும் மற்றும் அரண்மனையிலுள்ள அரச குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்களும் மதுகூர்கிழாரிடம் தமிழ்ப் பாடம் கற்றிருக்கிறார்கள். மதுகூர்கிழாருக்கு அப்போதே எழுபதுக்கு மேல் வயது. தமிழ் இலக்கியங்களை அரச குடும்பத்தினருக்குக் கற்றுக் கொடுப்பதில் அவருக்கு உற்சாகம் அதிகம் இருந்ததால்தான் அந்த முதிய வயதிலும் அவர் பாடம் சொல்லிக் கொடுத்தார். இராசேந்திரன் ஆர்வத்துடன் திருக்குறளையும், தேவாரத்தையும் படிப்பான்.

இராமாயணக் கதையைச் சொல்லச் சொல்லிக் கேட்பான். இராமபிரானுடைய குணவிசேஷங்களைக் கேட்கக் கேட்க அவன் உள்ளம் துள்ளும், இலக்குவனுடைய வீரத்தையும், சகோதர பக்தியையும் கேட்கும்போது அவன் இலக்குவனாகவே ஆகிவிட வேண்டும் என்று துடிப்பான். தாய் சொல்லைக் கேட்டு ராமபிரான் முடிதுறந்ததையும், தம்பிக்கு நாட்டை அளித்துவிட்டுக் காட்டுக்குச் சென்றதையும் பலமுறை சொல்லச் சொல்லிக் கேட்பான். மதுகூர்கிழாரும் சலிக்காமல் அவன் கேட்கும் கேள்விகளுக்கு விடை கூறி வருவார். சிறுவன் இராசேந்திரன் துறுதுறுப்பான முகத்தையும், சாதுர்யமான கேள்வியையும் கண்டு கிழார் மிக மகிழ்வார். அவன் தலையைக் கோதி, முதுகைத் தடவிப் பாராட்டுவார்.

மதுராந்தகியின் சின்னஞ்சிறு விழிகள், அந்தக் காட்சியைப் பார்த்து வியக்கும். பாடம் கேட்டுவிட்டு வீடு திரும்பும்போது அவள் இராசேந்திரனைக் கேட்டாள்: "உனக்கு ராமாயணக் கதையில் யாரை மிகவும் பிடிக்கும்?" என்று.

"ராமனைத்தான்..."

"ராமனின் மனைவி பெயர் என்ன?"



"சீதை."

"எனக்குச் சீதையைப் பிடிக்கும்" இதைக் கூறிவிட்டு மதுராந்தகி நகைப்பாள். இராசேந்திரனும் சிரிப்பான். மற்றச் சிறுவர்களுக்குப் புதுமையாக இருக்கும். "ராமன்-சீதை டோய், டோய்" என்று கை கொட்டிச் சிரிப்பார்கள்.

இப்போது அந்தப் பழைய சிறு பிராயத்து நிகழ்ச்சிகளை மதுராந்தகி தன் மனக்கண்முன் கொண்டு வந்தாள். இவ்வளவு நாள் எப்படி இராசேந்திரனை நினைக்காமலிருந்தாள்? சில ஆண்டுகளுக்கு முன்பு அவள் மதுகூர்கிழாரைச் சந்திக்க வேண்டி நேர்ந்தது. அப்போது அவர் இராசேந்திரனைப் பற்றி வினவியதும், அவள் தெரியாது என்று கூறிவிட்டதையும் நினைவு படுத்திக் கொண்டாள். மதுகூர்கிழார், இராசேந்திரனைப் பற்றி நினைக்கும் போது ராமாயணக் கதையை நினைக்கத் தவறுவதில்லை. ஏனெனில் அவன் ஒரு நாள் அவரைக் கேட்டான்: "ஐயா, சிலப்பதிகாரம், மணிமேகலை என்றெல்லாம் தமிழில் காவியங்கள் இருப்பதாகச் சொல்கிறீர்களே, ராமரின் கதையை யாரும் எழுதவில்லையா?"

இந்தக் கேள்வி மதுகூராரைச் சிந்திக்க வைத்தது. அவர் மெல்ல நகைத்தபடி அன்று இராசேந்திரனைக் கேட்டார். "தமிழில் ராமர் கதையை எழுத நீ அரசரான பின் ஏற்பாடு செய்யேன்" என்றார்.

"கட்டாயம் செய்வேன்; இது உறுதி. ஆனால் நான் அரசராக வேண்டுமே" என்று அவனும் விளையாட்டாக மறுமொழி கூறினான்.

அது நடந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று அதை நினைத்துக் கொண்ட மதுராந்தகிக்கு ஏனோ வெட்கம் சூழ்ந்தது. உதடுகளில் நாணம் நெளிந்தது. பவழவல்லி அதைக் கவனித்தாள்.

"பவழவல்லி" என்று மதுராந்தகி அழைத்தாள்.

"ஏன் தேவி?"

"மாளிகைக்கு அடுத்த தோட்டத்தில் பெரியவர் ஒருவர் வசித்து வந்தாரே, அவர் இருக்கிறாரா?"

"தமிழ் ஐயாவைத்தானே சொல்கிறீர்கள்?"

"ஆம்; பவழவல்லி..."

"இருக்கிறார் தேவி! தள்ளாத பருவம், எழுந்து நடமாடவும் முடியவில்லை."

"அவரைப் பார்க்க வேண்டும் பவழவல்லி."

பவழவல்லி, மதுராந்தகியை வியப்புடன் நோக்கினாள்.

"ஆம் பவழவல்லி, அவரைப் பார்க்க வேண்டும் போலிருக் கிறது... நாளை மாலை கோயிலுக்குச் செல்லும்போது அவரைப் போய்ப் பார்ப்போம்..." என்றாள் மதுராந்தகி.

## 16. பறவை பறந்தது

மதுகூர்கிழார். இப்போது மதுகூர் கிழவராக எல்லாருக்கும் காட்சி தந்தார். காட்சி தந்தார் என்றால் அவர் ஏதோ வீதிகளில் நடமாடி, முன்போல் மற்றவரைக் குசலம் விசாரிப்பதாக எண்ண வேண்டாம். அவரால் வீட்டை விட்டு வெளியே எங்கும் நடக்க முடியவில்லை. தள்ளாமை அதிகரித்துவிட்டது. கண் பார்வையும் குறைந்து விட்டது. ஓலைச் சுவடிகளை முன்போல் அவரால் பார்க்க முடியவில்லை. அவருக்கு நான்கைந்து சீடர்கள் ஏற்பட்டி ருந்தனர். அவர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்டு, மற்றவருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து வந்தார்.

அவ்வப்போது அரசியல் அதிகாரிகள் வந்து சில யோசனை களை அவரிடம் கேட்டுச் செல்வ ர். அப்படி வந்தவர்களுள் ஒருவர் அதிராசேந்திர சோழருக்கு மெய்க் கீர்த்திப் பாடல் புனைய அவரிடம் வேண்டியவர். அவர் அவ்வப்போது வந்து சென்று கொண்டிருந்தார்.

மதுகூர்கிழார் மெல்ல நகைத்தார். "ஆகட்டுமே பார்ப்போம். இப்போதுதானே அரியணை ஏறியமர்ந்திருக்கிறார். பட்டம் சூடி ஓராண்டு விழாக் கொண்டாடும் நாளன்று மெய்க்கீர்த்தி புனைவோமே..." என்று கூறிவிட்டார்.

"மன்னர் உடல்நிலை சரியின்றிப் படுத்திருப்பதால் அவ்வாறு கூறுகிறீர்களோ?" என்றார் அதிகாரி.

மதுகூரார் மீண்டும் நகைத்து, "மன்னரின் வெற்றி குறித்தும், அவர் தமிழ்ப் பற்றுக் குறித்தும் போற்றிப் புகழ வேண்டும். என்ன



கூறிப் போற்றுவேன்? கண் தெரியாது கிடக்கும் நானும் அவரும் ஒரே நிலைதான்..." என்று கூறவும் அதிகாரிக்குக் கோபம் பொங்கியது.

அவர் சென்றவுடன் இராசேந்திரனும், அத்திமல்லரும் அவர் வீட்டிற்கு வந்தனர். இராசேந்திரனுக்குத் தமிழ் ஐயாவைக் காண வேண்டும் என்ற பரபரப்பு இரு தினங்களாக ஏற்பட்டது. அவரைக் கண்டு வணங்கிச் சில யோசனைகளைக் கேட்க வேண்டும் என்று விரும்பினான்.

குரலைக் கொண்டுகூட இராசேந்திரனை முதலில் தமிழ் ஐயாவால் கண்டு கொள்ள முடியவில்லை.

"நான்தான் ஐயா, இராசேந்திரன்" என்று மிகவும் பணிவுடன் அறிமுகப்படுத்திக் கொண்டான். அத்திமல்லருக்கு அவனுடைய பணிவு மிகவும் பிடித்திருந்தது. அழகும், வீரமும், திறமையும், உரிமையும் பெற்றிருந்த இராசேந்திரன், இவ்வாறு அடக்கம் நிறைந்திருப்பது கண்டு அவர் வியந்தார்.

மதுகூரார் நினைவுப்படுத்திக் கொள்ள முயன்றார். அத்திமல்லர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "இராசேந்திரன் தங்களை மறக்கவில்லை. வேங்கிக்குச் சென்றா லும், கடாரம் சென்றாலும் தாங்கள் கற்றுக் கொடுத்த அறநெறி களை மறக்கவில்லை. அடக்கம் அமரருள் உய்க்கும் என்று சொல்வீர்களாம். அதை அடிக்கடி கூறுகிறான்..." என்றார்.

தமிழ் ஐயாவுக்கு இப்போது புரிந்துவிட்டது. "இராசேந்திரா!... வா... அப்பா இளவரசே... வா, இவ்வளவு நேரம் ஆகிவிட்டது நினைவில் கொண்டுவர. கண் பார்வை போனதோடு நினைவும் அடிக்கடி தவறி விடுகிறது. உன்னைக் கண்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. உன்னைப் பார்க்க முடியவில்லை என்றாலும் உன் நினைவுதான் எனக்கு. கங்கை கொண்ட சோழரின் பெயரனல்லனோ நீ... நலமுடன் இருக்கிறாயா? வேங்கி நாட்டின் அரியணையை உன் சிறிய தந்தை உனக்குத் தர மறுக்கிறாராமே... பெருவுடையார் அருளால் எல்லாம் சரியாகிவிடும்..." என்றார் தமிழ் ஐயா.

இராசேந்திரன் அத்திமல்லரை நோக்கினான். பிறகு மெல்லிய குரலில், "ஐயா, நீங்கள் அடிக்கடி சொல்வீர்களே, பெரியவர்கள் சொல் கேட்க வேண்டும் என்று. அதன்படி என் சிறிய தந்தையின் விருப்பப்படி நாட்டை அவரே ஆளவிட்டுவிட்டேன்... ராமரின்

கதை சொல்வீர்களே, தாய் சொல் கேட்டு வனம் செல்ல வில்லையா..." என்றான்.

மதுகூரார் மெல்ல நகைத்து, இராசேந்திரனை அருகே அழைத்து அவனை அணைத்து, மகிழ்ந்தார். அவர் கண்களில் நீர் ததும்பியது. "இராசேந்திரா, சீக்கிரமாக ராமருடைய சரித்திரத் தைத் தமிழில் எழுதுவதற்கு ஏற்ற வகையில் புலவர்களை ஆதரிக்கும் அரச பீடத்தில் நீ ஏறி அமரவேண்டும், என் வாழ் நாளில் நான் அதைக் கண்டு விடுவேனோ இல்லையோ தெரியாது. ஆனால் நிச்சயமாக அது நடக்கும்" என்றார்.

அப்பொழுது வீட்டு வாசலில் சிவிகையைச் சுமப்போர் அதை மெல்ல இறக்கி நிறுத்தும் ஓசைக் கேட்டது. சிவிகையி னின்று மதுராந்தகியும், பவழவல்லியும் இறங்கி, மதுகூரார் வீட்டி னுள்ளே நுழைந்தனர்.

மதுகூர்க்கிழாருடனே பேசிக் கொண்டிருக்கும் குரல் கேட்டதும், மதுராந்தகியும் அவள் தோழியும் வாயில் திண்ணை அருகேயே நின்றனர். பவழவல்லி மெல்ல எட்டிப் பார்த்தாள், யார் இருக்கின்றனர் என்று.

இராசேந்திரனைக் கண்டவுடன் திடுக்கிட்டாள். வேகமாக மதுராந்தகியின் அருகே வந்து, காதருகே ஏதோ சொன்னாள். மதுராந்தகியின் உடல் சிலிர்த்தது. புரிய முடியா பரபரப்பு அவள் தேகத்தில் சேர்ந்தது.

இராசேந்திரன் அங்கு வந்திருக்கிறான் என்பதை அறிந்த மதுராந்தகிக்கு ஏனோ வெட்கம் சூழ்ந்து கொண்டது. அவனைக் காண வேண்டும் போலும் தோன்றியது. பார்த்து விட்டால் அந்தக் கண் இமைகள் மேலும் படபடக்கும். இதயத் துடிப்பு இன்னும் அதிகமாகும். பார்க்காவிட்டாலோ-அதெப்படிப் பார்க்காதிருக்க முடியும்?

"பவழவல்லி! போய்விடுவோம், போய்விடுவோம்" என்று மதுராந்தகி மெல்லிய குரலில், ஆனால் பரபரப்புடன் கூறினாள்.

"நாம் ஏன் போக வேண்டும்? தேவி, உங்கள் எண்ணம் நிறைவேறிவிடும் காலம் வந்திருக்கும்போது, அதை ஏன் நழுவ விடுகிறீர்கள்...?" என்றாள் பவழவல்லி.



மதுராந்தகிக்கு ஏதும் வார்த்தை வரவில்லை பேச. பவழவல்லியின் கரத்தைப் பிடித்துக்கொண்டு, "போவோம் என்றால் போவோம்தான்... வா... வா..." என்றாள்.

"தமிழ் ஐயாவைப் பார்க்கவேண்டும் என்றீர்களே?"

"அப்புறம் பார்த்துக்கொள்வோம்..."

"உங்கள் அத்தையின் மகனைப் பார்க்க வேண்டாமா?"

"போடி....."

"வேங்கி அரசரை......"

"வேண்டாமடி......"

"நிஜம்தானா? அவரிடம் சொல்லிவிடட்டுமா?"

மதுராந்தகிக்குக் கோபம் பொங்கியது. நிஜக் கோபம் அன்று.

"நீ வராவிடில் இங்கேயே காவல் இரு. நான் போகிறேன்!" என்று கூறிச் சிவிகையை நோக்கிச் செல்லக் காலடி எடுத்து வைத்தவள், திகைத்து நின்றாள்.

கடக்கடக் என்ற ஒலி எழுப்பி, இரு புரவிகள் வந்து நின்றன. இரு வீரர்கள் குதிரையினின்று குதித்தனர். தமிழ் ஐயாவின் வீட்டிற்குள் வேகமாக நுழைந்தனர். தமிழ் ஐயாவின் மாணவர் இருவர் ஏதோ அரவம் கேட்கிறதே என்று வெளியே வந்தவர்கள், வீரர்களைக் கண்டு வியந்து நின்றனர்.

ஒரு மாணவன் சற்றுத் தைரியத்துடன், வீரர்களைப் பார்த்து, "தங்களுக்கு என்ன வேண்டும்?" என்று வினவினான். வீரன் விழியை நிலைகுத்திட்டுப் பயங்கரமாக விழித்து, "இங்கே வந்தி ருக்கும் ஒருவனைச் சிறைப்பிடித்து வருமாறு தளபதி உத்தரவு" என்றான்.

"இது தமிழ் ஐயா வீடு" என்றான் மாணாக்கன் ஒருவன்.

"தெரியும், தமிழ் ஐயாவை அவன் காண வந்திருக்கிறான்."

"காண வந்திருப்பவர்..." என்று ஏதோ கூற வாயெடுத் தவனை மற்ற மாணவன் தடுத்து, "ஐயா, இங்கே சந்தேகப்படும் படியாக யாரும் வரவில்லை. அமைதியான வாழ்க்கையை நடத் தும் எங்கள் ஐயா வீட்டில் கலவரம் விளைவிக்குமாறு உங்கள் தளபதி கூறினாரோ?" என்று கோபமாக மொழிந்தான்.

வீரன், அவன் சொல்வதைக் கேட்காமல், அவனைத் தள்ளி விட்டு உள்ளே நுழைய முயன்றான்.

"நில்லுங்கள், அப்படியே" என்று மதுராந்தகி சற்றுக் கடினமான குரலில் கூறினாள்.

உள்ளே நுழைய முயன்ற வீரன் திகைத்துத் திரும்பினான்.

"நான்தான் உத்திரவிடுகிறேன்... நீங்கள் தேடி வந்தவர் இங்கே எவருமில்லை..." என்று சற்று உரத்த குரலில் பேசினாள் மதுராந்தகி.

வீரன் சற்றுப் பணிவுடன், "தங்களுக்கு எப்படித் தெரியும் தேவி? அவன் இங்கே நுழைவதை நாங்கள் கண்டோமே. தயவு செய்து இந்த விஷயங்களில் தலையிடாதீர்கள்" என்று கூறினான் வீரன்.

பவழவல்லிக்குக் கோபம் பொங்கியது. "யாரய்யா நீர்? இளவரசி சொல்லுக்கு எதிர்த்துப் பேசுவதா?" என்றாள்.

வீரன் நகைத்தான். ஏளனம் கலந்திருந்தது. "இளவரசியோ, அரசியோ யார் கூறினாலும் செல்லாது. எங்கள் கடமையை நாங்கள் செய்தாக வேண்டும்..." என்று கூறி உள்ளே செல்ல முற்பட்டனர்.

"என்னய்யா... இங்கே கூச்சல்....... இவர்களைப் பார்த்தால் அரச குடும்பத்தவர்போல் தெரிகிறது. அவர்களுடன் ஏன் வாதாடு கிறாய்..." என்று நடுங்குங் குரலில் கிழவர் ஒருவர் உள்ளே யிருந்து வெளியே வந்தவாறு கேட்டார்.

வீரர்கள் ஏதோ கூற முற்பட்டவுடன், "ஏனப்பா, குதிரை களை வழியை விட்டுத் தள்ளிக் கட்டக் கூடாதோ?" என்று கேட்டுக்கொண்டே தடியை ஊன்றியவாறு ஒரு கையில் தாடி யைத் தடவி யவாறு நடந்தார். முடியும், தாடியும் தும்பைப் பூவைப் போல் நரைத்திருந்தன. குரல் எழுபது வயதுக்கு மேற்பட்டவர் என்பதை உணர்த்தியது.

வீரர்கள் அந்தக் கிழவருக்கு வழியை விட்டுவிட்டு, வேகமாக உள்ளே நுழைந்தனர். சிறிது நேரத்தில் வெளியே வந்து "அடடா, ஏமாந்தோம்...... தப்பி விட்டான்...... கிழவர் போல் வேடம் பூண்டுத் தப்பி விட்டானோ... இந்தப் பக்கம்தான் போயிருப்பான். பிடியுங்கள்... பிடியுங்கள்..." என்று கூவியபடி ஓடினர்.

# 17. வாளும் வளைக்கரமும்

கங்கை கொண்ட சோழபுரத்துக் கடை வீதியின் அருகே சற்று ஒதுங்கித் தனித்திருந்த வீதியில், சிறுவீட்டில் கங்கபீமனும், சந்திரகுமாரியும் குடியேறினர். வந்த இரு நாள்களுக்குச் சந்திர குமாரியின் மனம் எதிலும் ஈடுபடவில்லை. இராசேந்திரனின் அழகிய தோற்றம் அவள் கண்களை விட்டு அகலவில்லை. அவனுக்குப் பணிவிடை செய்த அந்த நாளின் இனிய நினைவு அவள் மனத்தை விட்டு மாறவில்லை.

கங்கபீமனுக்கு ஒரு சமயம் ஆத்திரமாகவும், மறு சமயம் வியப்பாகவும் இருந்தன சந்திரகுமாரியின் போக்கு. பகலில் எல்லாம் அவன் வெவ்வேறு மனிதர்களைச் சென்று பார்ப்பதிலும், மாளிகை காவலர்களில் சிலரைச் சிநேகம் பிடிப்பதிலுமாகக் காலம் கழித்ததால், சந்திரகுமாரியின் மன நிலையைப் பூரணமாக அறிய முடியவில்லை.

மாலை வேளையில் தலைவாரிக் கொள்ளாமலும் புத்தாடை அணியாமலும் அவள் இருப்பதைக் கவனித்த மத்தளம் தட்டுபவர். கங்கபீமனிடம் சொல்லிவிட்டார்.

"சந்திரகுமாரி! ஏன் இப்படியெல்லாம் என்னைச் சோதனை செய்கிறாய்? இதெல்லாம் என்ன நாடகம்? என்னைப் பிடிக்க வில்லையென்றால் சொல்லிவிடு. நான் எங்காவது போய் விடுகிறேன்"-என்று மிகவும் வருத்தப்படுவதுபோல் நடித்துக் கூறினான் கங்கபீமன்.

சந்திரகுமாரி மெல்ல முறுவலித்தாள். "நான் ஏன் தங்களைச் சோதனை செய்கிறேன். என்னை நானே சோதனை செய்து கொள்ளுகிறேன். எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து இந்த ஊரில் இப்படிச் சந்தடியின்றிக் காலங் கழிக்க நேர்ந்து விட்டதே என்று என்னை நானே சோதனை செய்து கொள்கிறேன்..." என்று கூறியவுடன், கங்கபீமன் கடகடவென நகைத்து, "ஓ! அதற்காகவா வேதனைப்படுகிறாய்! இரண்டு நாள்களாகக் கடும் வெய்யிலில் ஏன் அலைகிறேன் தெரியுமா? எவ்வளவு பேரைச் சந்தித்து விட்டேன் தெரியுமா? உனது நாட்டியத்தை இந்த ஊர் கோயிலில்

அரங்கேற்ற ஏற்பாடு செய்திருக்கிறேன். மிகப் பெரிய மனிதர்கள் அதைக் காண வருவார்கள்..." என்று கூறினான்.

"அரசர் வருவாரா?" என்று சந்திரகுமாரி கேட்டாள்.

"அரசரா..." என்று கேட்ட கங்கபீமன் மீண்டும் சிரித்து, "அரசர்தான் இன்றோ நாளையோ என்று கிடக்கிறாரே! அரசர்க்கு இணையான அதிகாரம் உடையவர்கள் வருவார்கள். மற்றும் அன்றைக்கு நாம் சந்தித்த சிற்றரசர்கள் வருவார்கள்..." என்றான்.

சந்திரகுமாரி சற்று நேரம் மௌனமாயிருந்தாள். பிறகு, "இந்த ஊர் ஈசரின் பெயர் என்ன?" என்று கேட்டாள்.

"கங்கை கொண்ட சோழீசர்."

"கோவில் மிகப் பெரியதா?"

"ஆமாம். இன்று மாலை பூசையின்போது கோயிலுக்குப் போவோம். நீ இப்படியே வீட்டில் சோகமே உருவாய் அடைந்து கிடப்பதில் என்ன பலன்? அசோக வனத்துச் சீதை மாதிரிச் சோகமாய் இருக்காதே. எங்கே கொஞ்சம் சிரி... ஹீ... ஹீ"

"சீதையை அசோகவனத்தில் அடைத்தது யார் தெரியுமா? இராவணேச்வரன். அதுபோல் நீங்களும்..." என்று கூறி மெல்ல நகைத்தாள் சந்திரகுமாரி. கங்கபீமனும் நகைத்தான்.

கங்கை கொண்ட சோழீச்வரத்து ஆலயமணி 'டண்' 'டண்' என்று ஒலித்துக் கொண்டிருந்தது. மேளசப்தம் கோயில் பூசையை அறிவித்தது. கையிலே தட்டுக்களுடன் ஆண்டவனைத் தொழ நகர மக்கள் வந்து கொண்டிருந்தனர்.

கோயிலை அடுத்த நந்தவனத்தில் மெல்லரும்புகள் மெல்ல இதழ் விரிந்து கொண்டிருந்தன. பூத்த புதுமலர்கள் சிலவற்றில் மணம் எங்கும் வீசின. கூடடைந்த புள்ளினங்கள் மெல்லக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தன. சந்தியாக் காலத்து மங்கிய வெளிச் சத்தில் நந்தவனத்தினின்று பார்க்கும்போது, அருகே தெரிந்த கங்கை கொண்ட சோழீசர் கோயிலின் உயர்ந்த விமானம் நிமிர்ந்து கம்பீரமாகத் திகழ்வது தெரிந்தது.

மனத்திரையில் இருந்த செயற்கை மேடையில் அமர்ந்து இராசேந்திரன் விமான அழகையும், கோயில் அமைந்திருந்த அடிப்பீடத்தின் உயரத்தையும், இளம் வயதில் அந்த விமானத்



தின் மேல் மாடத்தில் ஏறி அதன் வழியாகக் கீழே சோழீசரின் பிரம்மாண் டமான தோற்றத்தைக் கண்டு வியந்ததையும் எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான். வயதான கிழவரின் தோற்றத்தில் அவன் அமர்ந்து விமானத்தைக் கண்டவாறு இருப்பதைப் பார்ப்பவர்கள், சென்ற கால நினைவிலே யாரோ பெரியவர் அமர்ந்திருக்கிறார் என்று எண்ணிக் கொள்வர்.

சில நாள்களிலேயே இராசேந்திரனுக்கு வயதுக்கு மீறிய சிந்தனைகளும், திட்டங்களும் மனத்தில் தோன்றின. கங்கை கொண்ட சோழபுரத்தையே ஏதோ கருமேகம் கவ்வ வருவது போன்ற பிரமை அவன் மனத்தில் ஏற்பட்டவாறிருந்தது. சோழ நாட்டுத் தளபதி தன்னைச் சிறைப்படுத்த வீரர்களை அனுப்பிய அன்றைய நிகழ்ச்சி, அவன் சிந்தனைகளுக்குப் பலமான உரமிட்டது. அத்திமல்லர் கூறுவது போல் சோழ அரச குடும்பத்திற்கு வேண்டியவர்களே பகைவர்களாக மாறி வருகிறார்களா? இளவரசியை வழிமறித்தனர். அங்கே சிற்றரசர்கள் கூடி இரகசியம் பேசுகின்றனர். அரசரைச் சந்திக்க இயலாமல் தடையை ஏற்படுத்தியிருக்கின்றனர். இவையெல்லாம் எதைக் குறிக்கின்றன.... இராசேந்திரன் பெருமூச்சு விட்டான். 'அத்திமல்லர் தக்க சமயத்தில் தாடியையும், மீசையையும் கொடுத்துத் தப்பிப் போகுமாறு செய்தார். இல்லாவிடில் சாதாரண வீரர்களிடம் சிக்கிச் சிறைப்பட்டிருக்க வேண்டும். காரணமில்லாமல் காராகிருகத்தில் வாடியிருக்க வேண்டும்...' என்று எண்ணியவாறு சுற்றும் முற்றும் பார்த்தான் இராசேந்திரன்.

வீரர்கள் இங்கும் தேடி வந்து விடுவார்களோ என்ற ஐயமும் ஏற்பட்டது. நந்தவனத்தில் வசந்த மண்டபம் இருப்பதையும் அங்கே அத்திமல்லர் வந்து சேர்ந்து விடுவதாகக் கூறியதையும் நினைவுக்குக் கொண்டு வந்த இராசேந்திரன், மாறுவேடத்தைக் களைந்து அவற்றை ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு வசந்த மண்டபம் நோக்கி விரைந்தான்.

அடர்ந்த மரங்கள் மங்கிய வெளிச்சத்தையும் தடை செய்து இருளரக்கனின் ஆட்சிக்கு ஒத்துழைப்பு நல்கின. உதிர்ந்த சருகுகளின்மேல் நடக்கும்போது சரசரவென்று ஒலி எழுந்தது. காற்றிலே அசைந்தாடும் தென்னை ஓலைகள் சலசலத்தன. தொலைவில் கேட்கும் மேள சப்தம் சன்னமாக எழுந்து அமைதியை மெல்லக் கலைத்தது.

இராசேந்திரன் உள்ளத்தில் திடீரென ஏதோ உறுதி பிறந்தது போன்ற உற்சாக உணர்ச்சி. அது எதனால் இருக்கும்? அதோ வசந்த மண்டபத்துக்கு அருகே நிற்கும் மதுராந்தகியையும் அவள் தோழியையும் காணப் போவதால் இருக்குமோ?

வசந்த மண்டபத்து வெளி நுழைவாயில் தூண்களின் ஓரமாக மதுராந்தகியும், அவள் தோழியும் நின்று கொண்டிருந்தனர். இராசேந்திரன் நடை சற்றுத் தடைப்பட்டது. அவன் மெல்ல நடந்து அவர்கள் இருக்குமிடம் அணுகினான். 'ஏன் இவர்கள் பல இடங்களைச் சுற்றி வருகின்றனர். அரச குடும்பத்தினர்மீது பலர் விரோதம் கொண்டிருக்கும் வேளையில் இவர்கள் தன்னந்தனியே சுற்றுவது சரியன்றே' என்று எண்ணியவன், அவர்களுடன் பேசவும் நா எழாதவனாய் மௌனமாக நின்றுகொண்டிருந்தான்.

அத்திமல்லர், வசந்த மண்டபத்தில்தானே தன்னைச் சந்திப்பதாய் கூறியிருந்தார். 'அவர் எப்போது வருவாரோ? தன்னைச் சிறைப்படுத்த வந்த வீரர்கள் அத்திமல்லரைக் கேள்விமேல் கேள்வி கேட்கலாம்... ஹும், அவரிடம் இவர்கள் வீரம் செல்லாது' என்று எண்ணியவனாய்ச் சற்று உலவினான்.

மதுராந்தகிக்கும் எப்படி முதலில் பேசுவது என்ற எண்ணம் அந்தி வேளையிலே நந்தவனத்தில் தோழியுடன் தனியே இருக்கிறோமேயென்ற அச்சம் வேறு. தோழிதான் அவர்கள் இருவருடைய மௌனத்தைப் போக்கினாள். கூச்சத்தை போக்கினாள். தோழி, இராசேந்திரனை நெருங்கி வந்து, "இந்த நேரத்திலே இங்கே தாங்கள் யாருக்காகக் காத்திருக்கிறீர்கள்?" என்று தைரியமாய்க் கேட்டாள்.

தோழி கேட்டுவிட்டாள். இராசேந்திரனுக்குப் பெண்களிடம் பேசிப் பழக்கமில்லை. சந்திரகுமாரியின் குடிசையில் உடல் நோயால் தங்கி, அவள் பேச்சுக்கு மறுமொழி சொல்ல நேரிட்டதேயொழிய, அப்படித் தனியே தங்கும் வாய்ப்பை மிகவும் சங்கோஜத்துடனேதான் கழித்தான். தோழியின் கேள்விக்கு அவனால் உடனே மறுமொழி கூற இயலவில்லை. ஆனால் பேசாமலும் இருக்க முடியவில்லை.

"அதே கேள்வியை நான் கேட்கலாமல்லவா?" என்று இராசேந்திரன் கேட்டவுடன், தோழியால் ஏதும் மறுமொழி கூற முடியவில்லை. மதுராந்தகி மெல்ல இப்போது தோழியின் அருகே வந்துவிட்டாள்.



"தமிழ் ஐயா வீட்டிலிருந்து மிகவும் சாமர்த்தியமாகத் தப்பினாரே, எப்படி என்று கேளடி" என்று மதுராந்தகி, தோழியிடம் கேட்பதுபோல் இராசேந்திரனை நோக்கிக் கேட்டாள்.

இராசேந்திரன் மெல்ல நகைத்து, "கேள்வியிலேயே விடையும் இருக்கிறதே..." என்றான்.

"எப்படி?" என்று தோழி கேட்டாள்.

"அதுதான் சாமர்த்தியமாக..." என்று இராசேந்திரன் கூறவும் மூவரும் நகைத்தனர்.

சற்று நேரம் மௌனம். சுவர்க்கோழிகளின் மெல்லிசையையும், கோயிலில் கேட்கும் சின்ன மேள ஒலியையும் தவிர வேறு ஓசை அப்போது எழவில்லை. ஆனால் யாரோ ஓடிவரும் ஓசையும், "இந்தப் பக்கம் தேடிப் பாருங்கள் அவன் இந்தப் பக்கம்தான் வந்தான்" என்ற குரலும் கேட்டன. தடதடவென்று வீரர்கள் ஓடி வரும் ஓசை கேட்டது.

மதுராந்தகியும், அவள் தோழியும் திடுக்கிட்டனர். "ஐயோ, ஆபத்து, ஆபத்து. இப்படி எங்காவது மறைந்து கொள்ளுங்களேன்!" என்று மதுராந்தகி பதறினாள், மெல்லிய குரலில்.

"எனக்கு ஆபத்து ஒன்றுமில்லை; இளவரசிக்குத்தான் ஆபத்து. இப்படி மரநிழலில் மறைந்து கொள்ளுங்கள்" என்று அவசரப்படுத்தினான். அடர்ந்து வளர்ந்திருந்த கொன்றை மரத்தின் மறைவில் புதர் ஓரத்திற்கு மதுராந்தகியும், அவள் தோழியும் விரைந்தனர். மதுராந்தகி பதறினாள். "அவரையும் வரச்சொல்லடி..." என்று பயத்துடன் முணுமுணுத்தாள். தனக்கு ஆபத்து இல்லை என்று சொன்னானேயொழிய, இராசேந்திரனும் அங்கே மறைந்து கொண்டான்.

மதுராந்தகியின் கூந்தலில் சூடியிருந்த முல்லையின் நறுமணம் இராசேந்திரனின் மனத்தில் புத்துணர்ச்சியை ஊட்டியது. அங்கே அப்படி மறைந்திருப்பதைவிடத் தன்னைத் தேடி வருபவர்களை எதிர்த்துப் போராடலாம் என ஒரு கணம் தோன்றியது. மறுகணம் முல்லையின் மணம், அவன் சிந்தையைக் கலக்கியது. மர நிழலில், புதர் மறைவில் அப்படியே எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நிற்கலாம் என்று தோன்றியது இராசேந்திரனுக்கு.

இளவரசி, தன் தோளுக்கு அருகேதான் இருக்கிறாள் என்பது அவள் விடும் பெருமூச்சின் ஸ்பரிசத்தால் இராசேந்திரன் உணர்ந்தான். அந்த நேரத்தில், அந்த இடத்தில் இத்தகைய அநுபவம் நேரும் என்று எதிர்பார்க்கவில்லை. கங்காபுரிக்கு வந்தது முதல் விசித்திரமான சம்பவங்கள் சங்கிலித் தொடர் போல் நேர்ந்திருப்பது ஆச்சரியத்தை விளைவித்தது.

எவ்வளவு நேரம் இங்கேயே இருக்க முடியும்? தேடி வந்த காவலர்கள், ஒருபோது பார்க்காமல் போய்விட்டது போல் தோன்றும். மறுகணம் அவர்கள் நடமாடும் ஒலி கேட்கும்.

"இப்படியே எவ்வளவு நேரம் நிற்பது. இடையில் வாளும், நெஞ்சில் துணிவும், உறுதியும் இருக்கும் வரை மறைந்து வாழ வேண்டியதில்லையே" என்று கூறி, இடைவாளை உருவி அங்கிருந்து செல்ல முயன்ற இராசேந்திரன் கரத்தை, மதுராந்தகி யின் வளைக்கரம் பிடித்து நிறுத்தியது.

## 18. இரு சகோதரர்கள்

சேனாதிபதி பெரிய தன்மபாலன் கூடத்தில் குறுக்கும் நெடுக்கும் உலாவிக் கொண்டிருந்தார். அவரது தம்பி சிறிய தன்மபாலன் அசையாது, ஆடாது தன் சகோதரனையே பார்த்த வாறு நின்று கொண்டிருந்தார். இருவருக்கும் இடையே நிலவிய மௌனம் ஏதோ புயல் உருவாவதைத் தெரிவித்தது. இதுவரை யில் சகோதரர்களுக்குள் கருத்து வேற்றுமை நிலவியதில்லை. ஆனால் கடந்த சில நாள்களாகக் கருத்தில் மாறுபாடு இருவர் உள்ளத்திலும் தலை தூக்கியது. அண்ணன் செய்வது தம்பிக்குப் பிடிக்கவில்லை; தம்பியின் போக்குக் கண்டு அண்ணனுக்கு ஆத்திரம் பொங்கியது.

பொக்கிஷத்தில் பணம் குறைந்து விட்டது என்று மூலபண்டாரத்தார் தெரிவித்தார். பெரிய தன்மபாலனிடம் அவர் அது பற்றிச் சொன்னபோது, சேனை வீரர்கள் வரி வசூலில் காட்டும் சிரத்தைக் குறையை இலேசாகத் தெரிவித்தார். தன்மபாலனுக்கு அந்தக் குறைபாட்டுச் சொல் பொறுக்கவில்லை. அவர் தம்பியைக் கூப்பிட்டனுப்பினார். மூலப்பண்டாரத்தார் சொல்லியவற்றைத் தெரிவித்தார். தம்பிக்குக் கோபம் பொங்கியது.



"இனி வரி வசூல் என்று குடிமக்களிடம் சென்றால் அவர்களிடமிருந்து எதிர்ப்புத்தான் கிடைக்கும்" என்று இளைய தன்மபாலன் அண்ணன் கேள்விக்கு மறுமொழி கூறினார்.

"எதிர்ப்பவரிடமிருந்து அஞ்சி ஓடிவருவது சரியென்று சொல்கிறாயா?"

"அப்படி வராவிடில் அவர்களுடன் சண்டையிட்டுக் கட்டி இழுத்துவர வேண்டியதுதான்..."

"அதற்குப் பலம் இல்லாமல் போய்விட்டதா?"

அண்ணனின் கேள்விக்குத் தம்பி மறுமொழி கூறவில்லை. அவர் முகத்தில் கோபம் தாண்டவமாடியது. பெரிய தன்மபாலன் அந்தக் கோபத்தை மேலும் தூண்டிவிட்டார்.

"சோழ நாட்டுப் படைவீரர்கள் பயங்கொள்ளிகள் என்பது நிரூபணமாகி வருகிறது... வரிவசூலை ஒழுங்காக நடத்தவில்லை யென்றால் ஆட்சி நடப்பது எப்படி?" என்று சீறினார். இளையவரும் அண்ணனின் குரலுக்கு அஞ்சவில்லை. "அண்ணா..." என்று கூவினார். "இப்பொழுது வசூலாகும் செல்வமெல்லாம் எங்கே செல்கிறதண்ணா? அதைக் கவனிக்காமல் மேலும் மேலும் வரி என்றால்? வணிகர்களின் பண்டங்களுக்கு முன்பு இருந்ததை விட எட்டுமடங்கு வரி... அவர்கள் ஏற்றுமதிக்காகத் துறைமுகங் களுக்குப் பண்டங்களை அனுப்புவதை நிறுத்தி விட்டனர் என்பது தங்களுக்குத் தெரியுமா?"

பெரியவர் உறுமினார். "ஓகோ, நீயும் இடங்கைப் படையில் சேர்ந்துவிட்டாயா?"

வணிகர்கள் படையொன்றைத் தங்கள் சொந்தச் செலவில் வைத்துக் கொண்டிருந்தனர். கப்பல்களில் செல்லும்போது ஏற்படும் கொள்ளைக்காரர்களின் எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக ஏற்பட்ட அந்தப் படையினர், இப்போது ஆங்காங்கு அரசருக்கு எதிராகக் கலகஞ் செய்வதில் ஈடுபட்டிருந்தனர் என்பது பெரியவர் செவிக்கும் எட்டியிருந்தது.

இளையவரும் அதை அறிவார். ஆனால் அவருக்கு இடங்கை யினருடன் தொடர்பு இல்லை. சகோதரர் திடீரெனக் குற்றஞ் சாட்டியதும் அவர் அடக்கமுடியா சினத்துடன், "அண்ணா, உறவு முறைக்கு இதுவரை மரியாதை செலுத்தினேன்; தங்களுக்குக்

கீழ் அடங்கிய தளபதி நான் என்பதால் என்ன வேண்டுமானாலும் தாங்கள் கூறிவிடலாம் என்று எண்ணி விடாதீர்கள். தங்களைப் பற்றியும் நான் கேள்விப்பட்ட ஒன்றை உறுதியாக நம்பிக் குற்றஞ் சாட்டுகிறேன்-மன்னரை சிறையிலிட்டு வைத்திருப்பதாக. தங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்று கூறினார்.

ஒரு கணம் திடுக்கிட்டு அயர்ந்து விட்ட பெரியவர், தன் நிலையை உடனே புரிந்து கொண்டு, தம்பியிடம் வாதிட அது சரியானபோதில்லை என்பதை நொடியில் உணர்ந்து, சட்டென முகபாவத்தை மாற்றிக் கொண்டு கடகடவென நகைத்து, "தம்பீ, தம்பீ! உனது ராஜ விசுவாசத்தைச் சோதனை செய்தேன். காலம் கெட்டு வருகிறது. யார் நம்பிக்கையானவர், யார் துரோகி என்பதைக் கண்டு பிடிப்பதற்காகத்தான் உன்னையே சந்தேகிப்பதுபோல் பேசினேன். அரசர்மேல் உனக்குள்ள பற்றை மெச்சுகிறேன்... ஆனால் தம்பி, பொக்கிஷத்தில் பணம் இல்லாமல் ஏதும் செய்ய முடியாதே... அதற்காக நாம் வரிவசூலை ஒழுங்காகச் செய்ய வேண்டாமா?" என்று சொல்லிக்கொண்டே தம்பியின் முதுகை மெல்லத் தட்டினார்.

இளையவர், அவர் கரத்தைச் சட்டெனத் தள்ளி, "இதுவரைப் பொதுமக்கள் கொடுத்த பணம் என்ன ஆகியது? புதிதாகக் கோயில் கட்டினீர்களா? குளம் வெட்டினீர்களா? அல்லது ஏரி தான் செப்ப னிட்டீர்களா? பாண்டிய நாட்டுப் பாதுகாவலுக்கு இங்கிருந்து பணம் ஏன்? பொக்கிஷம் காலியாகாமல் இருக் குமா...? அண்ணா, நான் ராஜத் துரோகி அல்லன் என்பதையாவது கண்டு பிடித்துக் கொண்டீர்களே, அதற்கு வணங்குகிறேன்... நான் வருகிறேன்..." என்று கூறிவிட்டுத் திரும்பிப் பாராமல் போய் விட்டார்.

அவர் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த பெரிய தன்மபாலர், கையைத் தட்டித் தன் அந்தரங்கக் காவலரை அழைத்து அவன் செவியருகே ஏதோ கூறினார். அவன் தலையசைத்து விட்டு விரைந்து இளைய தன்மபாலரைப் பின் தொடர்ந்தான்.

இளைய தன்மபாலர் கோபத்துடன்தான் அங்கிருந்து வெளி யேறினார். அவர் உடலில் ஏற்பட்ட படபடப்பு நீங்கவில்லை. தன் சகோதரர் வெகு எளிதில் பேச்சை மாற்றிவிட்டதையும், மக்களிடமிருந்தும், வணிகர்களிடமிருந்தும் அதிக வரி வசூலிக்க வேண்டும் எனும் மந்திரி மண்டலத்தாரின் பேச்சை ஏற்று, அதை



வசூலிக்கப் படையினரை ஏவ முற்பட்டதையும் நினைத்து நினைத்து மனவேதனைப்பட்டவராய்ச் சென்று கொண்டிருந்தார். தன் சகோதரர் பேரில் அவருக்குக் கோபம் ஏற்பட்டாலும், இடங்கைப் படையினர் ஆங்காங்கே அரசருக்கு விரோதமாக நடக்கும் செய்தியை அவர் அறிந்து கூறியது, அவரது அறியும் சக்தியின் திறமையை எண்ணி வியக்கச் செய்தது.

திடீரெனச் சோழ நாட்டிற்கு இத்தகைய நிலை ஏன் வந்தது என்ற எண்ணத்துடன் குதிரையை மெல்லத் தட்டிவிட்டு மந்தகதியில் செலுத்தியவாறு சென்றவர், ஒரு கணம் நின்றார். அந்த அகன்ற வீதியில் வந்து சேரும் சிறு தெருவினின்று சந்திரகுமாரியும், கங்கபீமனும், மத்தளம் கொட்டுபவனும், பாடு பவனுமாக வந்து கொண்டிருந்தனர். இளையவர், சந்திரகுமாரி நடந்து செல்லும் ஒய்யாரத்தைக் கண்டார். உயரமும், உயரத் திற்கேற்ற உடல் கட்டும், கண்டவரைக் காந்தம்போல் இழுக்கும் விழிகளும், அவர் பார்வையை அசையவிடாமல் செய்தன.

'ஏய்' என்று அவர் அழைத்தார். அருகே வீதி முனையில் நின்று கொண்டிருந்த ஒருவன் கைகட்டி ஓடி வந்தான். கண் சாடையால் சந்திரகுமாரி செல்லுவதைச் சுட்டிக் காட்டி, "யார் அது?" என்று கேட்டார். அவன் உடனே ஓடிச் சென்று கங்கபீமனை நிறுத்தி, இளைய தளபதி அழைப்பதாக அழைத்து வந்தான்.

இளைய தளபதியைச் சந்தித்ததில் கங்கபீமனுக்கு மிகவும் சந்தோஷம் என்றே சொல்ல வேண்டும். அதைவிட அவர் சந்திர குமாரியைப் பற்றி விசாரித்ததில் மிகத் திருப்தி.

"இதோ அவளையே அழைத்து வருகிறேன்" என்று கூறி சந்திரகுமாரியை இளையவர் அருகே அழைத்துச் செல்ல முயன்ற வனைத் தடுத்து, "வேண்டாம், வேண்டாம். வீதியிலே உங்களை நிறுத்தி வைத்துப் பேச விரும்பவில்லை. அவள் நன்றாக நாட்டியம் ஆடுவாள் என்கிறீரே, நானும் நாட்டியத்தைக் காணவேண்டும். என் மாளிகைக்கு வந்து ஆடுவதற்கு என்றைக்கு உங்களுக்குச் சௌகரியப்படும்?" என்றார். ஒரு முறை அவர் விழிகள், சந்திர குமாரியின் பக்கம் சென்றன.

அதைக் கவனித்த கங்கபீமன், "என்றைக்குத் தாங்கள் கட்டளையிடுகிறீர்களோ அன்றைக்கு நான் ஆயத்தம் ஐயா..!" என்றான்.

"உம்மை ஆட அழைக்கவில்லை ஐயா" என்று கூறி நகைத்தார் இளையவர். கங்கபீமனும் கூடவே சேர்ந்து நகைத்தான்.

"இன்று மாலை என்னிடம் வாருங்கள் சொல்கிறேன்" என்று கூறிவிட்டுக் குதிரையைச் செலுத்திச் சென்றார்.

மிகவும் பணிவுடன் தலையசைத்த கங்கபீமன் உள்ளத்தில், உடனே பெரிய திட்டமொன்று உருவாகியது.

## 19. வந்தது எதற்கு? பிரிவது ஏனோ?

அந்தக் கரத்துக்குத்தான் எத்தனை மகிமை! மதுராந்தகியின் மென்மையான கரம். இராசேந்திரன் கரத்தைப் பிடித்துத் தடுத்த போது, வலி மிகுந்த கரம், மென்மைக்குப் பணிந்தது. இருள் நிறைந்த இடம். ஒருவர் முகம் மற்றவருக்குத் தெரியவில்லை, ஆனால், அந்தக் கரத்தின் துடிப்பில்தான் எத்தனை பேச்சுக்கள்.

மதுராந்தகியின் உடலில் ஒரு கணத்தில் புரிய முடியாத வேக உணர்ச்சி பொங்கிப் பாய்ந்தது. என்ன செய்து விட்டோம்-ஆ! என்று துடித்துக் கரத்தை இழுத்துக் கொண்டாள்.

"தேவி, ஏன் தடுத்து விட்டாய்?" என்று இராசேந்திரன் கேட்டான். தோழி 'உஸ்' என்ற குரல் எழுப்பி, "அவர்கள் போய் விடவில்லை. அதற்குள் குரல் கொடுத்து இங்கே இருப்பதைப் புலப்படுத்தி விடாதீர்கள்" என்றாள்.

இராசேந்திரனால் அந்த இடத்தை விட்டுப் போகவும் முடியவில்லை. நிற்பதற்கும் உடல் துடிப்பு அநுமதிக்கவில்லை. மென்மையான மலரை அவன் இதற்கு முன் பறித்திருக்கிறான். அப்போதுகூட இந்த உணர்வை அவன் அடைந்ததில்லை. சாவகத் தீவிலே கடல் பஞ்சை எடுத்து ஸ்பரிசித்து இருக்கிறான். அதற்குக்கூட மதுராந்தகியின் கரத்து மென்மையில்லை. அன்னத்தின் தூவி, அனிச்ச மலர் என்கிறார்களே, ஒரு வேளை அவை மதுராந்தகியின் மென்மைக்கு நிகராகுமோ?

இராசேந்திரனின் படபடக்கும் இதயத்தால் ஏதும் செய்ய முடியவில்லை. இதய ஒலிக்குப் பேசும் திறன் இருந்தால் அது பறைசாற்றிவிடும் இராசேந்திரனின் உணர்ச்சிகளை. மதுராந்தகி எப்படி வளர்ந்து விட்டாள்; பத்து ஆண்டுகள் என்பது எத்தகைய



மாற்றத்தைத் தந்துவிட்டன என்று ஒரு கணம் எண்ணினான். தான் வந்தது எதற்காக, இங்கே சோழ நாட்டு வீரர்களால் பகைவன் போல் துரத்தப்படுவது எதற்காக? அவனுக்கு வியப்பாக இருந்தது. கங்கைகொண்ட சோழபுரத்தில் நடப்பது ஏதாவது மாய மந்திரமா? சோழ நாட்டின் பெயர் சொன்னால் கடல் கடந்த தேசங்களிலே நடுங்குகிறார்கள்; சோழ நாட்டிலே ஒருவரை மற்றவர் கவிழ்ப்பதற்குத் திட்டம் தீட்டுகிறார்கள். ஆட்சியின் பொறுப்பை ஏற்று நடத்தும் அதிகாரிகள், அதிகாரத்தைத் தங்களுடையதாகவே ஆக்கிக் கொண்டு மற்றவரை அடக்க வழி தேடுகிறார்கள். கப்பம் கட்டும் சிற்றரசர்கள் தங்கள் உறவைத் துண்டித்துக் கொண்டு தனித்தியங்க வழி தேடுகிறார்கள்-என்ன அபாயகரமான நிலை. இப்படியும் சோழ நாட்டிற்கு வரவேண்டுமா? மன்னர் அறியமாட்டாரா? மன்னரைச் சந்தித்து ஏன் இவற்றையெல்லாம் கூறிவிடக்கூடாது?

இராசேந்திரன் பலவாறாகச் சிந்தித்தவாறு மௌனமாக இருந்த போது மதுராந்தகி மெல்லிய குரலில், "என்ன யோசிக்கிறீர்கள்? தங்களைத் தடுத்து விட்டேனென்றா? உங்கள் நன்மைக்குத்தான்" என்று கூறினாள். அவளுக்கு எங்கிருந்தோ துணிவு வந்திருக்க வேண்டும்.

இராசேந்திரனாலும் பேசாமல் இருக்க முடியவில்லை. "என் நன்மைக்காக என்னைக் கோழையாக்க முற்பட்டு விட்டாய்?" என்றான்.

"அவர்கள் பலர்... நீங்கள் தனியே அவர்களிடம் சிக்கிக் கொண்டால்..." என்று மதுராந்தகி சொன்னாள்.

"இந்த வாள் பல நூறு பேரை ஓட்டிவிடும். ஆனால் ஒரு சாதாரண வேலுக்கு அஞ்சி அடங்கிவிட்டது?"

"சாதாரண வேலா?"

"சாதாரணம் என்றா கூறிவிட்டேன்... மிகவும் சக்தி வாய்ந்த வேல்."

இராசேந்திரனின் இந்த வார்த்தையைக் கேட்டுத் தோழி, களுக்கென்று சிரித்துவிட்டாள்.

"வேலுக்கு அஞ்சியவர் துரத்தி வந்தவர்களை எப்படி எதிர்த்திருப்பீர்?" என்று மதுராந்தகி கபடம் இல்லாமல் கேட்டாள்.

"தேவி, தேவி! அவர் மிகவும் சாமர்த்தியமாகப் பேசுகிறார். நீங்கள் அவர் பேச்சில் மயங்கிவிடுகிறீர். வேலாவது, கத்தியாவது! அவர் உங்களைப் பரிகசிக்கிறார்..." என்று கூறினாள்.

"ஆகா! நீங்கள் மறைந்து கொண்டிருக்கும் அழகு மிக நேர்த்தி. இதோ அவர்களை அழைக்கிறேன். இங்கே இளவரசர் ஒளிந்து கொண்டிருக்கிறார் என்று சொல்லிக் கூப்பிடுகிறேன்" என்று அத்திமல்லர் பேசும் குரல் மரத்தினருகே கேட்டது.

"அதோ, அத்திமல்லர். நான் போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே இராசேந்திரன் வெளியே வந்தான்.

இப்போது சந்திரன் உதயமாகி, அதன் ஒளி அந்தகாரத்தைப் போக்க முயன்றது. மங்கிய ஒளியில் அத்திமல்லர் மண்டபத் தருகே நிற்பது தெரிந்தது.

"ஓகோ! இளவரசியும் துணைக்கு வந்திருக்கிறார்களா? அப்படியென்றால் இன்னும் சிறிது நேரம் இங்கு இருக்கலாம்" என்று அத்திமல்லர் கடகடவென நகைத்தார்.

மதுராந்தகி நடுங்கினாள். அவளுக்கு அத்திமல்லரை அடையாளம் தெரியவில்லை. "யார், யார்?" என்று மெல்லக் குழம்பியவாறு தோழியைப் பார்த்தாள். அத்திமல்லரே அவள் குழப்பத்தைப் போக்க விரும்பி, "இளவரசி! என்னை மறந்து விட்டாயா? மாளிகைக்கு வந்து உன் சிறிய தந்தையுடன் பேசிக் கொண்டிருப்பேனே... நீ அப்போது விவரம் தெரியாத வயதினள். என் ஊருக்கு வருகிறேன், வருகிறேன் என்று பிடிவாதம் பிடிப்பாய்... இளம் விழிகள் கண்ணீர் பெருக்கும். உன் சின்னஞ்சிறு உதடுகள் துடிக்கும். உன் சிவந்தமேனி மேலும் சிவந்துவிடும்..." என்று கூறவும், மதுராந்தகி எளிதில் புரிந்து கொண்டு விட்டாள். திருக்கோவலூர் அத்திமல்லரை அவளால் எப்படி மறக்க முடியும்? அவர் வேடிக்கையான கதைகள் கூறுவார். அவர் மடியிலேயே படுத்து எவ்வளவோ நாள்கள் கதை கேட்டவாறு உறங்குவாள் மதுராந்தகி.

மதுராந்தகியின் இளம் வயதிலேயே அவள் தந்தை இறந்து விட்டார். மதுராந்தகியின் தந்தை, கங்கை கொண்ட சோழபுரம் அமைத்த பரகேசரி இராசேந்திர சோழ தேவர்.

சோழ நாட்டில் இராசேந்திரர், இராசராசர் என்று பெயர் பூண்ட அரசர்கள் பலர் இருந்தனர். அவர்களைக் குறிப்பிடுவதற்கு



இராசகேசரி, பரகேசரி எனும் பட்டப் பெயர்கள் உதவியாக இருந்தாலும், பரகேசரியிலும் இருவர், இராசகேசரியிலும் இருவர் ஒரே பெயருடன் இருந்தால் எப்படி வித்தியாசம் தெரியும்? அதனால் முதல் இராசராசர், இரண்டாம் இராசேந்திரர் என்று பெயருக்கு முன்னால் எண்ணிக்கையைக் குறிப்பிட்டால் எளிதில் புரிந்துவிடும்.

கங்கை கொண்ட சோழரும், உலகம் புகழும் சக்கரவர்த்தியுமாகிய இராசேந்திர சோழ தேவருக்கு இராசகேசரி இராசாதிராச சோழன், இரண்டாம் இராசேந்திர சோழன், வீரராசேந்திர சோழன் என்னும் புதல்வர்கள் இருந்தனர்.

இராசாதிராசன் பட்டமேறியபோது, குந்தள நாட்டு ஆகவமல்லன் எனும் மன்னருடன் மூன்று முறையும் போரிட்டு வென்றான். கடைசி முறையாகப் பெரும் போர் நடத்தியபோது, யானை மீதிருந்த இராசாதிராசன் மீது வேலொன்று புயத்தில் தாக்கவே அங்கேயே இறந்தான். நல்லவேளையாகச் சோழர் படைகள் அஞ்சிக் குழம்பி ஓடுவதற்கு முன்பே போர்க்களத்தில் வந்து குதித்த இரண்டாம் இராசேந்திர சோழ தேவன் வெற்றிக் கொடி நாட்டினான். சோழ நாட்டின் மன்னர் என்ற மகுடத்தைப் போர்க்களத்திலேயே அவன் சூடிக்கொண்டான்.

இரண்டாம் இராசேந்திர சோழரின் திருமகள்தான் மதுராந்தகி. அவளுடன் பிறந்த ஆறுபிள்ளைகள் நடுவே அவள் ஒருத்தியே பெண்ணாக இருந்ததால் எல்லாரும் அவளிடம் அன்பு பாராட்டினர். சோழ மாளிகைக்கு வரும் அத்திமல்லருக்கு, மதுராந்தகியின் குறுகுறுப் பேச்சிலும், குமிழ்ச் சிரிப்பிலும் பிரியம் அதிகம். பெரிய மாளிகை, ஒவ்வொருவரையும் அங்கே தனியே கவனித்துக் கொள்ளப் பணியாட்கள் இருந்தனர். எனினும் இதயவாஞ்சையுடன் அன்பு செலுத்தும் உறவினர், நம்பிக்கையாக எவரும் இல்லை. அத்திமல்லரின் வேடிக்கையான பேச்சும் கதையும் சிறுமி மதுராந்தகியைப் பெரிதும் கவர்ந்துவிடும். அந்தச் சம்பவங்களை மனத்தில் நினைத்துக் கொள்வாள்.

"மதுராந்தகி, இந்தக் கிழவனை நீ மறந்து விட்டாயா?" என்று அத்திமல்லர் கேட்டார். மதுராந்தகி நாணமுற்றது அந்த நிலவொளியிலும் நன்றாகப் புலப்பட்டது. இரண்டு ஆடவர்கள் முந்நிலையில் அவள் இப்போது பேசவேண்டும். இராசேந்திரன் அவளையே விழுங்கி விடுபவன் போல் பார்க்கிறான்.

அத்திமல்லரோ வேடிக்கையாக ஏதாவது பேசி, அவள் மேலும் வெட்கம் அடையும் வண்ணம் செய்கிறார். 'இந்தத் தோழி இப்படி மௌனமாய் விட்டாளே. இவள் இந்தப் போதில் ஏதாவது பேசி என்னைக் காப்பாற்றக் கூடாதா?' என்று அவள் எண்ணினாள்.

இராசேந்திரன் உடனே குறுக்கிட்டு, "மறக்காமல் எப்படி இருக்க முடியும்? இளவரசி என்றால் பழைய சம்பவங்களை நினைவில் வைத்துக் கொள்ள முடியுமா?" என்றவுடன் மதுராந்தகி சீற்றத்துடன், "நான் இளவரசி என்றால் நீங்களும் இளவரசர்; இளவரசர் மட்டுமா? பேரரசர்! நீங்கள் என்னை நினைவில் வைத்துக் கொண்டிருந்தீர்களா? பொன்னேரிக் கரையில் நான் சித்திர மண்டபத்திலிருந்து வந்தபோது என்னை முன்பின் தெரியாதவள் போல்தானே பார்த்தீர்கள்... ஏன் தெரியுமா? பெரும் அரசராக ஆகப் போகிறீர்கள் என்ற பெருமை... இந்தச் சாதாரண மதுராந்தகியை எதற்கு நினைக்க வேண்டும்..." என்று கூறவும், அத்திமல்லர் குலுங்கக் குலுங்க நகைத்து, "மதுராந்தகி, இன்னும் இளவயதுப் படபடப்பு அப்படியே இருக்கிறதே... இந்தக் கோபத்தை யெல்லாம் இராசேந்திரனிடம் தனியாகப் புலப்படுத்து, நான் ஏன் இங்கே இடையூறாக இருக்க வேண்டும்..." என்று கூறி அங்கிருந்து மெல்ல நகர்வது போல் பாவனை செய்யவும் மதுராந்தகியும், இராசேந்திரனும் அவரது ஒவ்வொரு கரத்தையும் விரைந்து பற்றினர்.

"ஐயா, எங்கே போகிறீர்கள். வசந்த மண்டபத்தில் இருந்து பேசுவோம் என்றீர்களே..." என்று இராசேந்திரன் கேட்டான்.

"பாட்டா, நீங்கள் போனால் நான் மட்டும் துணையின்றி எப்படி மாளிகைக்குப் போவேன்... நீங்களும் என்னுடன் வாருங்கள். இன்று மேல் மாடத்து வெள்ளி நிலவில் எனக்குக் கதை சொல்லுங்கள்..." என்றாள் மதுராந்தகி.

அத்திமல்லர் மெல்ல நகைத்து மதுராந்தகியை நோக்கி, "குழந்தாய், நீ தவறாக என்னைப் பார்த்துக் கேட்கிறாய்; வெள்ளி நிலவில் மேன்மாடத்தில் உன்னுடன் இராசேந்திரன் அன்றோ அமர்ந்து பேசவேண்டும்..." என்றார். மதுராந்தகியின் முகம் நாணத்தால் முல்லைமெல்லரும்பின் காம்பினைப் போல் சிவந்தது. தலையைக் குனிந்து கொண்டு, "உங்களிடமிருந்து இப்படியெல்லாம் கேலிப் பேச்சைக் கேட்கவா நான் இங்கு வந்தேன்..." என்று கூறவும், அத்திமல்லர், "ஆமாம், ஆமாம், அதுதான் நானும் சொல்லுகிறேன்... வசந்த மண்டபத்தைத் தேடி இந்த வேளையில் நீ வந்த காரியம் வேறு. இந்தக் கிழவன் வீணே குறுக்கிட்டு விட்டானே, இராசேந்திரா... நான் பிறகு சந்திக்கிறேன். நீ மதுராந்தகி பேசுவதைக் கேட்டுக் கொண்டிரு..." என்று கூறி அவர்கள் இருவர் கரங்களையும் மெல்ல அகற்றிவிட்டு நடக்க முற்படவும், இராசேந்திரன் உறுதியான குரலில், "ஐயா, இதென்ன விளையாட்டுப் பேச்சு... நான் கனிமொழி பேச வரவில்லை. எனக்குக் கடமை ஏராளம். என்னைப் பகைவனாகக் கருதிச் சிறைப்படுத்த வீரர்களை அனுப்பும் இந்தச் சோழ நாட்டைச் சேர்ந்த அரச குடும்பத்தவர்கள் எவருடனும் நான் இப்போது பேச விரும்பவில்லை... நமக்கு ஆக வேண்டியவை பல இருக்கின்றன. நாம் போவோம் வாருங்கள்" என்றான்.



மதுராந்தகியும் தோழியிடம் கூறுவது போல், "அடி, நாம் எதற்காக இங்கே இருக்க வேண்டும்? வா போவோம். இருள் என்ன, தனிவழி என்ன? எதற்கும் எனக்கு அச்சம் இல்லை. நாம் போவோம்" என்று கூறிவிட்டுத் திரும்பியும் பாராமல் வேகமாக நடந்தாள்.

நந்தவனத்தைத் தாண்டி வீதி வழியே தனியே நடந்து பழக்கமறியா மதுராந்தகியின் உள்ளத்தில், பெரும் பயம் குடி கொண்டிருந்தது. அவள் உடல் நடுங்குவது தோழிக்கு நன்றாகப் புலப்பட்டது.

## 20. எங்கே செல்வது?

கங்கை கொண்ட சோழபுரத்திற்குப் பெருமை தருவதாய் சோழீசர் கோயில் திகழ்ந்தது. கோயிலைச் சுற்றி நகர் அமைந்திருந்தது. கோயிலின் விமானத்தின் கம்பீரம் வெகு தொலைவில் இருப்பவரையும் வாவென்று அழைத்தது. கோயிலைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த பெரு மதிலும், மதில் மேல் அமைந்திருந்த நந்தியின் சிற்பங்களும் கோயிலின் கம்பீரத்தை உயர்த்தின.

சந்திரகுமாரியும், கங்கபீமனும், மத்தளம் தட்டுபவரும் கோயிலுக்குள் நுழைந்தனர். மாலைக் கதிரவனின் பொன்னொளி, கோயிலின் பெருஞ்சுற்றில் உள்ள மரங்களின் மீது வீழ்ந்து அழகை ஊட்டிக் கொண்டிருந்தது.

சந்திரகுமாரி வியப்புடன் கோயிலை நோக்கினாள். கோயிலின் விமானத்தை நோக்கினாள். கோயிலின் வெளிப்பிரகாரத்தில் திகழ்ந்த சிற்பங்களை நோக்கினாள். தத்ரூபமாக அமைந்திருந்த அந்தச் சிற்பங்களின் நேர்த்தி அவளைக் கவர்ந்தது. கங்கபீமனுக்குச் சிற்பங்களின்மேல் கவனம் செல்லவில்லை. மாலையில் வீட்டிற்கு வருமாறு கட்டளையிட்டுள்ள இளைய தன்மபாலனிடம் சென்று என்ன பேசுவது என்பதைப் பற்றிய சிந்தனையில் மனம் லயித்தது. சரியான சந்தர்ப்பம். இளைய தளபதியின் நட்பு கிடைத்து விட்டால், பிறகு எடுத்த காரியம் நிறைவேறுவது எளிதுதானே. சந்திரகுமாரி, தன் திட்டத்திற்கு ஒப்புக்கொள்ள வேண்டும்- அவன் இவ்வாறு சிந்தனையில் மூழ்கியிருந்தபோது, சந்திரகுமாரி அங்குள்ள சிற்பங்கள் ஒவ்வொன்றையும் குறித்துக் கேட்டவாறிருந்தாள். கங்கபீமன் 'உம்' கொட்டினானேயொழிய அவளுக்கு மறுமொழி ஏதும் கூறவில்லை.

சிவபெருமான், உமாதேவியுடன் கம்பீரமாக அமர்ந்திருக்கிறார். வலது கால் மடித்தும், இடது கால் தொங்க விடப்பட்டும் உள்ள நிலையில் அவர் திகழ்கிறார். அவர் பாதத்தருகே சண்டேசுவரர் அமர்ந்திருக்கிறார். அவரைத் தான் ஏற்றதன் அறிகுறியாக அவர் முடியில் பூமாலையைச் சூட்டுகிறார். அந்தச் சிற்பம் அவளை மிகவும் கவர்ந்து விட்டது. 'ஆஹா' என்று வாய்விட்டே கூவி விட்டாள்.

"என்ன, சந்திரகுமாரி ஏதோ கேட்டாயே என்ன?" என்று அவள் அருகே வந்தான் கங்கபீமன்.

"நான் கேட்டது இப்போதுதான் தங்கள் காதில் வீழ்ந்ததா? அப்போதிருந்தே நான் கேட்டு வருகிறேன். நீங்கள் ஒன்றுமே பேசவில்லை ஏதோ சிந்தனை... அதோ அந்தச் சிலையைப் பாருங்கள். சிலையென்று கூறிவிட்டேனா; தப்பு, தப்பு, சிவபெருமான் எழுந்தருளியிருக்கிறார். என்ன அருமை, என்ன அருமை, எனக்கு இந்தக் கோயிலை விட்டுப் போகவே மனமில்லை..." என்றாள்.

கங்கபீமன் மிகவும் சாமர்த்தியமாக, "இந்தக் கோயிலோடு உனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுமாறு செய்யவேண்டும் என்றுதானே நான் முயன்று வருகிறேன். சற்று முன்பு வழியில் பார்த்துப் பேசினோமே அவரைப் பற்றித்தான்..." என்றான்.

"அவர் யார்?"

"சோழ நாட்டின் பிரதம தளபதி தன்மபாலர் என்பவர். அவருடைய தம்பி இவர். இவர் துணைத் தளபதி."



"ஓகோ! அவரிடம் என்ன பேசினீர்கள்?"

"பேசினேன்... எல்லாம் விவரமாகச் சொல்கிறேன். எல்லாம் உன் சுகவாழ்வுக்காகத்தான் பேசினேன்..."

"என் சுகவாழ்வு உங்களுடையதுமன்றோ?"

"ஆமாம், ஆமாம் சந்திரகுமாரி. அதற்காகத்தான் நான் மறுபடியும் துணைத் தளபதியைச் சந்திக்கப் போகிறேன்."

"சந்தித்து என்ன பேசுவீர்?"

"அது பற்றி இப்போது எப்படிச் சொல்ல முடியும்? பேசிவிட்டு வந்து சொல்கிறேன். நீ மட்டும் நான் சொல்வதுபோல் கேட்பாயானால்... என்ன..."

"இதுவரை நான் என்ன கேட்கவில்லை... நான் சொல்வதைத் தான் நீங்கள் கேட்பதில்லை..."

"நீ சொல்வதை நான் கேட்பதில்லையா? என்ன சொல்; உடனே சொல். செய்கிறேன்."

"அன்று குடிசையில் தங்கியிருந்தாரே, அந்த இளைஞரை நான் மீண்டும் காண வழி செய்ய மாட்டீர்களா?"

சந்திரகுமாரி இப்படிக் கூறியதும், கங்கபீமன் சிறிது நேரம் பேசாமலேயேயிருந்தான். பிறகு ஏதோ யோசிப்பவனைப்போல், "அவனை நான் எங்குபோய்த் தேடுவது? அதிலேயே நான் கவனஞ் செலுத்தினால் மற்ற காரியம் எப்படி நடைபெறும்? ஹூம். எதற்கும் நான் போகுமிடத்தில் எங்காவது தென்படுகிறானா என்று பார்க்கிறேன். ஆனால் உன்னைத் தேடி வருவான். உன் விழிகளிலிருந்து அவ்வளவு எளிதில் அவனால் தப்பிவிட முடியுமா?" என்று கங்கபீமன் கூறிச் சிரித்தான்.

சந்திரகுமாரி சிரிக்கவில்லை. அவள் மனக்கண்முன் இராசேந்திரன் இனிய தோற்றம் வந்து நின்றது. அந்தத் தோற்றம். அவ்வளவு எளிதில் அவள் மனக்கண்ணை விட்டு மறைவதாயில்லை.

சந்திரகுமாரி சிற்பத்தின் எதிரே மனத்தைப் பறிகொடுத்து நிற்பதைக் கண்டனர் கோயிலுக்குக் கடவுளைத் தொழ வந்தவர்கள். அவர்கள் சந்திரகுமாரியின் எழிலுருவத்தை வைத்த கண் மாறாது நோக்கியவாறு நின்றனர். கோயிலில் மற்ற இன்பங்களை மறந்து, கடவுளைத் தொழ வந்த இடத்தில் சந்திரகுமாரியின் அழகு வடிவம்

அவர்களை நிலைகுலைய வைத்தது. நல்லவேளையாக மேள சப்தமும், முரசின் ஒலியும் எழவே, மாலை பூசையும் தீபாராதனையும் தொடங்கப் போகிறார்கள் என்பதைத் தெரிவிக்கவே, மக்கள் சந்நிதி நோக்கி விரைந்தனர். சந்திரகுமாரியும் சிந்தனை கலைந்தவளாய் வேகமாக சந்நிதிக்குச் சென்றாள். அவள் நடக்கும்போது அவள் கால் சதங்கை ஒலித்தது. சதங்கை ஒலி குழலோசைக்கு இடப்படும் தாளத்திற்கு ஏற்ப ஒலித்தது.

ஆண்டவனைத் தொழ வந்தவர்கள் கண்கள், சந்திரகுமாரியின் பக்கம் நோக்கின. சந்திரகுமாரி கருவறையிலிருந்த ஆண்டவனையே நோக்கினாள். பெரும் லிங்கம் தீப ஒளியில் பளபளவென ஜ்வலித்தது. சந்திரகுமாரிக்கு மெய் சிலிர்த்தது. தீபாராதனை முடிந்ததும் கணீரென்று பாடலின் ஒலி எழுந்தது.

*"பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்*
*பழத்தினிற் சுவை ஒப்பாய்*
*கண்ணிடை மணி ஒப்பாய்*
*கடுஇருட் சுடர் ஒப்பாய்*
*மண்ணிடை அடியார்கள்*
*மனத்து இடர் வாராமே*
*விண்ணிடை குருகாவூர்*
*வெள்ளடைநீ அன்றே"*

என்று பாடி, இளம் வாலிபன் ஒருவன் முடித்தான். மீண்டும் கணகணவென மணிகள் ஒலித்தன. 'ஜிங்ஜிங்' என்று பெருந் தாளம் சப்தித்தது. 'தம்தம்' என்று பேரிகை முழங்கியது.

தன்னை மறந்து பாடிய இளைஞனைச் சந்திரகுமாரி ஒரு கணம் நோக்கினாள். கழுத்திலே உத்திராட்ச மாலை, நெற்றியிலே திருநீறு, இடுப்பிலே கட்டிய ஆடை, சிவந்த மேனி, ஒளி வீசும் கண்கள், தீர்க்கமான நாசி. சந்திரகுமாரி மீண்டும் ஒருமுறை அவனை நோக்கினாள். அவன் குரல் இனிமை அவளைக் கவர்ந்தது.

கூட்டம் சிறிதுநேரம் அப்படியே காத்திருந்தது. மாலை நர்த்தனம்ஆட வழக்கமாக வரும் விறலியர் வரவில்லை. அவள் வராதது அறிந்தபின், கூடியிருந்தவர் மெல்ல ஒவ்வொருவராகக் கலைந்து சென்றனர். செல்லும்போது சந்திரகுமாரியைக் கீழ்க் கண்ணால் காணாது செல்பவர்களே இல்லை எனலாம். பெண்டிர்களும் அவளை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துச் சென்றனர். அவள் வனப்பு அவர்கள் இதயத்தில் பொறாமையை மீட்டியிருக்க வேண்டும்.



தம்முடன் வரும் கணவர் அவளைத் திரும்பிப் பார்க்கும்போது, அவர்களை இலேசாகக் கடிந்து வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

சந்நிதியில் பெம்மான் எதிரே சுந்தரரின் தேவாரத்தை இனிய குரலுடன் எழுப்பிப் பாடிய ஆடவல்லான் எனும் அந்த இளைஞனை அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும் எனும் ஆர்வம் சந்திரகுமாரிக்கு எழுந்தது.

சந்நிதி சிறிது நேரத்தில் சந்தடியற்றுப் போனது. வெளியே படர்ந்த இருள் கோயிலுக்குள்ளும் படர்ந்தது. விளக்கிடுவோர் தீபத்தைத் தூண்டிவிட்டுச் சென்றனர். ஆடவல்லான் திருநீறும், பூவும் பெற்றுக்கொண்டு வெளியே செல்ல நடந்தான்.

"உங்கள் பாடலை நான் மிக ரசித்தேன்" என்று சந்திரகுமாரியே வலியச் சென்று ஆடவல்லானிடம் பேசினாள். தன் இசையினும் இனிமையான குரலொன்று கேட்கவே, ஆடவல்லான் திரும்பிப் பார்த்தான். ஆகா! அவனால் ஏறிட்டு நோக்க முடியவில்லையே! ஆயிரம் சோதிக் கதிர்கள் வீசுகின்றனவா? அதில் புகை மண்டி நிறைந்தனவா? சந்திரகுமாரியின் எழில் முகத்தை அவனால் மற்றொருமுறை பார்க்க முயன்றும் முடியவில்லை. அவன் கண்கள் அவள் பாதத்தை நோக்கின. செம்பஞ்சுக் குழம்பால் சித்திரம் தீட்டப்பட்ட செஞ்சீரடிகள்! ஒயிலெனப் படர்ந்த கொடி போன்ற இடை. அது தாங்கத் தவிக்கும் செழுமையான தனங்கள். தந்தத்தால் ஆனதோ என்று எண்ணும்படியான கரங்கள். அதற்கு மேலே-அந்த முகத் தாமரையிலுள்ள கண்களுக்குத்தான் எத்தகைய அபூர்வமான காந்த சக்தி!

ஆடவல்லான் திகைத்துப் போய் நிற்பதையும், மெல்ல மெல்லத் தன்னைப் பாதாதிகேசம் நோக்குவதையும் கண்ட சந்திரகுமாரிக்குச் சிரிப்புப் பொங்கியது.

"உங்க பாட்டை மற்றொருமுறை கேட்க வேண்டும் போலிருக்கிறது" என்று குழைவுடன் கூறிக் கங்கபீமன் பக்கம் திரும்பி, "மாமா, இவர் வீடு எங்கிருக்கிறது என்று கேட்டுத் தெரிந்து கொள்ளுங்களேன். இவர் பாடல் எனக்குப் பிடித்துவிட்டது. இவர் குரல் எனக்குப் பிடித்துவிட்டது" என்றாள்.

அவள் கூறியதைக் கேட்க கங்கபீமன் அங்கே இல்லை. அவன் சற்றுத் தொலைவில் வெளி மண்டபத்தில் சோழ நாட்டுச் சேனாதிபதி பெரிய தன்மபாலன் எதிரே கை கட்டி நின்று கொண்

CONNEMARA PUBLIC LIBRARY
15 NOV 2010

டிருந்தான். கோயிலில் மாலை பூசை வேளையில் தன்மபாலர் ஒவ்வொரு நாளும் வரத் தவறமாட்டார். அன்று வந்தவர் கண்களிலே சந்திரகுமாரி பட்டுவிட்டாள். ஊருக்குப் புதியவள் என்பதை அவர் உடனே தெரிந்து கொண்டுவிட்டார். அவள் அழகு அவர் மனதிலே ஒரு கணம் சலனத்தை ஊட்டியது. சந்திரகுமாரியைப் பற்றி விபரம் அறிய, அவர் உடனே அருகே இருந்த வீரர்களை அனுப்பி னார். அவர்கள் கங்கபீமனை அழைத்து வந்தனர்.

"அந்த ஆடலழகியின் பெயர் சந்திரகுமாரியா?" என்று கூறிவிட்டுப் பெரிதாக நகைத்தார் தன்மபாலர். பிறகு, "அவளையும் அழைத்துக் கொண்டு இன்று இரவு நிலா முற்றத்திற்கு வந்து விடுங்கள். அற்புத நாட்டியத்தை அரச குடும்பத்தினர்தாம் கண்டு களிக்கட்டுமே!" என்று கட்டளையிட்டார்.

கங்கபீமன் திடுக்கிட்டான்; திகைத்தான். மாலையில் இளைய தன்மபாலர் வரச் சொல்லியிருக்கிறார் என்பதை எப்படிச் சொல்லுவான்? அரச குடும்பத்தவர் மகிழச் சந்திரகுமாரி ஆடுவது நல்லதா, இளைய தன்மபாலர் மகிழ ஆடுவது நல்லதா, எனும் சிந்தனையிலீடுபட்டிருந்த அவன் சிந்தனையை, அங்கே விரைந்து வந்து நின்ற வீரர்கள் தன்மபாலரிடம் சொன்ன சொற்கள் கலைத்தன.

"தலைவ! அந்த இளைஞனைப் பிடிக்க முடியவில்லை. தப்பி விட்டான்" என்ற சொற்களைக் கேட்டுத் தன்மபாலர் புலிபோலச் சீறினார்.

## 21. தளபதியும் தண்ணிலவும்

கங்காபுரியின் நேர் உச்சியில், வெண்மதி இன்முகங்காட்டித் தன் கதிர்களை வீசி நின்றாள். பால் நிலவு என்றோ, அன்னத்தின் தூவியை இறைத்ததுபோல் என்றோ வர்ணிக்கக் கவிஞர்கள் தம் கற்பனைச் சக்தியை ஓடவிட்டுக் கொண்டிருந்தனர். இளங் காதலர்கள் "வாழ்க முழுமதி" என்று போற்றிப் பாடிக் கொண் டிருந்தனர். பிரிவாற்றாமையால் துடிக்கும் காதலர்கள் விரகதாபம் தாங்காது மதியை நொந்து கொண்டிருந்தனர்.

தேரோடும் வீதியில் திகழ்ந்த மாடங்கள் நிறைந்த மாளிகைகளில் எரிந்து கொண்டிருந்த விளக்குகள், ஒவ்வொன்றாக ஒளி



குன்றி அணைந்தன. கங்கை கொண்ட சோழீச்சுரத்துக் கோயிலில் நள்ளிரவு பூசையைக் குறிக்க மணியோசை எழுந்து எங்கும் ஒலித்தது. மத்தள சப்தமும், தாள ஓசையும், நாதஸ்வாத்தில் மோகனராக ஆலாபனையும் மெல்லக் காற்றில் எழுந்து எங்கும் பரவி, கண்துயிலத் துடிப்பவர்களுக்கு உறக்கத்தைத் தாலாட்டி வரவழைத்தன.

கோட்டை வாயிற் கதவுகள் அடைக்கப்பட்டுக் காவலர்கள் 'எல்லாம் சரியா' என ஒருமுறை பார்த்துவிட்டு தத்தம் இடங்களுக்குச் சென்றனர். அகழியில் தேங்கியிருந்த நீரிலே சலசலவென்று சப்தமிட்டவாறு ஒரு முதலை மற்றொரு முதலையைத் துரத்திச் சென்றது.

தென்புறத்து மதிலை ஒட்டிய வீதியின் முனையில் பல்லக்கு ஒன்று நின்றது. அதைச் சுமப்பவர்களும், காவலர்கள் இருவரும் சற்று ஒதுக்குப்புறமாக நின்றனர். சிவிகையின் நிழல் சாலையில் விசித்திரமான உருவத்தைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது.

வீதியிலே மக்கள் நடமாட்டம் குறைந்துவிட்டது. எப்போதாவது 'டக்டக்' என்ற ஒலியெழுப்பிக் கொண்டு குதிரையொன்று செல்லும். அதன்மீது வீரனோ, அல்லது வணிகரோ செல்வர். சிவிகையின் அருகே இருந்த காவலன் ஒருவன், எதிர்த் திசையில் இருந்த குறுகலான வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் எதிர்பார்த்தவர்கள் வந்து விட்டனர். 'ஜில்ஜில்' என்ற சதங்கை ஒலி மெல்லக் கேட்டது. மெல்லியத் துகிலை உடலெங்கும் மறைத்தவாறு சந்திரகுமாரி வீதியைக் கடந்து வந்து கொண்டிருந்தாள். அவளைத் தொடர்ந்து கங்கபீமன் வந்தான். கங்கபீமன், புத்தாடை அணிந்திருந்தான். மணக்கும் பொருள்கள் அவனிடமிருந்து எழுந்து, மற்றவரைக் கிறுகிறுக்க வைத்தன.

அந்த வாசனையையும் வென்றது, சந்திரகுமாரி தன் கூந்தலில் அணிந்திருந்த மல்லிகை மலர். அது புறத்தே மெல்ல அவிழ்ந்து ஊசலாடியது; காது குண்டலங்களுடன் அசைந்தாடியது. வெற்றி லையால் சிவந்திருந்த உதடுகளும், காந்த சக்தியால் பளபளத்த விழிகளும், மெல்லிய துகிலையும் கடந்து பொங்கி நின்ற அங்கங்களும், நிலவொளியில் மரகதச் சிலை நடந்து வருகிறதோ என்று எண்ணச் செய்தன.

சிவிகை சுமப்போர் ஒரு கணம் அயர்ந்து நின்றனர். தேவசுந்தரி போன்ற அவளழகு அவர்களை மயக்கியதோ? அவள் சூடியிருந்த மல்லிகை மணம் கிறுகிறுக்கச் செய்ததோ-ஜவ்வாதும் புனுகும் மற்றும் மணம் தரும் பொருள்களும் அவர்களை நிலைகுலையச் செய்தனவோ?

சந்திரகுமாரி திரையை விலக்கிக் கொண்டு சிவிகையில் ஏறி அமர்ந்தாள். சிவிகையை மெல்லத் தூக்கிக் கொண்டு நடந்தனர். கங்கபீமன் பல்லக்கைப் பின் தொடர்ந்தான். நேர்கோடிட்டது போன்ற அந்த நெடுஞ்சாலையில் சிவிகை சுமப்போர் வேகமாகச் சென்று, ஓரிடத்தில் திரும்பும்போது, குதிரை மீது அங்கே மர நிழலில் நின்று கொண்டிருந்த வீரர்கள் இருவர் கையிலிருந்த வேல் கழியை குறுக்கே நீட்டி, 'நில்' என்று அழுத்தமான குரலில் கூறினர்.

பல்லக்குடன் வந்து கொண்டிருந்த காவல் வீரர்கள் ஓடி வந்து குதிரை வீரர்கள் முன்வந்து, "ஏன் தடுக்கிறீர்கள்? சின்னவர் வீட்டுக்கு விருந்தினர் செல்கிறார்" என்று கூறினர்.

"சிவிகையில் யார் என்று நாங்கள் பார்க்கவேண்டும்" என்று குதிரை வீரன் ஒருவன் அதட்டினான்.

"உங்களுக்குச் சோதனை போட உரிமை இல்லை" என்றான் சிவிகையுடன் வந்த காவல் வீரன்.

"என்ன சொன்னாய்?" என்று கூவிய குதிரை வீரன் குதிரையைச் சிவிகையருகே செலுத்தி, வேல்முனையாலே சிவிகையின் திரைச் சீலையை விலக்க முற்பட்டான். சிவிகைக் காவலன் வேல் கம்பைப் பற்றி இழுக்கவே எதிர்பாராத நிகழ்ச்சியால் குதிரை மீதிருந்த வீரன் கீழே வீழ்ந்தான். முகம் மண்ணிலே புதைந்தது.

குதிரை திடுதிடுவென்று ஓடத் தொடங்கியது. மற்றொரு குதிரை வீரன், தன் வாளை எடுத்துச் சிவிகை வீரனை நோக்கிப் பாய்ந்தான். 'கிணிங் கிணிங்'-வாளொடு வாள் மோதும் ஓசை, அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு கேட்டது. சிவிகையைச் சுமந்து வந்தவர்கள் சிவிகையை இறக்கி வைத்து விட்டு, மறைவிடமாகச் சென்று நின்றனர்.

சிவிகைக் காவலர் இருவரையும் குதிரை வீரன் ஒருவனே நெருங்கவிடாமல் கத்தியைச் சுழற்றித் தடுத்து நிறுத்தி வந்தான்.



நிலவொளியில் வாள் பளபளவென மின்னியது. புழுதிப்படலம் எழுந்தது. செங்குருதிச் சொட்டுக்கள் மண்ணில் உதிர்ந்தன. அருகே இருந்த மரத்தில் அரைத் தூக்கத்தில் இருந்த பறவைகள், "என்னவோ ஏதோ" என்று விழித்துக் கொண்டு பறந்தன.

சிறிய தன்மபாலர் தன் மாளிகையில் கங்கபீமன் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான்.

பெரிய தன்மபாலர், தன் மாளிகை நிலவு முற்றத்தில் அமர்ந்து, சந்திரகுமாரியின் வரவை எதிர் நோக்கியிருந்தார். மற்றும் நான்கு பேர்களும் தலையணையில் சாய்ந்து கொண்டு பழங்களின் சுளைகளைச் சுவைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அந்த நகரத்துப் பெரும் புள்ளிகள்.

ஒருவர் சீன நாட்டுடன் வாணிபஞ் செய்பவர். மற்றவர் அரிசியை வண்டி வண்டியாகச் சேர நாட்டிற்கு அனுப்பி வியாபாரம் செய்பவர். மற்றவர் இரும்பைக் காய்ச்சி உருக்கிச் சிறுசிறு படைக் கருவிகள் செய்பவர். மற்றவர் நாகப்பட்டிநத் துறைமுக அதிகாரி.

பெரிய தன்மபாலர் குதூகலம் நிறைந்தவராய்க் காணப்பட்டார். அங்கே நிலவு மண்டபத்தில் இன்னும் சிறிது நேரத்தில் நடனமாடப்போகும் நங்கையைப் பற்றியே அவரது பேச்சு இருந்தது.

கங்கை கொண்ட சோழீசர் கோயிலில் கண்ட அந்த எழில் மங்கையைப் பற்றிப் பேசினர். சீனத்துடன் வாணிபம் செய்யும் சிங்கராயர் குலுங்கக் குலுங்கச் சிரித்து, "ஓகோ! அதனால்தான் எங்களையெல்லாம் உடனே வரவேண்டும் என்று செய்தி சொல்லி அனுப்பினீர்களா? என்னவோ ஏதோ என்று பயந்து விட்டோம்..." என்று கூறினார்.

நெல் வியாபாரி நெல்லீசர், "கொள்ளையழகுக் குமரி இந்த நகரத்தில் இருப்பது என் கண்களில் எப்படிப் படாமல் போனது" என்று வியப்புடன் கேட்பவர்போல், தன்மபாலர் வாயை இன்னும் கிளறினார்.

மாதுளம் பழத்தை விண்டு, சந்திரன் ஒளியில் செம்முத்துக் கள் ஒளி வீசுவதைப் பார்த்து, அதை ஒவ்வொன்றாக எடுத்து

வாயில் போட்டுச் சுவைத்தவாறு, "அந்தத் தங்க விக்கிரகம் இந்த ஊருக்குப் புதிசு நெல்லீசரே. புதிசு... நானே பிரமித்துப் போனேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அதனால்தான் இன்று இரவே இங்கே நடனமாட வரவேண்டும் என்று கட்டளையிட்டு விட்டேன்... வேறு இடத்தில் அவள் நடனத்தை நாம் ரசிக்க வேண்டும் என்று எண்ணினேன்? நான் மட்டும் தனியே அவள் ஆடுவதைக் கண்டு ரசிப்பதைவிட, இந்த ஊரின் பெரும் செல்வந்தர்களான நீங்களும் கண்டு களிப்பது அவசியம் என எண்ணினேன். முத்துமாலையும், தங்க ஆபரணமும் பரிசாக அளிப்பீர்கள் அல்லவா..." என்று கூறிக் கையிலிருந்த மாதுளை முத்தை சிங்கராயர் மீது வீசினார்.

அவர் அசட்டுச் சிரிப்புடன், "முத்து மாலைக்கும் வைர மாலைக்கும் நான் எங்கே போவதாம்! சேனாதிபதியிடம் இல்லாத செல்வமா இந்த ஏழை வியாபாரியிடம் இருக்கிறது..." என்றார்.

தன்மபாலர் உடல் குலுங்க நகைத்து, "சிங்கராயரே, நீங்கள் மிகவும் கெட்டிக்காரரய்யா! உங்கள் மாளிகையில் நிலவறை ஒன்று கட்டியிருக்கிறீர்களாம். அங்கே எல்லாம் தங்கப் பாளங்களாகவே வைத்திருக்கிறீர்களாம். வைத்திருங்கள், வைத்திருங்கள். சோழ நாட்டுப் பொக்கிஷம் வற்றிவருகிறது. பெரிய யுத்தம் வரப் போகிறது. அதற்குத் தங்கள் செல்வம் தேவைப்படும்; அப்போது வாங்கிக் கொள்கிறேன்" என்று கூறினார்.

சிங்கராயர் உடல் ஒரு கணம் சிலிர்த்தது. நாட்டியத்தைக் காண வேண்டும் எனும் ஆசையில் தளபதியிடம் வந்து சிக்கிக் கொண்டோமே என்று நடுங்கி ஏதோ பேச வாயெடுத்தவுடன், தளபதியே முந்திக் கொண்டு, "பயப்படாதீர்கள் சிங்கராயரே! அரசாங்கத்திற்குப் பணம் தரவேண்டாம். இப்போது வரும் அழகு மங்கைக்குத் தாரும்" என்றார். சற்று நேரம் மௌனமாயிருந்து விட்டு, "நான் சொல்லவே வேண்டியதில்லை. நீங்கள் அவள் அழகையும், ஆற்றலையும் பார்த்துக் கொடுத்து விடுவீர்கள்..." என்றார்.

"ஆமாம், மன்னர் எதிரே ஆடச் செய்து நிறைய பொன்னும் பொருளும் வாங்கித் தாருங்களேன்" என்றார் சிங்கராயர்.

தன்மபாலர் உடனே மறுமொழி கூறவில்லை. பிறகு மெல்லிய குரலில், "நன்றாகக் கேட்டீர்கள்! மன்னர் எதிரே



ஆடுவதா! மன்னர் சுய நினைவு இல்லாமல் கடந்த பத்து நாள்களாகப் படுத்திருக்கிறார்கள். இவள் ஆட்டத்தைப் பார்க்கவா அவர் கண் திறக்கப் போகிறார்?" என்றார்.

துறைமுக அதிகாரி இப்போது தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "மன்னரை நீங்கள் சிறைவைத்திருப்பதுபோல் பாதுகாவலிட்டிருக்கிறீர்களாமே... உண்மையா? நாகைப்பட்டினத்தில் இதுவே பேச்சு. அதனுடன் ஏற்றுமதிக்காகக் கடற்கரையில் ஏராளமாகப் பண்டங்கள் தங்கியிருக்கின்றன. சுங்க வரியைச் சேர்த்துப் பண்டத்தின் விலையை வாங்க அந்நிய நாட்டினர் விரும்பவில்லை..." என்று கூறிவரும்போது தன்மபாலர் தடுத்து, "சிறிது நேரம் மனமகிழ்ச்சியுடன் இருக்கலாம் என்று விரும்பினால், அரச காரியத்தை இங்குமா கொண்டு வருகிறீர்கள். அரசரைச் சிறை செய்திருந்தால், நான் உடனே அரியணையில் அமர்ந்திருக்க மாட்டேனோ... ஹூம்... சுத்த வதந்தி. அது போகட்டும். இதோ... அராபியாவிலிருந்து வந்திருக்கும் சுவையுள்ள மது. ஹூம்... பருகுங்கள்... பருகுங்கள்... அவள் வந்துவிடும் நேரம்தான். புது உற்சாகத்துடன் அவளை வரவேற்போம்..." என்று கிண்ணங்களில் மதுவை ஊற்றினார்.

'ஹோ ஹோ' என்ற ஒலி-பல்லக்குச் சுமப்பவர் எழுப்பும் ஒலி-தொலைவில் கேட்டது. வரவர நெருங்கியது.

"அதோ அவள் வருகிறாள்.." என்று பரபரப்படைந்தார் தன்மபாலர்.

"தாளம் போடுபவர், பாடுபவர் எல்லாம் எங்கே?" என்று கேட்டார் நெல் வியாபாரி.

"அவர்கள் எல்லாம் எதற்கு? பாட்டு, தாளம், சப்தம் இல்லாமல் வெறும் நடனம்... அப்போதுதான் அநுபவிக்க முடியும்- என்ன தெரிந்ததா?" என்று கூறிய தன்மபாலர், மேல்மாடத்துக்கு வரும் படிக்கட்டுகளையே நோக்கியவாறிருந்தார். தண்ணிலவு அவர் அங்கங்கள் மீது தன் வெள்ளிக் கதிர்களைத் தூவிப் பரபரப்பை அதிகப்படுத்தியது.

# 22. எதிர்பாராத சந்திப்பு

தன்மபாலர் மாளிகையின் வெளித் தோட்டத்திலே சிவிகையை இறக்கினார்கள். குதிரை மீதிருந்த வீரன் கம்பீரமாக இறங்கிச் சிவிகையருகே சென்று, "தளபதி காத்திருக்கிறார், வரலாம்..." என்று கூறினான். சிவிகையின் திரை அசைந்ததே யொழிய யாரும் வெளியே வரவில்லை. வீரன் துணிந்து திரையை விலக்கினான்.

அதற்குள் வீரனொருவன் மேல் மாடம் சென்று தளபதியை வணங்கி நின்றான்.

"அவள் வந்துவிட்டாளா?" என்று தளபதி கேட்டார்.

"ஆமாங்க... சிவிகையைக் கீழே இறக்கியிருக்கிறோம்... இதோ அழைத்து வருகிறோம்..."

"அவளுடைய மாமன் ஒருவர் இருந்தாரே, அவர் வர வில்லையா?"

"அப்படி யாரும் உடன் வந்ததாகத் தெரியவில்லைங்க... சின்னவர் ஆட்கள் அந்த அம்மாவைப் பல்லக்கில் ஏற்றியிருந் ததைப் பார்த்தோம்..."

"என்ன? சின்னவர் ஆட்களா? அவன் இதற்கும் போட்டிக்கு வந்து விட்டானா? அவன் என் காலை மிதிக்க விரும்புகிறான்... அழிவு காலம்தான்... ஹூம்... நீங்கள் அவன் ஆட்களைத் துரத்தி விட்டு இவளை அழைத்து வந்தீர்களா?"

"ஆமாமுங்க... கத்திகள் மின்னின... சிவிகைக் காவலர்களை ஓடஓட விரட்டினோம்..."

"அவ்வளவு தூரம் ஆகிவிட்டதா? அதுவரையில் நாட்டியப் பெண் பல்லக்கிலேயே இருந்தாளா?"

"அப்படித்தான் இருந்திருக்கணும்..."

"சரி சரி... இன்னும் ஏன் தாமதம்? அவளை இங்கே அழைத்து வா..."



தளபதியின் கட்டளைக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, வீரன் கீழே விரைந்தான். பல்லக்கருகே கண்ட காட்சியில் அவன் திகைத்தான். சிவிகை தூக்கியவர்கள் தலை குனிந்து நின்றனர். சிவிகையின் அருகே கைகால் கட்டப்பட்டு கங்கபீமன் கிடந்தான். அவன் வாயிலும் துணி அடைக்கப்பட்டிருந்தது.

குதிரை வீரர்களுக்கு ஏதும் புரியவில்லை. பயத்தால் அவர்கள் உடல் நடுங்கியது. பல்லக்கில் யாரோ ஒருவன் கைகால் கட்டப்பட்டுக் கிடக்கும் அதிசயம், அவர்களை நிலை குலையச் செய்தது. சந்திரகுமாரி வருவாள் என்று ஆவலுடன் எதிர்பார்த்து இருக்கும் தளபதிக்கு அவர்கள் என்ன மறுமொழி கூறுவர்?

தன்மபாலரால் மேன் மாடத்தில் இருக்க முடியவில்லை. சந்திரகுமாரி மேலே வருவதற்கு இவ்வளவு நேரமா? நாம் வந்து கூப்பிடவில்லை என்று பிடிவாதமாகக் கீழே நிற்கிறாளா? தன்மபாலர் வேகமாகப் பலகணி அருகே வந்தார்.

தோட்டத்து மரத்தடியில் சிவிகை நிற்பதையும், காவல் வீரர் கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு நிற்பதையும், கீழே ஒரு மூட்டைபோல் ஏதோ கிடைப்பதையும் கண்ட தன்மபாலர், அங்கி ருந்தே குரல் கொடுத்தார். ஒரு வீரன் பரபரப்புடன் ஓடிவந்தான்.

"ஏண்டா, இன்னும் என்ன தாமதம்?" என்று தன்மபாலர் கர்ஜித்தார்.

காவலன் உடல் நடுக்கத்துடன் வார்த்தைகள் தடுமாற, "பல்லக்கிலே அவங்களைக் காணோமுங்க?" என்றான்.

"எவங்களை...?"

"நீங்க அழைத்து வரச் சொன்னீங்களே அவங்களை..."

"சந்திரகுமாரி வரவில்லையா? பிறகு, அழைத்து வந்ததாகக் கூறினாயே..."

"ஆமாமுங்க... சிவிகையில் இருந்தாங்க... இங்கே வந்து பார்த்தா, யாரோ ஒரு ஆளு கைகால் கட்டப்பட்டுக் கிடக் கிறாருங்க..."

"கைகால் கட்டப்பட்டா?" என்று கேட்டவாறு தன்மபாலர் விரைந்து கீழே இறங்கிச் சென்றார்.

"முட்டாள்களா! இன்னும் கட்டுகளை அவிழ்க்காமல் கம்பம் போல் நிற்கிறீர்களே" என்று தளபதி கர்ஜித்த பிறகு, அவசரம் அவசரமாகக் கங்கபீமன் கட்டுகளை அவிழ்த்து வாய்த் துணியையும் எடுத்தனர் காவல் வீரர்கள்.

கங்கபீமன் தள்ளாடி எழுந்தான். பெரிய தன்மபாலர் எதிரே நிற்பதைக் கண்டு திகைத்து, நடுங்கியவாறு நின்றான். அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டுக் கடகடவென நகைத்தார் பெரிய தன்மபாலர்.

"ஓய்! உம்மையா, ஆடவருமாறு நான் அழைத்தேன்?" என்ற அவர் சொற்களில் நகைச்சுவையிருந்தாலும், கோபக்கனலும் கலந்திருந்தது.

"தளபதியாரே, மன்னிக்க வேண்டும். உங்கள் கட்டளைக் கிணங்கவே நானும் சந்திரகுமாரியும் புறப்பட்டோம்..."

"வேறு சிவிகையில் எப்படி ஏறினீர்கள்? என் தம்பியைச் சந்தித்தீர்களா?"

"எனக்கு இந்த ஊரில் யாரையும் தெரியாதுங்க... நானும் அவளும் புறப்பட்டோம்... வீதி முனையில் சிவிகை இருந்தது. காவல் வீரன் ஒருவன் வந்து பல்லக்கில் ஏறுமாறு கேட்டுக் கொண்டான். சிறிது தூரம் சென்றதும் குதிரைமீது இதோ இவர்கள் வந்து தடுத்தனர். வாளும் வாளும் மோதின. புழுதிப் படலம் எழுந்தது. அந்தச் சமயத்தே என் வாயில் யாரோ துணி அடைப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவ்வளவுதான் தெரியுமுங்க..." என்று கூறிவிட்டு, "சந்திரகுமாரி என்ன ஆனாள் என்று தெரியவில்லையே... அவளைக் கண்டுபிடித்துக் கொடுங்கள்" என்று ஓலமிட ஆரம்பித்தான்.

தன்மபாலருக்கு அப்போது எழுந்த ஆத்திரத்திற்கு அளவில்லை. ஏமாற்றமும், அவமானமும் ஒன்றுசேர, அவர் கண்கள் தீயைக் கக்கின. நகரத்துப் பிரபல வியாபாரிகளை வரவழைத்து, அவர்கள் எதிரே ஏமாற்றமடைந்தது அவர் சீற்றத்தை இன்னும் தூண்டிவிட்டது.

"மடையர்களே! உங்களிடம் ஒப்படைத்த காரியத்தை ஒரு நொடியில் கெடுத்து விட்டீர்களே... போய்த் தேடுங்க. எங்கிருந்தாலும் கொண்டு வாருங்கள். அந்த வாலிபனைக் கைப்பற்றி



வருமாறு கூறினேன். அதிலும் ஏமாற்றம். ஹூம்... என் முன் நிற்காதீர்கள்..." என்று கர்ஜித்தார்.

"எந்த வாலிபன் ஐயா...!" என்று கங்கபீமன் மெல்லக் கேட்டான்.

தன்மபாலர் அவன் பக்கம் திரும்பி, அவனையே உற்றுச் சற்று நேரம் பார்த்துவிட்டு, "எந்த வாலிபர் என்றால் உமக்குத் தெரிந்து கொள்ள முடியும்?" என்றார்.

கங்கபீமன், தன் காவிப்பல்லைக் காட்டி, "வசீகரமாகவும், கம்பீரமான தோற்றத்துடனும் கூடிய அழகான வாலிபன்தானே... ஏரிக்கரையில் இளவரசியையும் காப்பாற்றியவன்... அவன்தானே... அப்போதே அவன்மீது எனக்குச் சந்தேகம்..." என்றான்.

தன்மபாலர் வியப்புடன், "உனக்கெப்படித் தெரியும். ஏரிக்கரையில் இளவரசியைக் காப்பாற்றியவன் அவன் என்று..." என்று கேட்டார். கங்கபீமன் ஒரு கணம் உதட்டைக் கடித்துக் கொண்டான். 'ஏரிக்கரைக்கு ஏன் போனாய்?' என்ற கேள்வி எழுந்தால் என்ன விடையளிப்பது? கங்கபீமன் அறிவாற்றல் அப்போது மிகவும் உபயோகப்பட்டது.

"உறையூரினின்று நானும் சந்திரகுமாரியும் வந்து ஏரிக் கரையில் படகுக்காகக் காத்திருந்தோம். அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது?" என்று கூறியதைத் தன்மபாலர் நம்பினார்.

கங்கபீமன், தன் ஒப்பாரியைத் தொடங்கினான். "ஐயா என் சகோதரியின் மகள் சந்திரகுமாரி, தாய் தந்தையற்றவள். என் சகோதரி சாகும்போது குறைவு ஏதும் அவளுக்கு வராமல் காப்பாற்றச் சொன்னாள். அவளுக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்தேன். இப்போது அவளைக் காணோமே... தளபதி, அவளைக் காணோமே, உங்கள் வீட்டிற்கு அழைத்து வரத்தானே புறப்பட்டேன்..." என்று கங்கபீமன் ஓலமிடவும், தன்மபாலர் அவனைத் தேற்றி, "நீ இங்கேயே இரு. நானே நேரிடையாகச் சென்று அவளைக் கண்டு பிடித்து விடுவேன். அவள் நடனம் காண என்ன ஆவலுடன் நான் இருந்தேன் தெரியுமா?" என்று மெல்லிய குரலில் அவனிடம் கூறிவிட்டு, மேலே தங்கியிருந்த விருந்தினர்களிடமும் கூறாமல், உடனே தன்மபாலர் புறப்பட்டார். குதிரை வீரர்கள் ஒரு புறம் சென்றனர். கங்கபீமன் அந்த மாளிகையில் சர்வ சுதந்திரம் உள்ளவன் போல் ஒவ்வொரு

இடமாகச் சுற்றிப் பார்க்கலானான். கடைசியாக முக்கியமான அறை ஒன்றின் கதவையும் திறந்தான்.

தெரு முனையில் சிவிகையில் காவலருக்கும், குதிரை வீரர்களுக்கும் சண்டை நடைபெறுகையில் எழுந்த புழுதிப் படலத்தின் போது, சந்துமுனையிலிருந்து இரு உருவங்கள் விரைந்து வந்தன. திகைத்தவாறு பல்லக்கின் திரையை விலக்கிப் பார்த்த சந்திரகுமாரியின் கரத்தைப் பிடித்து ஓர் உருவம் மெல்ல இழுத்தது. சந்திரகுமாரி கிரீச்சிட்ட ஒலி, அப்போது யார் காதிலும் விழவில்லை. ஆனால் சந்திரகுமாரி தன்னைப் பற்றியவர் யார் என்பதை அறிந்தவுடன் திகைப்பும், வியப்பும் மேலிட நின்றுவிடவே, அவளை அழைத்துக் கொண்டு இருளில் மறைந்தது அவ்வுருவம். மற்றொரு உருவம் கங்கபீமன் வாயில் துணியை அடைத்துக் காலையும் கையையும் நொடியில் கட்டியது.

சந்திரகுமாரியின் வலது கரத்தைப் பற்றிக் கொண்டு வேகமாக அழைத்துக் கொண்டு ஓடியது அந்த உருவம். "ஜல் ஜல்" என்று பாத சதங்கை முழங்க சந்திரகுமாரியும் ஓடினாள். சந்துகளைக் கடந்து, மற்றொரு பெரும் வீதி கடந்து இருவரும் ஓடினர். கடைசியாக ஒரு வீட்டின் முன் சென்று நின்று சுற்று முற்றும் பார்த்து விட்டுப் பெருமூச்சு விட்டது. நிலவொளியிலே அந்த உருவத்தின் முகம் தெரியவில்லை. ஆனால் சந்திரகுமாரி ஒரு நம்பிக்கையுடன் தான் தைரியமாக நின்றாள். ஓடிவந்ததால் தலைக் கேசம் கலைந்திருந்தது. வியர்வைத் துளிகளால் முகத்தில் சோர்வு நிறைந்திருந்தது.

அந்த உருவம் வாயிற்கதவைப் படபடவென்று தட்டியது. "யாரது?" என்ற குரல் வீட்டினுள்ளேயிருந்து கேட்டது. "நான் தான்... உங்கள் இளைய மகன்" என்று அந்த உருவம் குரல் கொடுத்தது. சற்று நேரம் மௌனம் நிலவியது. பிறகு கதவுத் தாழ்ப்பாள் திறக்கும் ஓசை. கதவைத் திறந்தவள் ஓர் மூதாட்டி. அவள் கையில் சிறு விளக்கு இருந்தது. விளக்கு ஒளியில் அவள் வெளியே கூர்ந்து நோக்கி விட்டு முகத்தில் அதிசயம் படர, "ஆகா; நீங்களா, வாருங்கள், வாருங்கள்..." என்று பொக்கை வாய் தெரிய நகை முகம் காட்டி. "நான் யாரோ என்று நினைத்துவிட்டேன். இளவரசே... தங்களைப் பார்த்துப் பல வருடங்கள் ஆகின்றன அல்லவா...!" என்று கூறிக் கதவை நன்றாகத் திறந்தாள். சந்திரகுமாரியை அழைத்துக் கொண்டு நுழைந்த அந்த உருவம், "அம்மா, என்னை 'நீங்கள், தாங்கள்' என்று அழைக்கிறீர்களே, நான் எப்போதும் தங்கள் மகன்தானே" என்று கூறியது.



எங்கோ, யாரோ ஓடிவரும் ஓசையும், குதிரையின் குளம்படிச் சப்தமும் கேட்கவே, "அம்மா, அம்மா கதவைச் சாத்துங்கள். உள்ளே வந்து பேசிக்கொள்வோம்" என்றது அவ்வுருவம்.

சந்திரகுமாரி கதவருகே நிலைபெற்று நின்றுவிட்டாள். அவளுக்குப் பேச நா எழவில்லை. அவள் எண்ணியது சரிதான். தன் கரத்தைப் பிடித்து வலித்து இழுத்து ஓடி வந்தவர் இன்னாராகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தது சரியாகி விட்டது.

'மீண்டும் சந்திப்போமா?' என்று அவள் யாரை நினைத்து ஏங்குகிறாளோ, அவரே அவள் எதிரே-அருகே நிற்கிறார்.

இராசேந்திரனை "இளவரசே" என்று அந்த மூதாட்டி அழைத்த காரணம் அவளுக்கு விளங்கவில்லை. ஸ்தம்பித்து நின்ற சந்திரகுமாரியை நோக்கி, "வா, கூடத்திற்குச் சென்று பேசுவோம்" என்று அழைத்தான் இராசேந்திரன்.

## 23. மதுராந்தகன் மனக்கோட்டை

இளைய தன்மபாலரும் கோபம் மிகுதியால் இங்கும் அங்கும் குதித்தார். பெரியவரின் ஆட்கள் வழிமறித்துச் சந்திரகுமாரியைச் சிவிகையுடன் கவர்ந்து சென்றுவிட்ட செய்தியைக் காவல் வீரர்கள் வந்து கூறவும், அவர் கோபம் உச்ச நிலையை அடைந்தது.

தன் சகோதரன் மனம் ஏன் இப்படி எல்லாம் மாறுகிறது என்று ஒரு கணம் யோசித்தார். பெரிய தன்மபாலரின் மனைவி இறந்த பிறகு, அவர் வேறு மணம் புரிந்து கொள்ளவில்லை. அவருடைய பெரிய மாளிகை, 'ஹோ' என்று ஆள் நடமாட்டமின்றிக் கிடந்தது. சமையல் செய்யும் தவசுப் பிள்ளையும், அவனுக்கு உடன் இருந்து உதவும் வேலையாட்களையும் தவிர அந்த மாளிகையில் வேறு யாருமில்லை. சிறியவருக்கும்-பெரியவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்படுவதற்கு முன்வரை பெரியவர், சிறியவரைக் குடும்பத்துடன் தன் மாளிகைக்கு வந்துவிடுமாறு அழைத்துக் கொண்டிருந்தார். இனி ஏன் கூப்பிடப் போகிறார். அரசியல்

விரோதியாகத் தன்னைக் கருதிவிட்டார். இந்தப் பல்லக்குச் சம்பவத்திற்குப் பிறகு விரோதம் எப்படி முற்றிவிடப் போகிறதோ-

நடந்த சம்பவங்களைக் கேட்டறிந்த சிறியவர் உள்ளம் தணலாய்க் கொதித்தது. அழகிய உருவமும், உருவத்திற்கேற்ற தோற்றமும், தோற்றத்தின் சிறப்பை அதிகரிக்கும் பூத்த புது எழிலும் அவரால் மறக்க முடியவில்லை. பெண்ணை வடிவழகோடு கற்பனை செய்து மனத்தில் நிறுத்திக் கொள்ளாதிருக்க, அப்படி யென்ன அவருக்கு வயதாகிவிட்டதா?

சிறியவர் மெல்ல மீசையை முறுக்கி விட்டுக் கொண்டார். சந்திரகுமாரி பெரியவர் வீட்டு மேல் மாடத்தில் நிலவொளியில் ஆடிக் கொண்டிருப்பாள். ஆடி ஆடிக் களைத்து விடியும் நேரத்தில் துயில் கண்களைச் சுழற்ற பஞ்சணையில் சாய்ந்து விடுவாள். அப்போது பழிக்குப் பழியாக அவளை நமது ஆட்களைக் கொண்டு தூக்கி வந்துவிட்டால்... அதுதான் சரியான யோசனை! தனது நம்பிக்கைக்கு உகந்த வீரர்களை அழைத்தார். அவர்களிடத்தில் ஏதோ கூறினார். அவர்கள் தலையசைத்து விரைந்தனர்.

நான்கு நாழிகைப் போது கழிந்திருக்கும். இளைய தன்மபாலர் வெவ்வேறு வித சிந்தனைகளுடன் குறுக்கும் நெடுக்கும் நடப்பதும், ஏதோ ஓர் ஓலையை எடுத்துப் படிப்பதும், பிறகு மௌனமாக சிந்தனையிலாழ்ந்திருப்பதுமாக இருந்தபோது யாரோ வரும் காலடி யோசை கேட்டது. தன்மபாலர் கைவசமிருந்த ஓலையை மறைத்து விட்டு, யார் வருகிறார்கள் என்று கூடத்துக்கு வெளியே வந்தார்.

காஞ்சியிலிருந்து சோழ ஆட்சியின் பிரதிநிதியாக ஆண்டு வரும் இளவரசன் மதுராந்தகன் வந்து கொண்டிருந்தான். அவன் இளவரசன் உடையில் வரவில்லை. தலையில் பெரிய முண்டாசு, நீண்ட அங்கி, காலிலே அராபியர்களைப் போன்ற மிதியடி. அந்த நேரத்தில் மதுராந்தகன் தன்னைத் தேடிவருவது இளைய சேனாதி பதியின் சிந்தனையைக் கவர்ந்தது. அவன் வரும் காரணம் என்னவா யிருக்கும் என்று ஒருகணம் சிந்தனை வலையை வீசிவிட்டு, முகத்தில் புன்சிரிப்பை வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்டு, "வரவேண்டும், வரவேண்டும் இளவரசே! இந்த நேரத்தில் தங்கள் வருகைக்கு ஏதாவது முக்கியத்துவம் இருக்கவேண்டும். என்னால் ஏதாவது ஆக வேண்டியது இருந்தால் சொல்லுங்கள்; செய்கிறேன்..." என்று கூறி வரவேற்றார்.



மதுராந்தகன் உடல் வியர்த்திருந்தது. நீண்ட தூரம் இடை விடாது பயணம் செய்த களைப்பு நிறைந்திருந்தது. உடலில் புழுதி படிந்திருந்தது. மதுராந்தகன், அருகே இருந்த மஞ்சத்தில் அமர்ந்து கால்களை மெல்லத் தனது இடது கரத்தால் பிடித்து விட்டுக் கொண்டான்.

"இளவரசருக்கு மிகவும் களைப்பு போலிருக்கிறது. நேரே காஞ்சியிலிருந்துதான் வருகிறீர்களோ? இன்னும் மாளிகைக்குச் செல்லவில்லையா?" என்று கேட்டார் இளையவர்.

மதுராந்தகன் மெல்லிய குரலில், "நான் வந்தது மிகவும் ரகசியம், யாருக்கும் தெரியாது. நேரே காஞ்சியிலிருந்து வருகிறேன்" என்றான்.

இளைய தன்மபாலர் நிமிர்ந்து உட்கார்ந்து பரபரப்புடன், "ஏன், வட எல்லையில் ஏதாவது ஆபத்துச் செய்தி கிடைத்ததா?" என்று கேட்டார்.

மதுராந்தகன் மெல்ல நகைத்து, "ஆபத்து வட எல்லையி லில்லை, எல்லாம் தலைநகரத்தில்தான்" என்று கூறவும், இளைய தன்மபாலர் 'சூ' கொட்டி, "தலைநகரத்தில் ஆபத்து என்றால் நீங்கள் ஓடிவர வேண்டுமா?" என்று அலுப்புடன் கேட்டார்.

மதுராந்தகன் கடகடவென நகைத்து, "இளைய தளபதியாரே! எவ்வளவு நாளைக்குத் தாங்கள் இப்படியே சிறிய பதவியில் இருப்பது? தங்களுடைய எதிர்காலம் மிகவும் பிரகாசமாக இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. நீரோ ஒன்றும் புரியாதவர்போல், ஏதும் காதில் விழாதவர்போல் இருக்கிறீர்..." என்று கண்களைக் கூர்மை யாக வைத்துக் கொண்டு, உதட்டில் விஷமச் சிரிப்புடன் பேசினான்.

இளைய தன்மபாலர் புரிந்து கொண்டார். மதுராந்தகன் ஏதோ பெரிய திட்டத்துடன் வந்திருப்பது அவருக்குப் புரிந்தது. நோய் வாய்ப்பட்டு இன்றோ நாளையோ என்று கிடக்கும் அரசர் அதிராசேந்திர சோழரின் அடுத்த சகோதரன் மதுராந்தகன். சோழ அரியணை அடுத்துத் தனக்குத்தான் சொந்தமாக வேண்டும் என்று உரிமை கொண்டாடி, அதை நிலைநாட்டவே அவன் வந்திருக்கிறான் என்பது அவருக்குப் புரிந்துவிட்டது. கங்காபுரியில் உள்ள குழப்பங் கள் போதாதென்று இவன் வேறு வந்துவிட்டானா என்ற எண்ணத்து டனும், ஆனால் அதை வெளிக்குப் புலப்படுத்தாமல், மதுராந்தகன்

மனத்திலுள்ளவை அனைத்தையும் அறிய விரும்பி, "இளவரசே! உண்மையில் எனக்குத் தாங்கள் கூறுவது புரியவில்லை..." என்று கூறினார்.

"புரியவில்லையா! அதுதானே பார்த்தேன்! இல்லாவிடில் நீங்களும் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றத் திட்டம் தீட்டியிருக்க மாட்டீர்களா?" என்றான் இளவரசன் மதுராந்தகன்.

"இப்போது எதற்காகப் புரட்சி? நமது மன்னன் மீது மக்களுக்கு ஏதாவது வருத்தமா? அவர் கொடுங்கோல் ஆட்சி நடத்துகிறாரா?"

"தளபதி, தளபதி! ஏனய்யா உமது சகோதரர் மன்னரைச் சிறை செய்து வைத்திருப்பதாக எங்கும் வதந்தி நிலவுகிறது. உம் சகோதரர் பெரிய தன்மபாலர் ஆட்சியைக் கைப்பற்றும்போது, நான் மட்டும் வாயை மூடிக் கொண்டு இருக்க முடியுமா?"

"என் சகோதரர் ஆட்சியைக் கைப்பற்றப் போகிறாரா? ஆச்சர்யமாக இருக்கிறதே..."

"உமக்குத் தெரியாதா? பிரம்மராயர் எனக்கு அவ்வப்போது தகவல் தெரிவித்து வருகிறார்... இப்போதுகூட அவர் எனக்கு ஒரு செய்தி சொன்னார்..."

"பிரம்மராயரை இப்போது பார்த்தீர்களா?" சிறிய தன்மபாலர் இவ்வாறு கேட்டவுடன், இளவரசன் ஏதோ சொல்லத் தகாததைச் சொல்லிவிட்டாற்போல் உதட்டைக் கடித்துக் கொண்டு, "ஆமாம், ஆமாம் அவரைச் சந்தித்தேன்" என்று கூறினான்.

ஏதோ நினைத்தவர்போல் இளைய தன்மபாலர் சட்டென்று எழுந்து, "இளவரசே! உங்களை உட்காரவைத்துப் பேசிக்கொண்டேயிருக்கிறேன். பசியுடன் இருப்பீர்கள். வாருங்கள், உண்டுவிட்டுப் பேசலாம்..." என்று கூறவும், இளவரசன் அவரைத் தடுத்து, "வேண்டாம், வேண்டாம். நான் பிரம்மராயர் வீட்டிலேயே பழமும் பாலும் உண்டு விட்டேன். தங்களுடன் ரகசியமாகச் சில விஷயங்கள் பேசிவிட்டு உடனே காஞ்சிக்குப் புறப்பட வேண்டியதுதான்" என்றான்.

இளைய தன்மபாலர் மெல்ல நகைத்து, "எனக்குத் தொந்தரவு கூடாதென்று பிரம்மராயர் வீட்டிலேயே எல்லாவற்றையும் முடித்து விட்டீர்கள். ஹும்... பிரம்மராயருக்கும் எல்லா செய்திகளும் தெரியுமா?" என்று கேட்டார்.



"பிரம்மராயர் ஆதரவுடன்தான் நான் இப்போது இந்த மாபெரும் காரியத்தில் இறங்கியிருக்கிறேன்... சோழ மகுடம் நியாயமாக எனக்கன்றோ உரித்தாக வேண்டும்... தங்கள் உதவி எனக்கு என்றும் தேவை. அதற்கு நான் பிரதி உபகாரமாக வேண்டியது செய்வேன்..." என்று உற்சாகத்துடன் கூறினான். பிறகு தொடர்ந்து, "நேற்று மன்னர் கண் விழித்து திருமந்திர ஓலை நாயகத்திடம் மிக முக்கியமான ஆஞ்ஞையை எழுதுமாறு பணித்தாராம். அடுத்து யாருக்கு அரச உரிமை எனும் மன்னர் விருப்பம் அதில் இருக்கிறது..." என்றான்.

இளைய தன்மபாலர், வியப்புடன் இளவரசரைப் பார்த்தார். "அதில் என்ன எழுதியிருக்கிறது?" என்று கேட்டார்.

"யாருக்குத் தெரியும்? ஓலைநாயகம் அதை மிகவும் இரகசியமாக பொக்கிஷ அறைக்கு எடுத்துச் சென்று பேழையுள் வைத்துவிட்டார்" என்று சொன்னான் இளவரசன்.

"திருமந்திர ஓலைநாயகத்தைக் கேட்டால்..."

"அவர் தலைபோனாலும் கூறமாட்டார்..."

"பிறகு..."

"நான் அதை அபகரிப்பதற்கு, உங்கள் உதவி தேவை"

"உதவினால்...?"

"அந்த ஓலையில் மன்னர் என்ன எழுதியிருக்கிறார் என அறிந்து கொள்வேன். ஒருவேளை எனக்கே ராஜ்ய உரிமை என்றால் நான் கலகம் செய்ய வேண்டாம். இல்லையென்றால் அந்த ஓலையைக் கொளுத்திவிட்டு, நாட்டிலே என் உரிமைக்காகப் போராடுவேன். அரியணையில் அமர்ந்தவுடன் நீங்கள் பெரும் தளபதி. உங்கள் சகோதரரைச் சிறையில் அடைத்து விடுவேன்... இளைய தளபதியாரே, என் விருப்பத்தை நிறைவேற்றுவீரா?"

மதுராந்தகன் இப்படிக் கேட்டதற்கு மறுமொழி கூற இளைய தன்மபாலர் வாயெடுத்தபோது, ஓர் காவலன் விரைந்து ஓடிவந்து, பெரிய தளபதி வந்து கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்தான்.

"யார், பெரிய தன்மபாலரா?" என்று மதுராந்தகன் வினவி விரிந்து மறைவான இடம் நோக்கி ஓடினான்.

இந்த நேரத்தில் பெரிய தன்மபாலர் எதற்கு வருகிறார் என்ற சிந்தனையிலீடுபடும் முன்பே, பெரிய தன்மபாலர் பூமி அதிர நடந்து வந்து கண்களில் தணல் பறக்க, "டேய்! எங்கேடா அவனை ஒளித்து வைத்திருக்கிறாய்?" என்று கர்ஜித்தார்.

# 24. அரசியின் கண்ணீர்

மதுராந்தகிக்கு உணவு செல்லவில்லை. அவள் சரியாக உறங்கிப் பல இரவுகள் ஆகிவிட்டன. அவள் மனத்தில் சொல்ல முடியா வேதனைகள். அந்த வேதனைகள் இன்பப் பூரிப்பைச் சிலபோதிலும், துர்நினைவைச் சிலபோதிலுமாக அளித்தன. அதே நினைவாக அவள் உறங்காமல் கழித்தாள். அவள் முக வேதனையை தோழி பவழவல்லி உணர்ந்து விட்டாள். கோயிலுக்கருகே உள்ள நந்தவனத்தில் இராசேந்திரனை சந்தித்ததால் ஏற்பட்ட மாறுதல் என்பது அவளுக்குப் புரிந்து விட்டது. இளவரசி, முன்போல் அதிக மாகப் பேசுவதில்லை. "தேவி" என்றழைத்தவாறு பால் கிண்ணத் துடன் அவளருகே சென்றாள் தோழி. மதுராந்தகி ஏதும் மறுமொழி கூறவில்லை.

"தேவி, நான்தான் வந்திருக்கிறேன். உங்கள் அபிமான தோழி பவழவல்லி..." என்று கூறி, மதுராந்தகியின் அருகே சென்று நின்றாள். மதுராந்தகி ஏதும் பேசவில்லை.

"என்னை அதற்குள் மறந்து விட்டீர்களா? நான்தான் உங்கள் அருமைத் தோழி... அன்று மாலை மங்கிய வேளையில் புதர் மறைவில் மறைந்து நின்றோமே, அதுகூட மறந்து விட்டீர்களா?"- பவழவல்லியின் இந்தப் பேச்சு, மதுராந்தகியின் உள்ளத்தில் புதுவித உணர்ச்சியை ஏற்படுத்தியது.

'ஆம்; புதர் மறைவில் நின்றோம். உடன் இளவரசர் நின்றார். அவர் இளவரசர்தான். மாளிகையில் வாழாவிட்டாலும் அவருக் குள்ள உரிமை விடுமா? எப்படி மாறிவிட்டார். அழகிய தோற்றம் கொண்டு என் உள்ளத்தையே கலங்க அடித்துவிட்டாரே. அவரது விழிகளில் என்னையே கவர்ந்து விடும் காந்த சக்தியை எங்கிருந்து தேடிப் பிடித்தார். திடீரென்று அவர் வந்தார். அதனுடன் என் மனத்திலும் பெரும் மாறுதலையும் கொண்டு வந்து விட்டார். மறுபடியும் எப்போது அவரைச் சந்திக்க போகிறேன்-

மதுராந்தகி இப்படியாக எண்ணிக்கொண்டே சென்றாள். எண்ணச் சுழலில் அவள் ஆழ்ந்திருந்ததால், தோழி கூறுவது அவள் செவிகளில் விழவில்லை. இராசேந்திரன் மீண்டும் அவள்



எதிரே வந்து நிற்பது போலவும், அவன் அவள் கரங்களைத் தொட்டுப் பேசுவது போலவும் உணர்ந்தாள். தன் தோளை அவன் தொட்டதால் ஏற்பட்ட சிலிர்ப்பை எண்ணி, அவள் ஒருமுறை தோளைத் தடவிக் கொண்டாள். அப்படி யாரும் அவளைத் தொட வில்லை என்று அவளுக்குத் தெரியும். தன் கரங்களையே ஒருமுறை தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

தோழிக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. அவள் மதுராந்தகியின் தோளை மெல்லத் தொட்டு, "என்ன இருந்தாலும் என் ஸ்பரிசம் அவருடையதற்கு இணையாகுமா?" என்று கேட்டாள். மதுராந்தகி யின் கரத்தை மெல்லப் பிடித்து, "தேவி, அவர் அன்றோ தன் கரத்தை மெல்லத் தடவிக் கொடுக்க வேண்டும். நீங்கள் அன்றோ அவரது கரத்தைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினீர்கள். ஏன் தேவி! யுத்த பூமியில் வாளெடுத்துப் போரிட்ட அவர் கரங்கள் வஜ்ரம் போல் இருந்ததா? அல்லது அவர் கரம் மென்மையாக இருந்ததா?" என்று கேட்டாள்.

மதுராந்தகி அதற்கும் மறுமொழி கூறவில்லை. தான் துணிந்து அவர் கரத்தைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியதை, மறுபடி யும் நினைத்துக் கொண்டாள். அப்போது அவளுக்கு எப்படித் துணிவு வந்தது? அவளும் அதைத்தான் எண்ணி வியப்படைகி றாள். ஒருவேளை தவறாக அவர் தன்னை எண்ணியிருப்பாரோ?

"தேவி, நீங்கள் பேசமாட்டீர்கள், நான் போகிறேன். எனக்குத் தலைமேல் வேலையிருக்கிறது. பெரிய பாட்டியாரிடம் சென்று, தாங்கள் பித்துப் பிடித்ததுபோல் இருப்பதைத் தெரிவிக்கிறேன். தண்ணீர் கூடப் பருகாததைத் தெரிவிக்கிறேன். தங்களுக்கு உடல் நோய் என்று கூறுகிறேன்" என்று மெல்ல நகர முற்படவும், மதுராந்தகி சட்டென அவள் கரத்தைப் பிடித்திழுத்து, "அடி, எனக்கு என்ன நோய் என்று கூறுவாய்? ஏதாவது அசடுபோல் உளறப் போகிறாய்?" என்றாள்.

பவழவல்லி கையை மெல்லத் தடவிக் கொண்டு, "தேவி, இப்படித்தான் அவர் கரத்தையும் பிடித்திழுத்தீர்களா? அப்பப்பா? வலிக்கிறதே" என்றாள்.

"பவழவல்லி, எனக்குக் கோபம் கோபமாக வரும். கேலி செய்வதற்கும் ஓர் எல்லை வேண்டாமா? பாட்டியிடம் போய்

ஏதாவது தவறாகக் கூறப் போகிறாய்..." என்று அவள் முகவாய்க் கட்டையை மெல்லப் பிடித்துத் தட்டினாள்.

"தங்களுக்கு வந்திருப்பது என்ன நோய் என்று நான் சொல்வேன் தெரியுமா?"

"அதைத்தான் சொல்லேன்."

"காதல் நோய்..."

"அப்படியென்றால்..."

இளவரசி இப்படிக் கேட்டவுடன், தோழி விடை கூற முடியாமல் திகைத்து, "ஓகோ! தங்களுக்குத் தெரியாதா? தெரியாமல் தான் நேற்றிரவு முழுவதும் பஞ்சணையில் புரண்டீர்களா? ஏதேதோ சொல்லிப் பிதற்றினீர்களா? இளவரசரைத் தேடி வசந்த மண்டபத்துக்குச் சென்றீர்களா? இவற்றை எல்லாம் சொல்கிறேன் பாட்டியிடம்" என்றாள்.

தோழி சொல்வது மதுராந்தகிக்குப் பிடித்திருந்தது. அவள் இன்னும் அதைப்போல் பேசக்கூடாதா என ஏங்கினாள். ஆனால் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், "அப்படியெல்லாம் செய் தால் அதற்குக் காதல் நோய் என்று பெயரா? எனக்குத் தெரியாதே. உனக்கு மிகவும் அநுபவம் போலிருக்கிறது" என்று கூறிவிட்டு, "பவழவல்லி, பாட்டியாருக்கு இளவரசர் என்றால்..." என்றாள்.

"........ என்றால் மிக மகிழ்ச்சியடைவார்கள்" என்று பேச்சை வேறு விதமாகத் திருப்ப முயன்றாள்.

"பாட்டியாருக்கும் உயிர்! இளவரசருக்கும் பாட்டியார் மீதும், சிற்றன்னை மீதும், மாமி மீதும் மிகமிக உயிர். ஆனால் ஏன் இன்னும் மாளிகைக்கு வராமல் எங்கெங்கோ அலைந்து கொண்டிருக் கிறார்?" என்று இளவரசியை நோக்கிப் பவழவல்லி கேட்டாள்.

இளவரசி பெருமூச்சுவிட்டு, "அது அவருடைய துரதிர்ஷ்டம் என்று நினைக்கிறேன். அவரை விரோதியாக எண்ணிச் சிறைப் பிடிக்க தளபதியே முயன்று வருகிறாராம்..." என்றாள். பவழவல்லி சற்று நேரம் மௌனமாயிருந்துவிட்டு, "தேவி, இதைப்பற்றி ஏன் நாம் அரசியாரிடம் கூறித் தக்கவழி தேடக்கூடாது" என்று கூறினாள்.

தோழியின் சொல் மதுராந்தகிக்கு ஏற்றதாயிருந்தது. தன் காதல் கைகூட வேண்டுமானால், முதலில் இராசேந்திரனுக்கு



எவ்வித ஆபத்தும் ஏற்படாமல் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

"பவழவல்லி, அரசியார் இப்போது எந்த மாளிகையில் இருக்கிறார்கள்?" என்று கேட்டாள் மதுராந்தகி.

"நான் நொடியில் சென்று அறிந்து வருகிறேன்" என்று கூறிச் சென்றாள் பவழவல்லி. அவள் திரும்பி வந்தபோது, "அரசி எங்கிருக்கிறார் என்பதை அறிந்து வந்தாயா?" என்று கேட்டாள் மதுராந்தகி.

"அரசியார் அந்தப்புரத்தில் பெரிய தேவியாருடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர் முகம் சோர்வுற்றிருக்கிறது....." என்றாள்.

அதிராசேந்திர சோழ தேவரின் பட்டத்து அரசி, கண்ணீர் பெருக, அந்தப்புரத்தில் பெரிய பாட்டியார் முக்கோக்கிழானடிகள் அருகே அமர்ந்து தேம்பியவாறிருந்தாள். அவள் உள்ளத்திலிருப் பதைக் கண்ணீரும் விம்மலுமே புலப்படுத்தின. முதிர்ந்த பருவத்துடன் தள்ளாமையும் அதிகமாகிய முக்கோக்கிழானடிகள், அவளை மெல்லத் தன் அருகே அழைத்து, நாட்டு நடப்பையும், மாளிகை நிகழ்ச்சிகளையும் விசாரித்தாள். தன் பெயரன் அதிராசேந்திரனின் உடல்நிலை குறித்து வினவினாள்.

அரசியிடமிருந்து அதற்கு விம்மல் ஒலிதான் விடையாக வந்தது.

"பெண்ணே! ஏன் அழுகிறாய்? அரசி அழலாமா?" என்றாள் மூதாட்டியார்.

அரசியாயிருந்தால் மட்டும் என்ன? அவளும் பெண்தானே! தன் கணவரின் உடல்நிலை அவள் நெஞ்சை வாட்டியது. அதையும்விடத் தான் அவரருகே இருக்க முடியாத நிலை வேறு இருப்பது, அவள் வேதனையை அதிகரிக்கச் செய்தது.

மூதாட்டியார் மெல்ல அவள் விழிநீரைத் துடைத்து, "பெண்ணே, உனக்கேற்பட்ட வேதனை எதுவாயினும் என்னிடம் சொல். அதிராசேந்திரனுக்கு இப்போது உடல்நிலை எப்படியிருக் கிறது? நானே அவனைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று நினைத்தேன். இன்று என்னை அழைத்துப் போ. அவனுடன் நான் பேச வேண்டியவை பல உள்ளன" என்றாள்.

அரசியார் மீண்டும் விம்மினாள். மூதாட்டியார் செவியில் மட்டும் விழும் அளவுக்கு, "அம்மா, அவரை நான்கூடப் பார்க்க முடியாமல் தடுத்து விட்டார்களம்மா" என்று கூறினாள்.

சோழ நாட்டின் பேரரசராகத் திகழ்ந்த கங்கை கொண்ட சோழர் இராசேந்திர சோழ உடையாரின் கரம் பிடித்த முக்கோக் கிழானடிகள், அந்த முதிய பருவத்திலும், தட்டுத் தடுமாறி எழுந்து, "என்ன சொன்னாய்? உன்னையும் பார்க்க விடாமல் தடுத்து விட்டார்களா? நான் வருகிறேன்... வா போவோம்" என்று கர்ஜித்தாள்.

## 25. சந்திரகுமாரியின் குழப்பம்

சந்திரகுமாரி, அந்தச் சிறு வீட்டுக் கூடத்தின் தூணுக்கு அருகே நின்று கொண்டிருந்தாள். இராசேந்திரன் சிறு ஓலைப் பாயை எடுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டான். மூதாட்டி திருவெண்காட்டு நங்கை, ஒரு பாத்திரத்தில் மோரைக் கலக்கி எடுத்து வந்தாள். கூடத்தில் ஓர் புறத்தில் திருவெண்காட்டு நங்கையின் பெயரன் ஆடவல்லான் உறங்கிக் கொண்டிருந்தான். இரவின் முந்நேரத்திலேயே அவன் படுத்துவிடுவான். விடிவெள்ளி முளைக்கும் முன் எழுந்து நீராடி சோழீசர் கோயிலுக்குச் சென்று விடுவான். அவனது இனிய குரல் கேட்பதற்கு என்றே, அந்த இளங்காலை வேளையிலும் பலர் உதய பூசையைக் காண வருவர்.

ஆடவல்லானின் தந்தை சிவலோகநாதன், சோழ நாட்டில் புகழ் பெற்றவர். வீரராசேந்திர சோழன் ஆண்டபோது அவருக்குச் சிவலோகநாதன் மீது பேரன்பு, மதிப்பு, மரியாதை அனைத்தும் உண்டு. சிவலோகநாதன் சிறந்த சிவபக்தர். பக்தியும், பண்பும், அவர் தாய் திருவெண்காட்டு நங்கையிடமிருந்து ஏற்பட்டவை. சிவலோகநாதனுக்கு ஈசன் மீதுள்ள பற்றுக்கு இணையாக வீரராசேந்திரன் மீதும் உண்டு. அவர் பிறந்த ஆயில்ய நாளில் தினந்தோறும் திருவெண்காட்டுப் பெருமானுக்குப் பாலும் தேனுங் கொண்டு நீராட்டி வழிபடுவதற்குத் தன் சொந்த நிலபுலன்களை யும் விற்று நிவந்தங்கள் அளித்தான். விழா நடத்துவதற்கும், சிவனடியாருக்கு அமுது செய்து வைப்பதற்கும் ஏராளமான பணம் அளித்தான். அத்தகைய சிவபக்தர் வயிற்றில் பிறந்தவன்தான் ஆடவல்லான். அவன் பிறந்த சில ஆண்டுக்குள்ளேயே சிவலோக நாதனும், அவர் மனைவியும் காலமாயினர். அது வேறு கதை.



மகனையும், மகளையும் இழந்த அதிர்ச்சியை முதுமைப் பருவத்திலும் தாங்கிக் கொள்ள, ஆடவல்லானின் மழலைப் பேச்சும், கள்ளமற்ற சிரிப்பும், குறுகுறு நடையும், துறுதுறு பார்வை யும் உதவின. ஆடவல்லான் வளர்ந்தான். அவனுடன் அழகும் வளர்ந்தது. இனிய குரலும் வளர்ந்தது. திருவெண்காட்டு நங்கை, தான் கற்றறிந்த தேவாரப் பாடல்கள் அனைத்தையும் கற்றுக் கொடுத்தாள். கங்கை கொண்ட சோழீசர் கோயிலில் திருவிசைப் பாடும் அரிய பணியை மேற்கொண்டான் ஆடவல்லான். தெய்வத் திருப்பணியைத் தவிர வேறு சிந்தனை ஏதுமில்லாதவன்.

அவன் படுத்துறங்குவதைச் சந்திரகுமாரி பார்த்துக் கொண்டேயிருந்தாள். கோயிலில் கண்ட அவரே இங்கு இருப்ப தைக் காண அவளுக்கு வியப்பு! மூதாட்டி தன் பெயரனை எழுப்பு வதைக் கண்ட இராசேந்திரன், "அம்மா, அம்மா அவனை எழுப்ப வேண்டாம் அம்மா. இதோ, இவளை மட்டும் பத்திரமாகப் பாதுகாத்து நாளைய தினம் அவள் மாமனிடம் ஒப்படைத்தால் போதும். இப்போது ஆடவல்லான் எழுந்தால் என்னுடன் பேசத் தொடங்கி விடுவான். எனக்கு இப்போது நேரமில்லை அம்மா..." என்றான்.

மூதாட்டி மெல்ல நகைத்தாள். "இராசேந்திரா! உன்னை இப்படிப் பெயரிட்டு அழைப்பதற்குக் கோபிக்க மாட்டாய் என்று நினைக்கிறேன். எவ்வளவோ நாள்களுக்குப் பிறகு வருகிறாய்; என் கண் பார்வை மறைவதற்கு முன் உன்னைச் சந்தித்ததில் சந்தோஷப்படுகிறேன். வந்த உடனே செல்கிறேன் என்று என் மகிழ்ச்சியைக் குலைக்கிறாயே..." என்று வருத்தப்படத் தொடங் கியவுடன், இராசேந்திரன், "அம்மா, அப்படிச் சொல்லாதீர்கள். நான் இவளைக் காப்பாற்றவே இங்கு வந்தேன். அமைதியாக மற்று ஓர் நாள் வருகிறேன். இந்த நகரத்தில் நான் காலடி எடுத்து வைத்த வுடனேயே என்னை விரோதி என நினைத்துச் சிறைப்பிடிக்க முயல்கின்றனர். நான் அவசரமாக வேறு இடத்திற்கு இப்போது போக வேண்டும். விடை கொடுங்கள்......" என்று கூறிக் கதவைத் திறந்து வெளியே செல்ல எத்தனித்தவன், சட்டெனத் திரும்பிக் கதவை மூடிக் கொண்டான்.

வெளியே அந்தச் சிறு வீதியில் திடுதிடுவென வீரர்கள் ஓடினர். ஓடும்போதே "இந்தப் பக்கமாகத்தான் சென்றிருப்பான். வேகமாகத் தேடு, ஓடு" என்று கூறிக்கொண்டே ஓடினர்.

அப்போது வெளியே செல்வது மிகவும் ஆபத்து என்பதை உணர்ந்தான் இராசேந்திரன். "பார்த்தாயா, இப்போது நீ போக வேண்டாம். இன்றிரவு இங்கேயே படுத்துறங்கு. காலையில் செல்லலாம்" என்றாள் திருவெண்காட்டு நங்கை.

பேச்சுக்குரல் கேட்டு, ஆடவல்லானும் விழித்துக் கொண்டான். "யாரம்மா, என்னம்மா சந்தடி?" என்று கேட்டான்.

"யார் வந்திருக்கிறது பார்" என்றாள் மூதாட்டி. ஆடவல்லான் விரைந்து எழுந்து, கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். முதலில் இராசேந்திரன் நிற்பதைக் கண்டவுடன், "யாரது, இராசேந்திரனா?" என்று கூவியவாறு சென்று அவனைத் தழுவிக் கொண்டான்.

இராசேந்திரனும், ஆடவல்லானும் பிள்ளைப் பிராயத்து நண்பர்கள். பிறகு இராசேந்திரன் படையில் சேர்ந்து பல யுத்தங்களுக்குச் செல்லத் தொடங்கிய பிறகு, சந்திக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைக்காமல் போய்விட்டது. எனினும் ஆடவல்லான், இராசேந்திரனது நலனைப் பற்றித் தக்கவர்களிடம் கேட்டு அறிந்தவாறிருந்தான். இப்போது இரவு வேளையில் இராசேந்திரனைச் சந்தித்ததில் அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை!

"எம்பெருமான் சோழீசன்தான் இப்போது உன்னைச் சந்திக்குமாறு செய்தான்" என்று ஆடவல்லான் கூறிக்கொண்டே தூணருகில் நிற்கும் சந்திரகுமாரியைக் கவனித்தான். அவன், அவளைப் பற்றி கேட்டறியும் முன்பே, "இவள் பெயர் சந்திரகுமாரி, வேங்கியிலிருந்து வந்திருக்கிறாள். என் உயிரைக் காப்பாற்றியவள்" என்று சொல்லும்போது, சந்திரகுமாரி குறுக்கிட்டு, "என் உயிரைக் காப்பாற்றியவர் இவர். அதுதான் மகத்தானது" என்றாள்.

ஆடவல்லானின் விழிகள் வியப்பால் மலர்ந்தன. அதேபோல் அவன் மெல்ல விழிகளை மூடிக்கொண்டு, சந்திரகுமாரியின் வீணையின் நாதம் போன்ற இனிய குரலைச் செவிகளில் புகவிட்டான். மேலும், அந்த உருவத்தை எங்கோ பார்த்திருந்தது போன்ற உணர்வும் அவனுக்கு எழுந்தது. இராசேந்திரன் உயிரைக் காப்பாற்றினாளா? அவன் வியப்புற்றான்.



"ஆமாம்; ஆடவல்லா! இவள் என்னைக் காப்பாற்றினாள். தன் குடிசையில் இருதினங்கள் வைத்திருந்து காப்பாற்றினாள். என்னை அவளுக்கு முன்பின் தெரியாது. ஆனால் நடுக்காட்டில் கண் விழித்திருந்து காப்பாற்றினாள்" என்று கூறித் தான் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு வந்தது முதல், பிறகு நடந்தது வரையில் ஒன்றுவிடாமல் கூறி வந்தான்.

மூதாட்டி வியப்புற்றவளாய், "என் கண்ணே? உனக்கு இவ்வளவு ஆபத்தா? அத்திமல்லரை வாழ்த்த வேண்டும். உன் திறமையை அவர் அறிந்திருக்கிறார். சுவர்கஸ்தரான வீரராசேந்திர சோழர் என் மகனிடம் அடிக்கடி சொல்வாராம்: "என் காலத்திலேயே என் சகோதரி மகன் இராசேந்திரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டி விட வேண்டும். ஆனால் எனக்கு மகன் இருக்கும்போது மருமகனுக்கு எப்படிப் பட்டம் சூட்டுவது?" என்று. இதை என் மகன் சிவலோக நாதன் சொல்லி, உன் திறமையை எடுத்துக் கூறுவான். அத்திமல்லர் அதை நன்றாக அறிந்திருக்கிறார். அவர் மட்டும் அறியவில்லை. இங்குள்ள அதிகாரிகளும் அறிந்து கொண்டார்கள் போலும். அதனால்தான் உன்னை அழித்துவிட முயல்கிறார்கள்..." என்றாள்.

'சிவ, சிவ' என்று கூறி ஆடவல்லான் செவிகளை மூடிக் கொண்டான். பிறகு, "என் அண்ணன் இராசேந்திரனுக்கு எவர் ஊறு செய்தாலும் நான் சும்மா இருக்கமாட்டேன். சுவடி தூக்கிய கரத்தில் வாளெடுப்பேன்" என்றான்.

'சிவசிவ' என்றாள் மூதாட்டி. "குழந்தாய், அத்தகைய தொல்லைகளையெல்லாம் எம்பெருமான் வைக்கமாட்டார். இராசேந்திரனின் தாயின் அன்பான குணத்துக்கு, அவள் மகனுக்கு எந்தத் தொல்லையும் வராது. ஆமாம்; உன் தாயார் வேங்கியில் நலமாயிருக்கிறாரா?" என்று கேட்டாள்.

இராசேந்திரன் பெருமூச்சு விட்டான். தாயை நினைத்தவுடன் அவன் கண்களில் நீர் தளும்பியது. நெஞ்சு தழுதழுக்க "அம்மா! யுத்தக்களம் என்றும் போர் என்றும் இதுவரையில் காலத்தைக் கடத்தி விட்டேன். என் தந்தை காலமான பிறகு நான் சில நாட்கள்தானே தாயிடம் தங்கியிருந்தேன். தாயின் வாஞ்சையறியா நான், தாய்க்கு ஆற்றவேண்டிய கடமைகளை மறந்து இருக்கிறேன். அப்படியிருக்கும்போது எனக்குச் சோழ நாட்டு அரியணையைக் கைப்பற்ற

வேண்டும் எனும் சிந்தனை துளிகூட எழவில்லை. வீணே என்னைக் கண்டு தளபதி அஞ்சுகிறார். ஆனால், நாட்டிலே உருவாகும் குழப்பங் களைப் பார்க்கும்போது மன்னரைச் சந்தித்து எச்சரிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்காக அத்திமல்லருடன் ஆலோசனை நடத்தவே இப்போது போக விரும்பினேன்..." என்றான்.

கோயில் நிலங்கள் அபகரிக்கப்படுவதையும், அதிகாரிகள் தக்கமுறையில் கடமையை ஆற்றாததையும் ஆடவல்லான் கூறி, மன்னன் சிறைவைக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி நகரத்தில் பரவிவருவதையும் கூறினான்.

சந்திரகுமாரியால் ஏதும் பேச முடியவில்லை. இதுவரை இராசேந்திரன் சோழ நாட்டின் சாதாரண படை வீரன் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தாள். இராசேந்திரனுக்குச் சோழ நாடும், வேங்கி நாடும் உரிமையாகக் காத்திருக்கும் செய்தி அறிந்தவுடன் திடுக்கிட்டாள்.

"இளவரசே! என்னை மன்னித்துவிடுங்கள். தங்களைச் சாதாரண படைவீரர் என்று எண்ணிவிட்டேன். தங்களுக்கு வைக்கோல் படுக்கை அளித்தேன். கம்பங் கூழ் கொடுத்தேன்..." என்று சந்திரகுமாரி விம்மினாள்.

இராசேந்திரன் கடகடவென நகைத்து, "அதனாலென்ன? நான் இன்னும் சாதாரணமானவனே! எனக்குச் சோழ நாட்டு அரச பீடத்தின் மேல் ஆசையில்லை. அதனால், இளவரசன் எனும் பட்டம் எனக்குத் தகுதியில்லை. எனக்கே உரிமையான வேங்கியை அடைவதே என் முதல் வேலை. அதுவரையில் நான் சோழ நாட்டு விவகாரத்தில் தலையிடமாட்டேன். இது உறுதி" என்றான்.

மூதாட்டி உடனே கூறினாள்: "இராசேந்திரா! அப்படியெல்லாம் சபதம் செய்து விடாதே. கடந்த சில நாள்களாக நான் துர்க்கனவு கண்டு வருகிறேன். என் கனவில் சிலலோகநாதன் வருகிறான். என்னை மீண்டும் திருவெண்காட்டிற்குச் செல்லுமாறு கட்டளையிடுகிறான். இந்த நகரத்திற்குப் பெரும் ஆபத்து வரும் என்று எச்சரிக்கிறான். அப்படியிருக்கும்போது நீ இந்த நகரத்தையும், நாட்டையும் ஒதுக்கிவிடக்கூடாது. மன்னரை நீ எப்படியும் சந்தித்து,' உனக்கு இந்த நாட்டில் உள்ள உரிமையை வற்புறுத்து" என்றாள்.



ஆடவல்லானும் "ஆமாம்" என்றான். சந்திரகுமாரிக்குப் பல அரசியல் விஷயங்கள் புரிந்தன. அவள் அந்த நகரத்திற்கு வந்த காரியத்தில் பாதி முடிந்துவிடும் போலும் தோன்றியது. ஆனால், இராசேந்திரனின் இனிய முகம் அவளை மயக்கியது. அவன் காலடியில் வீழ்ந்து, "சோழ நாட்டிற்கு விரோதமாக வந்திருக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவள் நான்" என்று சொல்லி விட வேண்டும் போல் தோன்றியது.

ஆடவல்லானின் அழகிய முகமும், அவனது இனிய குரலும் அவளைக் கவர்ந்தன. இந்த வீட்டிலேயே தங்கியிருந்து பாடல் கற்றுக் கொள்ளலாம் என்ற ஆர்வமும் எழுந்தது. அவள் உள்ளத்தில் புரிய முடியாத குழப்பமும் எழுந்தது.

## 26. முதுகில் பாய்ந்தது

பெரிய தன்மபாலர் அந்த நேரத்தில் வருவார் என்று இளையவர் எதிர்பார்க்கவில்லை. என்ன இருந்தாலும் அவர் சகோதரர். ஒரே இரத்தம் இருவர் உடலிலும் ஓடுகிறது. இதுவரை பெரியவர் இட்ட கோட்டை இளையவர் தாண்டியதில்லை. சோழ நாட்டிலே செல்வாக்கு மிக்க அவரது கொள்கைக்கு விரோதமாக, இப்போதுதான் இளையவர் செயலில் இறங்குகிறார்.

பெரியவரின் காரியங்கள் ஏதும் இளையவருக்குப் பிடிக்கவில்லை. வரிச்சுமையை அதிகரித்து அமைச்சர் மண்டலத்தின் சொற்களுக்கிணங்க வீரர்களை அனுப்பி வரிவசூலிக்க ஏற்பாடு செய்ததுதான், அடிப்படையில் இளையவருக்குக் கோபம் பிறந்தது. அதனுடன் பெரியவர் வீரர்கள், சந்திரகுமாரியை வழிமறித்துத் தூக்கிச் சென்று விட்டனர் எனும் செய்தி அவர் ஆத்திரத்தை மேலும் வளர்த்தது.

"டேய், எங்கேடா அவளை ஒளித்து வைத்திருக்கிறாய்?" என்று கேட்கிறார். ஆகா! அவருடைய மனம்தான் எப்படி மாறி விட்டது? தான் அவளை அபகரித்துப் போனதோடல்லாமல் என்னை நோக்கி இப்படிக் கேட்கிறாரே!

இளையவருக்கு ஏதும் சொல்லத் தோன்றவில்லை. மெல்லச் சிரித்தார்.

"என்ன சிரிக்கிறாய்?" என்று கர்ஜித்தார் பெரியவர். இளைய வருக்கு இப்போது கோபம் அதிகமாகியது. "அண்ணா, சற்று நிதானித்து நாவை அடக்கிப் பேசுங்கள்..."

"அண்ணாவாவது, தம்பியாவது? நீ என் உதவியாளன். இன்று எண்ணினாலும் உன்னைப் பதவியினின்று தள்ளி விடுவேன். என் செயலில் குறுக்கிட்டால், அதற்குத் தக்க தண்டனையே கிடைக்கும்..."

"நானும் அதைத்தான் எதிர்பார்த்தேன்... அண்ணனாவது, தம்பியாவது. பாசம் இல்லாவிடில், நான் என்றோ உங்கள் செயல் களைத் தடுத்துச் சரியான பாடம் கற்பித்திருப்பேன்..."

இளையவர் இப்படிக் கூறியதைக் கேட்ட பெரிய தன்மபாலர், ஒரு கணம் அயர்ந்து விட்டார். அடிபட்ட வேங்கையைப்போல் சீறி, "என்னடா சொன்னாய்... ஒரு பெண்ணை ஒளித்து வைத்திருக் கும் அற்பன் நீ..." என்று தொடங்குவதற்குள், "ஒரு பெண்ணை வழிமறித்துத் தூக்கிச் செல்லும் அளவுக்கு நான் மேதாவி இல்லை. அற்பனே... வழிமறித்துத் தூக்கிச் சென்றவளை எங்கே நீங்கள் வைத்திருக்கிறீர்கள்..." என்று கேட்கவும், பெரியவர் திடுக்கிட்டார்.

ஒரு கணம் இவருக்கே வெட்கமாயிருந்தது. 'இவ்வளவு காலம் ஒழுங்கான பெயருடன் கழித்த பிறகு, இப்போது பெண் ஒருத்தியால் கெட்ட பெயர் வரவேண்டுமா?' என்று எண்ணியவர் அந்த இடத்தைவிட்டு மிடுக்குடன் புறப்பட்டு வாயிற்படியருகே சென்று, "ஒன்று உன்னை எச்சரிக்கிறேன்... நீ என் செயலுக்கு விரோதமாக நடப்பதை இன்னும் தொடர்ந்தாயானால் உன் அழிவை நீயேதான் தேடிக்கொள்வாய்..." என்று கூறிவிட்டு வேகமாகச் சென்றுவிட்டார்.

இளையவர் சிந்தனையில் மூழ்கியவாறு இங்குமங்கும் உலாவினார். அவள் பெரியவர் வீட்டிலுமில்லை. இடையே யாரோ அபகரித்துச் சென்றிருக்கிறார்கள் என்று உணர்ந்தார். மறை விலிருந்த மதுராந்தகன் வெளியே வந்தான்.

"தளபதிக்கு மிகவும் கோபம் போலிருக்கிறது" என்றான் மதுராந்தகன். மதுராந்தகனை மறைவில் நிற்க வைத்து இருவரும் தர்க்கம் செய்தது மிகவும் சங்கடத்தை அளித்தது இளையவருக்கு.



"என்னவோ, பெண்ணை ஒளித்து வைத்தது பற்றிப் பேசிக் கொண்டீர்களே... யார் அவள்? தளபதிக்குப் பெண்பித்து பிடித்து விட்டதா?" என்று கேட்டான் மதுராந்தகன்.

இளையவர் அவனுடன் அது பற்றிப் பேசும் நிலையி லில்லை... அந்தப் பேச்சை மறைத்து மாற்ற விரும்பி, "அது கிடக்கட்டும், இளவரசே! உங்கள் திட்டம் என்ன? இன்று இரவு இங்கே தங்கிக் காலையிலே புறப்படலாமா?" என்றார்.

"இல்லை... இல்லை... அது முடியாது. நான் இன்று இரவோடு இரவாகக் காஞ்சிக்குச் செல்ல வேண்டும். நாளைக்குக் காஞ்சிக்குச் சிற்றரசர்கள் பலர் வருகிறார்கள். அவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும். நீங்கள் சொல்லுங்கள், எனக்கு உதவி செய்யத் தாங்கள் முன் வருகிறீர்களா?" என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டு எனக் கேட்டான்.

இளையவருக்கு அந்தச் சமயம் எரிச்சல் மிகுந்திருந்தது. இளவரசராக இல்லாமல் வேறு ஒருவராக இருந்திருந்தால் சீறி ஒட்டியிருப்பார். தன்னையே வந்து ஆட்சிக்கு விரோதமாக உதவுமாறு இளவரசர் கேட்கிறார். நாட்டுக்கு இந்தக் கதியா?- இளையத் தன்மபாலர் பெருமூச்சு விட்டார்.

"காஞ்சியில் என் வசம் உள்ள படைகளையும் என் காரிய வெற்றிக்குப் பயன்படுத்துவேன். இந்த நகரத்து மூலை முடுக்குக ளெல்லாம் எனக்குத் தெரியும். சமயம் ஏற்பட்டதும் படைகளுடன் நகரத்திற்குள் நுழைவேன். அப்போது உங்கள் உதவி எனக்குக் கிடைக்கும் என்ற உறுதியைத் தெரியப்படுத்துங்கள்" என்று இளவரசன் மதுராந்தகன் மீண்டும் கேட்டான்.

இளைய தன்மபாலர் அமைதியாக அவனை அணுகி, "இளவரசே! நான் இப்போது அதிராசேந்திர சோழ மன்னனின் உப்பைத் தின்று ஊழியம் செய்பவன். மனம் அறிந்து சதியில் ஈடுபடக்கூடாது. நான் உங்கள் பணியில் குறுக்கே நிற்க மாட்டேன் என்று வேண்டுமானால் உறுதி கூறுகிறேன்..." என்றார்.

"இது மட்டும் உங்கள் பதவிக்கு விரோதமானதல்லவா? சதி செய்யும் என்னை உடனே சிறைப் பிடிக்க வேண்டியது உங்கள் கடமையல்லவா? என் செயலுக்குக் குறுக்கே நிற்காமல் இருப்பதும் நாட்டிற்கு விரோதமானதல்லவா" என்று மதுராந்தகன் கேட்டவுடன், இளையவர் மறுமொழி கூறவில்லை.

மீண்டும் மதுராந்தகனே பேசினான்: "இளைய தளபதியாரே? உமது நடவடிக்கை எனக்குத் தெரியாது என எண்ண வேண்டாம். இடங்கைப் படையினரைத் தூண்டிவிட்டு, அமைதியாக ஒன்றும் தெரியாதவர்போல் இருக்கும் உமது ஒவ்வொரு நடவடிக்கையும் நான் அறிவேன். உமது சகோதரர் நடவடிக்கையும் எனக்குத் தெரியும். நீங்கள் இருவரும் கிடைக்கும் பெண்களைத் தூக்கி வருவதில் தான் இப்போது போட்டி போடுகிறீர்களே! என்னைச் சுமுகமாக வரவேற்றுவிட்டு என் திட்டங்களையும் புரிந்து கொண்டு இப்போது எனக்கு ஆதரவு தர யோசனை செய்கிறீர்களா? உம்மையும் கவனிக்க எனக்குத் தெரியும்" என்று கூறிடும்போதே, இளைய தன்மபாலர் சீற்றத்துடன் வாளை உருவி, "என்ன சொன்னீர்? இளவரசர் என்பதனால் மட்டும் உம்மை விட்டுவிடவில்லை. ஆயுதம் ஏதும் எடுத்து வராது வந்திருப்பதால் உம்மை விட்டேன். இல்லாவிடில் இங்கேயே உம் நாவைத் துண்டித்து இருப்பேன்" என்றார்.

'ஹ' என்ற அலட்சியச் சொல்லை உகுத்துவிட்டு மதுராந்தகன் நடந்து கொண்டே பேசினான்: "தளபதியாரே! துள்ளாதீர். உடலுக்குத் தலை இன்னும் கொஞ்சநாள்தான் உறவோடு இருக்கும். வருகிறேன்..." என்று கூறி விட்டு வெளியேறினான். இவர்கள் இருவர் பேசுவதை மறைந்திருந்து பெரிய தன்மபாலரும் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார். அவரும் மெல்ல மறைந்து சென்றார். மற்றொரு உருவமும் பதுங்கிச் சென்றது.

அவர்கள் சென்று ஒரு நாழிகைப் போதிருக்கலாம். பயங்கர மான கூக்குரல் ஒன்று எழுந்தது. காவலர்கள் ஓடோடி வந்தனர். நடுக்கூடத்துச் சரவிளக்குகள் ஆடின. சில அறுந்து உடைந்து விழுந்துச் சிதறிக் கிடந்தன. ஆடும் வெளிச்சத்துடன் நிழலும் அசைந்து அந்த இடத்துப் பயங்கரத்தை மேலும் அதிகப் படுத்தியது.

காவலர்கள் அங்கேயிருந்த காட்சியைக் கண்டு கூவினர். விளக்குகள் இன்னும் பிரகாசப்படுத்தப்பட்டன.

நடுக்கூடத்து மஞ்சத்தின் மீது இளைய தன்மபாலர் முதுகில் ஆழமாக உடைவாள் ஒன்றால் குத்தப்பட்டு, இரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

## 27. "விடைகொடு மதுராந்தகி"

வட்ட முழுமதி வானத்தே காய்ந்து கொண்டிருந்தது. கங்கை கொண்ட சோழபுரத்து அரண்மனை, பால் நிலவில், கந்தர்வ புரிபோல் காட்சியளித்தது. மதுராந்தகிக்கு உறக்கம் பிடிக்கவில்லை. பாட்டியாரிடம் பேசப் போன இடத்திலும் உற்சாகமாக ஏதும் செய்தி கிடைக்கவில்லை. மனத்திற்குச் சோர்வுதான் அதிகமாகியது.

அரசகுமாரியாயிருந்தாலும் அவள் அனாதைதான். தந்தை இறந்தபோது அவள் தாயும் உடன்கட்டை ஏறிவிட்டாள். மாளிகை யிலுள்ள பெண்டுகளின் அன்பிலும், அரவணைப்பிலுமாக அவள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தாள். இப்போது அவள் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள சலனத்தை யாரிடம் கூறி அமைதி அடைவாள்?

இராசேந்திரனை மீண்டும் சந்திக்க வேண்டும் போல் தோன் றியது. தோழியிடம் அவர் தங்கியிருக்கும் இடத்தைத் தேடிவருமாறு கூறினாள். அவளாலும் கண்டுபிடிக்க இயலவில்லை. அத்துடன் அன்று நகரமெங்கும் இளைய தன்மபாலரின் கொலையைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. அதைப் பற்றி தோழி வந்து கூறினாள். மதுராந்தகியோ திடுக்கிட்டாள். சிறிய தன்மபாலரைக் கொன்று விடும் துணிவு யாருக்கு வந்தது என்று வியப்படைந்தாள். இதற்கு முன் நகரத்தில் அத்தகைய துணிவு எவருக்கும் ஏற்பட்டதில்லை. நகரத்தில் பாதுகாப்புக் குறைவு ஏற்பட்டு வருகிறது என்பதை நடக்கும் சம்பவங்கள் புலப்படுத்துகின்றன. மதுராந்தகி அமைதி யாக அமர்ந்து சிந்தித்தாள். அவளுக்கு உறக்கம் பிடிக்கவில்லை. சிறிய தாயும், மாமியும் கேட்ட கேள்விகளுக்கு அவள் ஏதும் மறு மொழி கூறாமல் உன்மத்தம் பிடித்தவள் போல் இருந்தாள். இராசேந்தி ரனை ஒருமுறை சந்தித்துவிட்டால் அவள் மனவேதனை தீர்ந்து விடும். எங்கே சந்திப்பது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை.

இரவின் அமைதியான வேளையில் நீலவானப் பின்னணியு டன் முழுமதியைப் பார்ப்பது தனி இன்பம்தான். மலர் நிறைந்த செடிகளையுடைய நந்தவனத்தில் இருந்து விட்டாலே மனம் மகிழ்ந்து நெகிழக் கேட்க வேண்டாம். முல்லை பார்த்து நகைக்கும். மகிழம்பூ மனத்திற்கு உற்சாகம் தரும். அரளியோ தன்னைப் பறிப்பதற்குக் கை வீசி அழைக்கும்.

மதுராந்தகிக்கு அவை ஏதும் பிடிக்கவில்லை. தோட்டத்தில் அழகிய மேடைகள் பல இருந்தன. அங்கே அமர்ந்து முழுமதியை ரசிக்கலாம். மதுராந்தகி செயற்கைக் குளத்தருகே சென்றாள். இரண்டொரு தாமரை வாட்டமுற்றிருந்தது. வெண்மையான அல்லியும், மஞ்சள் நிற அல்லியும் மலர்ந்த முகத்துடன் மதியரச னைப் பார்த்து நகைத்துக் கொண்டிருந்தன. வட்டவட்டமான இலைகள் தண்ணீரின் நிறத்துடன் போட்டியிட்டன. அந்தத் தடாகத்துக் கைப் பிடிச் சுவரில் அமர்ந்து தண்ணீரில் காலை விட்டுத் துழாவ வேண்டும் போல ஆசை பிறந்தது அவளுக்கு. தோழியை அழைத்து வராமல், அவள் மட்டும் தனியே வந்திருந்தாள். மிக நிம்மதியாக இருந்தது. தோழி வந்திருந்தால் துளைத்து எடுத்திருப்பாள். 'முல்லையைப் பார், முழுமதியைப் பார், அல்லியைப் பார், அழகிய குளத்தைப் பார்' என்று ஏதாவது பேச்சுக் கொடுத்திருப்பாள்.

மதுராந்தகி கைப்பிடிச் சுவரின்மீது அமர்ந்தாள். தடாகத்துத் தண்ணீரிலே மற்றொரு சந்திரன் உதயமாகி விட்டதா? நீலவா னத்தில் காண்பதைவிடத் தண்ணீரில் சந்திரனைக் காணத்தான் அவளுக்குப் பிடித்திருந்தது. சோழ கங்கப் பேரேரியில் படகில் சென்றால் இப்போது எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து கொண்டாள். ஏரியை நினைத்தவுடன் ஏரிக்கரையில் நடந்த சம்ப வங்கள் நினைவுக்கு வந்தன. இராசேந்திரன் முகம் நினைவுக்கு வந்தது. அந்த முகம் இப்போது வட்ட முழுமதியுடன் இணைந்து விட்டதா? முழுமதியின் அருகே அந்த முகம் தெரிகிறதே. மதுராந்தகி தெளிந்த நீரை மீண்டும் உற்றுக் கவனித்தாள். வட்ட முழுமதி நகர்ந்தது. அருகே இராசேந்திரன் முகம். ஏன்-அதோ தன் முகம்கூடத் தெரிகிறதே. நீரிலே தெரிந்த முகத்தை இன்னும் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்போல் தோன்றி யது மதுராந்தகிக்கு.

மதுராந்தகியின் உடல் சிலிர்த்தது. தண்ணீரைத் தொட்டு அந்தப் பனி நீரை மேலே தெளித்துக் கொள்ள வேண்டும்போல் ஆர்வம் எழுந்தது. ஒருகை நீரை எடுத்து மீண்டும் அதைக் குளத் திலேயே தெளித்தாள். நீர் சலனமடைந்தது. வட்டவட்டமாக அலைகள் எழுந்து கரையை வந்து மோதின. நீரிலே தெரிந்த முகம் அசைந்தது. யாரோ சிரிப்பது போன்று தோன்றியது. மதுராந்தகி திரும்பிப் பார்த்தாள்.



அவளருகே இராசேந்திரன் நின்றுகொண்டிருந்தான். தன் கண்ணையே அவளால் நம்பமுடியவில்லை. கனவா? நடு நிசியிலே விழித்தபடியே கனவு காண்கிறோமா? மதுராந்தகி ஒரு கணம் இராசேந்திரனை உற்று நோக்கினாள். பிறகு தலை குனிந்து கொண்டாள். இராசேந்திரன்தான் நிற்கிறான் என்று நம்புவதற்கு அவளால் முடியவில்லை. வேறு ஏதாவது யக்ஷிணி தேவதைபோல் அவர் உருவம் வந்து விட்டதோ என்று பயந்தாள். அந்த வேளையில் ஏன் வந்தோம். 'ஓ' வென்று கூவ வேண்டும் போல் தோன்றியது. ஆனால் அப்படியெல்லாம் நேரவில்லை.

"மதுராந்தகி, இந்த நிசி வேளையில் நீதான் இங்கு வந்திருக்கிறாயா? நான் யாரோ தேவதைதான் தோட்டத்தில் உலவுகிறதோ என்று பயந்தேன்" என்று இராசேந்திரன் கூறிய குரல் கேட்டவுடன்தான் அவளுக்கு உயிர் வந்தது. உயிர் மட்டும்தானா வந்தது? புது உற்சாகமே பிறந்து விட்டது.

மதுராந்தகிக்கு என்ன பேசுவது என்றே தோன்றவில்லை. இராசேந்திரனே பேசினான்: "மதுராந்தகி, இந்த நிசி வேளையில் இங்கே ஏன் உலவுகிறாய்? நகரத்தில் பொல்லாதவர்கள் நட மாட்டம் அதிகம் இருக்கும்போது, இந்த வேளையில் துணை யின்றி இருக்கலாமா?" என்று கேட்டான்.

இராசேந்திரன் இவ்வளவு நெருக்கத்தில் வந்து மனம்விட்டுப் பேசத் தொடங்குவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. எவ்வ ளவோ பேச வேண்டும் என்று நினைத்தும் பேச நா எழவில்லை.

"மதுராந்தகி ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?"

"பேசாமல் என்ன; இந்த நேரத்தில் தங்களைக் கண்டவு டன் ஏற்பட்ட வியப்பு என்னைத் திகைக்க வைத்துவிட்டது. பேச வார்த்தைகள் வரவில்லை."

"இந்த நகரத்தை விட்டுச் செல்லுமுன்பு உன்னிடம் சொல்லி விடைபெற்றுக் கொள்ள வந்தேன்" என்று இராசேந்திரன் கூறியவுடன் மதுராந்தகி திடுக்கிட்டாள்.

"இந்த நகரத்தை விட்டுச் செல்கிறீர்களா? ஏன்? தாங்கள் வந்த சுவடே தெரியவில்லையே...... அதற்குள் போகிறேன் என்று சொன்னால்......"

"ஆமாம் மதுராந்தகி, நான் இந்த நகரத்திற்குள் வந்ததைக் கனவாகவே கொள்ளப்போகிறேன்... நான் வந்த நோக்கமே வேறு.

ஆனால் நான் சோழ அரியணையை எதிர்பார்த்து வந்திருப்பதாகப் பலர் எண்ணுகிறார்கள்....."

"ஏன், தாங்கள் எதிர்பார்ப்பதிலும் தவறு கிடையாதே... பாட்டியாரிடம் பேசிக் கொண்டிருந்தேன்..."

"நான் வந்திருப்பதைச் சொல்லிவிட்டாயா...?"

"இல்லை, இல்லை. நான் எப்படிச் சொல்லமுடியும்... ஆனால் மன்னரின் உடல்நிலை பற்றிப் பேசிக்கொண்டிருந்த போது, தங்களைப் பற்றிப் பேச்சு வந்தது......"

"என்ன சொன்னார்கள்........?"

"இந்த நாட்டின் சிங்காசனத்தை அடுத்து அடையக் கூடியவர் தாங்கள்தான் என்று கூறினார்கள்..."

"அவர்கள் அப்படி நினைப்பதால்தான் என்னை ஒழித்து விடச் சிலர் திட்டம் தீட்டியிருக்கிறார்கள்... ஆனால் எனக்கு இந்த நாட்டுச் சிங்காசனத்தின் மீது எள்ளளவும் ஆசையில்லை. ஆமாம்; அதை எண்ணியும் நான் வரவில்லை. அதைப்பற்றிப் பேசுவதே நாகரிகம் இல்லை என்று நினைக்கிறேன். மன்னர் இறந்து விடுவார் என்று எல்லாரும் முடிவு செய்துவிட்டனரா? அவருக் கென்ன வயதாகிவிட்டதா?"

"இல்லை இல்லை. அரசியாரும் மிகவும் வருந்துகிறார்கள். கடந்த சில நாள்களாக அவரைக்கூடச் சந்திக்கவிடாமல் செய்து விட்டார்களாம். பேசும் சக்தியையும் இழந்து மன்னர் படுத்த படுக்கையாயிருக்கிறார்... அதனால்......."

"அதனாலென்ன? அவர் இறந்து விடுவார் என்று மருத்துவர் சொல்லிவிட்டாரா?"

"அப்படியொன்றுமில்லை... ஆனால் அவரிருக்கும்போதே ஆட்சியைக் கைப்பற்ற வழி செய்துவிடுவார்கள் போலிருக்கிறது."

"அரசியல் விவகாரம் முழுவதும் தெரிந்து வைத்திருக் கிறாயே... ஹூம். அது போகட்டும். நீ இந்த நிசியில் இங்கே ஏன் உலவ வந்தாய்?"

"அது போகட்டும். நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்....?"

"நான் மன்னரைச் சந்திக்க வந்தேன். சந்தித்து விட்டேன். செல்கிறேன். போகும்போது அரண்மனை மாடத்திலிருந்து



பார்த்தபோது குளக்கரையருகே யாரோ நடமாடுவது தெரிந்தது. வந்தேன்..."

"அது நானாக இருக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா?"

"நீ என்று எனக்குத் தெரியாது... ஆனால் ஓர் அழகு மகள் நிலவொளியில் உலவுகிறாள் என்று கண்டு கொண்டேன்..."

"அழகு மகளைத் தேடி வந்தீர்களா? இவ்வளவு நாள் இந்த நகரத்தில் இருந்தீர்களே, ஒரு நாளாவது அந்த அழகு மகளைக் காண வேண்டும் எனும் ஆவல் தங்களுக்கு ஏற்பட்டதா? பேதை நான்தான் துடித்தேன்...?"

"உன்னைத் தேடி நான் எதற்கு வரவேண்டும்? பருவம் வந்தவள், இளவரசி. உன்னைத் தேடி நாடற்ற நான் எப்படி வருவது? எதற்காக வருவது?"

இராசேந்திரன் இப்படிக் கூறியவுடன், மதுராந்தகியின் உள்ளத்தில் வேதனை குடிகொண்டது. உண்மையாகவே அவர் அப்படிப் பேசுகிறாரா? அல்லது வேடிக்கை செய்கிறாரா? என்று எண்ணினாள். பெண்ணன்றோ? கண்களில் நீர் சேர்ந்தது.

"உண்மையாகத்தான் சொல்கிறீர்களா? என்னைப் பார்க்க வேண்டும் எனும் ஆவல் தங்களுக்கு ஏற்படவில்லையா? ஆம்; உண்டாகாது. எதற்காக ஏற்படும்? நான் எந்த நாட்டின் இளவரசியாகவாவது இருக்கும் அந்தஸ்து பெற்றிருக்கிறேனா? சரி... என்னைப் பார்க்க வராத தாங்கள் ஏன் இங்கே நிற்கிறீர்கள்? பருவம் வந்தவள்-இளவரசி-இங்கே நாடற்ற நீங்கள் ஏன் நிற்கிறீர்கள். உம்... போய்விடுங்கள்..." என்று வருத்தத்தில் தோய்ந்த ஆத்திரத்தில் கூறினாள்.

இராசேந்திரன் திகைத்தான். அவனால் ஏதும் பேச முடியவில்லை. அவனுக்கே வியப்பாய்த்தானிருந்தது. நாம் ஏன் இங்கு வந்தோம்... மன்னரை இரகசியமாகச் சந்தித்து விட்டு வந்த வழியே போயிருக்க வேண்டிய நாம், ஏன் மாளிகைத் தோட்டத் திற்குள் வந்தோம். ஆம்! வந்தது தவறுதான்... என்று எண்ணிய வாறு இராசேந்திரன் திரும்பி நடந்தான்.

மதுராந்தகி திடுக்கிட்டாள். இராசேந்திரன் உடனே திரும்பி விடுவான் என்று அவள் நினைக்கவில்லை. நாம் சொன்னதைத் தவறாக எண்ணி விட்டாரா? அவர் சொன்னதுபோலவேதானே

நாமும் சொன்னோம்...... என்ன நினைத்தாளோ என்னவோ, மதுராந்தகி குலுங்கிக் கொண்டு, இராசேந்திரன் செல்லும் வழியில் எதிரே போய் நின்றாள்.

இராசேந்திரனும், மதுராந்தகியும் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டனர். மதுராந்தகியின் கண்களிலிருந்து நீர் வடிந்தது. இராசேந்திரனுக்கு ஏது சொல்வதென்று தோன்றவில்லை. செல் என்கிறாள்; நில் என்று வழி மறித்து நிற்கிறாள்-இவள் மனத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லையே என்று திகைத்தவனாய், "வழி விடு, மதுராந்தகி! எனக்கு மிகவும் அவசரமான பணிகள் இருக்கின்றன. உன்னை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே......" என்று கேட்கவும், மதுராந்தகி விம்மியவாறு, "உங்களையும்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே. மாளிகைத் தோட்டத்தில் இந்த நிலவொளியில் நான் எதற்காகக் காத்திருப்பேன். தங்களுக்காகத்தான் என் நினைவே இல்லையென்றால், நானும் அப்படியே இருந்துவிட முடியுமா? சின்னஞ்சிறு பருவத்தில் நாம் இதே மாளிகைத் தோட்டத்தில் கை கோர்த்து ஓடியதை மறந்து விட்டீர்களா? ஒரு சமயம் இதே போன்று பால் நிலவு வேளையில் நீங்களும் நானும் இதே வாவிக் கரையில் நீரிலே தெரியும் வட்ட முழுமதியை நிஜச் சந்திரன் தண்ணீரிலே உதயமாகி விட்டான் என்ற எண்ணத்தில் உற்றுப் பார்த்துக்கொண்டே இருக்கவில்லையா? பெண்களின் உள்ளத்தைப் புரிந்து கொள்ள ஆண்களுக்குத் தனி இதயம் வேண்டும்..." என்று கூறினாள்.

மதுராந்தகியின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் போல் இராசேந்திரன் கரங்கள் துடித்தன. அதற்கு ஏற்றத் துணிவு வராதவனாய், "மதுராந்தகி, உண்மையிலேயே என்னைப் போகச் சொல்லிவிட்டாய் என்று நினைத்து விட்டேன். நான் மட்டும் எதற்காக இந்த நேரத்தில் வந்தேன் என்பதைத் தெரிந்து கொண்டாயா?" என்று அவளை நெருங்கி மெல்லிய குரலில் கேட்டான்.

"மன்னரை இரகசியமாகக் காண வந்தீர்கள். வழியில் யாரோ ஓர் அழகியைக் கண்டீர்கள்" என்று மதுராந்தகி உதட்டில் புன்னகை நெளியக் கூறினாள்.

"அந்த அழகி நீதான் மதுராந்தகி. முதல் நாள் ஏரிக்கரையில் உன்னைக் கண்டவுடனேயே என் இதயத்தில் நீ மெல்லப் புகுந்து கொண்டாயா..."



"அதனால்தான் இவ்வளவு சீக்கிரம் என்னைக் காண வந்தீர்களாக்கும்!"

"இப்போதுகூடக் காண வேண்டும் எனும் எண்ணம் எனக்கு இல்லை... நான் எடுத்த காரியம் நிறைவேறும்வரை எனக்கு எதிலும் கவனம் செல்லாது..."

"எந்தக் காரியத்தில் முனைந்திருக்கிறீர்கள்...?"

"என் தாய் நாட்டில் எனக்குள்ள உரிமையை நிலைநாட்ட; அதற்காக இன்றே வேங்கிக்குப் புறப்படுகிறேன்..."

"வேங்கிக்கா...?"

"ஆமாம், மதுராந்தகி... வேங்கியிலிருந்து எனக்கு அவசரச் செய்தி வந்திருக்கிறது... என் தாயின் உடல்நிலை கவலைக்கிடமாய் இருக்கிறதாம்....... அதையும்விட என் சிறிய தந்தை நாட்டை என்னிடம் மீண்டும் திருப்பித்தர முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டுத் தன் மகனுக்கு இளவரசர் பட்டம் சூட்டவும் ஏற்பாடு செய்திருக்கிறாராம்... அதனால்தான் வேங்கிக்கு உடனே செல்ல வேண்டும். நான் இங்கிருக்கும் ஒவ்வொரு கணமும் சோழ நாட்டை நான் கவர்ந்து கொள்ள ஏற்பாடு செய்வதாக எண்ணுவார்கள்.... அதனால்தான் செல்கிறேன்..."

"என்னையும் உடன் அழைத்துச் செல்லுங்கள்... அத்தையைப் பார்க்க வேண்டும் எனும் ஆசை எனக்கும் ஏற்பட்டிருக்கிறது. மேலும், இங்கிருக்கும் ஒவ்வொரு கணமும் என் இதயத்தில் வேதனை வளர்ந்து வரும்... என்னை ஆதரவுடன் அரவணைக்க யார் இருக்கிறார்கள்?" என்று மதுராந்தகி கூறினாள்.

இராசேந்திரன் மெல்ல நகைத்தான். "மதுராந்தகி, துணிவு மிக நிறைந்தவள் நீ! வேங்கி கூப்பிடும் தொலைவிலா இருக்கிறது? வேங்கிக்கு நீ வரும் காலமும் ஏற்படாமலா போகப் போகிறது? இப்போது விடை கொடு மதுராந்தகி. எனது தாய் நாட்டை மீட்காமல் நான் இந்தச் சோழ நாட்டிலே காலடி வைக்க மாட்டேன் என்று சபதம் செய்திருக்கிறேன். அந்தச் சபதம் வெற்றிகரமாக நிறைவேற மனமகிழ்ச்சியுடன் விடை கொடு மதுராந்தகி. அடுத்த முறை கங்கை கொண்ட சோழபுரம் வரும்போது, கீழைச் சாளுக்கிய நாட்டு மன்னனாக வருவேன்... இதை உன்னிடம் கூறிவிட்டுப் போகத்தான் வந்தேன். என்மீது பேரன்பு பூண்ட என் பாட்டியாரி

டம் நேரிடையே வந்து சந்தித்துக் கூறவேண்டும் எனும் எண்ணம் தான். ஆனால் என்னைச் சுற்றிச் சோழ வீரர்கள் வட்டமிடுகிறார்கள். என்னை எங்கிருந்தாலும் சிறைப்பிடிக்குமாறு தளபதியின் கண்டிப்பான கட்டளை இருக்கிறது. என் உயர்ந்த மிக முக்கியமான காரியத்தை நிறைவேற்றாது சோழ நாட்டுச் சிறையில் வீணே வாடமாட்டேன். நான் எண்ணி வந்த சோழநாடு வேறு! இப்போதிருக்கும் சோழநாடு வேறு. இதைச் காப்பாற்றச் சோழீசர் தான் வரவேண்டும்... நான் வருகிறேன் மதுராந்தகி..." என்று கூறி, மெல்ல அவள் கரங்களைத் தொட்டு விட்டுப் புறப்பட்டான்.

"வேங்கியில் என்னை மறந்துவிடமாட்டீர்களே? தங்களை இதயத்தில் வைத்து அன்பு எனும் மலரெடுத்து அர்ச்சிக்கத் தொடங்கி விட்டேன். அதை ஏற்றுக்கொண்டு விரைவில் வந்து என் தவம் ஈடேறச் செய்வீர்களா?" என்று விம்மினாள் மதுராந்தகி.

இராசேந்திரன், "உறுதியுடனும், தைரியமாகவும் இரு மதுராந்தகி. அத்திமல்லர் உன் நலன்களை எப்போதும் காப்பார். ஆண்டவன் அருள் இருந்தால் மீண்டும் சந்திப்போம்..." என்று கூறித் திரும்பியும் பாராமல் விரைந்து மறைந்தான்.

மதுராந்தகி, அவன் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள். பனிப்படலம்போல் கண்ணீர் அவள் பார்வையைத் திரையிட்டு மறைத்தது.

## 28. விழிகள் உறங்கா!

மதுராந்தகியிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு சென்ற இராசேந்திரன், காளிங்கன் குடிசையை அடைந்தான். அவனுக்காக அத்திமல்லர் விழித்துக் கொண்டு காத்திருந்தார். காளிங்கனும், அவன் மனைவி கோமதியும் சற்றுத் தொலைவில் அமர்ந்து அடுப்பை மூட்டி வேர்க்கடலையை வாட்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள். அவை அருகேயிருந்த நிலத்திலிருந்து தோண்டியெடுக்கப்பட்டவை.

அந்தப் பிராயத்திலும் அத்திமல்லர் விழித்திருந்து தனக்காகக் காத்திருப்பது, இராசேந்திரனுக்கு அவர்மீது மதிப்பையும் மரியாதையையும் மேலும் அதிகப்படுத்தின.



"இன்னும் காணவில்லையே எனக் கவலையுடன் இருந்தேன்......" என்று வரவேற்றார் அத்திமல்லர். இராசேந்திரன் உடைவாளைக் கழற்றி, அருகேயிருந்த மர வேரில் வைத்து விட்டு உட்கார்ந்தான்.

"மகாராசா, ஏதாவது பருகுவதற்குக் கொண்டு வரட்டுமா?" என்று காளிங்கன் கேட்டான். இராசேந்திரனுக்கு அப்போது நல்ல பசி. காளிங்கனின் கனிவைப் பாராட்டிவிட்டு, "காளிங்கா, என்னை மகாராசா, மகாராசா என்கிறாயே, நான் எந்த ஊருக்கும் அரசில்லையே?" என்று கூறி நகைத்தான். அத்திமல்லர் குறுக்கிட்டு, "அப்படிச் சொல்லாதே இராசேந்திரா! தாமரைக்கொடி, தாமரைக் கொடிதான். இன்றைக்கு இல்லாவிடில் இன்னொரு நாளைக்காவது அது பூத்துத்தான் தீரும். மன்னரைச் சந்தித்தாயா? அவரிடம் பேசினாயா?" என்று ஆவலுடன் கேட்டார் அத்திமல்லர்.

இராசேந்திரன், மன்னரைச் சந்தித்ததே விசித்திர அநுபவம் தான். சோழ நாட்டை அப்போது பரகேசரி அதிராசேந்திர சோழர் ஆளுகிறார் என்று யாருமே நம்பமாட்டார்கள். அவர் பட்டமேறிய மறுநாளே நோய்வாய்ப்பட்டுவிட்டார். பொது மக்கள் அவரை நேரே காண, அவர் சபையைக் கூட்டவேயில்லை. என்ன நோய் என்று மருத்துவர்களால் முடிவு செய்ய முடியவில்லை. அவரால் பேச இயலவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. தொண்டைக் குழலில் இலேசான காய்ச்சல் ஏற்பட்டு வந்தது. அரசியார் அவர் அருகே பல நாள்கள் அமர்ந்து கண்ணீர் விட்டு, அரசரின் உடல் சீராக வேண்டும் என்று ஆண்டவனைப் பிரார்த்திப்பாள். அதற்கும் ஆபத்து வந்தது. தளபதி பெரிய தன்மபாலர், அரசர் படுத்திருக்கும் கூடத்திற்குள் ஒருவரையும் நுழைய விடுவதில்லை. திருமந்திர ஓலை நாயகத்தைத் தவிர ஒருவரும் போகாத படி கட்டுக் காவலைத் திட்டப்படுத்தியிருந்தார். மன்னர் உடல் நிலை தேறாது, அவர் இறந்து விடுவார் என்று சிலர் கருதினர். அப்படி இறந்தால் சோழநாடு சந்ததியற்றுப் போய்விடும். அடுத்துப் பட்டம் ஏறும் உரிமை யாருக்குக் கிடைக்கும் என்று அவர்கள் கூடிப் பேசலாயினர். அரசர் உடல் சீராகுமுன்பே இளவரசர் யார் என்பதை மன்னர் முடிவு படுத்திப் பட்டஞ் சூட்டிவிட வேண்டும்-அப்படி இளவரசராக வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும் என்று சிலர் தீவிரமாகச் சிந்தித்தனர். மன்னரின் உடன் கூட்ட அதிகாரி களிடையே பிளவு. சோழ நாட்டு வணிகர்கள் இடையே

எதிர்ப்பு. தளபதியின் மனத்தில் ஒருவித எண்ணம். அரண்மனை அதிகாரிகளும், நாட்டில் உள்ள முக்கிய அதிகாரிகளும், சோழ நாட்டின் அப்போதைய நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, தங்கள் பொறுப்பைத் துஷ்பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர். பொக்கிஷத்தில் செல்வம் குறைந்ததால் வரிவசூலை அதிகப்படுத்தவே, மக்களிடையே வெறுப்பு அதிகமாகியது. இந்த நிலையில் இராசேந்திரன் மன்னரைச் சந்திக்க முனைந்தான். அவன் சந்திக்க முயன்ற போதுதான், இளைய தன்மபாலர் கொலையுண்ட சம்பவம் நகரத்தில் காட்டுத் தீ போல் பரவியிருந்தது. மாளிகையில் மன்னரிடமும் பலத்த காவலில்லை. தளபதி தன்மபாலர், தன் சகோதரர் வீட்டிலேயே அமர்ந்திருந்து கொன்றவர் யாராயிருக்கும் என ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார்.

பலகணியின் அருகே வளர்ந்திருந்த மரக்கிளையொன்றிலிருந்து மன்னர் படுத்திருக்கும் கூடத்திற்கு இராசேந்திரன் தாவித் தொத்திக் கொண்டு, மன்னர் படுத்திருக்கும் மஞ்சத்தைத் தேடிச் சென்றான். விசாலமான கூடத்தின் நடுவே, மண்டபத்தில் உயர்ந்த தலையணைகளின் மீது சாய்ந்தவாறு மன்னர் படுத்திருந் தார். மங்கிய விளக்குகள் இரண்டு மட்டும் வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தன.

இராசேந்திரன் மெல்ல நடந்து மன்னர் அருகே சென்றான். மன்னர் அதிராசேந்திர சோழ தேவர், அவனுடைய அம்மான் மகன் உறவு வேண்டும். அவனைவிட பத்துப் பதினைந்து வயது மூத்தவர் எனினும், இராசேந்திரன் அவருடன் உரிமையுடன் பழகிய காலம் ஒன்றிருந்தது. வேடிக்கைப் பேச்சும், தோழமை உணர்ச்சியும் ஒரு காலத்தில் அவர்கள் இருவர்களிடையே நின்று நிலவின.

மன்னர் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார் என்று அறிந்தவுடனேயே அவரை இராசேந்திரன் காண விரும்பினான். இப்படி அவரை மறைவான வழியாக வந்து பார்க்கும் நிலை ஏற்படும் என்று அவன் எண்ணவில்லை.

மன்னர் உறங்கிக் கொண்டிருக்கிறார் என்று அறிந்தான் இராசேந்திரன். 'நான் வந்தது கூட அவருக்குத் தெரியவில்லை' இராசேந்திரன் சுற்று முற்றும் பார்த்தான். அருகே பீடமொன்றில் பல ஓலைகள் எழுதப்பட்டிருந்தன. அவை சிற்றரசர்கள் பலருக்கு அழைப்பு விடுத்து எழுதப்பட்ட ஓலைகளாகும். அடுத்து, இளவரசர் பதவிக்குத் தக்கவரை முடிவு எடுக்க ஆலோசனை செய்ய வருமாறு சிற்றரசர்களை அழைத்திருந்தார் மன்னர். திருமந்திர ஓலைநாயகம் எழுத, மன்னர் தன் முத்திரையை அதில் பதித்திருந்தார். இராசேந்திரன் அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தபோதே யாரோ வரும் காலடியோசை கேட்கவே, இராசேந்திரன் பரபரப்புடன் விரைந்து சென்று அங்கே நின்ற பெருந்தூணின் நிழலில் மறைந்து கொண்டான்.



தளபதி தன்மபாலர் வேகமாக வந்தார். மன்னனின் கையொப்பமிட்டிருந்த ஓலைகளையெல்லாம் நொடியில் எடுத்து சேகரித்துக் கொண்டார். சென்று விட்டார். அவர் அப்படிச் செல்லும் போது ஓர் ஓலை கீழே வீழ்ந்து விட்டதைக் கவனிக்கவில்லை. இவ்வளவுக்கும் மன்னர் விழித்து எழுந்திருக்கவில்லை.

தளபதி சென்றவுடன் ஓர் பணியாள் அந்த இடத்திற்கு வந்தான். கண்ணாடிப் பாத்திரம் ஒன்றில் கரைத்து வைக்கப்பட்டிருந்த பச்சிலைச் சாற்றில் சிறிது ஒரு கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு மன்னர் அருகே சென்று, மெல்ல ஒலியெழுப்பினான். மன்னர் விழித்துக் கொண்டிருக்க வேண்டும். பணியாள் மெல்ல மெல்ல அந்தச் சாற்றை அவர் வாயில் ஊற்றிவிட்டு அங்கிருந்து சென்றான்.

மன்னர் விழித்துக் கொண்டு விட்டார். இராசேந்திரன் மெல்ல அவர் அருகே சென்றான். அந்த மங்கிய ஒளியில் அவனை அடையாளம் கண்டு கொள்ளச் சற்றுச் சிரமப்பட்டாரவர். இராசேந்திரன் இன்னும் அவரருகே வந்தான். விளக்கைச் சற்றுத் தூண்டி விட்டான்.

இப்போது மன்னர், அவனைப் புரிந்து கொண்டுவிட்டார். அவனை வரவேற்பதற்கு அடையாளமாகக் கையை உயர்த்தினார். அவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. இராசேந்திரன் அவர் கரங்களை மெல்லத் தொட்டான். கரம் சுட்டது. தன் இதயத்தில் இருப்பதை வெளியே தெரிவிக்க இயலாத நிலை. அவனை அவர் என்ன கேட்க நினைத்தாரோ!

இராசேந்திரன் நிலையைப் புரிந்து கொண்டான். அருகே இருந்த ஓலையொன்றை எடுத்து எழுத்தாணி கொண்டு, "தங்களை அபாயம் சூழ்ந்திருக்கிறது. யாரையும் நம்பாதீர்கள். சோழ நாட்டிற்கே ஆபத்து" என்று எழுதிக் காட்டினான். அவர் படித்தார். அவர் முகத்தில் எந்தவித மாறுதலுமில்லை.

இராசேந்திரன், அருகே இருந்த பீடத்தைக் காட்டி மெல்லிய குரலில், அங்கிருந்த ஓலைகள் தளபதியால் எடுத்துச் செல்லப் பட்டன என்று கூறினான். கீழே விழ்ந்து கிடந்த ஓலையையும் எடுத்துக் காட்டினான்.

மன்னன் மனத்தில் கலவரம் ஏற்பட்டிருக்க வேண்டும். அவர் கரங்கள் நடுங்கின. அருகே இருந்த சித்திர வேலைப்பாடு டைய பெட்டியொன்றைச் சுட்டிக்காட்டி, அதைத் திறக்குமாறு சைகை செய்தார். இராசேந்திரன் பெட்டியைத் திறந்தான். அதில் ஏதுமில்லை. ஏதுமில்லாததைத் தெரிவிக்கவே, மன்னர் மனத்தில் கலவரம் இன்னும் அதிகமாகிவிட்டது என்று தெரிந்தது. அந்தப் பெட்டியில் என்ன இருந்தது என்று இராசேந்திரனால் அறிந்து கொள்ள முடியவில்லை. அதைப்பற்றி அறிய முற்படுவதற்குள் கூடத்தின் வெளியே காவலர் சிலர் பேசிக்கொண்டே வரும் அரவம் கேட்டது. இராசேந்திரன் மீண்டும் முன்பு மறைந்து நின்ற இடத்திலேயே மறைந்து கொண்டான். இப்போது காவலர்கள் இருவர் அரசரின் தலைப் பக்கத்திலும், ஒருவர் வாயிற் கதவின் அருகிலுமாக நின்று கொண்டனர்.

இராசேந்திரனால் பிறகு மன்னரை நெருங்க முடியவில்லை. காவலர்கள் கண்களில் தென்படாமல் நிழலோடு நிழலாய்ப் பலகணி வழியே கீழே இறங்கிச் சென்று விட்டான். மன்னர் உள்ளத்தை அறிந்து கொள்ளாமல் செல்வதில் அவனுக்கு வேதனைதான். ஆனால் நந்தவனத்தில் மதுராந்தகி உலவுவதைப் பார்த்தவுடன், அவன் வேதனையை மறந்தான்.

இராசேந்திரன் கூறிய இந்தச் செய்தியைக் கேட்டவுடன் அத்திமல்லர் பரபரப்புடன், "இராசேந்திரா! நீ தவறொன்று செய்து விட்டாய்?" என்றார்.

"மதுராந்தகியைச் சந்தித்ததைக் கூறுகிறீர்களா?"

"இல்லை, இல்லை... மன்னருக்கு ஓலையில் ஆபத்து. ஆபத்து என்று எழுதிக்காட்டினாயே! அந்த ஓலையை அங்கேயே விட்டுவிட்டு வந்து விட்டாய்... அல்லவா?"

அத்திமல்லர் இப்படி கேட்டவுடன், கையை உதறினான் இராசேந்திரன். "இப்போது என்ன செய்வது? அந்த ஓலை பிறர் கைக்குச் சிக்கிவிட்டால்..." என்று பதறினான்.



"கவலைப்படாதே! நீ எழுதினாய் என்று யார் அறிவார்கள். ஹூம்... மன்னருக்கு நிலையைப் புரிய வைத்துவிட்டாய்..." என்றார் அத்திமல்லர்.

"மன்னர் சித்திரப் பெட்டி ஒன்றைத் திறக்கச் சொன்னார்... அதில் ஒன்றுமே இல்லை. ஒன்றுமில்லாதது காண அவர் வேதனையடைந்தார்... அந்தப் பெட்டியில் என்ன இருந்திருக் கும்?" என்று கேட்டான் இராசேந்திரன். அத்திமல்லரும் யோசித்தார். இப்போது காளிங்கன் குறுக்கிட்டு, "தந்த நிறப் பெட்டிதானுங்களே?" என்று கேட்டான்.

"ஆமாம்..."

"வீரராசேந்திர மகாராசர், முன்பு அந்தப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு சித்திரமண்டபத்துக்குப் போவதைப் பார்த்திருக்கிறேன். அப்போது படகில் அவரும், முதல் மந்திரியும் மட்டும் இருப்பர். அதிலிருந்து ஓலையொன்றை எடுத்துப் படிக்கு மாறு சொல்வார். அந்தப் பெட்டியாகத்தானிருக்கவேண்டும்......" என்றான் பொருள்படக் காளிங்கன். அத்திமல்லரும், இராசேந்திர னும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"பட்டத்துரிமையை மன்னர் நிலைநாட்டி எழுதப்படும் திட்டமும் அந்தப் பெட்டியில் இருக்கும். காளிங்கன் கூறுவது உண்மையே. இப்போதும் அந்தப் பெட்டியில் அடுத்துப் பட்ட மேறும் உரிமையை மன்னர் உறுதிப்படுத்தி ஓலையெழுதி அந்தப் பெட்டியில் வைத்திருப்பார்..." என்றார் அத்திமல்லர்.

"பெட்டியிலிருந்த ஓலை எங்கே?" என்று கேட்டான் இராசேந்திரன்.

"சிற்றரசர்களுக்கு எழுதப்பட்ட ஓலைகளை எடுத்துச் சென்றவர், அதையும் எடுத்துச் சென்றிருக்கலாம்" என்றார் அத்திமல்லர்.

"எல்லாம் மூடுமந்திரமாகவும், குழப்பமாகவும் இருக் கின்றன..." என்றான் இராசேந்திரன்.

"மூடுமந்திரத்தையும், குழப்பத்தையும் நீக்க ஒரே வழி... நீ இந்த நாட்டின் அரசராவது ஒன்றுதான்..." என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார் அத்திமல்லர்.

“ஆமாம், மகாராசா! குடிமக்கள் அப்போதுதான் பிழைப் பார்கள்” என்றான் காளிங்கன்.

இராசேந்திரன் மெல்ல நகைத்து, “சோழ நாட்டின் சிங்கா தனமா! வேடிக்கைதான். எனக்கு வேண்டாம். இப்போதுதான் நான் சபதம் செய்து வந்தேன். வேங்கியின் அரியணையைப் பெறாமல் நான் வேறெதிலும் கவனம் செலுத்த மாட்டேன்...” என்றான்.

“அப்போது நீ வேங்கிக்குச் செல்ல முடிவு செய்து விட்டாய் என்று சொல். உனது முடிவை எதிர்பார்த்துத்தான் நான் இங்கே காத்திருக்கிறேன். நான் ஒன்று சொல்கிறேன் இராசேந்திரா! முதலில் சோழ நாட்டு அரியணையைக் காப்பாற்று. பிறகு இந்தப் படைகளைக் கொண்டு வேங்கியைப் பிடிக்கலாம்...” என்றார் அத்திமல்லர்.

“ஐயா, என்னை மன்னித்து விடுங்கள். தாங்கள் செய்யும் பேருதவிக்கு எனது நன்றியை எப்படித் தெரிவிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. என் முதல் கடமை, என் தாய்நாட்டின் விடுதலையே! சோழ அரியணையைப் பற்றி நினைக்காமலிருக் கும்போதே நான் போட்டிக்கு வந்து விடுவேனோ என்று என்னைச் சிறைப்பிடிக்க முனைகிறார்கள்; உண்மையிலேயே நான் விரும்பி விட்டாலோ...?” என்று இராசேந்திரன் கூறும்போது, “உண்மை யிலேயே நீ விரும்பவேண்டும் என்பதற்காகத்தானே, இராசேந்திரா உனக்குச் சித்திர மண்டபத்திலுள்ள சித்திரங்களைக் காட்டினேன். இராஜராஜ சோழர் வளர்த்த இந்த நாடு அழிந்துபோக விடுவதா?” என்று அத்திமல்லர் பேசினார்.

“ஐயா, எனக்கு வந்திருக்கும் செய்தியைத் தாங்கள் அறிந்து கூடவா இப்படிச் சொல்கிறீர்கள்-பெற்ற என் தாயைக் கொடுமைப் படுத்துகிறாராம் என் சிறிய தந்தை. அதைக் கேட்டுக்கூடவா என்னை அமைதியாக இருக்கச் சொல்கிறீர்கள். நான் உடனே புறப்பட வேண்டும். எனக்கு ஆசி கூறி அனுப்புங்கள்...” என்று இராசேந்திரன் உணர்ச்சி நிறைந்த குரலில் கூறினான்.

அத்திமல்லர் சற்று நேரம் ஏதும் பேசாமல் இருந்தார். இராசேந்திரனை என்ன கூறியும் தடுக்க முடியாது என்று அவர் அறிவார்.



மேலும் சோழ நாட்டைவிட, வேங்கியில் அவன் உரிமைக் காகப் போரிட வேண்டியதுதான் அதிகமாக இருக்கிறது. அதற்குள் சோழ நாட்டில் வேறுவித நிலை ஏற்பட்டுவிட்டால்...?

சந்திரன் மேற்குத் திசையில் மெல்ல இறங்கிக் கொண் டிருந்தான். அத்திமல்லர் பெருமூச்சு விட்டார்.

“சரி, இராசேந்திரா... இரவின் கடைசி சாமத்திலாவது நாம் சற்று கண்ணயர்வோம். இன்று இளைப்பாறினால்தானே நாளை பயணத்தைத் தொடங்கலாம்” என்றார்.

“உறக்கமா? ஐயா, தங்களிடம் கூற வேண்டியவை ஏராள மாக இருக்கும்போது, நான் எப்படி உறங்கமுடியும்? நானும் உறங் கப் போவதில்லை, தங்களையும் உறங்கவிடப் போவதில்லை” என்று கூறி நகைத்தான் இராசேந்திரன்.

காளிங்கன், உட்கார்ந்தபடியே மரத்தில் சாய்ந்து தூங்கி விட்டான்.

இராசேந்திரன் சொல்வதைக் கேட்க அத்திமல்லர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

## 29. புதிய பதவி

அத்திமல்லரும், இராசேந்திரனும் விடியவிடியப் பேசிக் கொண்டிருந்தனர். விடிவெள்ளியும் முளைத்துவிட்டது. மாந் தோப்புப் பறவைகள் மெல்ல விழித்துச் சிறகை அடித்துக் ‘கீச் கீச்’ சென்று குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டன. பூங்காற்று வீசத் தொடங்கி விட்டது.

அத்திமல்லரும், இராசேந்திரனும் எழுந்தனர். மரத்தினடி யில் கையைத் தலையணையாக வைத்து உறங்கிக் கொண் டிருந்த காளிங்கனை மெல்லத் தட்டி எழுப்பினர்.

“ஐயா வெள்ளென எழுந்துட்டீங்களா?” என்று காளிங்கன் கண்களைத் துடைத்துக் கொண்டுகேட்டான்.

“ஆமாம் காளிங்கா! நான் வேங்கிக்குப் புறப்பட்டு விட்டேன். இங்கே மிகவும் கவனத்துடன் இரு... ஐயா அவ்வப் போது வருவார்...” என்று இராசேந்திரன் கூறினான்.

காளிங்கன் கண்களில் நீர் தளும்பியது. "மகாராசா... நானும் உங்களுடன் வருகிறேன்... இங்கே இருந்து நான் என்ன செய்யப் போகிறேன்? உத்தரவு கொடுங்கள் மகாராசா" என்று தழுதழுத் தான். அத்திமல்லர் மெல்ல நகைத்தார்.

"ஆமாம் ஐயா, நான் இங்கிருந்து என்ன செய்யப் போகி றேன்... நீங்கள்தான் சொல்லுங்களேன்..." என்று அத்திமல்லரை நோக்கிக் கேட்டான்.

"என்ன செய்யப் போகிறாயா? எத்தனையோ வேலை இருக் கிறது காளிங்கா. இந்தப் படகுத் துறையில் இருந்து கொண்டு நீ செய்யக்கூடியவை பலப்பல இருக்கின்றன."

"படகுத் துறைக்கு ஒரு முழுக்குப் போட விரும்புகிறேன் ஐயா!"

"அதுதான் தினம் ஏரியில் மூழ்குகிறாயே..."

"அதைச் சொல்லவில்லை ஐயா, எனக்கு இந்தப் படகுத் துறை பிடிக்கவில்லை. முன்புபோல் வருமானமும் இல்லை."

"இனி வரும் பார். நான் சொல்வதுபோல் நடக்கும் பார். இப்போது மகாராசா மட்டும் அவசரமாகச் செல்கிறார். அவருக் குக் குதிரையை நான் தேடிக் கொடுப்பது பிரம்மப் பிரயத்தனமாக இருக்கும் போலிருக்கிறது. உனக்கு எங்கே தேடுவது...?"

"குதிரையே கிடைத்தாலும் அவருக்கு ஏறத் தெரியாது சாமி...! இவர் போனார்ன்னா எனக்கு மட்டும் இங்கே என்ன வேலை? நானும்தான் வருவேன்... மகாராசா என்னையும் அழைத் துப் போங்கள்....." என்று காளிங்கன் மனைவி கோமதி திடீரென்று விழித்துக் கொண்டு, இவர்கள் பேசிக் கொள்வதைக் கேட்டு அந்த இடத்துக்கு வந்தாள்.

"கோமதி, நீ சும்மாயிருக்க மாட்டாயா? நீயும் அம்மாவும் இங்கேயே இருங்கள். நான் சென்று விரைவில் திரும்பி விடுகி றேன்..." என்று கோமதியை கடிந்து கொண்டான் காளிங்கன்.

இராசேந்திரன், காளிங்கனின் முதுகைத் தட்டிக் கொடுத்து, "காளிங்கா! உன் அன்புக்கு நான் என்ன கைம்மாறு செய்வது என்று தோன்றவில்லை. உம், இருக்கட்டும்..." என்று மெல்லிய குரலில் கூறினான்.

"மகாராசா..."



"மகாராசா என்று நீ அடிக்கடி கூப்பிடுகிறாய்... நான் மகாராசா வாகத்தான் வேண்டும் என்பதற்காகத்தான் வேங்கிக்குப் போகிறேன். அங்கே என் உரிமையை நிலைநாட்டப் போர் புரிய வேண்டுமோ... என்னென்ன துன்பங்களை ஏற்றிட வேண்டுமோ... காளிங்கா, நீ இங்கேயே இரு. உனக்கு நான் சில பணிகளை இட்டுச் செல்கிறேன். திருவெண்காட்டு நங்கை அம்மையார் வீட்டில் சந்திரகுமாரி இருக்கிறாள். அவளுக்கு எந்தவித இடையூறும் நேராமல் பார்த்துக் கொள். ஆடவல்லானைச் சந்தித்தால் விவரம் கூறுவான்" என்று கூறவும், அத்திமல்லர் குறுக்கிட்டு, "அந்தக் காரியத்துடன் மாளிகையில் மதுராந்தகி எனும் அரசகுமாரி இருக் கிறாள், அவர்களையும்..." என்று கூறவும், வீரன் இராசேந்திரன் முகத்தில் வெட்கத்தின் சாயல் படர்ந்தது.

அத்திமல்லரும், இராசேந்திரனும் செல்லும் பாதையையே காளிங்கன் கண்களில் நீர்மல்க நின்று பார்த்துக் கொண்டிருந் தான். கீழ்த் திசையில் செங்கோடுகள் தோன்றத் தொடங்கி விட்டன. அவர்கள் சென்று மறைந்த சிறிது நேரத்திற்கெல்லாம், "காளிங்கா, காளிங்கா" என்ற குரல் கேட்டது.

காளிங்கன் குடிசையின் வெளியே வந்தான். ராஜ ஹம்சப் படகு ஓட்டும் ராக்கியப்பன் நின்று கொண்டிருந்தான்.

"என்ன, ராக்கண்ணே, காலையிலே..."

"காளி அண்ணே, இப்படிக் கொஞ்சம் வாரியா....... ஒரு விஷயம் பேசலாம்..."

"இங்கேதான் சொல்லேன்..."

"ஒண்ணும் பெரிய விசயமில்லை. எங்க ஊரு சிதம்பரம் கிட்டே சுத்தமல்லின்னு உனக்குத் தெரியுமே..."

"ஆமாம்..."

"எங்க ஊருக்கு அவசரக் காரியமா நான் போகிறேன். வர பத்துப் பதினைந்து நாள்களாகும். அதுவரையில் நீதான் ராஜ குடும்பத்துப் படகை ஓட்டணும்."

ராக்கியப்பன் இவ்வாறு கூறவும், உடனே மறுமொழி கூறாது காளிங்கன் மௌனமாயிருந்தான். ராக்கியப்பன் மேலும் தொடர்ந்து, "என்ன யோசிக்கிறே... இது நல்ல சந்தர்ப்பம் காளி.

மாளிகையோடு உனக்குத் தொடர்பு இருந்தா ரொம்ப நல்லது. பணம் காசு, செல் வாக்கு எல்லாம் ஏற்படும்'' என்று கூறினான்.

''நீ என்னிக்குத் திரும்பி வருவே...?'' என்று காளிங்கன் கேட்டான்.

''ரொம்ப சீக்கிரம் வந்து விடுவேன் காளி. வேறே ஆளு பார்த்து வைக்கலேன்னா நான் ஊருக்குப் போக அநுமதி கொடுக்க மாட்டாங்க காளி...'' என்று குழைந்தான் ராக்கி.

''அதுக்கு நான் என்ன செய்யணும்...?''

''இப்பவே வா, அதிகாரிகளிடம் அழைத்துப் போய் சொல்லி விடுகிறேன்......'' என்றான் ராக்கி. காளி சற்று யோசித்தான். பிறகு, ''நீ போ ராக்கியண்ணே... நான் குளித்து விட்டு வருகிறேன்...'' என்று கூறவும், ''கட்டாயம் வந்து விடு காளி. இது உனக்கு அதிர்ஷ்ட காலம். நான் கோயில் வாசலில் காத்திருக்கிறேன். நீ வந்தவுடன் அதிகாரியிடம் அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறிச் சென்றான்.

காளிங்கனுக்கு ஒருவிதத்தில் களிப்பே! மாளிகையுடன் தொடர்பு இருந்தால், அரசகுமாரியைச் சந்திக்கலாம். சந்திர குமாரியை நகரத்தில் போய்ப் பார்க்கலாம் என்ற எண்ணத்தில் குளிக்கச் சென்றான்.

**கா**ளிங்கன் எதிர்பார்த்ததுபோல், ராக்கியப்பன் கோயில் வாசலில் வாழைப்பழத்தைத் தின்று கொண்டிருந்தான். காளியைப் பார்த்தவுடன். ''வா அண்ணே, வா'' என்று கூறி அவனை அழைத்துச் சென்றான், அதிகாரியிடம்.

''ஓகோ, நீதான் காளிங்கனோ!'' என்று வரவேற்றார் பெரிய தன்மபாலர். பெரிய தன்மபாலரை காளிங்கன் எதிர்பார்க்கவில்லை. ராஜப் படகு ஓட்டத் தன்னை நியமிக்கும் அதிகாரியிடம் ராக்கி யப்பன் அழைத்து வருவான் என எண்ணியவனுக்குப் பெரிய தளபதி எதிரே இருப்பது வியப்பை அளித்தது. மீண்டும் கம்பீர மான- ஆனால் கடுமையான குரல் எழுந்தது.

''கேட்டதற்கு மறுமொழி கூறு. நீதான் காளிங்கனோ?''

''ஆமாமுங்க...''

''எங்கே வந்தாய்?''



தளபதி இப்படிக் கேட்டவுடன் காளிங்கன் திகைத்தான். ''என்னங்க... நீங்கதானே வரச் சொன்னீங்க. ராஜ ஹம்சப் படகு ஓட்ட வேண்டும் என்றீர்களாம்...'' என்று கூறியவாறு, ராக்கியப்பன் இருக்கிறானா என்று பார்க்கத் திரும்பினான். அங்கே ராக்கியப்பனைக் காணவில்லை.

தன்மபாலர் கடகட வென்று நகைத்து, ''ராஜ ஹம்சப் படகு ஓட்டுவதற்கா! ஆகா! அப்படியே ஓட்டலாம். யாரங்கே?'' என்று கையைத் தட்டினார். இரு வீரர்கள் வந்து வணங்கினர்.

''ராஜ ஹம்சப் படகு ஓட்ட வேண்டுமாம். இவரை அழைத் துச் செல்லுங்கள்'' என்று ஏளனமான குரலில் கூறவும், காளிங்கன் ''இவரை'' என்ற வார்த்தையின் அழுத்தத்தை உணர்ந்து திகைத்தபோதே, ''வா, அப்பா... படகு ஓட்டலாம்'' என்று கூறி வீரர்கள் அழைத்தனர். காளிங்கன், அவர்களைப் பின் தொடர்ந் தான். பெரிய வீதி கடந்து, குறுகிய வீதியில் நுழைந்து, பெரும் மதில் சுவர் கொண்ட ஓரிடத்தில் போய் நின்றனர்.

மதிலின் வாயிலில் இருந்த பெரிய கதவுக்கு நடுவில் இருந்த பிள்ளைக் கதவு திறக்கப்பட்டது. ''போ, அப்பா காளிங்கா... உனக்கு வேலை தருவார்கள்'' என்று கூறினர் அழைத்து வந்த வீரர்கள். பிள்ளைக் கதவு மூடப்பட்டது.

காளிங்கனை ஒரு முரட்டுக் கரம் பரபரவென்று இழுத்துச் சென்று ஓர் அறைக்குள் தள்ளியது. இரும்புக் கம்பியால் ஆன அந்தக் கதவு படார் எனச் சாத்தப்பட்டது.

ஏரிக்கரை குடிசையில் கோமதி, தன் கணவன் விரைவில் திரும்பி வருவான் என்று கம்பங் கூழும், முருங்கைக்காய்க் குழம்பும், அகத்திக்கீரைச் சுண்டலும் செய்து வைத்துக் காத்திருந் தாள். வெயில் ஏறி வந்ததேயொழிய, அவள் விழிகள் காளிங்கனைக் காணவில்லை.

அந்த நேரத்தில் அத்திமல்லரும், இராசேந்திரனும் சிதம்பரம் செல்லும் பாதையில் குதிரைமீது விரைந்து சென்று கொண்டிருந்தனர். வழியே இருவரும் ஏதும் பேசவில்லை. சூரியன் உச்சி வேளையை அடையும்போது, அவர்கள் வீரநாராயணப் பேரேரியின் கரையை வந்தடைந்தனர். குதிரையை நிழலில் நிறுத்திவிட்டு இருவரும் சற்று இளைப்பாறினர்.

"வறட்சியான காலத்தில்கூட இந்த ஏரியில் தளும்பும் நீரைப் பார்த்தீர்களா?" என்றான் இராசேந்திரன்.

அத்திமல்லர் நகைத்தார். "உன் பாட்டனுக்கு முப்பாட்டன் வெட்டிய ஏரி இது. போர்களில் அடையும் வெற்றி மட்டும் அவர் குறிக்கோள் இல்லை. கடல் போன்ற ஏரி வெட்டினார். அதோ தொலைவில் தெரிகிறதே... சிதம்பரம் கோயில் விமானத்துக்குப் பொன் வேய்ந்தார். வருகிறாயா... சிதம்பரம் போய் ஆடலரசனைக் கண்டு வணங்கிச் செல்வோம்" என்றார்.

"எனக்கும் ஆசைதான்... ஆனால் முன்பு நீங்கள் கூறியது போல், திருக்கோவலூரை இரவுக்குள் அடைந்தால்தான் இளைப் பாறி வேறு குதிரையைப் பெற்றுப் புறப்படலாம். சிதம்பரம் சென் றால் இன்று மாலை முழுமையும் அங்கேயே கழிக்குமாறு நேர்ந்து விடும்" என்றான். 'சரி' என்பதற்கு அடையாளமாக அவரும் தலையசைத்தார்.

"நான் அருகேயுள்ள இடத்திற்குச் சென்று உணவு ஏதாவது பெற்று வருகிறேன். இங்கேயே உண்டு இளைப்பாறிப் புறப்படு வோம்" என்று கூறி, இராசேந்திரன் அருகேயிருந்த கிராமத்தை நோக்கிச் சென்றான்.

அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் குதிரையின் குளம்படியோசையும் எழுந்தது. பல குதிரைகள் வருவது தெரிந் தது. ரதம் ஒன்றும் வந்து கொண்டிருந்தது. அவை கிளப்பிய புழுதியில், ரதத்தின் மீது ஆடி அசைந்த கொடி என்னவென்று சரிவரத் தெரியவில்லை.

## 30. உள்ளத்தில் சலனம்

திருவெண்காட்டு நங்கையின் வீட்டில், பொழுது புலரும் முன்பே இனிய இசையின் ஒலி எழும். திருஞானசம்பந்த அடிகள் பாடிய பண்ணும், திருநாவுக்கரசரடிகளின் இனிய பதிகமும் அந்த இல்லத்தினின்று ஒலிக்கும். திருவெண்காட்டு நங்கை அந்தத் தள்ளாத வயதிலும் பொழுது புலரா முன்னர் விழித்தெழுந்து நீராடி, வெண்ணீரணிந்து, பூசையறையில் மஞ்சத்தில் வைக்கப்பட் டிருந்த நடராசர் திருவுருவத்திற்கு மலர் அணிவித்து, தீபம், தூபம்



காட்டி, தனது இனிய குரலில் பாடுவாள். ஆடவல்லானும் உடன் எழுந்து பாட்டிக்கு உறுதுணையாக பூசைக்கு வேண்டியவற்றை எடுத்து வைத்து உதவுவான். பாட்டியாரின் இனிய பாடலுக்குப் பிறகு ஆடவல்லானின் குரல் ஒலிக்கும்.

சந்திரகுமாரியை, அன்று ஆடவல்லானின் இனிய குரல் எழுப்பியது. இரவு நெடுநேரம் விழித்திருந்து இரவின் பிற்பகுதி யின் நல்ல உறக்கம் வரும்போதில், அந்த இனிய பாடல் ஒலி அவளை விழித்தெழச் செய்தது. ஒருகணம், தாம் எங்கே இருக்கி றோம் என்று அவளுக்குத் தோன்றவில்லை. பிறகு சிறிது சிறிதாக நினைவுக்கு வந்தது. எல்லாம் கனவு போல் அவளுக்குத் தோன் றின. பல்லக்கில் இருந்தவளை, இராசேந்திரன் அழைத்து ஓடிவந் தது. இந்த அம்மையாரின் இல்லத்தில் தங்குமாறு செய்தது எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின.

இராசேந்திரன்-அந்த இனிய முகத்தை நினைவுபடுத்திக் கொண்டாள். அவரை மீண்டும் எப்போது காண்போம்? அவர் இளவரசராமே... ஹூம்... ஆடவல்லானின் இன்னிசை அவளை நிலைகொள்ளாமல் எழுந்து வரச் செய்தது. பூசையறையில் வாயிற்படி கதவருகே நின்று கொண்டு திருநீரணிந்த இருவரை யும் கண்டாள். தன் அலங்கோல நிலை. உறக்கம் கண்ணை இழுக்கும் தோற்றம். நாமும் கிணற்றங்கரைக்குச் சென்று இரண்டு குடம் நீரை முகந்து தலையில் ஊற்றிக்கொண்டால் என்ன?

சந்திரகுமாரி கிணற்றங்கரைக்கு மெல்லத் தட்டுத்தடு மாறிச் சென்றாள். இராட்டையின் ஓசை கேட்டது.

"ஹூஹூம்... கூடாது. இந்த நேரத்தில் நீ குளித்தால் உன் உடம்புக்கு ஒத்துவராது" என்ற குரல் கேட்டது. சந்திரகுமாரி திரும்பிப் பார்த்தாள். திருவெண்காட்டு நங்கை நின்று கொண் டிருந்தாள். "பல்லை வேண்டுமானால் துலக்கிவிட்டு வா..." என்று கூறிச் சென்றாள்.

வாழை இலையில் சூடான வெண்பொங்கல்... ஆவி பறந்து கொண்டிருந்தது.

"ஆறிவிடப் போகிறது, எடுத்துக்கொள் குழந்தாய்..." என்றாள் மூதாட்டி. ஆடவல்லானும் வெண்பட்டாடை உடுத்தி விட்டு ஈரத் துணியை உலர்த்திக் கொண்டிருந்தான். ஆடவல்லா

னும் அழகாய்த் தானிருக்கிறான். சிவந்த மேனி, தோள்வரை தொங்கும் மீசை, கழுத்தில் உருத்திராட்சம், காதில் குண்டலம், நெற்றியில் விபூதி, நடுவே குங்குமம், கண்களிலே தனிவித ஒளி.

சந்திரகுமாரியின் உள்ள அலைக்கு ஓய்வே கிடையாதா? அது எப்போதும் மோதிக்கொண்டேதான் இருக்குமா? சந்திரகுமாரி கடைக் கண்ணால் ஆடவல்லானைப் பார்த்தாள்.

அவனும் இவ்வளவுநேரம் தன்னையேதான் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று தெரிந்தவுடன், சந்திரகுமாரியின் முகத்தில் நாணம் விர்ரென்று பரவியது.

"இவ்வளவு அதிகாலையிலே எழுந்து இவ்வளவும் எப்படிச் செய்துவிடுகிறீர்கள்?" என்று சந்திரகுமாரி, மூதாட்டியை வினவினாள்.

"உறங்காமல் விழித்திருந்து, எப்போதும் அவன் மலரடியையே நினைத்து, அவனுக்குத் தொண்டு செய்து வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்பது என் இலட்சியம்....." என்று மூதாட்டி கூறினாள்.

"எனக்கும் அந்த நல்ல பழக்கங்களைக் கற்றுக் கொடுங்கள் தாயே! எனக்குத் தாய் இல்லை, தந்தை இல்லை... இந்த நகரத்தில் நான் ஓர் அனாதை..." என்று சந்திரகுமாரி கூறும்போது, அவள் குரல் தழுதழுத்தது. விரல்கள் சூடு ஆறின. பொங்கலின் வரம்பைத் தடவின. வரம்பிலே ஆறியிருந்தது. ஆனால் நடுவே சூடு தணியவில்லையே. அதேபோல்தான் அவள் இதயக் கனல், இன்னும் கொழுந்து விட்டல்லவா எரிகிறது? என்ன செய்வது என்ற முடிவு தோன்றாமல் குழப்பம் அன்றோ ஏற்படுகிறது.

"குழந்தாய்... உனக்கு நல்ல பழக்கங்கள் ஏற்படவேண்டும் என்றுதானே ஆண்டவன் இங்கு கொண்டு சேர்ப்பித்தான். இளவரசர் இராசேந்தரன் உன்னை மிகக் கவனமாகப் பாதுகாக்கக் கூறியிருக்கிறார். உனக்கு ஒருவிதக் குறைவுமில்லை குழந்தாய். இது உன் வீடு. ஆடவல்லான் உன்னைக் கோயிலுக்கு அழைத்துச் செல்வான். சோழீசரைத் தினமும் வணங்கு. உனக்குக் கைவரப் பெற்றிருக்கும் பரதத்தை அவன் சந்நிதியில் ஆடு. அவன் அருள் பெருகும்..." என்று திருவெண்காட்டு நங்கை கூறியபோது, சந்திரகுமாரியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் உதித்தது.



அன்று மாலை ஆடவல்லானும் சந்திரகுமாரியும் கோயிலிலிருந்து திரும்பி வரும்போது, ஆடவல்லான் பெருமகிழ்ச்சியோடு கூறினான்: "பாட்டி, நகரத்தில் எவ்வளவோ குழப்பம் இருந்தாலும் வழக்கமான காரியங்கள் ஏதும் தடைப்படவில்லை. கோயிலில் இராசேந்திர தேவ உடையார் திரு நட்சத்திர விழாவில் சந்திர குமாரி நாட்டியத்திற்கு ஏற்பாடு செய்து விட்டேன். வழக்கமாக வரும் கச்சிக் கோயில் கனகவல்லி வரமுடியாது என்று சொல்லி விட்டாளாம். அதனால் விழா மூளியாய் விடுமா?" என்றான்.

சந்திரகுமாரி, ஆடம்பரமற்ற உடை அணிந்திருந்தபடியால், அவளை எவராலும் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. கோயிலுக்குச் சென்றாள். திரும்பினாள். கோயில் இறையகத்தில் இருக்கும் ஆண்டவன் மீது அவள் கவனம் செல்வதில்லை. ஆடவல்லானின் அழகிய தோற்றமே அவள் இதயத்தில் மோதிக் கொண்டிருந்தது. நடந்து வரும்போது அவன் ஸ்பரிசம் இலேசாக அவள் மீது தெரிந்தோ தெரியாமலோ படுவதை அவள் விரும்பினாள். அவன் கரங்களைத் தன் விரல்களால் மெல்லத் தொட்டுப் பார்க்க முடியாதா என்றும் அவளுக்கு ஆவல் ஏற்பட்டது.

திருவெண்காட்டு நங்கைக்கு மிகுந்த மகிழ்ச்சியே ஏற்பட்டது. சில தேவாரப் பாடல்களைக் கூறி, அவற்றிற்குத் தக்கபடி அபிநயங்களைச் செய்யுமாறு யோசனை கூறினாள். ஆடவல்லானும் அதற்கு உதவி புரிந்தான். பாடல்களின் பொருளைக் கூறி, அதற்குத் தக்க முகபாவங்களை எப்படிச் செய்ய வேண்டும் என்று ஆடவல்லான் விளக்கினான்.

"உங்களுக்கும் அபிநயம் வரும் போலிருக்கிறதே..." என்று குமிழ்ச் சிரிப்புடன் கேட்டாள் சந்திரகுமாரி.

சந்திரகுமாரியுடன் பேசுவதென்றால், ஆடவல்லான் உள்ளத்தில் தனிவித மகிழ்ச்சி பொங்கியது. பாட்டியார் இருக்கும்போது அடக்கமானவன்போல் இருந்த ஆடவல்லான், பாட்டி வெளியே சென்றிருக்கும்போது சந்திரகுமாரியுடன் கலகலப்பாகப் பேசத் தொடங்கினான்.

"என் பெயர் என்ன தெரியுமா?" என்று அவன் கேட்டான். சந்திரகுமாரி மலர விழித்துப் பின் தலையைக் குனிந்து கொண்டு மெல்லச் சிரித்தாள். ஆடவல்லான் மீண்டும் "என் பெயர் ஆடவல்லான்தானே? எனக்கும் ஆடுவதற்கு வரும் என்பது

பெயரிலேயே தெரிகிறதே. ஆண்கள் ஆடப் பிறந்தவர்கள். அதனால் தான் நடனத் தெய்வமே ஆணாகத் திகழ்கிறது'' என்றான்.

''நான் இங்கு வந்த பிறகுதானே நடராசன் உருவத்தையே பார்த்தேன். என்ன அழகிய தோற்றம். அவர் ஒரு காலைத் தூக்கி நிற்கும் அற்புதமே அற்புதம்'' என்று கூறி, மெல்ல வலது காலைத் தூக்கி நிற்க முயன்றாள்.

ஆடவல்லான் இப்போது சந்திரகுமாரியைத் தொட்டு, நடராசன் சிலையிலுள்ளது போன்ற பாவத்தைச் சொல்லிக் கொடுக்க நேரிட்டது. ஆடவல்லான் உடல் சிலிர்த்தது. ஓர் இளமங்கையின் உடல் இவ்வளவு மென்மையானதா? அவன் கொன்றை மலரைப் பறித்திருக்கிறான். முல்லையையும், தாமரையையும் எடுத்து அர்ச்சனை செய்திருக்கிறான். அம்மலர் இதழ்களைவிட சந்திரகுமாரியின் கரங்கள் மென்மையாக இருக்கின்றன.

''எப்படி, இது போல் கரத்தை வளைத்தா?'' என்று மீண்டும் கேட்டாள் சந்திரகுமாரி, ஆடவல்லானின் ஸ்பரிச உணர்வை மீண்டும் பெற விரும்பி. ஆனால், ஆடவல்லான் இப்போது சந்திரகுமாரியைத் தொட்டு நடன முத்திரைகளைக் கற்றுக் கொடுக்கத் தயங்கினான். அவன் கரம் மெல்ல நடுங்கியது. சந்திரகுமாரியோ துடித்தாள். மெல்லச் சிரித்தாள்.

''ஏன் அப்படியே கற்சிலைபோல நின்று விட்டீர்கள்?''

''பொற்சிலையைப் பார்த்ததனால்.....''

''ரொம்பவும் புகழ்கிறீர்கள்.....''

''பொய் சொல்லத் தெரியாது...... உள்ளதைச் சொன்னேன். சந்திரகுமாரி! என் உள்ளத்தில் மெல்லச் சலனத்தை ஊட்டி வருகிறாய்; வேறு பெண்களை ஏறெடுத்துப் பாராத நான், இப்போது என் வசத்தை இழந்து விட்டேன்...'' என்று கூறும்போது அவன் வார்த்தை தடுமாறியது.

சந்திரகுமாரி இதற்கு முன்பு பாண்டிய நாட்டுப் பிரதிநிதியின் தோள்மேல், ஏரிக்கரை மண்டபத்து நடனத்தின்போது மெல்லச் சாய்ந்திருக்கிறாள். அந்த இளம் வீரனின் பிடிப்பைவிட, ஆடவல்லானின் மெல்லிய உணர்ச்சி அவளை ஈர்த்தது. ஆடவல்லானின் நாணத்தை உணர்ந்து அவன் அருகே மெல்ல நெருங்கி, ''உங்களை நீங்கள் வேறெங்கும் இழக்கவில்லையே...



என்னிடம்தானே இழந்தீர்கள்? உங்கள் பாடலும், என் ஆடலும் சேர்ந்தால் தெய்வீகச் சேர்க்கை அதிகமாகுமே...'' என்றாள்.

''நீ நன்றாகப் பேசுகிறாய் சந்திரகுமாரி... உன் குரல் அதற்கு அணி செய்கிறது'' என்றான் ஆடவல்லான்.

''உங்கள் இனிய குரலை விடவா...'' என்று கேட்டவாறு சந்திரகுமாரி மெல்ல அவன் கரங்களைத் தொட முயன்றாள். ஆடவல்லான் மெல்ல நகன்றான். அவள் இதயப் போராட்டத்தின் வேகத்தைத் தாங்க இயலவில்லை. தான் செய்வது சரியன்று எனும் உணர்ச்சி அவன் உள்ளத்தில் உதித்ததோ என்னவோ, அவன் அங்கிருந்து செல்ல முயன்றான். ஆனால் அவனால் இயலவில்லை. அவள் பூங்கரத்தை மீண்டும் ஒருமுறை தொட வேண்டும் போன்ற ஆர்வம் எழுந்தது. அப்போது திருவெண்காட்டு நங்கை வந்து கொண்டிருக்கும் காலடி ஓசை கேட்டது. ஆடவல்லான் அங்கிருந்து வேகமாகச் சென்று, பூசை அறையில் நடராசன் விக்கிரகத்தின் முன்பு அமர்ந்து கண்களை மூடிக் கொண்டான். கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது.

இராசேந்திர சோழ தேவர் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் பிறந்தவர். உலகப் புகழ்பெற்ற அந்த மாவீரனின் திருநாள் கங்கைகொண்ட சோழ புரத்தில் பெரும் திருவிழாவாகக் கொண்டாடப் பெறும். கோயில் மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். வீதியெல்லாம் தோரணங்கள் தொங்கி அழகுடன் அசையும். கோயிலை அடுத்துள்ள நாட்டிய மண்டபத்தில் இராசராச விஜயம் நாடகம் இரவு நடைபெறும். இராசேந்திர சோழ தேவரின் தந்தையான இராசராசரின் வீரப்பிரதாபங்களைக் கூறும் அந்த நாட
கத்தை மக்கள் ரசித்துக் காண்பர் சோழ நாட்டின் பல ஊர்களி
லிருந்து இரு நாள்கள் முன்பாகவே நாடகம் பார்க்கக் கூடுவர்.
மார்கழி மாதத்துத் திருவாதிரை நாள், சிவபெருமானுக்கு ஏற்ற
நாள் ஆதலால், அன்று கோயிலில் விசேட பூசையும், உற்சவமும்
நடைபெறும். ஊரே கோலாகலமாக விளங்கும்.

இந்த ஆண்டு குதூகலத்தைக் காணவில்லை. சிறிய
தன்மபாலர் கொலையுண்ட செய்தி மக்களைக் கலக்கியிருந்தது.
யார் கொன்றிருப்பார்கள் என்ற வாதப்பிரதிவாதம் மக்களிடையே
எழுந்து, பொழுதைக் கொள்ளை கொண்டது. திருவாதிரை விழா
வுக்கு நாடகம் நடிக்க வருபவர்கள் தொண்டை நாட்டிற்குச்

சென்று விட்டதாகத் தகவல் வந்தது. நகரத்து வியாபாரிகள் விழாவில் உற்சாகம் காட்டாததோடு, கூடிக்கூடி இரகசியமாகப் பேசி இடங்கைப் படைவீரர்களைப் பலப்படுத்த முயன்று கொண்டிருந்தனர். சிறிய தன்மபாலரின் மறைவு அவர்களுக்குப் பெரும் ஆத்திரத்தை அளித்தது.

ஆனால், கோயில் அறங்காவலர் விழாவைக் கைவிடவில்லை. சந்திரகுமாரியின் நாட்டியத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

மாலை மங்கி, இரவு வந்து சேர்ந்தது. சன்ன மேளம் ஒலித்தது. நாட்டிய மண்டபத்தில் மக்கள் கூடியிருந்தனர். தீவர்த்தியின் ஒளி, எங்கும் நிறைந்து இருளைப் போக்க முயன்றது. வீணையின் நாதமும், மத்தள ஒலியும் எழுந்தன. சந்திரகுமாரி வண்ண உடை அணிந்து கால் சதங்கை ஒலிக்க மேடைக்கு வந்தாள்.

அவ்வளவு அழகு நிறைந்த அணங்கை அந்த நகரத்து மக்கள் கண்டதில்லை. ஆதனால் 'ஆகா' காரம் எழுப்பினர். சந்திரகுமாரி ஆடத் தொடங்கிய சிறது நேரத்தில், தளபதி பெரிய தன்மபாலர் கூட்டத்தில் ஒரு மூலையில் மெல்ல வந்து நின்றார். அவரும் அறியாமல் கங்கபீமனும் ஒருபுறம் பனிக்கு முக்காடிடுவது போல் தோற்றமிட்டு அமர்ந்தான். இதுவரை அவன் எங்கிருந்தான் என்பதே பரம இரகசியம்.

## 31. அத்திமல்லர் யோசனை

**அ**த்திமல்லருக்கு அருகே வந்தவுடன் இரதம் நின்றது. அதில் இருப்பவர் தகடூர் சிற்றரசர். அத்திமல்லரைக் கண்டவுடன் அவர் இறங்கி வந்தார்.

"நடுவழியிலே மரத்தடியில் நின்று கொண்டிருக்கிறீர்களே!" என்று விசாரித்தார்.

"சற்று இளைப்பாறலாம் என்றுதான் நிற்கிறேன்" என்றார் அத்திமல்லர்.

"ஏன், என்னுடன் இரதத்திலே வாருங்கள். குதிரையை வீரனொருவனிடம் கொடுத்தால் போகிறது" என்றார் தகடூரார்.



"நீங்கள் போய்க் கொண்டிருங்கள். நான் பின் தொடர்ந்து வருகிறேன். என் நண்பனொருவன் அடுத்துள்ள கிராமத்திற்குச் சென்றிருக்கிறான். அவன் வரும் வரையில் நான் இங்கிருந்து அசைய முடியாது" என்றார் அத்திமல்லர்.

"உங்கள் நண்பரா! எனக்குத் தெரியும். உங்கள் நண்பர் ஒருவர் யார் இருக்கிறார்கள். ஹும்... அது சரி, நேரே காஞ்சிக்குத் தானே வருகிறீர்கள்..." என்று கேட்டார் தகடூரார்.

"காஞ்சிக்கா... அங்கு என்ன வேலை?"

"என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? முன்பு செய்த முடிவுப்படி காஞ்சியில் சிற்றரசர்கள் அனைவரும் கூடுகிறோமே... அந்தக் கூட்டத்தில் சோழ நாட்டு வாரிசு யார் என்பதை முடிவு செய்தாகி விட வேண்டும். அதற்கு நீங்கள் வர வேண்டாமா?"

"எனக்கு அழைப்பில்லையே... மேலும் நான் வருவதைச் சிலர் விரும்பவில்லை என்று தெரிகிறது."

"அழைப்பா!"-என்று கூறி ஹஹ்ஹா என்று கூறி நகைத்த தகடூரார், "காஞ்சிக்கு வருவதற்கு எனக்கு மட்டும் அழைப்பு வந்துவிட்டதா? அழைப்போலை யார் அனுப்புவது? அங்கே அந்த அழகுக் குமாரியின் நாட்டிய விருந்து இருக்கிறதப்பா!" என்று கூறி கண்ணைச் சிமிட்டினார்.

அழகுக் குமாரி என்று அவர் குறிப்பிடுவது, ஏரிக்கரை மண்டபத்தில் நடனம் ஆடி அனைவரையும் போதை கொள்ளச் செய்த சந்திரகுமாரியாகத்தானிருக்கவேண்டும் என்று புரிந்து கொண்டார். சந்திரகுமாரி காஞ்சிக்கு எவ்வாறு வருவாள்? அத்திமல்லருக்கு ஒரு கணம் வியப்பாகத்தான் இருந்தது.

இராசேந்திரன், அவளைப் பாதுகாப்பான இடம் ஒன்றில் சேர்த்து வந்திருப்பது அத்திமல்லருக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது அவள் காஞ்சி வருவது எப்படி?-

"ஆமாம்... அன்று ஏரிக்கரை மண்டபத்தில் நள்ளிரவில் ஆடினாளே... அந்த வாலைக்குமரிதானே..." என்று அத்திமல்லர் கேட்டார்.

"ஆமாம், ஆமாம் அத்திமல்லரே! அவள் அழகுக்கு இணை என்ன சொல்வேன், என்ன சொல்வேன்... அவள் நாட்டியத்தைக்

கண்டு களிப்பதற்காகத்தானே நான் காஞ்சிக்குச் செல்கிறேன்..." என்று மீண்டும் உற்சாகமாகப் பேசினார் தகடூரார்.

அத்திமல்லரின் சிந்தனை விரிந்தது. சந்திரகுமாரி எவ்வாறு காஞ்சிக்கு வரமுடியும் என்பது அவருக்கு வியப்பாக இருந்தது. தகடூராரிடமிருந்து அது குறித்து ஏதாவது கேட்டறிய முடியுமா என்ற எண்ணத்தில், "ஆமாம்; அந்தக் குமரி காஞ்சிக்கு எப்படி வருவாள்? அவளுடன், அவள் உறவினன் ஒருவன் கூடவே இருந்தானே, அவன் சம்மதிக்க வேண்டாமா?" என்று கேட்டார்.

தகடூரார் மீண்டும் நகைத்து, "அத்திமல்லரே, அத்திமல்லரே! சந்திரகுமாரியை வசப்படுத்த முடியாத நாமா சோழ நாட்டின் வாரிசுக்கு வழி செய்யப் போகிறோம்! அந்தக் குமரியின் உறவினன் நம் பக்கம். அதெல்லாம் பற்றி உமக்கு என்ன ஐயா; காஞ்சிக்கு வந்து சேர்ந்து விடுங்கள். மிக முக்கியமான கூட்டம்" என்றார்.

அத்திமல்லர் சற்று நேரம் மௌனமாயிருந்தபிறகு தகடூராரை நோக்கி, "நீங்கள் புறப்படுங்கள். நான் இளைப்பாறி விட்டு வருகிறேன்" என்றார். இரதத்தில் ஏறியபிறகுகூடத் தகடூரார், "மறந்து விடாதீர்கள், பௌர்ணமி அன்று காஞ்சியில்..." என்று கூவினார். அத்திமல்லர் கை அசைத்தார். புழுதிப்படலத்தை எழுப்பியவாறு தகடூராரின் பரிவாரங்கள் சென்று மறைந்தன.

அவர்கள் சென்ற சிறிது நேரம் கழித்து இராசேந்திரன், பழங்களுடனும், சிறு கலயத்தில் தயிருடனும் அங்கு வந்து சேர்ந்தான்.

"நல்ல வேளையாக அவர்கள் சென்ற பிறகு வந்தாய்..." என்றார் அத்திமல்லர்.

"அவர்கள் இருக்கும்போதே வந்துவிட்டேன். அதோ அங்கே மறைந்திருந்தேன். நீங்கள் பேசிக்கொண்டவை என் காதிலும் வீழ்ந்தன" என்றான் இராசேந்திரன்.

"தகடூரார் சொல்வது விசித்திரமாயிருக்கிறதே! சந்திரகுமாரி எப்படிக் காஞ்சிக்கு வருவாள். அவள் என்ன மாயப்பெண்ணா? இந்த நாட்டையே கலக்க வந்த மோகினியா?" என்று அத்திமல்லர் வேதனை கலந்த குரலில் கேட்டார்.

"அதெல்லாம் நடக்காது பாருங்களேன். அவளுக்குத் தக்க பாதுகாப்பு இருக்கிறது. காஞ்சிக்கு அவளைத் தூக்கி வந்துவிட முடியாது. காளிங்கன் இருக்கிறான். அவன், ஆடவல்லானை நாள்



தோறும் சந்திப்பான். அவனிடமிருந்து யாராலும் தப்பி ஓடிவிட முடியாது" என்றான் இராசேந்திரன்.

அத்திமல்லர் மௌனமாயிருந்தார். பிறகு அவர் ஏதோ முடிவுக்கு வந்தவரைப்போலச் சொன்னார்: "இராசேந்திரா? திருக்கோவலூருக்குப் போக வேண்டும் எனும் என் திட்டத்தை மாற்றிக் கொண்டு விட்டேன். காஞ்சிக்குச் செல்வோம். சிற்றரசர்களுக்கு நாட்டைத் துண்டுபோடும் ஆசையா அல்லது பெண்ணாசையா என்பதை முடிவு செய்து கொள்வோம்..." என்றார்.

இராசேந்திரன் மௌனமாயிருந்தான். வேங்கிக்குப் புறப்பட்ட இராசேந்திரனை, இடையில் திருக்கோவலூரில் தங்கி விட்டுச் செல்ல வேண்டும் என்று யோசனைக் கூறிக் கேட்டுக் கொண்டதே அத்திமல்லர்தான். இராசேந்திரனுக்கு எல்லா விதத்திலும் ஒத்துழைத்து அவன் வெற்றிக்குப் பாடுபட்டுவரும் அத்திமல்லர் உள்ளத்தில், சிறு சுயநோக்கும் இல்லாமலில்லை.

அத்திமல்லரின் மகள் திருக்கோவலூரில் வளர்ந்து கொண்டிருந்தாள். அவளை இராசேந்திரன் ஒரு கணமாவது காண வேண்டும் என்ற அந்தரங்க ஆர்வம் அவருக்கு இருந்தது. இப்போது காஞ்சியில் கூடும் சதிகாரர்கள் கூட்டத்திற்குச் செல்ல வேண்டும் எனும் துடிப்பு, தனது சுய காரியத்தையும் மறக்கச் செய்தது.

"ஏதோ சிந்தனையில் ஆழ்ந்துவிட்டீர்கள் போலிருக்கிறது..." என்று இராசேந்திரன் மெதுவாக அத்திமல்லரை நினைப்பூட்டினான்.

"ஆமாம், இராசேந்திரா! நான் நினைப்பது ஒன்று, நடப்பது வேறொன்றாக இருக்கிறது. திருக்கோவலூரில் உனக்கு விருந்து வைக்க எண்ணினேன்... என் மகளிடம் உறுதிமொழியாகக் கூறிவிட்டும் வந்தேன். ஆனால், நிலைமை மாறிவிட்டதே..." என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

அவர் மகள்-அத்திமல்லர் தன் மகளைப்பற்றி வர்ணித்தவுடன், இராசேந்திரன் கண்களை மூடிக் கொண்டான். மதுராந்தகியின் உருவம் அவன் கண்முன் வந்தது. அழகிய அவள் முகம், அவன் எதிரே தோன்றியது. காதல் என்பதே அப்போதுதான் மழைக் கால மலர் பூப்பதுபோல் துளிர்விட ஆரம்பித்தது. அவள்

அருகே இருந்து பேசும்போது கேட்ட இனிய குரலை மீண்டும் கேட்க வேண்டும்போல் தோன்றியது. என்ன பயன்? எப்போது அவளை மீண்டும் காணப்போகிறோம்? அப்படிக் கண்டாலும், அப்போது மதுராந்தகி மணம் புரிந்து கொள்ளாமல் இருப்பாள் என்பது என்ன உறுதி? அவளின் விருப்பத்திற்கு மாறாக அவளை வேறு இளவரசனுக்கு மணம் புரிந்து கொடுத்து விடலாம்-

இராசேந்திரன் கண்களை மூடிக்கொண்டு ஏதோ யோசிப் பதைப் பார்த்தவுடன், அத்திமல்லர் அவன் முதுகைத் தட்டி, "இராசேந்திரா, நீ என்ன யோசிக்க ஆரம்பித்து விட்டாய்! பொழுது சாயப்போகிறது-நாம் இப்போதே புறப்பட்டால் இன்று இரவு சிதம்பரத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடலாம். நாளைக் காலையில் புறப்பட்டால், காஞ்சிக்குப் பௌர்ணமியன்று சேர்வதற்கு வசதி யாக இருக்கும்" என்றார் அத்திமல்லர்.

"காஞ்சிக்கா? எதற்கு?" என்று இராசேந்திரன் கேட்டான்.

"சிற்றரசர் மகாநாட்டில் நாமும் கலந்து கொள்ள வேண்டாமா?"

"நீங்கள் சிற்றரசர்; கலந்து கொள்ள வேண்டும். நான் நாடற்றவன்; நான் எதற்கு?"

"உனக்குக் கிடைக்கவிருக்கும் நாட்டைக் காப்பாற்ற!"

"ஐயா! எனக்குச் சோழ நாடு வேண்டவே வேண்டாம். அதைச் சதிசெய்து பெறவேண்டும் எனும் ஆசையும் இல்லை."

"என்ன சொல்கிறாய் இராசேந்திரா! சோழ நாடு சின்னா பின்னமடைவது உனக்கு விருப்பமா?"

"என் சொந்த நாடான வேங்கியே எனக்குக் கிடைக்காத போது, வேறு நாட்டின் மீது எனக்கு எள்ளளவும் எண்ணமில்லை."

இராசேந்திரன் இப்படிப் பேசியது கேட்ட அத்திமல்லர் திகைத்தார். பிறகு அவனை ஒப்புக் கொள்ள வைக்கும் நோக்கத் துடன், "இராசேந்திரா! வேங்கியை விட்டுவிடவேண்டும் என்று உனக்கு யோசனை கூறவில்லை. ஆனால் சோழ நாடு மாற்றான் கரத்திற்குப் போன பிறகு, உனக்கு வேங்கி கிடைத்தும் பயன் இல்லை. வேங்கியைச் சாளுக்கியர்கள் விழுங்க எவ்வளவு கால மாகும்? சோழ நாட்டை விழுங்குவதற்காகத்தான் விக்கிரமாதித் தன் கெட்டிக்கார ஒற்றனை அனுப்பியுள்ளான். அந்த ஒற்றன்



வலையில் சிக்கி இந்தச் சிற்றரசர்கள் சீரழிந்து விடுவர். விக்கிரமாதித்தன், சோழ நாட்டை எளிதில் பிடித்து விடுவான். பிறகு உன் வேங்கி எம்மாத்திரம்?" என்று கேட்டார் அத்திமல்லர்.

இராசேந்திரன் ஏதும் பேசவில்லை. அத்திமல்லர் மேலும் கூறினார்: "அதனால்தான் சொல்கிறேன் இராசேந்திரா! காஞ்சிக் கூட்டத்தில் கலந்து கொள்வோம்."

"நான் எப்படி வரமுடியும்? என்னை அடையாளம் கண்டு கொள்வார்களே" என்றான் இராசேந்திரன்.

அதற்கு அத்திமல்லர் சொன்ன யோசனை இராசேந்திரனை மிகவும் கவர்ந்தது. மிகவும் உற்சாகத்துடன், அத்திமல்லர் யோச னைக்குச் சம்மதித்தான். இருவரும் குதிரையேறிச் சிதம்பரம் நோக்கி விரைந்தனர். சிதம்பரத்தை அவர்கள் அடையும்போது நன்றாக இருட்டிவிட்டது. களைப்பும், பசியும் மீண்டும் அவர் களை வாட்டின.

"பகல் உணவு நீ தேடி வந்தாய். இப்போது நான் தேடி வருகிறேன். இந்த மண்டபத்திலேயே தங்கி இரு" என்று கூறி, அத்திமல்லர் சென்றார்.

## 32. சிவிகை எங்கே?

இராசராச விசய நாடகம் நடக்க வேண்டிய இடத்தில், சந்திரகுமாரியின் நடனம் நடைபெற்றது. சந்திரகுமாரியின் ஒளி வீசும் முகத்திலே அங்குள்ளவர் மனத்தைப் பறிகொடுத்தனர். அதுபோன்ற அற்புத நடனத்தை அவர்கள் அதுவரைக் கண்டதே யில்லை. சந்திரகுமாரியின் கை அசைவுகளையும், முகத்திலே ஏற்படும் உணர்ச்சியையும் ரசித்து, "ஆகா! ஆகா" என்றனர்.

இன்னும் நாட்டியம் நடக்காதா என்ற ஆவல் அவர்களிடை யேயெழ, நாட்டியம் முடிந்தவுடன் ஓர் ஏமாற்ற உணர்ச்சியுடன் கலைந்து சென்றனர். அதிக விளக்கொளி இல்லா வீதிகளில் திரும்பிச் செல்பவர்கள் கூட்டம் கூட்டமாகப் பேசிச் சென்றதெல் லாம், அன்றைய நாட்டியத்தைப் பற்றியும், நாட்டியத்திலாடிய அழகியைப் பற்றியுமே இருந்தன.

அது போன்ற விழாவிற்கு அரசர் வந்திருந்து, கடைசிவரை விழாவில் இருந்து, மக்களுக்கு நற்செய்தியைக் கூறிவிட்டுத் தான் செல்வார். சென்ற ஆண்டும் வீரராசேந்திர சோழர் ஆண்ட போதும் இதே நாளில் அவர் இல்லை. போர்க்களத்திற்குச் சென்று விட்டார். இந்த ஆண்டு அவர் இல்லை. அதிராசேந்திர சோழர் தலைநகரில் இருந்தும், அவரால் கலந்து கொள்ள முடியாத நிலை. விழாவில் சிறப்பாகக் கலந்து கொள்ளாவிட்டால் அரசர்க்கு ஏதாவது தீங்கு ஏற்படும் எனும் நம்பிக்கை மக்களுக்கு இருந்தது. கங்கைகொண்ட சோழபுரத்தின் தந்தையான இராசேந்திர சோழ தேவரின் தந்தை இராசராச பெருவுடையார் தோன்றாமல் தோன்றி யிருந்து அந்த நகரத்தைக் காப்பாற்றுவதாக மக்கள் நம்பினர். அவரைப் போற்றும் விழா சரிவர நடைபெறாவிட்டால், தீங்கு தான் நேரிடும் என்று உறுதியாக மக்கள் நம்பினர்.

"இன்னும் என்ன தீங்கு வரப்போகிறது? மன்னரால் இப்படி யும் அப்படியும் அசைய முடியவில்லை. வாய் பேச முடிய வில்லை. தளபதியோ அவரிடமிருந்து எந்த உத்திரவும் வெளியே செல்லாமல் காவல் வைத்திருப்பதாகக் கொள்ளலாம்......" என்று பேசிக் கொண்டனர். இந்தக் கருத்து அங்கே சென்று கொண்டிருந் தவர்களிடையே பரவி, ஆத்திரத்தை ஊட்டியது.

"தளபதிக்கு என்ன உரிமை, மன்னரைச் சிறை வைப் பதற்கு?" என்று கேட்டார் குடி மக்களில் ஒருவர்.

"யார் கேட்பது? இளைய தளபதி கொலை செய்யப்பட் டாரே-அதைப் பற்றி வெளியே ஏதாவது தெரிந்ததா? விசாரணை நடைபெறுகிறதா, இல்லையா என்பதாவது தெரிந்ததா?" என்றார் கூட்டத்தில் மற்றொருவர்.

"நாம் இப்படியே சும்மாவிட்டால் இன்னும் மோசமான நிலைதான் ஏற்படும்... நாளையே மாளிகைக்குக் கூட்டமாகச் செல்வோம்" என்றது ஒரு குரல்.

"படைகளைக் கொண்டு தளபதி நம்மைத் தாக்கச் செய்வார்..."-ஒருவர் குரல்.

"அது போன்ற சமயத்தைத்தான் இடங்கைப் படைகள் எதிர் பார்த்திருக்கின்றனர். தளபதியை முறியடிப்பதற்குக் காத்திருக் கிறார்கள்" என்றார் மற்றொருவர்.



இப்படியாக ஒவ்வொருவரும் பேசிக்கொண்டே சென்றனர், ஒரு முடிவுக்கும் வராமல். ஆனால் மக்கள் உள்ளத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பது புரிந்தது.

இவற்றை அறிந்தோ, அறியாமலோ தளபதி தன்மபாலர், நாட்டியம் நடைபெற்று முடிந்த பிறகும் மண்டபத்திலேயே தங்கி யிருந்தார். சந்திரகுமாரி திரைமறைவில் ஒதுக்குப்புறமாக வேடம் களையச் சென்றபோது, கங்கபீமன் அங்கு செல்ல முயல்வதைக் கண்ட தன்மபாலர், கை தட்டி அவனை அழைத்தார்.

"எங்கே ஐயா, உன்னைக் காணவே இல்லை. சந்திர குமாரியை எங்கே ஒளித்து விட்டீர்!" என்று விஷமச் சிரிப்புடன் கேட்டார்.

"திரை மறைவில் ஒளித்து விட்டேன்!" என்று கங்கபீமன் விஷமக் கண்களைச் சிமிட்டியவாறு கூற, தன்மபாலரும் நகைத்து விட்டார்.

அவனைத் தனியே அழைத்துச் சென்ற தளபதி, இப்பொழுது இனிய சொல்லை விட்டுவிட்டுச் சற்றுக் கடுமையாக, "ஏன் ஐயா கங்கபீமரே! என்னிடமே உமது வித்தையைக் காட்டுகிறீரா? ஆடலழகியை மறைத்து விட்டால், அவள் இந்த நகரத்தில் எங்கு இருக்கிறாள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது என்று நினைத் தீர்களா? அன்று என்ன அவமானம் நேர்ந்துவிட்டது தெரியுமா? நகரத்தில் மிக முக்கியமான பிரமுகர்கள் முன்னிலையில் அவளை ஆடச் செய்து பரிசு வாங்கிக் கொடுக்க எண்ணினேன். அதற்கு வழி ஏற்படாது செய்துவிட்டீர்களே..." என்றார்.

கங்கபீமன், விவாதத்தை வளர்த்த விரும்பவில்லை. பணிவான குரலில், "ஐயா, எனக்கே தெரியாது. இப்போதுதான் அவளைக் காண்கிறேன். இந்தக் கோயில் திருப்பதிகங்கள் பாடும் பிள்ளையாண்டான், அவளை எங்கோ ஒளித்து வைத்திருக்கிறான் என்பதை அறிந்தேன். அந்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்குள், இன்றைய விழாவிலே அவள் நடனம் ஆடப் போகிறாள் என்பது தெரிய வந்தது. அதனால் எனக்கு ஒன்றும் தெரியாது தளபதியாரே. இப்போது அவளைச் சந்தித்து என் வீட்டிற்கு அழைத்துச் செல்லப் போகிறேன்..." என்றான் கங்கபீமன்.

தன்மபாலர் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டே, பதிகம் பாடுபவன் அவளை ஒளித்து வைத்திருந்தான் என்ற செய்திக்குள்

புதைந்திருப்பதை ஆராய முற்பட்டார். பதிகம் பாடும் ஆடவல்லான் மிக நல்லவன்; அவன் ஏன் சந்திரகுமாரியை ஒளித்து வைத்திருக்கப் போகிறான்... இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று முடிவு செய்து, அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், "ஒகோ! அப்படியா! உன் வீடு எங்கே இருக்கிறது?" என்று கேட்டார் தளபதி.

இடத்தைச் சொல்லிய கங்கபீமன், மிகவும் பணிவுடன் கேட்பது போல், "ஐயா; எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்" என்றான்.

"என்ன வேண்டும்; செய்கிறேன்..."

"துணைக்கு இரண்டு வீரர்களைக் கொடுத்து உதவ வேண்டும். என் யோசைனைப்படி அவர்கள் நடப்பதற்கு உத்தர விட வேண்டும். விரோதிகள் பலர் இருக்கிறார்கள் என்பது சூசகமாகத் தெரிகிறது" என்றான்.

"ஆகா! காவலுக்குத்தானே! நிச்சயம் தருகிறேன். எங்கள் கடமையுங்கூட..." என்று உற்சாகத்துடன் கூறிய தளபதி, அந்தக் கணமே இருவீரர்களை அழைத்து, கங்கபீமன் சொற்படி அவனுக்கு உதவியாக இருக்குமாறு கட்டளையிட்டார்.

தளபதிக்கு உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது! கங்கபீமன் தன் வலையில் சிக்கிவிட்டான்; சந்திரகுமாரியும் தன்னிடமிருந்து தப்ப முடியாது என்று முடிவு செய்தார்.

வேடம் களைந்து மேடையிருந்து இறங்கிய சந்திரகுமாரி, ஆடவல்லானின் பாராட்டுதலால் முகஞ் சிவக்கத் தலையைக் குனிந்து கொண்டாள்.

"உனது நடனம் அற்புதம். இன்னும் அதைவிடப் பெரிய வார்த்தை இருந்தால் சொல்வேன்" என்றான் ஆடவல்லான்.

"ரொம்பவும் புகழ்கிறீர்கள். உங்களுடைய ஆதரவு இல்லாதிருந்தால் இவ்வளவு பேருடைய பாராட்டுதலை நான் எவ்வாறு பெற்றிருக்க முடியும்?" என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

நேரிடையே பாராட்டுவதற்காக ஓரிரண்டு பெரிய மனிதர்கள் மேடையருகே வந்து நின்றனர். சந்திரகுமாரியின் பேரழகு அவர்களை ஏதும் பேசமுடியாமல் செய்தது.

கங்கபீமன், சற்றுத் தொலைவிலேயே நின்றிருந்தான்.



சந்திரகுமாரியை அழைத்துக் கொண்டு சிவிகையில் ஏற்றுவதற்காக ஆடவல்லான் அவசரப்பட்டான்.

"நேரமாகிறது. நேரமாகிறது. வா புறப்படு, புறப்படு" என்று அவசரப்படுத்தினான்.

கால் சதங்கை ஒலிக்க, சந்திரகுமாரி மெல்ல நடந்து சிவிகையை நோக்கிச் சென்றாள். அவள் சிவிகையில் ஏறும்போது இரு வீரர்கள் ஆடவல்லானின் அருகே வந்து பணிந்து, "வீடுவரை துணைக்கு எங்களை வரச் சொல்லி அரசர் கட்டளை" என்றனர்.

ஆடவல்லானுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

"கவலைவிட்டது. சந்திரகுமாரி, நீ விடுபோய்ச் சேர்வதற்குள் நான் தினமும் வரும் குறுக்கு வழியாக வந்து சேர்ந்து விடுவேன்" என்றான்.

சிவிகை புறப்பட்டது. இரு வீரர்களும் பின் தொடர்ந்தனர்.

ஆடவல்லான், தன் வீட்டிற்குச் சென்று, சிவிகை வரும் என்று காத்திருந்தான்.

ஆனால், சிவிகை வரவேயில்லை.

## 33. காஞ்சிக் கூட்டம்

சிதம்பரத்தில் இரவைக் கழித்துவிட்டு அத்திமல்லரும், இராசேந்திரனும் புறப்பட்டனர். இராசேந்திரன் மனத்தில் புது உற்சாகம் மேலிட்டது. திருக்கோவலூருக்குச் சென்று அங்கிருந்து நேரே வேங்கியை அடைந்து விடவேண்டும் எனும் திட்டம் அவன் மனத்தில் நிறைந்திருந்தது. வேங்கிக்குச் சென்றவுடன் செய்யவேண்டியவற்றைப் பற்றிச் சிறிது யோசித்தான்.

"என்ன பலத்த சிந்தனை, இளவரசியைப் பற்றிய நினைவோ?" என்று அத்திமல்லர் மௌனத்தைக் கலைத்தார்.

இராசேந்திரன் மெல்ல நகைத்து, "அப்படியொன்றும் இல்லை; இளவரசியைப்பற்றி மட்டும் நினைத்துக் கொண்டிருந்து விட்டால், ஆக வேண்டியவை நடந்துவிடுமா ஐயா?" என்றான்.

"மாளிகையின் செல்வாக்கு இருந்தால் நடக்காதது உண்டா? இளவரசி மதுராந்தகி உனக்காகத் தியாகம் அனைத்தையும் செய்வாள்..."

"எனக்காக மற்றவர் தியாகம் செய்வதை நான் விரும்பவில்லை, அத்திமல்லரே! மற்றவர்க்காக நான் தியாகம் புரியக் காத்திருக்கும்போது, மற்றவர் ஏன் தொல்லைப்பட வேண்டும்"

இராசேந்திரன் கூறியது கேட்டு அத்திமல்லர் நகைத்தார். இராசேந்திரன் அவ்வளவு எளிதில் காதல் வயப்பட்டு விடுபவன் அல்லன் என்பதை அவர் அறிவார். ஆனால், மதுராந்தகியின் பேரில் அவனுக்குக் காதல் ஏற்பட்டிருப்பதையும், அவர் உள்ளூர அறிந்து கொண்டார். அவர் திட்டமே வேறு. இராசேந்திரனுக்குச் சோழ அரியணையைப் பெற்றுத் தந்து, தன் மகள் மாதேவியையும் மணம் புரிந்து கொடுத்து விடவேண்டும் என்று முடிவு செய்திருந்தார். அதற்காகவே அவனைப் பின் தொடர்ந்து வந்தார். வரும் வழியில் திருக்கோவலூரில் தங்க வைத்து, மாதேவியை அறிமுகப் படுத்தி விடவேண்டும் என்ற திட்டமும் வகுத்திருந்தார்.

இராசேந்திரன் வரப்போகும் செய்தியை மாதேவியிடம் சொல்லியும் அனுப்பியிருந்தார். மாதேவி, இராசேந்திரனை ஒரே ஒருமுறை பார்த்திருக்கிறாள். ஒரே நொடி நேரம் இராசேந்திரன் கங்கைகொண்ட சோழபுரம் செல்லும் முன்பு அத்திமல்லரைக் காணத் திருக்கோவலூர் வந்திருந்தான். அப்போது மின்னல் கொடிபோல் மாதேவி தோன்றி மறைந்து சென்றாள். இராசேந்திரன் அவளைக் கண்டானோ இல்லையோ-மாதேவி இராசேந்திரனை ஒருமுறை கண்டுவிட்டாள். வரிவடிவமாக அவன் உரு, அவள் இதயத்தில் பதிந்திருந்தது. இப்போது அந்த உருவத்தைப் பூரணமாகக் காணப் போகிறாள் அவள். இராசேந்திரனைக் காண ஆடை, அணி வகைகளை அவள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தாள்.

"திருக்கோவலூருக்குப் போகப் போவதாகச் சொன்னீர்களே, இப்போது வேறு பாதையில் நாம் திரும்பி விட்டோமே" என்று இராசேந்திரன் கேட்டான்.

இப்போது அவர்கள் காஞ்சி செல்லும் பாதையில் சென்று கொண்டிருந்தனர்.



"ஆம்..." என்றார் அத்திமல்லர். சற்றுநேரம் மௌனமாயிருந்துவிட்டு, "காஞ்சியில் மிகவும் முக்கியமான வேலை காத்திருக்கிறது இராசேந்திரா-திருக்கோவலூரிலுள்ளதைவிட மிக முக்கியமானது" என்றார் கண்களைச் சிமிட்டியவாறு.

இராசேந்திரன் புரிந்து கொள்ளாமல் கும்மாயிருந்தான். "காஞ்சியில் கூடும் சிற்றரசர்கள் கூட்டத்தில் திட்டமான முடிவு ஏற்படப்போகிறது. அதில் நாமும் கலந்து கொள்ள வேண்டாமா?" என்றார் அத்திமல்லர்.

"நாம் என்று என்னையும் சேர்த்துச் சொல்கிறீர்களே, நான் எதற்கு?" என்று கேட்டான் இராசேந்திரன்.

"இராசேந்திரா, நீ விலகி விலகிப் போனாலும் சோழ நாடு உன்னை விட்டுவிடாது. காஞ்சியில் சிற்றரசர்கள் என்ன பேசப் போகிறார்கள் என்று சற்றுக் கவனித்துத்தான் பாரேன்..." என்றார். பிறகு தொடர்ந்து, "இராசேந்திரா, காஞ்சியில் நடக்கவிருக்கும் கூட்டத்தைச் சாதாரணமாக நினைத்து விடாதே. சோழ நாட்டின் தலைவிதியையே அது முடிவு செய்யப் போகிறது" என்றார்.

"நான் எப்படி வரமுடியும்?"

"நீ வரலாம்; வரத்தான் வேண்டும்."

"என்னை அடையாளம் கண்டு கொண்டால்?"

"இப்படியே நீ வர அனுமதிப்பேனா? அதற்குத் தக்க உடையைக் காஞ்சிக்குச் சென்று ஆயத்தப்படுத்துவோம். ஏரிக்கரை மண்டபத்தில் நடைபெற்ற இரகசியக் கூட்டத்தை நீ காணவில்லை-இப்போது காணப் போகிறாய். உன் மனமே மாறிவிடும் பார்!" என்றார்.

அத்திமல்லர் கூறியது போலவே நடந்தது. காஞ்சிமா நகருக்குப் பல நாட்டுக் குறுநில மன்னர்களும் வந்து சேர்ந்தனர். கங்கை கொண்ட சோழபுரத்தினின்று பல காதம் தள்ளி இருந்தபடியால், காஞ்சியில் அச்சமின்றி அவர்கள் ஒன்றுகூட வசதியாக இருந்தது. வேகவதி ஆற்றங்கரைக்கு அருகேயுள்ள பெரும் நந்தவனத்தின் நடுவேயுள்ள மண்டபத்தில் அவர்கள் கூடினர்.

தொண்டை மண்டலத்துப் பிரதிநிதியாய் இருந்து ஆண்டு வந்த இளவரசன் மதுராந்தகனும் எதிர்பாராதவிதமாக அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது, பாண்டிய நாட்டுப் பிரதிநிதிக்

குச் சங்கடமாக இருந்தது. தகடூராரும், கொங்கு வேளிரும் சோழ நாட்டு அரசியல் பிரச்னையைவிட வேறொன்றை முக்கியமாகக் கருதினர்.

"ஒன்றும் சுவையில்லை" என்று முணுமுணுத்தனர். "கங்கபீமன் எங்கே?" என்று அவர்கள் கேட்டதிலிருந்து, சந்திர குமாரியை அவர்கள் எதிர்பார்க்கின்றனர் என்பது தெரியவந்தது. அத்திமல்லர் 'கடகட'வென நகைத்தார். "தகடூராரே! கங்கபீமனை எதற்காகத் தேடுகிறீர்கள் என்று இப்போதுதான் தெரிகிறது. அந்த வாலைக் குமரியின் நாட்டியத்தைப் பார்க்கத்தானே!" என்று கூறி மேலும் நகைத்தார். அவர் அருகே பெரும் தலைப்பாகை அணிந்து, காதில் குண்டலங்கள் அசைந்தாட, பெரும் மீசையும் தாடியுமாக ஒருவர் அமர்ந்திருந்தார். அவரும் சாதுர்யமாக, "ஆமாம், ஆமாம். ஆட்டமும் பாட்டும் இருந்தால் அல்லவா பேச்சு சுவையா யிருக்கும்" என்றார்.

எல்லோரும் அவரையே திரும்பிப் பார்த்தனர். தகடூரார், அத்திமல்லரை நோக்கி, "நன்றாகச் சொன்னார் உங்களுடன் வந்திருப்பவர். நாம் உலகில் பிறந்ததே எதற்காக-நாட்டைப் பிடிப் பது, ஆள்வது எதற்காக? உமக்கு வயதாகி வருகிறது; அதனால் ஏதும் தெரியாது. உம்முடன் வந்திருப்பவர் நல்ல அநுபவசாலி ஐயா... யார் அவர்" என்று பாராட்டியதோடு கூர்ந்து நோக்கினார்.

"இவரா! எங்கள் நாட்டு மந்திரி மண்டலத்தில் ஒருவர். இவருக்கு ஆரம்பத்திலிருந்தே சோழ ஆட்சியைக் கண்டால் பிடிக்கவில்லை. மலையமான் ஆண்ட நாடு அடிமைப்பட்டுக் கிடப்பதா என்று போர்முரசு கொட்டுகிறார். இந்தக் கூட்டத்தில் இவர் கருத்து பயன்படும் என்று அழைத்து வந்தேன்" என்றார் அத்திமல்லர். புதியவர் மீசையை முறுக்கி விட்டு கொண்டார்.

"சோழ ஆட்சிக்கு இப்போது எங்கும் எதிர்ப்புதான். அதனால் தான் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும் என்கிறேன்" என்றார் கங்க நாட்டவர்.

"நீங்களே இப்படிச் சிந்தித்து மனம் விட்டுப் பேசும்போது, பாண்டிய நாட்டில் எத்தகைய கொந்தளிப்பு இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். சோழ நாட்டிற்கு எவ்விதத்திலும் குறையாத புகழும், வீரமும் கொண்ட நாடு பாண்டிய நாடு. அது அடிமைப்பட்டுக் கிடப்பதா? இன்றைய கூட்டத்தில் நீங்கள் ஒரு



முடிவுக்கு வந்தாலும் சரி, வராவிடிலும் சரி, பாண்டிய நாடு விடு தலைக்கு வழி தேடிக் கொள்ளும்" என்று பாண்டியப் பிரதிநிதி கர்ஜித்தான்.

காஞ்சியைத் தன் தலைப்பீடமாகக் கொண்டு, தொண்டை மண்டலத்தின் சோழ நாட்டுப் பிரதிநிதியாக இருந்து ஆண்டு வந்த மதுராந்தகன், தன் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் புலப்படுத்தாமல் மௌனமாக இருந்தான்.

அத்திமல்லர் அந்தக் கட்டடமே அதிருமாறு நகைத்து, "வேடிக்கைதான்! பாண்டிய நாட்டுப் பிள்ளையின் துணிவே துணிவு. சோழ இளவரசன் இருக்கும்போது என்ன துணிவாகக் கூறுகிறார்" என்றார்.

"துணிவு என்ன! இங்குள்ளவர்கள் அனைவரும் சோழ ஆட்சியை விரும்பாதவர்கள்தாமே! அதனால் ஒருவரைக் கண்டு மற்றவர் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. அப்படிச் சந்தேகம் உள்ளவர்கள் இப்போதே வெளியேறிவிடலாம்" என்று மதுராந்த கனே கர்ஜித்தபோது, 'ஆகா!' என்ற ஒலி எல்லாரிடமிருந்தும் எழுந்தது.

"நாட்டியப் பெண்ணை இன்னும் காணோமே!" என்று தகடூரார் தவித்தார்.

"ஏன் தவியாய் தவிக்கிறீர் தகடூராரே! இன்று விட்டால் நாளைப் பொழுதே விடியாதா? நாளைய தினமும் வராமலா போய் விடுவாள்?" என்று கங்க நாட்டவன் கேட்டான்.

"அப்படியென்றால் நாம் இன்று கலைந்து, நாளைச் சந்திப் போம். காஞ்சி நகரின் அழகைக் காண வேண்டாமா? நாளைக்கு இந்தப் பட்டணத்தை யார் அபகரித்து விடுவார்களோ... வந்து பார்க்க முடியாது போனாலும் போய்விடலாம்" என்றார் கொங்கு நாட்டவர். அவர் விருப்பப் படியே அன்றையக் கூட்டம் கலைந் தது. போகும்போது தகடூரார், "அத்திமல்லரே! நாளைய தினம் கட்டாயம் வர வேண்டும். வரும் போது உங்கள் நாட்டு மந்திரி யையும் அழைத்து வரத் தவறாதீர்கள்" என்றார்.

தாடியும், மீசையும் வைத்துக்கொண்டு வயதானவரைப் போன்று நடித்த இராசேந்திரன், காது குண்டலம் ஆடத் தலை யசைத்தான்.

அந்த மண்டபத்திலிருந்து வெளியேறும்போது இராசேந்திரன் கூறினான்: "நீங்கள் சொல்லியதுபோல்தான் ஆகிவிட்டது அத்திமல்லரே! சோழ நாட்டுச் சிற்றரசர்கள் அனைவரும் ஒன்று கூடி விட்டனரே!" என்றான்.

"நாளைய தினம் நடைபெறும் கூட்டத்திற்கும் வருவோம். இன்னும் சில காலத்திற்குள் சோழ நாட்டையே கபளீகரம் செய்து விடுவார்கள் போலிருக்கிறதே!" என்றார் அத்திமல்லர். இருவரும் சைவமடம் ஒன்றை நோக்கி நடந்தனர்.

## 34. சிறைப் பறவை

கோயில் நாட்டிய மேடையை விட்டுப் புறப்பட்ட சந்திரகுமாரி, நேரே வீட்டிற்கு வந்து சேர்வாள் என்று காத்திருந்த ஆடவல்லான் கண்கள் பூத்துப் போயின. வீதியை நோக்கியவாறு நின்றிருந்த அவன் கண்களில் பூச்சி பறந்தன. அந்த நேரத்தில் உறங்கிவிடும் அவனுக்கு அசதியும், உறக்கமும், ஒருவித அச்சமும் ஒன்றுசேர்ந்தன.

"சந்திரகுமாரி-சந்திரகுமாரி" என்று முணுமுணுத்தான். ஏதாவது ஒலி எழுந்தால்கூட, அவள் கால் சதங்கை ஒலி கேட்பதாகத் தெருவின் முனைக்குச் சென்று பார்ப்பான்.

'ஐயோ, வழி தெரியாமல் திண்டாடுகிறாளோ...' என்று வேதனையடைந்தான். உடன் இருந்து அழைத்து வராமல் போனோமே என்று நொந்து கொண்டான். அதெப்படி முடியும்? அவளோடு சிவிகையில் ஒன்றாக அமர்ந்து வரமுடியுமா? என்றும் நினைத்தான். 'ஒன்றாக வந்திருந்தால், அவள் ஒழுங்காக இங்கு வந்து சேர்ந்திருப்பாள். அவள் வருவது இருக்கட்டும் - அவளுடன் வந்திருந்தால்! ஆகா! அவள் தலையில் சூடிய மல்லிகையின் மணம் மூக்கைத் துளைக்கும். அவளது தோளோடு என் தோள் மெல்ல இரகசியம் பேசும். அவள் விடும் மூச்சில்கூடத் தனி மணம் இருக்குமே?' என்று ஆடவல்லான் இப்படி எண்ணும்போது ஏதோ பெறுவதற்கரிய பேறு பெற்று விட்டது போன்ற உணர்வை அடைந்தான். எவ்வளவு நேரம் அவ்வாறு நின்றிருப்பானோ, திடீரென சுயநிலையை அடைந்தான். இன்னும் சந்திரகுமாரி வரவில்லை.



சந்திரகுமாரி வரவில்லையா? 'சந்திரகுமாரி - சந்திரகுமாரி' என்று திடீரெனக் கூவினான். அவன் சித்தம் கலங்கிவிட்டதா? ஏன் அப்படி ஓடுகிறான். 'சந்திரகுமாரி - சந்திரகுமாரி' -என்றவன் போட்ட சப்தம், அந்த அமைதியான இரவில் எங்கும் எதிரொலித்தது. கோயிலிலிருந்து சிவிகை வரவேண்டிய வழியைப் பார்த்து ஓடினான்.

சிறிது தொலைவுதான் சென்றிருப்பான். எதிரே வந்த ஓர் ஆள்மீது சட்டென மோதிக் கொள்ளவே, இருவரும் கீழே உருண்டனர்.

"சாமி நீங்களா?"-கீழே உருண்டவன் எழுந்து நின்று கைகட்டிக் கொண்டான். அவன்தான் படகோட்டி காளிங்கன்.

ஆடவல்லான் மெல்லத் தள்ளாடி எழுந்து, "யார், யார்... காளிங்கனா? சந்திரகுமாரியைப் பார்த்தாயா?" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டான்.

"அவங்களைப் பார்க்கத்தானே நான் சிறையிலிருந்து தப்பி ஓடியாந்தேன்... மகாராசா, என்னிடம் கட்டளையிட்டுவிட்டுப் போயிருக்கிறாங்க..." என்று பரபரப்புடன் கூறினான் காளிங்கன்.

உண்மைதான். காளிங்கன் சற்று முன்புதான் சிறைக் காவலாளியைத் தாக்கித் தப்பி ஓடி வந்திருந்தான். அவனுடன் சாளுக்கிய நாட்டினின்று சிறை பிடிக்கப்பட்டுப் பல ஆண்டுகளாகச் சிறையில் வாடும் இருவரும் தப்பினர். அவர்களால்தான் காளிங்கன் தப்பினான் என்று கூறலாம். சிறைக்குள் தள்ளப்பட்டவுடனேயே துள்ளி எழுந்து, கம்பிகளைப் பலமாகப் பிடித்து உலுக்கிய அவனைப் பார்த்து அவ்விருவரும் சிரித்தார்கள்.

காளிங்கன் கோபத்துடன் திரும்பிப் பார்த்தான்.

"ஏனப்பா, அப்படிப் பார்க்கிறாய்! நாங்கள் இரண்டு பேர்களாகத்தான் இவ்வளவு நாட்களாக இங்கே தனியே இருந்தோம். இப்போது நீயும் வந்துவிட்டாய், வா, வா... எந்த நாட்டைச் சேர்ந்தவனப்பா நீ... உங்கள் மன்னர் எங்கே படையெடுத்துப் போய் உன்னைப் பிடித்து வந்தார்?" என்று அவர்கள் கேட்டனர்.

அவர்கள் நிலையைப் பார்த்தான் காளிங்கன். அவர்கள் மீது கோபங் கொள்வதில் பயனில்லை என்பதை அவன் அறிவான்.

"நான் எந்த நாட்டையும் சேர்ந்தவனல்ல அப்பா... இந்தப் பொன் நாடுதான் என் நாடு..." என்றான் காளி.

"இந்த நாட்டுக்காரர்களுக்கு இந்த காராகிருஹத்தில் இடமில்லையே... நீ ஏதாவது கொலைக் குற்றம் செய்து விட்டாயா? கொலையாளிகளை இங்கே அடைக்கமாட்டார்களே?"

"கொலைக்குற்றம் இனிமேல்தான் செய்ய வேண்டும். அந்தச் சிறைக் காவலாளிகளைக் கொல்ல வேண்டும்; அல்லது உங்களைக் கொன்றுவிட வேண்டும்..."

காளிங்கன் இப்படிக் கூறியதும், சாளுக்கிய நாட்டவர்கள் இருவரும் திடுக்கிட்டனர்.

"எங்களை ஏன் கொல்லப் போகிறாய்... உனக்குப் பைத்தியமா?" என்று கேட்டனர்.

"இனிமேல்தான் பைத்தியம் பிடிக்கப் போகிறது. உங்கள் இருவருடன் நான் ஒரு நாள் இருந்தால் பைத்தியம் பிடித்து விடும்..." என்று காளி பயங்கரமான குரலில் கூவினான்.

"எங்களோடு இருந்தால் பைத்தியம் ஏன் பிடிக்கப் போகிறது? நாங்கள் மிகவும் நல்லவர்கள்... உன்னை ஒன்றும் செய்யமாட்டோம்."

"ரொம்பவும் நல்லவர்களான உங்களுடன் இருப்பதால் பைத்தியம் பிடிக்காமல் என்ன செய்யும்? இவ்வளவு நாள் நீங்கள் இங்கே வாடிக் கொண்டு இருப்பதிலிருந்து நீங்கள் நல்லவர்கள் என்று தெரிகிறது. உங்களோடு எனக்குச் சரிப்பட்டு வராது..." என்றான் காளிங்கன்.

"ஐயா... ஐயா-நீங்கள் கூறுவது ஏதும் எங்களுக்குப் புரியவில்லை. தப்பிச் செல்லாமல் இங்கே வாடுவது எங்களுக்கு ஆசையா? நாங்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள். மேலைச் சாளுக்கிய நாட்டில் சோழப் படைகளை எதிர்த்துப் போரிட்ட ஒரே பாவம்தான் நாங்கள் செய்தது. அதற்கான தண்டனையை அநுபவிக்கிறோம். தப்பிப்போக வழி சொன்னால் நிச்சயம் உதவி செய்கிறோம்" என்றனர்.

காளி, அவர்கள் காதோடு காதாக ஏதோ கூறினான். அவர்கள் முகம் மலர்ந்தது. அதன்படி அன்று காவலர்களில் சற்றுக் குள்ளமான ஒருவன், அன்று பொழுது சாய்ந்து வெகு நேரம் ஆனபிறகு அந்தப் பக்கமாக கையில் வேல் கம்புடன் வந்தான்.



அவன் வந்தவுடனேயே 'குபீர்' என்று, காளி இருந்த இடத்திலிருந்து எல்லோரும் நகைத்தனர்.

"யாரது, ஏன் ராத்திரி வேளையில் சிரிக்கிறீர்கள்?" என்று குள்ளன் அதட்டிக்கொண்டே ஓடி வந்தான்.

சிரிப்பின் ஒலி நின்றது. காவல்காரக் குள்ளன் இரும்புக் கம்பிக் கதவருகே வந்து, "இரவு வேளையில் என்ன சிரிப்பு...? தூங்குங்கள்..." என்றான்.

மேலைச் சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவர்களான இருவரில் ஒருவன், "ஐயா, குள்ளக் காவலரே-உமக்கு தம்பி யாராவது உண்டா?" என்று கேட்டான்.

"தம்பியா? அப்படி யாரும் கிடையாது."

"இல்லை... இங்கே உனது தம்பி ஒருவன் துணைக்கு வந்திருக்கிறான்..."

"என்னடா... விளையாடுகிறீர்களா? வேல் கம்பால் குத்தி விடுவேன், உங்கள் கண்களைக் கழுகுக்குப் போட்டு விடுவேன்..."

"போடு, போடு குள்ளச்சாமி... உன் தம்பியின் குடலையும் கிழித்துப்போடு..."

"தம்பியா... நீங்கள் இருவர்தாமே இங்கு இருந்திருக்கிறீர்கள்... என் தம்பி என்று யாரைச் சொல்கிறாய். என்னை ஏமாற்ற முடியாது தெரியுமா? என் தம்பி செத்துப் போய் எவ்வளவோ காலமாகிவிட்டது... ஹூம்..."

"நூறு வருடங்களாகி இருக்குமா? உன் தம்பியும் உன்னைப் போலக் குள்ளன்தானே..."

"எங்கள் குடும்பமே குள்ளம்தான்!"

"அப்படியானால் உன் தம்பியேதான். வந்துதான் பாரேன்..."

அவர்கள் அப்படிக் கூறியவுடன், காவல்காரக் குள்ளன் திகைத்தான்.

"ஆமாம் அண்ணே... உன் தம்பி வந்திருக்கிறேன்....." என்று குரல் எழுப்பினான் மூலையில் இருந்த காளி.

காவல் குள்ளன் இங்கும் அங்கும் சென்றான். திறவு கோலை எடுத்துக் கொண்டு, மற்றொரு காவல்காரனையும்

துணைக்கு அழைத்துக் கொண்டு வந்தான். துணைக்கு வந்தவன் காத்தில் தீவர்த்தி!

கதவு திறக்கப்படும் வரையில் காத்திருந்தனர் மூவரும். கதவு திறந்து காவலர் இருவரும் உள்ளே நுழைந்தவுடன் காளி சைகை செய்யவே, மேலைச் சாளுக்கியர்கள் தீவர்த்தி வைத்திருப்பவன்மேல் பாய்ந்து, அதைப்பறித்து, அதனால் அவர்கள் முகத்தைத் தீய்த்து, அவர்கள் 'ஓ' என்று ஓலமிட்டுச் சுருண்டு விழுந்தவுடன் அவர்கள் உடையை அணிந்து கொண்டு தப்பினர். காளியும் அவர்களுடனே தப்பி இருளில் மறைந்து, ஆடவல்லான் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோதுதான், அவனும் ஆடவல்லானும் மோதிக் கொண்டனர்.

என்ன செய்வது என்று புரியாமல் இருவரும் திகைத்து நின்றபோது, வேகமாக வரும் குதிரையின் குளம்படி ஓசை கேட்டது. காளி மறைந்து கொண்டான். ஆடவல்லான் துணிவுடன் அங்கேயே நின்றான்.

## 35. காளியின் வேண்டுகோள்

கங்கை கொண்ட சோழபுரத்து மாளிகையின் நிலா முற்றத்தில் சேடிகளும், மற்றும் இளம் பெண்களும் குதூகலமாகப் பேசிக் கொண்டிருந்தனர். மதுராந்தகிக்கு எந்தக் கேளிக்கையிலும் நாட்டம் செல்லவில்லை.

படகோட்டி காளிங்கனைக் காணவில்லை என்று அவன் மனைவி 'கோ'வென்று கதறுகிறாள் என்று அவளது உயிருக்கு உயிரான தோழி வந்து கூறியதிலிருந்து அவள் மனத்தில் நிம்மதியில்லை. அதற்கு மேலாகச் சற்று முன்பு மற்றொருத்தி கூறியவை, அவள் வேதனையை வளர்த்தது.

சோழீசர் கோயிலில் நடைபெற்ற நடனத்தைக் கண்டு ரசித்தவள் அவள். சந்திரகுமாரியின் அழகும், ஆற்றலும் அவள் உள்ளத்தில் பொறாமையை ஏற்படுத்தின. சந்திரகுமாரியைப் பற்றிய தகவல்களை அரையும் குறையுமாக அறிந்து கொண்டாள். ஆடவல்லானின் வீட்டிற்குச் சென்று திருவெண்காட்டு நங்கையைச் சந்தித்துச் சிலவற்றை அவளிடம் பேச்சுக் கொடுத்தே அறிந்தாள். பிறகு, தான் கேட்டதை ஒன்றுக்கு மூன்றாக்கினாள்.



"யார் யார் நடனத்தைப் பார்க்கப் போயிருந்தீர்கள்?" என்று அங்கு கூடியிருந்த தோழிகளைக் கேட்டாள் அவள்.

"நான், நான்" என்று சிலர் கூறினர்.

"என்ன அற்புதமான நடனம்..."

"என்ன அழகிய தோற்றம்..." என்று இரு பொருள் வைத்துப் பேசினாள் ஒருத்தி.

"என்ன அப்படிச் சொல்லிவிட்டாய்?"

"ஆமாம், ஆமாம் சொல்லக் கூடாது, சொல்லக் கூடாது. அந்த ஆட்டக்காரிக்கும் பெரிய இடத்துச் சிபாரிசு உண்டு."

"பெரிய இடமா?"

"ஆமாம், மிகப் பெரிய இடம். சந்திரகுமாரி யார் வீட்டில் தங்கியிருக்கிறாள் தெரியுமா? திருவெண்காட்டு நங்கை வீட்டில்."

"சைவ மூதாட்டி மிகவும் நல்லவர்கள். அவர்களுக்கு எப்படி இந்த நாட்டியக்காரியைத் தெரியும்?"

"அது பெரிய கதை. சிறிய தளபதியும், பெரிய தளபதியும் அவளுக்காக ஒருவரோடொருவர் சண்டையிட்டனராம்..."

"அப்போது தம்பியை அண்ணனே கொலை செய்துவிட்டிருப்பாரோ?"

"உச்... அதெல்லாம் இரகசியம். பெரிய தளபதியே குற்றவாளியைக் கண்டுபிடித்துவிடுவார். அதெல்லாம் நமக்கெதற்கு...? சந்திரகுமாரியைத் திருவெண்காட்டு நங்கை வீட்டில் கொண்டு சேர்த்தது யார் தெரியுமா... இளவரசர் இராசேந்திரன்..."

"அவர் இங்கு எங்கே வந்தார்?"

"அந்த வம்பெல்லாம் எதற்கு? அவர் அந்த நாட்டியக்காரியை மிகவும் கவனமாகப் பாதுகாக்கவே மூதாட்டி வீட்டில் விட்டுச் சென்றிருக்கிறார்..."

மதுராந்தகிக்கு, அவர்கள் பேச்சு கசந்தது. ஓடோடிச் சென்று அவர்கள் வாயைப் பொத்திவிடலாமா என்று எண்ணினாள். இளவரசியாயிருந்தாலும் பெண்தானே! மனம் சஞ்சலமடைந்தது. நடனக்காரிக்கும் இராசேந்திரனுக்கும் என்ன தொடர்பு எனும் சிந்தனையிலாழ்ந்தாள். அந்த மனக் குழப்பமும், காளியைக் காணவில்லை என்ற செய்தியும் அவளை மௌனத்திலாழ்த்திவிட்டன.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. நகரத்தில் நடக்கும் சம்பவங்கள் கவலையை அளித்தன. இளவரசன் இராசேந்திரன் இருந்திருந்தால் கவலையற்று இருக்கலாம். அதற்கான சூழ்நிலை மறைந்துவிட்டதே! இளவரசன் வேங்கிக்குப் போய்விட்டான்....... யாரிடமாவது மனத்திலிருப்பதைச் சொல்லி வருந்தலாம் என்று தோன்றியது. அவளுக்கு வேண்டியவர்கள் யார் இருக்கிறார்கள்? அவளுடைய பாட்டியிடம் மனக்குறையைச் சொல்வதால் என்ன பலன் ஏற்படப் போகிறது? அரசியோ முன்பே பெருங்கவலையிலிருக்கிறாள்.

மதுராந்தகி, அந்த இடத்தைவிட்டே சென்று விட்டாள். யாரையும் காணப்போவதில்லை எனும் உறுதி அவள் மனத்தில் வீழ்ந்து விட்டது.

பொழுது விடிந்ததும், அவள் வழக்கமான அலங்காரம் ஏதும் செய்து கொள்ளாமல் மாளிகை நந்தவனத்துக் கொடி வீட்டில் வந்து அமர்ந்து கொண்டாள்.

"தேவி" என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. குரல் பழக்கப்பட்ட குரல். ஆனால் உருவம்-

"நான்தானம்மா, காளி" என்று கை கட்டி நின்றான் படகோட்டி காளி. அவனை அடையாளம் புரிந்து கொண்ட மதுராந்தகி, அவனுடைய மாறுவேடத்தைப் பாராட்டினாள்.

"உன்னைச் சிறையிலடைத்து விட்டார்கள் என்று கேள்விப் பட்டேனே..." என்று மதுராந்தகி கேட்டாள்.

"ஆமாம், தேவி! மாளிகை படகோட்டியின் பேச்சை நம்பி அவனுடன் சென்றேன். சூழ்ச்சி செய்து சிறையிலடைத்துவிட்டார்கள். அதேபோல் தப்பி வந்து விட்டேன்-இளவரசருக்கு நான் உதவினேன் என்பதற்காக, தளபதிக்கு என் மேல் கோபம் போலிருக்கிறது... நீங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும்" என்றான் காளி.

"என்னால் ஆகக் கூடியது ஏதாவது இருந்தால் நிச்சயம் செய்கிறேன்... சொல் காளி."

"சந்திரகுமாரியைத் தளபதியின் ஆட்கள் காஞ்சிக்குத் தூக்கிச் சென்று விட்டார்கள். அவளை எப்படியாவது கண்டு பிடித்து வரவேண்டும். இரண்டு குதிரை வேண்டும். அதைத் தவிர..."



காளி இப்படிக் கூறியவுடன் மதுராந்தகிக்கு அவனைக் கோபிப்பதா, பாராட்டுவதா என்று புரியவில்லை. அந்த நடனக் காரிக்கு இவன் ஏன் உதவி வருகிறான். இவனுக்கு ஒரு குதிரை. மற்றொன்று...

"தேவி! ஏதோ யோசிக்கிறீர்கள். யாரோ ஓர் நடனப் பெண் மீது எனக்கென்ன அவ்வளவு அக்கறை என்கிறீர்களா? மகாராசா இராசேந்திரன் இங்கிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு முன்பு, சந்திர குமாரியைப் பாதுகாக்குமாறு ஆடவல்லானிடம் சொல்லிச் சென்றிருந்தார். என்னிடம் அவர்கள் இருவரையும் ஜாக்கிரதையாகக் காக்குமாறு சொல்லிச் சென்றிருந்தார். அவர் கூறியதில் முக்கியம் ஏதாவது இருக்க வேண்டும்... அதனால் குதிரை வேண்டும் தேவி. அத்துடன் அடையாள மோதிரமும் வேண்டும்" என்றான் காளி.

மதுராந்தகியின் உள்ளத்தில் இப்போது ஆத்திரமே மூண்டது. நடனப் பெண்ணுக்கு இளவரசர் உதவுவதாம்; அவளைக் கவனமாகப் பாதுகாக்குமாறு ஆடவல்லானிடம் சொல்லிச் சென்றாராம். அவருக்கும், நடனப் பெண்ணுக்கும் என்ன தொடர்பு? அவர், அவளைத்தான் விரும்புகிறாரா? என்னிடம் அவருக்கு அன்பில்லையா? நான் எதற்கு உதவ வேண்டும்? முடியாது, முடியவே முடியாது.

"காளி! இதற்காக நீ நாடும் நகரமும் அலையாதே. யாரோ நடனப் பெண்ணுக்காக நான் குதிரை சம்பாதித்துக் கொடுக்க முடியுமா? வேறு ஏதாவது உதவி கேள். தளபதியிடம் உன் நல்ல குணத்தைப் பற்றிச் சொல்கிறேன்.." என்றாள்.

சந்திரகுமாரி கண்காணா இடம் சென்று நன்றாகத் தவிக்கட்டும் என்று, மதுராந்தகி இதயத்தில் திருப்தி அடைந்தாள். காளி சோர்ந்த முகத்துடன் திரும்பினான்.

## 36. சோழ நாடா? வேங்கியா?

காஞ்சி நகரத்துச் சைவமடத்தில் அத்திமல்லரும், இராசேந்திரனும் சென்று இரவுப் பொழுதைக் கழிப்பதற்காகத் தங்கினர். மற்ற குறுநில மன்னர்கள் தத்தமது அந்தஸ்திற்கு ஏற்ற இடத்திற்குச் சென்று தங்கினர். தகடூரார் மட்டும் அத்திமல்லரைத் தன்னுடன் வந்து தங்குமாறு அழைத்தார். அவருக்கு ஏதேதோ காரணங்களைக் கூறித் தப்பி வந்ததே அத்திமல்லருக்குப் பெரும் பிரயத்தனமாகி விட்டது.

அமைதியாகத் தங்கிப் பேசுவதற்கு ஏற்ற இடமாக அந்த மடத்துத் திண்ணை காணப்பட்டது.

"தகடூராரைப் புரிந்து கொள்ளவே என்னால் முடிய வில்லையே. இப்போது அவருடன் வராமல் தப்பியது பெரிய காரியம்தான்" என்றார் அத்திமல்லர்.

"தகடூராருக்குச் சோழ நாட்டின் மீது என்ன வெறுப்பு? ஏன் கலகக்காரர்களுடன் சேர விரும்புகிறார்?" என்று இராசேந்திரன் கேட்டான், தன் மாறு வேடத்தைக் கலைத்த வண்ணம்.

"இங்கு கூடியவர்களுக்கெல்லாம் என்ன வெறுப்பு? பாண்டிய நாட்டானாவது தன்மான உணர்ச்சியினால் போராட விரும்பியிருக்கலாம்; மற்றவர்களுக்கு என்ன? சந்தடியில் தாங்களும் அகப்பட்டதைச் சூறையாடலாம் என்றுதான் எண்ணம்... மன்னருக்குக் குழந்தை இல்லை. அடுத்துப் பட்டம் ஏற வாரிசு இல்லை என்பது தெரியும் அவர்களுக்கு. அடுத்துப் பட்டம் ஏறத் தக்கவரைத் தேடும் முன்பு நாட்டையே பாழ்படுத்தி விட்டால்... அதற்காகத்தான் கூடிப் பேசுகிறார்கள். சூழ்ச்சி செய்கிறார்கள். உன்னை அழைத்து வந்ததே அதற்காகத்தான் இராசேந்திரா. பொன்னி பாயும் வளநாட்டிற்குத் துன்பம் நேரிடலாமா?"

அத்திமல்லர் பேசிக் கொண்டே போகும்போது இராசேந்திரன் குறுக்கிட்டு, "அத்திமல்லரே! தாங்கள் கூறுவது அனைத்தும் சரியே, இந்தக் கூட்டத்திலிருந்தே குறுநில மன்னர்களின் சதியை நன்றாகத் தெரிந்து கொண்டேன். ஆனால் சோழ நாட்டை இப்போது காப்பாற்றக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்? மன்னர் இருக்கும் வரை எவரும் எந்தவிதக் கலகமும் செய்ய மாட்டார்கள். அதனால் சோழ நாட்டிற்கு ஒன்றும் நேர்ந்து விடாது..." என்று கூறவும், அத்திமல்லர் அவன் பேச்சை வெட்டி, "அப்படிச் சொல்லாதே இராசேந்திரா! இன்னும் சில மாதங்களில் சோழ நாட்டிற்கு மிகப் பெரிய ஆபத்து காத்திருக்கிறது. அதை நீக்கக் கூடியவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை" என்றார்.

"என் நாட்டைக் காப்பாற்றி மீண்டும் பெற முடியாத நான், சோழ நாட்டை எங்கே காப்பாற்றப் போகிறேன்?"

"சோழ நாடும் உன் நாடுதானே; அதைக் காப்பாற்ற வேண்டியது உன் கடமை."



"சோழ நாடு என் நாடு எப்படியாகும்? நீங்கள் ஒருவர்தாம் அப்படிக் கூறுகிறீர்கள். ஐயா, நான் வேங்கிக்குச் செல்வதைத் தடுத்து விடாதீர்கள். எனக்கு நியாயமாகச் சேர வேண்டிய நாட்டை நான் அடைவதற்குச் சோழ மன்னர்கள் எனக்கு எந்தவித உதவி செய்தார்கள்?"

"பழிக்குப் பழியா, இராசேந்திரா? உனக்கு உதவ முடியாத படி பல சூழ்நிலைகள் ஏற்பட்டதை மறந்து விட்டாயா? உன் மாமன் இராசேந்திரன் அப்போது சாளுக்கியர்களுடன் விடாது போரிட்டு வந்ததை மறந்து விட்டாயா? தெரிந்துதான் பேசுகிறாயா? அல்லது என் வாயைக் கிளறுகிறாயா? கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து புறப்பட்டபோது இருந்த மனப்பான்மை, இப்போது மாறிவிட்டதே" என்று கேட்டார். அவர் குரலில் ஏமாற்றம் பிரதிபலித்தது.

அப்போது இராசேந்திரன் நினைவு எல்லாம் வேங்கியிலேயே இருந்தது.

*இந்த நாவலைப் படிக்கும் அன்பர்களுக்குச் சில பழைய கதையைக் கூற வேண்டிய அவசியம் நேரிடுகிறது. இன்றைக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் நாட்டின் பெருமையைக் கோபுரம்போல் உயர்ந்து நிற்கச் செய்தார் இராசராச சோழர். அவரே தஞ்சையில் மகத்தான பெரிய கோயிலைக் கட்டியவர். அவருடைய புதல்வர் இராசேந்திர சோழர். அவருடைய தங்கை குந்தவ்வை. இராசராச சோழர், தன் சகோதரியின் பெயரையே தன் மகளுக்கும் சூட்டியிருந்தார். அதனால் சரித்திரத்தில் அவளை இளைய குந்தவ்வை என்று குறிப்பிடுவர். குந்தவ்வையை கீழைச் சாளுக்கிய மன்னன் விமலாதித்தனுக்கு மணம் புரிந்து கொடுத்தார். கீழைச் சாளுக்கிய நாட்டின் தலைநகரம் வேங்கி. அந்த மணவினைத் தொடர்பால் சோழ நாட்டிற்கும் கீழைச் சாளுக்கிய நாட்டிற்கும் உறவு ஏற்பட்டது. குந்தவ்வைக்கும் விமலாதித்தனுக்கும் பிறந்த மகனுக்கு இராசஇராச நரேந்திரன் என்று பெயரிட்டனர்.*

*கங்கை கொண்ட சோழர் என்ற பெரும் புகழ் தாங்கிய இராசேந்திர சோழருக்குப் பல புதல்வர்களும், புதல்விகளும் இருந்தனர். அவர்களுள் அம்மங்கை தேவியும் ஒருத்தி. அம்மங்கை தேவியை, கீழைச் சாளுக்கிய இளவரசன் இராசராச நரேந்திரனுக்கு மணம் புரிவித்தார் சோழ மன்னர். அவர்களின் புதல்வன்தான்*

இந்தக் கதை நாயகன் இராசேந்திரன். அம்மங்கை தேவி, தன் தந்தையின் பெயரையே, தன் மகனுக்கும் சூட்டி மகிழ்ந்தாள்.

கீழைச் சாளுக்கிய நாட்டின் அரசராக முடிசூடி ஆண்டு வந்த இராசராச நரேந்திரன், தன் மகன் இராசேந்திரனுக்கு "விஷ்ணு வர்த்தனன்" எனும் பட்டப் பெயரிட்டு இளவரசனாகப் பட்டம் சூட்டினார். இராசேந்திரன் வேங்கியின் இளவரசனாகத் திகழ்ந் தானேயொழிய, வளர்ந்தது எல்லாம் கங்கை கொண்ட சோழபுரத்தில் தன் மாமன் பரகேசரி இரண்டாம் இராசேந்திரனிடம்தான். அதனால் பல போர்க்களங்களில் அவன் சில பகுதிப் படைகளுக்குத் தலைமை தாங்கிச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. பிறகு வீரராசேந்திரன் எனும் மற்றொரு மாமன் அடுத்துப் பட்டம் ஏறியதும் கடாரம் முதலிய கடல் கடந்த நாடுகளில் போரிடச் சென்றான். அதனால் வேங்கியில் நடைபெற்றவற்றைப் பற்றிக் கவனம் செலுத்தவில்லை.

வேங்கியில் இராசராச நரேந்திரன் காலமானார். அவர் கால மானவுடன் அவரது சகோதரனும், இராசேந்திரனின் சிறிய தந்தை யுமாகிய விசயாதித்தன் அரியணை ஏற அவாக் கொண்டான். இராசேந்திரன் இளம் பிராயத்தினனாய் இருந்ததால்தான் அவனுக் குப் பதிலாக தான் ஆள முற்பட்டான். இராசேந்திரனும் இசைந்தான். ஆனால், உற்ற வயது நிறைந்த பின்பும் விசயாதித்தனுக்கு ராஜ்ய ஆசை விடவில்லை. அவனது திட்டங்கள் விரிந்தன. இராசேந்திரன் வேங்கிக்கு வராமல் இருக்கவே பல சூழ்ச்சிகள் செய்யலானான்.

இராசேந்திரன், தன் மாமனும் அப்போது சோழ நாட்டை ஆண்டு வந்தவனுமாகிய இரண்டாம் இராசேந்திரனிடம் உதவி கோரிப் பார்த்தான். ஆனால் அப்போது சோழர்களுக்கும்-சாளுக்கியர்களுக்கும் பெரும்போர் நடைபெற்றவாறிருந்தது. வேங்கி விவகாரத்தைக் கவனிக்க இயலாது போயிற்று.

விசயாதித்தனுக்குச் சூழ்நிலை சாதகமாக இருந்தது. அவன் எண்ணம் விரிந்தது. தன் மகன் சத்திரவர்மனுக்கு அடுத்து நாட்டை அளித்துவிடும் அளவுக்கு அவன் ஆசை அதிகமாகியது. இராசேந்திரன் சிறிய தந்தையுடன் வாதிட்டுப் பார்த்தும் முடிய வில்லை.

அவன் தாய் அம்மங்கை தேவிக்கு வேங்கியில் இருக்கவே பிடிக்கவில்லை. கீழைச் சாளுக்கிய நாட்டைப் பெறச் சச்சரவு



செய்ய வேண்டாம் என்று, தன் மகனைக் கேட்டுக் கொண்டாள். இராசேந்திரன் கவனமும் போர்க் களங்களின்பால் சென்றபடியால் அவன் கீழைச் சாளுக்கிய நாட்டை மீண்டும் அடைவதைப் பற்றியே நினைக்கவில்லை. அவன் மிகவும் மதிப்பும், மரியாதை யும் கொண்டிருந்த வீரராசேந்திர சோழன் இறந்த பிறகு, வேங்கி யைப் பற்றிய நினைவு வந்தது. தன் தாய் நாட்டை மீட்க வேண்டும் எனும் துடிப்பு அவனுக்கு ஏற்பட்டது. இந்த நிலையில் சோழ நாட்டு விவகாரங்களில் அவன் எவ்வளவு தூரம் தலையிட முடியும்?

அத்திமல்லர் கூறியவற்றைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாலும், அவன் மனம் வேங்கியில்தான் இருந்தது. ஆனால் அத்திமல்லரோ, மறுநாள் நடைபெறும் சதிக்கூட்டத்தில் இராசேந்திரன் மீண்டும் கலந்து கொண்டால் மனம் மாறி சோழ நாட்டிலே தங்கி அரியணை உரிமைக்காகப் போரிடுவான் என எண்ணினார்.

அதற்காகத்தான் அவர் மீண்டும் சித்திரமண்டபத்துச் சித்திரங்களைப் பற்றி நினைவூட்டினார்.

## 37. வேங்கியினின்று வந்த ஓலை

அத்திமல்லர் பேசிக் கொண்டிருந்தபோது, இராசேந்திரன் உறங்கிவிட்டான். அத்திமல்லருக்கு உறக்கம் வரவில்லை. அவர் சிறிதுநேரம் விழித்தவாறிருந்தார். பிறகு அங்கிருந்து எழுந்து வெளியே வந்தமர்ந்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென வானத்தில் அதிபிரகாசமான நட்சத்திரம் ஒன்று நிலைபெயர்ந்து விழுவதைக் கண்டார். அவர் உடல் நடுங்கியது. ஏதோ துக்ககரமான சம்பவம் நடக்கப் போகிறது என்பதைத்தான் அந்த நட்சத்திரப் பெயர்ச்சி தெரிவிக்கிறது என்பதை அவர் அறிவார். துக்ககரமான செய்தி வேறு என்ன நடக்கவேண்டும்? சோழ நாட்டில் சிற்றரசர்கள் நாட்டைச் சின்னாபின்னமாக்குவதை விடத் துக்ககரமான சம்பவம் வேறு நேர வேண்டுமா? இவ்வாறு எண்ணியவாறு அவர் உலாவினார். அப்போது ஒருவன் அவரை அணுகி, இரவு இந்த இடத்தில் தங்கலாமா என்று கேட்டான். அவர் அந்த மடத்து அதிகாரியல்லரே. அவர் சொன்னார்: "ராஜீய விஷயமாகத் தங்குபவர்களுக்கு உபயோகப்படும் இடம் இது. வேறு மனிதர்களை அனுமதிக்கமாட்டார்கள்."

அவன் சொன்னான்: "நானும் அரசாங்கக் காரியமாகத்தான் வருகிறேன். வேங்கியிலிருந்து வருகிறேன். கங்கைகொண்ட சோழபுரம் செல்கிறேன்."

"வேங்கியினின்று வருகிறவர்கள் எல்லாருக்கும் இங்கே இடம் தந்துவிடமுடியுமா? முக்கியமான காரியம் ஏதாவது இருக்க வேண்டுமே" என்று மெல்ல அவன் வாயிலிருந்து செய்தி அறிய முயன்றார்.

"அவசியமும் அவசரமும் இல்லாமல் பல காத தூரம் ஏன் வரப்போகிறேன் ஐயா? வேங்கியின் அரசி அவசரமாக அனுப்பிய ஓலை என்னிடம் இருக்கிறது" என்றான்.

அத்திமல்லர் எதிர்பார்த்ததுதான். இராசேந்திரனைத் தேடித்தான் அவன் வந்திருக்கிறான். நல்லவேளையாக இங்கேயே சந்தித்து விட்டானே! அத்திமல்லர் அவனை அருகழைத்து, "ஐயா நீங்கள் இங்கேயே தங்கலாம். நீங்கள் கொண்டு வந்திருக்கும் செய்தி இராசேந்திரனுக்குத்தானே?" என்று மெல்லிய குரலில் கேட்டார்.

அவன் திடுக்கிட்டான்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான். அத்திமல்லர் மறு மொழி பேசாமல் அவனை அழைத்துச் சென்று, இராசேந்திரன் உறங்குவதைக் காட்டினார்.

"ஆகா! இளவரசர்!" என்று கூவினான் அவன்.

"உச்; சத்தம் போடாதே. இப்போதுதான் தூங்க ஆரம்பித்தார். காலையில் எழுந்தவுடன் பேசிக்கொள்ளலாம்" என்று கூறினார்.

வேங்கித் தூதனுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் அவர் பேசி, மெல்ல அந்த ஓலையிலுள்ள செய்தியைப் பற்றி விசாரிக்கலானார்.

வேங்கியிலிருந்த அம்மங்கை தேவி எழுதியிருந்தாள்: வேங்கியில் விசயாதித்தன் கை ஓங்கி வருவதாகவும், அவன் மகன் சத்திவர்மனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட ஏற்பாடுகள் செய்து வருவதாகவும், தனக்கும் பலத்த காவல் போட்டிருப்பதாகவும், உடனே புறப்பட்டு வாராவிடில் வேங்கியை இழக்க வேண்டியது தான் என்றும் அதில் கண்டிருந்தது.



பொழுது விடிந்து மேலே ஆக வேண்டியதைக் கவனிப்போமென்று எண்ணி, அவனை அங்கேயே உறங்கச் செய்தார். அவர் என்னதான் யோசித்த போதிலும், சோழ நாட்டுக்கு வரப்போகும் ஆபத்தைத் தடுக்க முடியாது என்பதை உணர்ந்தார். அவருள்ளத்தில் சோர்வு நிறைந்தது. அந்த நிலையிலேயே அவர் உறங்கி விட்டார். அவர் கண் விழித்தபோது விடிந்து ஒரு நாழிகை ஆகியிருந்தது. இராசேந்திரனும், வேங்கித் தூதனும் அதற்குள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு விட்டனர். ஓலையையும் தூதன் இராசேந்திரனிடம் கொடுத்து அவன் படிக்கவே, உடனே புறப்பட்டு விடுவது என்ற முடிவுக்கும் அவன் வந்துவிட்டான்.

"நேற்று இரவே ஓலையிலுள்ள செய்தியைக் கேள்விப்பட்டேன், இராசேந்திரா. ஓலையிலுள்ள செய்தி உண்மையாயிருக்கும் என்று நம்புகிறாயா?" என்று அத்திமல்லர் கேட்டார்.

"உண்மையோ, பொய்யோ! வேங்கிக்குப் புறப்படும் எணணத்துடன்தானே நான் இவ்வளவு தொலைவு வந்து விட்டேன். இப்போது வேங்கிக்குப் போக உடன் துணையும் கிடைத்தது" என்றான் இராசேந்திரன்.

"இன்னும் சிறிது நேரத்தில் மீண்டும் சிற்றரசர்கள் கூட்டம் நடக்கும். அதன் முடிவைத் தெரிந்து கொண்டு விடலாமே!"

"முடிவு என்ன-சோழ நாட்டை எல்லாரும் சேர்ந்து கபளீகரம் போடுவர். ஆனால் ஒருவராவது ஓர் முடிவுக்கும் வரமாட்டார்கள். நானிருந்து என்ன செய்யப் போகிறேன்? மேலும் மாறு வேடத்திலிருந்து என் வாயால் சதி செய்பவர்களுக்கு உற்சாகம் அளிப்பதை நான் விரும்பவில்லை?"

"வேண்டாம். உன் உண்மை வடிவத்துடனேயே நீ தோன்றலாம். உனக்கு இந்த நாட்டின் மீதுள்ள உரிமையைத் தெரிவிக்கிறேன். உனக்குக் கட்சி சேர்க்கிறேன்."

அத்திமல்லர் இப்படிக் கூறியதும், இராசேந்திரன் மெல்ல நகைத்து, "பாட்டா! உங்கள் அன்புக்கும், உதவிக்கும் நான் எப்படி நன்றியைத் தெரிவிப்பேன்! வேங்கியில் என் தாய் தொல்லைப் படும்போது நான் சதிச் சுழலில் சிக்குவது நியாயமாகுமா? எனக்காக நீங்கள் கட்சி சேர்க்க வேண்டாம். நான் சோழ அரியணையை அடைவதன் மூலம் மீண்டும் இந்த நாட்டில் விரோதிக் கூட்டம் ஏற்படுவதை ஒப்புக்கொள்ளமாட்டேன். ஆனால், நான் வேங்கி

அரியணையை அடைந்த பிறகு, இந்த நாட்டில் குழப்பம் நீடித்தால் அப்போது படைகளுடன் வருவேன்... உங்கள் எண்ணத்தை அப்போது நிறைவேற்றுவேன். இது உறுதி'' என்றான்.

அத்திமல்லர் மௌனமாயிருந்தார். ''பாட்டா, எனக்கு முழுமனதுடன் விடை சொல்லுங்கள். நான் எடுக்கும் செயல் வெற்றி ஏற்பட ஆசி கூறுங்கள்'' என்று இராசேந்திரன் கேட்ட போது, அத்திமல்லர் கண்களில் நீர் தளும்பியது. ஏதும் அவரால் செய்ய முடியவில்லை. தன் திட்டங்கள் ஏதும் நடக்கவில்லை எனும் சோர்வு அவரிடம் குடிகொண்டது.

இராசேந்திரன் குதிரைமீதேறி அமர்ந்தான். வேங்கித் தூதனும் மற்றொரு குதிரையில் ஏறினான். அவர்கள் உருவம் தொலைவில் மறையும்வரை நின்றது நின்றபடியே பார்த்துக் கொண்டிருந்த அத்திமல்லரின் தோளை தகடூரார் தட்டி, ''என்னய்யா, அப்படிக் கம்பம்போல் நின்றுவிட்டீர்?'' என்று கேட்டவுடன், திடுக்கிட்டுத் திரும்பினார் அத்திமல்லர்.

## 38. புது வாழ்வு

இளைய தன்மபாலர் கொலையுண்டது குறித்துத் தக்க விசாரணை நடைபெறவில்லை என்ற பேச்சு இரகசியமாக நகரத்தில் பரவி, பலத்த கூக்குரலாகவே எழுந்தது. இதில் தளபதிக்குச் சம்பந்தம் இருக்கிறது என்ற வதந்தியைப் பிரம்மராயர் கிளப்பி விட்டுவிட்டார். இதுபற்றி மன்னரின் செவிகளிலும் எட்டுமாறு செய்தார். தளபதி பெரிய தன்மபாலர் இதை அறிந்ததும், கோபாவேசங் கொண்டார். அவர் பிரம்மராயரைச் சந்தித்துக் கடுங்கோபத்துடன் அது பற்றி வினவினார். பிரம்மராயர், தளபதியின் கோபத்துக்கு அஞ்சவில்லை. ''நான்தான் கூறினேன்; இல்லையென்றால் மறுப்பது உங்கள் வேலை. நீதிமன்றம் கூட்டி விசாரிக்கவும் ஏற்பாடு செய்யாவிடில் என் பெயர் பிரம்மராயர் இல்லை'' என்று சீறினார்.

தளபதி அசந்து விட்டார். இருந்தாலும் தன் பலவீனத்தைக் காட்டிக் கொள்ளாமல், ''பிரம்மராயரே, உமது நடவடிக்கைகளை மறைப்பதற்கு இப்படி ஒரு பொய்ப் பழியைக் கிளப்பி விட்டுவிட்டீரா?'' என்றார்.



பிரம்மராயர் பெரிதாகச் சிரித்துவிட்டு, ''தளபதியாரே, உமது சதியை மறைக்க ஏதாவது இப்படிக் கூறலாம் என்று பார்க்கிறீர்களா? அது நடவாது'' என்றார்.

''காஞ்சியிலிருந்து மதுராந்தகன் திடீரென வந்து உமது வீட்டில் தங்கினானே, அவன் செய்யும் சதி எனக்கும் தெரியும்'' என்றார் தளபதி.

''இளவரசி மதுராந்தகியைக் கொல்வதற்கு ஆட்களை அனுப்பியதும் எனக்குத் தெரியும். வேங்கியினின்று வந்த இளவரசனை சிறையிலடைக்க வீரர்கள் அனுப்பியதும் எனக்குத் தெரியும்'' என்றார் பிரம்மராயர்.

தளபதிக்கு ஆத்திரம் பொங்கியது. ஏரிக்கரையில் இளவரசியை யாரோ கொல்ல முயன்றார்கள் என்ற செய்தியை அவரும் கேள்விப்பட்டிருந்தார். அந்தச் சம்பவத்தைத் தன் பெயருடன் சம்பந்தப்படுத்துவது அவருக்கு ஆத்திரத்தை வரவழைத்தது. சரேலென்று தன் வாளை உருவி, ''பிரம்மராயரே! உமது பழைய செல்வாக்கை எண்ணி உமது நாவை அறுக்காமல் விடுகிறேன். இனியும் இப்படிப் பேசித் திரிவதாகக் கேள்விப்பட்டால் உம்மைச் சும்மாவிடமாட்டேன்'' என்று கர்ஜித்தார்.

பிரம்மராயரும் மௌனமாக இருக்கவில்லை. தன் வாளையும் உருவி, ''தளபதியாரே! இப்படியொரு சந்தர்ப்பம் நேரும் என்று நெடுநாட்களாக எதிர்பார்த்து இருந்தேன். யார் சதிகாரர்கள் என முடிவு செய்துவிடுவோம்'' என்று சீறினார். ஒரு கணமிருந்தால் வாளோடு வாள் மோதியிருக்கும். இவர்கள் இருவரிடையே திருமந்திர ஓலைநாயகம் நின்று, ''நன்றாக இருக்கிறதப்பா நீங்கள் ஒருவரோடொருவர் மோதிக்கொள்வது. உங்களிருவரையுமே சிறையிலடைக்குமாறு மன்னர் கட்டளையிட்டிருக்கிறார்'' என்று கூறவும், இருவரும் திடுக்கிட்டு விலகிக் கொண்டனர்.

திருமந்திர ஓலைநாயகம் நகைத்து, ''இப்படி முக்கிய மானவர்களே சண்டையிட்டுக் கொண்டால், மூன்றாவது மனிதர் வருவதற்குக் கேட்க வேண்டுமா? மன்னரின் அருகேயிருந்த பேழையிலிருந்த முக்கியமான ஓலையைக் காணவில்லை. மாளிகைக்குள்ளே கள்ளன் வந்துவிட்டான் என்றால், இனி எது நேரும் என்பதைக் கூற முடியாது'' என்றவுடன், தளபதி திடுக்கிட்டார்.

"மன்னர் அருகேயிருந்த பேழையிலிருந்த ஓலையைக் காணவில்லையா?" என்று பதட்டத்துடன் கேட்ட தளபதி, உறுமினார்.

"நீர்தான் ஈ, எறும்புகூட புக முடியாமல் காவல் வைத்திருந்தீரே! யாரய்யா எடுத்துப் போயிருப்பார்கள் உம்மைத் தவிர" என்று பிரம்மராயர் கூற, தளபதி மீண்டும் உறுமினார்.

"அந்த ஓலையில் அப்படியென்ன முக்கிய சேதி இருந்தது?" என்று தளபதி கேட்டார்.

"அது அடுத்து வரும் பட்டத்து உரிமையினரைப் பற்றியது" என்றார் திருமந்திர ஓலைநாயகம்.

இது கேட்டுத் தளபதி, பிரம்மராயர் இருவரும் திடுக்கிட்டு, "பட்டத்து உரிமையா? என்ன எழுதியிருந்தது அதில்?" என்று ஒரே சுருதியில் கேட்டனர்?

"ஆமாம் எழுதியிருந்தது! சோழ நாட்டைப் பிரம்மராயரும், தளபதியும் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும் என்று!" என்று ஓலைநாயகம் கூறவும், இருவர் முகத்திலும் சொல்லொணாக் கோபக் கனல் எழுந்தது.

"முக்கியமான செய்தி குறித்து இப்படி விளையாட்டாகப் பேசுகிறீர்களே" என்று பிரம்மராயர் கடிந்தார்.

"எல்லாம் விளையாட்டுத்தானய்யா! நாட்டிலே வீதிக்கு வீதி கட்சிப் பிரதிக் கட்சிகள் ஏற்பட்டு, அடுத்துப் பட்டத்துக்கு வருபவர்கள் எவர் என்பதைக் குறித்துச் சர்ச்சை நடக்கும்போது நானும் விளையாட்டாக ஏன் பேசக் கூடாது?" என்றார் ஓலைநாயகம்.

பிறகு சற்றுக் கடினமான குரலில், "அந்த ஓலையில் சிற்றரசர்கள் சபையைக் கூட்டுமாறு, மன்னர் கட்டளையிட்டிருந்தார். அதைத்தான் காணவில்லை. சிற்றரசர்களைக் கூட்டி அடுத்துப் பட்டத்து உரிமையை முடிவு செய்ய வேண்டும் என்று அரசர் விரும்பியிருந்தார். அந்த ஓலையைக் களவாடிச் சென்றதால் சிற்றரசர்களை அழைத்துச் சபையைக் கூட்ட முடியாதா?" என்றார் ஓலைநாயகம்.

"ஆகா! நன்றாகக் கூட்டலாம்; நாம் கூட்டாமலேயே அவர்கள்தாம் கூடுகிறார்களே. ஏரிக்கரையில் கூடினார்கள். இப்போது காஞ்சியில் கூடுகிறார்கள். வேங்கி இளவரசன் இராசேந்திரனும் அதில் கலந்து கொள்ளப் போயிருக்கிறான்" என்றார் பிரம்மராயர் ஆத்திரத்துடன்.



"வேங்கி இளவரசர் இங்கிருந்து போய்விட்டாரா? மன்னர் அவரைக் காண வேண்டும் என்றாரே" என்று கேட்டார் ஓலைநாயகம்.

"எதற்காக?" என்று தளபதியும், பிரம்மராயரும் ஒரே குரலில் கேட்டனர்.

"எதற்காக! நாட்டை அந்தப் பிள்ளையாண்டானிடம் ஒப்படைக்க" என்று ஓலைநாயகம் எரிச்சலுடன் கூறி, "ஐயா, தளபதியாரே! பிரம்மராயரே! இனி இந்த நாட்டைக் காப்பாற்ற தெய்வம்தான் வரவேண்டும். நீங்கள் இருவரும் துரோகம் செய்ய முடிவு செய்துவிட்ட பிறகு, வேறு யார் வந்து இந்த நாட்டைக் காப்பாற்றுவார்கள்?" என்று கூறி விட்டு, அங்கிருந்து போய் விட்டார்.

தளபதியும், பிரம்மராயரும் ஒன்றும் புரியாமல் சற்று நேரம் ஒருவர் முகத்தை ஒருவர் பாராமல் நின்றுவிட்டு, பிறகு நேர் எதிர் திசையில் சென்றனர். இருவர் உள்ளத்திலும் ஒருவரை மற்றவர் ஒழித்துவிட வேண்டும் எனும் ஆத்திரமும் அதிகமாகியது.

அன்று இரவே அதற்கான திட்டங்களைத் தீட்டி, ஒருவர் வீட்டிற்கு மற்றவர் தீ வைத்துவிட முடிவு செய்து கொண்டிருந்த போது, மன்னர் அதிராசேந்திர சோழ தேவர் சைகை காட்டி, பட்டத்து அரசியை உடனே அழைத்து வருமாறு கட்டளையிட்டார்.

மன்னரைக் காண்போமா என்று ஏங்கிக் கொண்டிருந்த அரசி, புதுவாழ்வு வந்தது போல மன்னர் படுத்திருக்குமிடம் விரைந்தாள்.

## 39. "போ வெளியே"

காஞ்சிபுரத்தின் அகன்ற வீதிகளின் உயர்ந்த கட்டடத்தின் மேன்மாடத்தில் ஒரு சிறு அறையில் சந்திரகுமாரி சோகமே உருவெடுத்தாற்போல் படுத்திருந்தாள். அவள் எதிரே ஒரு தட்டில் உணவு இருந்தது. அருகே பட்டு, புடைவை ஒன்றுப் கலைந்து கிடந்தது. கங்கபீமன் உள்ளும் வெளியும் நடப்பதும் வருவதுமாகப் பரபரப்புடன் காணப்பட்டான். ஒரு சமயம் அவன் அவளிடம் கெஞ்சுவதுபோல் பேசினான். ஒரு சமயம் சற்று

உரிமையுடன் வேண்டுவதுபோல் பேசினான். கண்டிப்பான குரலில் அவளை உத்திரவிட்டுப் பணியச் செய்யலாம். ஆனால் அவள் பணிய வேண்டுமே!

"சந்திரகுமாரி! அவர்கள் காத்திருப்பார்கள். உன் பிடிவாதம் பிறகு இருக்கட்டுமே..." என்றான் கங்கபீமன்.

"பிறகு என்றால் எப்போது? என்னைத் தகடூருக்கு அனுப்பிய பிறகா?"

"தகடூருக்குப் போனால்தான் என்ன? நமது திட்டம் நிறைவேற எங்கு வேண்டுமானாலும் செல்லலாமே..."

"எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்கிறீர்களே! நான் ஓரிடம் சொல்கிறேன். அங்கு என்னை அனுப்புவீர்களா?"

"எந்த இடம் அது குமாரி........"

"இப்படி எல்லாம் இங்கே-அங்கே என்று இழுத்தடித்து விடாமல் ஒரேயடியாக மேலுலகுக்கு அனுப்பிவிடு..."-இதைக் கூறும்போது சந்திரகுமாரி அழுதுவிட்டாள். கங்கபீமனுக்கு ஏதும் தோன்றவில்லை. சிற்றரசர்கள் கூடும் இடத்தில் நடனமாடிவிட்டு அப்படியே தகடூருக்குச் செல்ல ஏற்பாடு செய்திருந்தான். அவளோடு தானும் சென்று, நிறையப் பொருளுடன் திரும்பலாம் என்று திட்டமிட்டிருந்தான். ஆனால் கங்கை கொண்ட சோழபுரத்தினின்று அவளைத் தப்பிக்க வைத்து அழைத்து வந்ததே பெரிய காரியமாயிருந்ததே.

அன்று சிவிகையில், தளபதியின் காவலர்களுடன் புறப்பட்ட அவன், குறிப்பிட்ட இடம் வந்தவுடன் முன்திட்டப்படி நிறுத்தப் பட்டிருந்த ரதத்தில் ஏறுமாறு சந்திரகுமாரியைக் கேட்டுக் கொண்டான். சீக்கிரமாகச் செல்வதற்காக இருக்கலாம் என்று எண்ணிய அவளும், ஏதும் பேசாமல் அமர்ந்தாள். தளபதியின் காவலர்களை அங்கேயே இருக்குமாறு கட்டளையிட்ட கங்கபீமன், தேரோட்டியை விரைந்து செல்லுமாறு சைகை செய்தான்.

கங்கை கொண்ட சோழபுரத்தைத் தாண்டிய பிறகு மக்கள் நடமாட்டமற்ற இடத்திலே செல்லத் தொடங்கிய பிறகுதான், சந்திரகுமாரி தாம் எங்கோ செல்கிறோமென்பதை உணர்ந்தாள்.

"என்னிடம் சொல்லாமல் எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்?" என்று சந்திரகுமாரி கூவினாள்.



தேரோட்டி அவள் பக்கம் திரும்பி, "ஏனம்மா இப்படிச் கூவுகிறாய்? உன்மீது எங்கள் அரசருக்கு ஒரே பித்து. அவர்தான் அழைத்து வரச் சொன்னார். பொன்னும் பொருளும் நிறையத் தருவார். அதுமட்டுமா? எங்கள் ஊரிலே நீ வைத்ததுதான் சட்டம் என்று ஆகிவிடும். என்ன நான் சொல்வது, பீமரே?" என்று அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசவும், சந்திரகுமாரி அவன் மேல் சீறி, "யாரய்யா நீ, ஒழுக்கக் குறைவாகப் பேசுவது?" என்று கர்ஜிக்கவும், கங்கபீமன் அவளைச் சமாதானப்படுத்துவதுபோல், "தேரோட்டி என்று அவரை எண்ணிவிடாதே, தகடூரில் மிகவும் செல்வாக்கு வாய்ந்தவர். தகடூர் அரசனின் மிக அந்தரங்க ஆள். உனக்கு நல்லதைத்தானே சொல்கிறார்..." என்று சமாதானப் படுத்தினான்.

"எனக்கு நல்லது எது என்று தெரியும். மற்றவர் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இப்போது என்னைத் திருவெண்காட்டு நங்கையிடம் கொண்டு சேர்ப்பிக்கப் போகிறாயா, இல்லையா?" என்று கூவினாள் சந்திரகுமாரி.

"அந்தக் கிழவியின் பேரன் பேரில் உனக்கு ரொம்ப ஆசையா? வெறும் விபூதிதானே அவன் கொடுப்பான்" என்று கங்கபீமன் விளையாட்டாகக் கேட்டான்.

"மாமா, இதுவரை நான் மிகவும் மரியாதையாக நடந்து வந்தேன். இனி என்மேல் வருத்தப்பட்டுப் பயன் இல்லை" என்று சந்திரகுமாரி ஆத்திரத்துடன் கூறினாள்.

கங்கபீமன் கடகடவென நகைத்தான். "உன் வருத்தம் எல்லாம் காஞ்சி செல்லும் வரையில்தானே, அதன் பிறகு என்னை நீ எங்கே மதிக்கப் போகிறாய். அங்கே அந்தப் பாண்டியக் குமாரன் இருப்பான். தகடூரார் இருப்பார். கொங்கு வேளிர் இருப்பார். எல்லாரும் ஆகா, ஆகா! என்று உன் நாட்டியத்தை ரசிப்பர்... நீயும் அவர்கள் செல்வத்திலே மயங்கி விடுவாய்..." என்று கேலியாகக் கூறினான்.

சந்திரகுமாரி ஆக்ரோஷத்துடன் எழுந்தாள். "என்ன கூறினீர் மாமா... இப்படி இன்னொரு தடவை சொன்னால் ஓடும் தேரிலிருந்து குதித்து விடுவேன்" என்று குதிப்பதுபோல் பாவனை செய்தாள்.

கங்கபீமன் பயந்தே விட்டான். ஆனால் தேரோட்டி ஏதோ சாடை காட்டவே, கங்கபீமன் மறைத்து வைக்கப்பட்டிருந்த பச்சிலைக் கொடியொன்றை அவள் மூக்கு எதிரே நீட்டவும், சந்திரகுமாரி மயங்கித் தள்ளாடி கங்கபீமன் மேல் சாய்ந்தாள்.

கங்கபீமன், அவளுடைய மிருதுவான கைகளைத் தடவி, முகத்தையும் மெல்ல வருடி, "முன்பு இப்படி இல்லை. எல்லாம் அந்தப் பண்டாரப்பயல் வீட்டிற்குப் போன பிறகு மாறிவிட்டாள். அங்கே எப்படிச் சென்றாள். யார் கொண்டு சேர்த்தார்கள் என்பது ஆச்சரியமாயிருக்கிறது" என்றான்.

ரதம் ஓடிக்கொண்டே இருந்தது; நள்ளிரவிலும் ஓடிக் கொண்டே இருந்தது. இடையே குதிரைகளுக்குக் களைப்பு ஏற்படாதிருக்க ஓய்வு கொடுப்பதற்காக நின்றது. இரு இடங்களில் வேறு குதிரைகளைப் பூட்டுவதற்காக நின்றது. பொழுது புலருமுன்பாகக் காஞ்சியில், மேலே குறிப்பிட்ட வீட்டின் எதிரே வந்து நின்றது. சந்திரகுமாரி மயக்கம் தெளிந்து எழுந்து, பிறகு கொஞ்சங் கொஞ்சமாகத் தன் நிலையுணர்ந்தாள்.

சமாதானமான குரலில் பேசியும் அவள் இசையமாட்டாள் எனக் கருதி, பீமன் சற்றுக் குரலை உயர்த்தி, "இப்படியே நீ பிடிவாதம் பிடித்தால் நான் உன்னை விட்டுப் போய் விடுவேன்; நீ புதிய நகரத்தில் திண்டாடி அலைந்து வருத்தமுற்று வாட வேண்டியதுதான்" என்றான்.

சந்திரகுமாரி நிமிர்ந்து அவனைப் பார்த்து, "நான் மாண்டு ஒழிந்து போகிறேன். உனக்கென்ன இனி அதைப் பற்றி? உன் இஷ்டத்திற்கும், திட்டத்திற்கும் நான் சம்மதிக்கவே மாட்டேன். போய்விடு, போய்விடு. இல்லாவிடில் நான் 'ஹோ' என்று கூப்பாடு போட்டு உனது வகையினரின் சதித்திட்டத்தை அம்பலப்படுத்து வேன்..." என்று கூறி, எழுந்தும் நின்றாள். அவள் கரங்கள் அந்த இடத்தைவிட்டு அவன் வெளியே செல்வதற்கு வழியைக் காட்டின.

இன்னும் சிறிது நேரத்தில் சிற்றரசர்கள் சபைக்கு அவளை அழைத்து வருவதாகக் கூறி வந்த தன் நிலை என்ன ஆவது என்று செய்வதறியாது துடித்தான் கங்கபீமன்.

# 40. தகடூரார் திட்டம்

இராசேந்திரன் குதிரை மீதேறிச் சென்ற பிறகு அயர்ந்து நின்ற அத்திமல்லரை நோக்கித் தகடூரார் நெருங்கி வந்து, அவர் தோளைத் தட்டி, அவர் அவ்விதம் அயர்ந்து நிற்பதற்கான காரணத்தை வினவினார்.

அத்திமல்லர், தன் முகபாவத்தை மாற்றிக் கொண்டு, பேச்சைத் திருப்ப முயன்றார்.

"யார் அந்த இளைஞன் அத்திமல்லரே?" என்று கேட்டார் தகடூரார்.

"யாரைக் கேட்கிறீர்கள்?"

"அத்திமல்லரே, என்னிடம் மறைக்க முயன்றால் முடியுமா? அந்த இளைஞனை வழியனுப்பிவிட்டு இப்படி வருத்தத்துடன் நிற்கிறீர்கள்? யார் அந்த இளைஞன்? எங்கே செல்கிறான்?" என்று கேள்விமேல் கேள்வி கேட்டார் தகடூரார்.

இனியும் அவரிடம் மறைப்பதில் பயனில்லை என்ற முடிவு செய்த அத்திமல்லர், "உங்களுக்கு அந்த இளைஞர் மேல் என்ன உரிமையோ, அதே உரிமைதான் எனக்கும். இன்னும் கேட்டால் தங்களுக்குத்தான் அவன் மிகவும் வேண்டியவனாகிறான்" என்றார்.

"சுற்றி வளைத்துச் சொல்லாதீர்கள் அத்திமல்லரே, நேரிடையே பேசுவோம்... யார் அந்த இளைஞன்? ராஜகளை சொட்டுகிறதே" என்று கேட்டார் தகடூரார்.

"ராஜகளை சொட்டாமல் என்ன செய்யும்? ராஜனேதான்!"

"அத்திமல்லரே, சுற்றி வளைக்காதீர்; எனக்குப் புரிய வில்லை..."

"உமக்கு இதெல்லாம் புரியுமா? சோழ சாம்ராஜ்யத்துக்கு எதிராகப் போராடி நாட்டைக் கூறுபோடத் தெரியும்."

"உமக்கும் அதில் சம்மதம்தானே... என்னை மட்டும் தனியே சம்பந்தப் படுத்துகிறீரே, ஏன்?"

"உண்மையில் எனக்குச் சம்மதம் இல்லை. ஆனால், நான் ஏன் கலந்துகொண்டேன் என்பது வேறு கதை..."

அத்திமல்லர் இவ்வாறு கூறவும், தகடூரார் கடகடவென நகைத்து, "அத்திமல்லரே, மிகவும் கெட்டிக்காரர் நீர்... சதிக்குள் சதி செய்தீரா... ஏரிக்கரைக் கூட்டத்திலேயே எனக்கு உம்மீது சந்தேகம்தான். ஹூம்... அது கிடக்கட்டும். அந்த ராஜகளையுடையவன் யார் என்று தாங்கள் சொல்லவில்லையே..." என்றார் தகடூரார்.

"சொன்னால் மட்டும் தாங்கள் அவனது சுகதுக்கங்களை விசாரித்துவிடப் போகிறீர்களா...?" என்றார் அத்திமல்லர்.

"சுற்றி வளைக்காதீர்கள் என்றுதான் நான் சொன்னேனே! எனக்குத்தான் பிள்ளைகுட்டி இல்லை; அந்த இளவரசனை வேண்டுமானால் சுவீகாரம் எடுத்துக் கொள்ளட்டுமா?" என்று கூறிக் கண்சிமிட்டினார்.

"ஓகோ! அதற்காகத்தானா அந்த நாட்டியக்காரியையும் உங்களுருக்கு வரவழைக்க ஏற்பாடு செய்தீர்கள்?"

"ஏன், அதற்கு என்ன?"

"மற்றொரு விவாகம் செய்து கொண்டு குழந்தையைப் பெற்றுக் கொள்ள நினைப்பவர், சுவீகாரத்திற்கு ஆசைப் படுவீரா?" என்றார், அத்திமல்லர்.

"அத்திமல்லரே, நீங்கள் பொல்லாதவர். எப்படி ஐயா இதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீர்?"

"பொல்லாதவன்! அதனால்தான்!"

"அதுசரி; விளையாட்டுப் பேச்சு வேண்டாம். அந்த இளைஞன் யார்? எதற்காக அவன் சென்றவுடன் திகைத்து நின்றுவிட்டீர்?"

தகடூரார் வற்புறுத்தவும், அத்திமல்லர், இராசேந்திரனைப் பற்றி விபரம் முழுவதையும் கூறிவிட்டார். அதைக் கேட்கக் கேட்க வியப்பால் திகைத்தார் தகடூரார்.

"இவ்வளவு நாள்களாக இதை என்னிடம் சொல்லாமல் பெரும் சதியில் சிக்க வைக்க முனைந்தீரே ஐயா..." என்று தகடூரார் வேதனைப்பட்டார்.



"நாட்டைப் பங்கு போட்டுக் கொள்ளத் தாங்கள் ஆசைப் படும்போது நான் எப்படித் தங்களை மாற்ற முடியும்?" என்றார் அத்திமல்லர்.

தகடூரார் செய்வதறியாது திகைத்து நின்றார். "அத்திமல்லரே! இன்று எப்படியாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும். என் மனம் குழம்புகிறது. இராசேந்திரனை ஏன் சோழ நாட்டு வாரிசாக நாம் ஏற்கக்கூடாது?"

"அப்படித்தான் செய்ய வேண்டும் என்பது என் கருத்து. தாங்கள் முடிவு எப்படியோ...?" என்றார் அத்திமல்லர்

தகடூரார் சிறிது நேரம் யோசித்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவர்போல், "இன்னும் சிறிது நேரத்தில் கூடும் கூட்டத்திற்குத் தாங்களும் வாருங்கள். ஆமாம், தங்கள் மந்திரி ஒருவர் நேற்று மிகவும் சாதகமாகப் பேசினாரே-அவர் கொள்கையை மீறி எப்படி நீங்கள் சோழ மன்னரை ஆதரிப்பீர்?" என்று கேட்டார்.

அத்திமல்லர் நகைத்து, "முதல் நாள் வேடம் அணிந்து வந்தவன் இளவரசன் இராசேந்திரன்" என்று கூறித் தகடூராரைத் திகைக்க வைத்தார்.

"நல்ல வேளையாக இன்றாவது தெரிந்து கொண்டேனே... இல்லாவிடில் பரம்பரை பரம்பரையாகச் சோழ நாட்டிடம் விசுவாசமாக இருந்த எமது நிலை, ஒரேயடியாக மாறித் துரோகியாக எங்கள் நாடு மாறியிருக்கும். நான் இன்றையக் கூட்டத்தில் புதிய யோசனை தெரிவிக்கப் போகிறேன். நீங்கள் ஆதரிப்பீர்களா?" என்று கேட்டார் தகடூரார்.

"என்ன யோசனை?"

"சோழ நாட்டு வாரிசாக இராசேந்திரனை நியமிக்குமாறு மன்னரை வேண்டுவதுதான் அந்த யோசனை..."

"நான் கலந்து கொள்ளச் சித்தமாக இல்லை..." என்று அத்திமல்லர் கூறவும், தகடூரார் திடுக்கிட்டார்.

"ஏன்?" என்று கேட்டார் அவர்.

"எனக்குச் சோழ நாட்டு விவகாரமே தேவையில்லை. நான் ஊரை நோக்கிப் போய் எதிலும் தலையிடாமல் இருக்கப் போகிறேன்" என்றார் அத்திமல்லர்.

# 41. சந்திப்பு

சந்திரகுமாரி தன்னை அலட்சியமாகப் பேசிவிட்டதுகூட கங்கபீமனுக்கு வருத்தத்தை அளிக்கவில்லை. தகடூராருக்கு அவன் என்ன மறுமொழி கூறுவான். அவருடைய உதவியைப் பெறுவதற்காகத்தானே அவன் சந்திரகுமாரியின் அழகையும், அவள் நாட்டியத் திறமையையும் பயன்படுத்த முடிவு செய்திருந்தான். ஆனால், சந்திரகுமாரியின் எண்ணம் வேறுவிதமாக இருக்கிறதே என்று எண்ணியபோது, மீண்டும் சந்திரகுமாரி குரல் கொடுத்தாள்.

"இப்பொழுதே இங்கிருந்து போகப் போகிறாயா அல்லது நான் கூச்சலிட்டு அக்கம் பக்கத்திலுள்ளவர்களைக் கூப்பிடட்டுமா?" என்று சந்திரகுமாரி மீண்டும் கர்ஜித்தாள்.

கங்கபீமன் ஒரு நிமிடம் ஒன்றும் புரியாமல் திகைத்து விட்டுப் பிறகு, பயங்கரமாக நகைத்து, "கூச்சலிட்டுத்தான் பாரேன்? யார் வரப்போகிறார்கள் உன் உதவிக்கு என்று? என்னிடமிருந்து அவ்வளவு எளிதில் நீ தப்பிவிட முடியாது குமாரி! சில நாள்களிலேயே நீ மாறிவிட்டாய். ஆனால் இன்று நீ மாறுவது உன் உயிருக்கே உலை வைத்துவிடும். வேறு ஏதும் பேசாமல் நான் சொல்வதுபோல் கேள். புத்தாடை அணிந்து அலங்காரம் செய்து கொள். இனி நீ இப்படிப் பலபேர் முன்னிலையில் ஆடவேண்டிய கட்டாயம் நேராது. தகடூர் மாளிகையில் நீ ஒய்யார ராணியாக உலவுவாய். தகடூரார் சோழ நாட்டைக் கவர்ந்து விடும்போது, நீ சோழ மாளிகையில் உல்லாசமாக விளங்குவாய். உன்னை உயர்த்த, உனக்கு நல்லதெல்லாம் செய்ய நான் பாடு படும்போது, நீ வேறு விதமாக எண்ணுகிறாய். சிறிது யோசித்துப் பார் சந்திரகுமாரி" என்றான் கங்கபீமன். பயமுறுத்தத் தொடங்கிய அவனது பேச்சு வரவரக் குழையத் தொடங்கியது.

"எனக்கு மாளிகை வாசம் வேண்டாம்; மண் குடிசையில் நான் வாழுகிறேன்; போதும். என்னைச் சும்மா விட்டுவிட்டுப் போய்விடுங்கள். முடிந்தால் நான் கங்கை கொண்ட சோழபுரம் செல்கிறேன்; இல்லாவிடில் வேங்கிக்கே சென்று விடுகிறேன்" என்றாள் சந்திரகுமாரி. அவள் குரலில் கண்டிப்பு நிறைந்திருந்



தாலும் வேண்டுகோள் கலந்திருந்தது. கங்கபீமன் சிரித்தான். "வேங்கிக்கா செல்லப் போகிறாய் சந்திரகுமாரி? நீயும் நானும் சோழ நாட்டிற்கு எதற்காக வந்தோம் என்பதை மறந்து விட்டாயா?" என்றான் கங்கபீமன்.

"மறந்துவிடவில்லை. அப்போதிருந்த நோக்கம் வேறு; இப்போதிருப்பது வேறு. என்னை விட்டுப்போய் விடுங்கள்..."

"முடியாது. உன்னை விட்டுவிட்டுப் போகவா நான் இவ்வளவு சிரமப்படுகிறேன். நீ சம்மதித்து நாட்டியம் ஆடாவிடில்கூட உன் கையையும் காலையுங் கட்டித் தகடூருக்குச் செல்லும் வண்டியில் போட்டுவிடுவேன். மயக்கம் தரும் மூலிகை இருக்கவே இருக்கிறது" என்றான் கங்கபீமன்.

கங்கபீமன் இப்படிக் கூறவும், சந்திரகுமாரி சீறி எழுந்து, "கையையும் காலையுங் கட்டுவதோடு என் நெஞ்சையும் சேர்த்துக் கட்டிவிடு. தகடூருக்கு யாத்திரை போவதைவிட எமபுரிக்கே போகிறேன்" என்று கூறியவுடன், கங்கபீமன் சற்று நடுநடுங்கித் திகைத்தான். அவன் சிறிது நேரத்திற்குள் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். சட்டென அங்கிருந்து திரும்பி மனத்திற்குள், "மயிலே மயிலே என்றால் மசியமாட்டாய்; ஆகட்டும்; பாடம் கற்பிக்கிறேன்" என்று கூறியவாறு சென்று விட்டான் கங்கபீமன்.

அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் காளிங்கனும், ஆடவல்லானும் அங்கே வந்து சேர்ந்தனர். அவர்கள் களைத்துக் காணப்பட்டனர் மேனியெல்லாம் புழுதி நிறைந்திருந்தது. நெடுந் தூரம் வந்த அடையாளம் அவர்கள் முகத்துச் சோர்விலிருந்து தெரிந்தது. ஆனால் சந்திரகுமாரியைக் கண்டவுடன் அவர்கள் சோர்வு பறந்துவிட்டது.

ஒரு கணம் அவர்களிடையே பேச்சே வரவில்லை. சந்திரகுமாரிக்குப் பனிப்படலம் விலகி நம்பிக்கைக் கதிரவனைக் கண்டது போல் ஆகியது. ஆனால் சொல்லி வைத்தாற்போல் அவர்கள் தன்னை அங்கேயே தேடி வந்தது வியப்பாய்த் தானிருந்தது.

காளிக்கே வியப்பாய்த்தானிருந்தது. காஞ்சிக்கு அன்று வந்து சேர்ந்து விடமுடியும் என்று அவளே நம்பவில்லை. குதிரையைப் பெற்றுத்தர மதுராந்தகி மறுத்தவுடன், ஆடவல்லானும், காளியும் தீவிரமாக யோசனை செய்தனர். கங்கை கொண்ட சோழபுரத்து முத்து வணிகரிடம் சென்றனர். முத்து வணிகர்

ஆடவல்லானை அறிவார். அவனது இசைப் பாடல் அவரைப் பெரிதும் கவரும். தன் மகளுக்கும் நல்ல பக்திப் பாடல்களைக் கற்றுக் கொடுக்க அவனைக் கேட்க வேண்டும் என்று பல முறை எண்ணியதுண்டு. இப்போது ஆடவல்லானே தேடி வந்தவுடன் அவர் வியந்தார். ஆடவல்லானுக்கு உபசரணைகள் பலமாக நடந்தது.

"நானே உன்னைத் தேடி வரலாமென்று நினைத்தேன்" என்று தொடங்கினார் முத்து வணிகர். ஆடவல்லானுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

"என் மகளுக்கு உன் பாடலைக் கேட்கப் பிரியம் அதிகம். நல்ல பாடல்களை கற்பித்துத் தருமாறு உன்னைக் கேட்க வேண்டும் எனும் எண்ணம்..." என்றார். காளியின் மூளை வேலை செய்தது. துணிந்து ஒரு பொய் சொன்னான். அப்போது அந்தப் பொய் தேவையாய்த்தான் இருந்தது.

காளி தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "நீங்களும் தம்பியை நினைத்தீர்கள். தம்பியும் உங்களைத்தான் நினைத்தது. இருவர் மனதும் ஒன்றையே நினைப்பது நல்லதுதானே........" என்றான் காளி.

"என்னை நினைத்தாயா, ஆடவல்லா..." என்று முத்து வணிகர் கேட்கவும், காளியே முந்திக்கொண்டு, "காஞ்சிபுரத்திலே சில புதிய தேவாரப் பாடல்களை ஓதுவார் ஒருவர் கற்றுக் கொடுக்கிறாராம். அவசரமாகத் தெரிந்து வர வேண்டும் என்று தம்பி விரும்பியது" என்றான் காளி.

"ஆகா! நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்..."

"காஞ்சிக்கு இப்போதே புறப்படுகிறோம். அதற்காகத்தான் தங்களை நாடினோம்......"

"என்னையா? என்ன உதவி வேண்டும் உங்களுக்கு? வேண்டியதைக் கேளுங்கள். தருகிறேன்..."

"தம்பிக்கு ஒரு குதிரை தாருங்கள். சீக்கிரமாகப் போய் வந்து விடுவான்..."

"குதிரைதானே! தருகிறேன். ஒரு குதிரை போதுமா? தம்பி தனியே போகலாமா? உனக்கு அவசரமான வேலை இருக்கிறதா? நீயும் உடன் போய்விட்டு வாயேன்..." என்றார்.



தங்கள் காரியம் இவ்வளவு எளிதில் முடிந்துவிடும் என்று காளியும், ஆடவல்லானும் நினைக்கவில்லை. காஞ்சிக்குச் சந்திர குமாரி வந்த சில நாழிகைக்குள்ளே அவர்கள் வந்து சேர்ந்து விட்டது, எல்லோருக்கும் மாய விந்தை போலத்தான் தோன்றியது.

சந்திரகுமாரிக்குப் புது உற்சாகம் பிறந்தது. அவள் பரபரப் புடன், "இப்போதே இங்கிருந்து புறப்பட்டு விடுவோம். என் மாமா இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடுவார்" என்று கூறினாள்.

ஆடவல்லானையும், காளியையும் இப்போது புதுப் பிரச்னை எதிர்நோக்கியிருந்தது. திரும்பவும் சந்திரகுமாரியைக் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு எப்படி அழைத்துச் செல்வது? அவர்கள் இருவரும் செல்லக் குதிரை இருந்தது. சந்திரகுமாரியைக் குதிரையில் ஏற்றிச் செல்ல முடியுமா?

காளி யோசித்தான். பிறகு, "தம்பி, நீ இங்கேயே இரு. இங்கி ருந்து கங்கை கொண்ட சோழபுரம் செல்ல வண்டி கிடைக்கும். பாரசாமான்களை ஏற்றிச் செல்லும் வண்டியாய் இருந்தாலும் போதும். நான் போய் விசாரித்து வருகிறேன். நீங்கள் இருவரும் அருகேயுள்ள மண்டபத்தில் சென்று தங்கி இருங்கள்" என்று கூறிப் புறப்பட்டான்.

## 42. காதலும் கண்ணீரும்

அவர்கள் அங்கிருந்து சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் தகடூர் வீரர்கள் சிலரை அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். கங்கபீமன். சந்திரகுமாரியை அங்கே காணாதது கண்ட அவன் திடுக்கிட்டான்.

"இங்குதான் இருந்தாள்......" என்றான் கங்கபீமன். வீரர்கள் அங்கும் இங்கும் தேடினர். அருகே இருந்தவர்களை விசாரித்ததில், சற்று நேரத்திற்கு முன் இருவர் வந்து அழைத்துச் சென்றதைத் தெரி வித்தனர். கங்கபீமனும் மற்றவர்களும் முனைப்புடன் தேடலாயினர்.

ஆடவல்லானும், சந்திரகுமாரியும் நின்று கொண்டிருந்த மண்டபம் வழியாக அத்திமல்லர் சென்றபோது, அவர் சந்திரகுமாரி யைக் கண்டுவிட்டார். ஆடவல்லானையும் அங்கே பார்த்தது அவருக்கு வியப்பை அளித்தது. அவர் ஒரு முறை கண்களைக் கசக்கிக் கொண்டார். உண்மைதான் என்று அவர் அறிந்து கொண்

டவுடன் அவர்களை அணுகி, அங்கு வந்த விபரம் அறிய முயன்றார். அத்திமல்லர் அவர்கள் இருவரையும் அறிவார். அத்திமல்லரை ஆடவல்லானுக்கு ஓரளவுக்குத் தெரியும். ஆனால் நெருங்கிப் பேசி நடந்ததைக் கூற அவனுக்குத் துணிவு இல்லை.

"சற்று முன்பு இராசேந்திரன் வேங்கி நோக்கி பயண மானான். நீங்களும் இங்கே வந்து விட்டீர்களா?" என்று கேட்ட பிறகுதான், ஆடவல்லான் நடந்தவற்றைச் சொல்ல முனைந்தான்.

ஆடவல்லான் கூறியவற்றைக் கேட்டவுடன் அத்திமல்லர் வியப்படைந்தாலும், சோழநாட்டில் நடைபெறும் சம்பவங்கள் அவ்வளவு உற்சாகம் அளிக்கக்கூடியதாக இல்லை என்பதை உணர்ந்தார். கங்கபீமனின் சதியையும் அவர் தெரிந்து கொண்டார். சந்திரகுமாரியை அந்தப் பாதகனிடமிருந்து தப்ப வைக்க உடனே ஏதாவது செய்தாக வேண்டும் என்று சிந்தித்தார்.

"சந்திரகுமாரி, தகடூருக்குச் செல்வதுதான் சரியென்று எனக்குத் தோன்றுகிறது" என்றார் அத்திமல்லர். இப்படி அவர் கூறியதைக் கேட்டதும் அவர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"தகடூருக்குச் சென்று அந்த மாளிகையில் வாழ்வதைவிட, என்னை இங்கேயே ஆற்றில் பிடித்துத் தள்ளி விடுங்கள்" என்று சந்திரகுமாரி விம்மினாள்.

"தகடூரார் நல்லவர் சந்திரகுமாரி?" என்றார் அத்திமல்லர்.

"அவர் நல்லவரல்லர். சோழ நாட்டையே அபகரிக்கச் சதி செய்கிறார்" என்று சந்திரகுமாரி அலறினாள். இந்தச் சமயத்தே கங்கபீமனும், தகடூர் வீரர்களும் அங்கு வந்து விட்டனர். "அதோ, அதோ!" என்று கங்கபீமன் கூவினான். ஆனால் அத்திமல்லர் நிற்பதைக் கண்டவுடன், தகடூர் வீரர்களாலோ அல்லது கங்க பீமனாலே ஏதும் பேச முடியவில்லை.

"தகடூரார் எந்த நாட்டை அபகரிக்கப் பார்த்தால் உனக்கென்ன குமாரி! நீ முதன் முதல் கங்கை கொண்ட சோழபுரம் வந்தபோது, சோழ நாட்டை அபகரிக்கும் சதித் திட்டத்துடன் தானே வந்தாய்..." என்று அத்திமல்லர், கங்கபீமன் காதில் விழு மாறு கேட்டார்.

"இல்லை, இல்லை. எனக்குச் சதி என்றால் என்னவென்றே தெரியாது. என் நாட்டியத் திறமையைப் புலப்படுத்திப் புகழடைய வந்தேன்..." என்று சந்திரகுமாரி நெஞ்சு அடைக்கக் கூறினாள்.



"இப்போது உன் திறமையைத் தகடூரில் புலப்படுத்திப் புகழும், பெருமையும் அடைந்துவிடேன். எங்கிருந்தால் உனக் கென்ன?" என்று அத்திமல்லர் கூறும்போது, ஆடவல்லான் ஏதோ கூற வாயெடுத்தான்.

அத்திமல்லர் அவன் பக்கம் திரும்பி, "தம்பி! உன் பக்தி யென்ன, அறிவு என்ன, பண்பு என்ன? சோழீசர் முன்னிலையில் இசையுடன் பாடிக் கொண்டே புண்யம் பெற்று வரும் உனக்கு இந்தச் செயல்கள் எதற்குத் தம்பி! உன் தாய் அறிந்தால் வருத்தப் படுவாளே தெரியுமா? ஹூம்... ஒரு பெண்ணுக்காக நீ காஞ்சி வரை குதிரையில் ஏறி ஓடி வந்தாயா? அவளை மறக்க முடியாது என்றால், நீயும் தகடூருக்குப் போயேன்" என்றார்.

தகடூர் செல்லும் கூண்டு வண்டி வந்து கொண்டிருந்தது. "அதோ வருகிறது வண்டி. தகடூராரின் பரிவாரங்கள் வண்டியிலே செல்கின்றனர். சந்திரகுமாரி, வண்டியில் ஏறிக் கொள். நான்கு நாள் பயணத்தில் போய்ச் சேர்ந்து விடலாம். உனக்குப் பயமாயிருந் தால் நானும் வருகிறேன். தகடூரார் என் நண்பர். அவரிடம் உன்னை ஒப்படைத்துவிட்டு நான் திரும்பி வருகிறேன். உனது நலனைக் கவனிக்குமாறு இராசேந்திரன் என்னிடம் சொல்லிச் சென்றிருக் கிறான். உம்... வண்டியில் ஏறிக்கொள்... நீ ஏற மாட்டாயா... என்மேல் நம்பிக்கையில்லையா? இதோ நான் ஏறி முதலில் அமர்ந்து கொள்கிறேன் பார்" என்று கூறி வண்டியில் அமர்ந்தார். சந்திரகுமாரி ஏதும் பேசாமல் வண்டியில் ஏறி அமர்ந்தாள்.

ஆடவல்லானைத் தகடூர் வீரர்கள் பிடித்துக் கொண்டிருந்தனர். வண்டி நகர்ந்தது. சென்றது. மறைந்தது. ஆடவல்லான் உள்ளத் தில் ஏற்பட்ட துயரம் பொங்கிக் கண்கள் வழியாகப் பிரவாகித்தது.

## 43. "உரிமையைக் கேட்பேன்"

**வே**ங்கி நகரத்தின் அரச மாளிகை இருந்த பெருந் தோட் டத்திலே, ஒரு சிறு மாளிகை. அது அம்மங்கை தேவியாருடையது. அம்மங்கை தேவி ஒவ்வொரு கணமும், தன் மகன் இராசேந்திரன் வருகையை எதிர்நோக்கிப் பார்த்துப் பொழுதைக் கழித்துக் கொண் டிருந்தாள்: அந்த அறையில் வாயிற்படியருகே யாராவது நடந்து வரும் காலடி ஓசை கேட்டால், தன் மகன்தான் வருகிறானோ

எனும் ஆவலுடன் எதிர்பார்ப்பாள். அவள் உள்ளம் துள்ளி எழும். ஆனால் யாராவது பணிப்பெண் கையிலே மருந்து கிண்ணத்துடன் வருவாள்.

வேங்கியின் மகாராணியாக ஒரு காலத்தில் அவள் திகழ்ந்தாள். சோழ இளவரசியாகச் செல்லமாக வளர்ந்து வந்தாள். வாழ்நாள் அப்படியே சென்றுவிடும் என்று கனவு கண்டாள். ஆனால் காலம் அப்படியே செல்லவில்லை. இராசராச நரேந்திரன் இறந்தவுடன் அம்மங்கை தேவியும் உடன்கட்டை ஏறியிருக்க வேண்டும். ஆனால் இளம் பருவத்தினனான இராசேந்திரனை வளர்த்து, சிறந்தவனாக்க வேண்டிய பொறுப்பு அவளுக்கு ஏற்பட்டது. தாயாதிகள் நாட்டைக் கவர்ந்து விடுவர் என்ற அச்சமும் இருந்தது. அதனால் உயிரைப் பிடித்து வைத்துக் கொண்டு வேங்கியிலே வாழ்ந்தாள். அவளுடைய கொழுந்தனும், இராசராச நரேந்திரனின் தம்பியுமான விசயாதித்தன் மதிப்பும் மரியாதையும் அவளிடம் வைத்திருந்தான். இராசேந்திரன் மிகவும் இளம் வயதுடையவனாய் இருந்தபடியால், விசயாதித்தன் நாட்டை ஆளுவதையும் அம்மங்கைதேவி சம்மதித்தாள். நாளாக ஆக விசயாதித்தன் உரு மாறியது. இராசேந்திரனிடம் நாட்டை ஒப்படைக்கும் எண்ணமே அவனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. இராசேந்திரனோ வேங்கியிலேயே தங்காமல், சோழ நாட்டிலும், போர்க்களங்களிலும், கடல் கடந்த நாடுகளிலுமாகச் சுற்றியலைந்து கொண்டிருந்தான்.

விசயாதித்தன் தன் மகன் சத்திவர்மனுக்கு இளவரசப் பட்டம் சூட்ட ஏற்பாடுகள் செய்யும் செய்தி அம்மங்கையின் காதில் விழவே, அப்போதுதான் இராசேந்திரனை எங்கிருந்தாலும் உடனே அழைத்து வரும்படி அவள் ஓலை அனுப்பினாள். உள்ளச் சோர்வால் அவள் உடல் நலிந்தது. தன் மாளிகையை விட்டு வெளியே வருவதே இல்லை. ஒவ்வொரு நொடியும் தன் மகன் வருகையை எதிர்பார்த்து ஆவலுடன் துடித்துக் கொண்டிருந்தாள். சாளரத்தின் வழியே ஒவ்வொரு நாளும் இரவு வேளைகளில் சந்திரன் வளர்வதையும், தேய்வதையும் முழு நிலவாகத் தோன்றுவதையும், இருள் நிறைந்து வானம் காணப்படுவதையும் பார்த்துப் பார்த்து உறங்காப் பொழுதாகக் கழித்திருக்கிறாள். மகன் வந்துவிடுவான் எனும் நம்பிக்கை, அவள் உள்ளத்தில் இருந்தது.



அம்மங்கை தேவியின் நம்பிக்கை வீண் போகவில்லை. இராசேந்திரன் வந்துவிட்டான். இராசேந்திரன் வேங்கி நகருக்குள் நுழையும்போது பொழுது சாய்ந்து விட்டது. கங்கை கொண்ட சோழபுரத்தின் கலகலப்புடன் ஒப்பிடும்போது வேங்கி சாதாரணமான ஒரு சிறு நகரம்போல் அவனுக்குத் தோன்றியது. வீதி முனைகளில் எரிந்து கொண்டிருந்த வெளிச்சம் தரும் தீவர்த்திகள் கூட மங்கிக் காணப்படுவனபோல் அவனுக்குத் தோன்றின.

காஞ்சியை விட்டுப் புறப்பட்டு இரண்டு பௌர்ணமிகளை அவன் கண்டுவிட்டான். களைப்பினைப் பாராமல், அதிகமாக இளைப்பாறாமல் அவன் வேங்கியை வந்தடைந்தான். மங்கிய வெளிச்சத்தில் அவனை ஒருவரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அவன் மேனி புழுதியடைந்திருந்தது. ஆடைகள் அழுக்கேறியிருந்தன. தலை எண்ணெய் கண்டு பல நாட்கள் ஆனமையால் செம்பட்டைப் பாய்ந்திருந்தது. பசியாலும், களைப்பாலும் முகம் வாடியிருந்தது. எனினும் தன் தாயைக் காணப் போகிறோம் என்ற ஆவல், அவன் சோர்வைப் பொருட்படுத்தவில்லை.

மாளிகை வாயிலை அவன் அணுகியவுடனேயே, காவலர்கள் அவனை அடையாளங் கண்டு கொண்டனர்.

“இளவரசர் இராசேந்திரர் வாழ்க!” என்று வாழ்த்தொலி எழுப்பினர். அவன் புன்முறுவலுடன் அவர்கள் அன்பினை ஏற்றுத் தன் தாயின் இருப்பிடம் நோக்கி விரைந்தான். அவனை அழைத்து வந்த தூதுவன், பணி முடிந்த திருப்தியுடன் மாளிகைக்கு வெளியே தங்கி விட்டான்.

தாய் மஞ்சத்தில் படுத்திருப்பதைப் பார்த்த இராசேந்திரன் “அம்மா” என்று ஆவல் மிகுதியால் கூவியவாறு தாயருகே ஓடிச் சென்றான். அம்மங்கை தேவியும் “வந்து விட்டாயா, மகனே” என்று உணர்ச்சியும், ஆவலும் பொங்கக் கூவியவாறு எழுந்து அவனை அணைத்துக் கொள்ள முயன்றாள். அவன் கண்களில் நீர் தளும்பியது. இராசேந்திரன் தாயின் அருகில் உட்கார்ந்து அவள் நலன்களைக் கேட்டறிந்தான்.

அம்மங்கை தேவி உற்சாகத்துடன் பேச முயன்றாலும், அவள் உள்ளத்தே ஏதோ வேதனை இருப்பது புலப்பட்டது. “தாயே! ஏன் என்னை அவசரமாக வருமாறு ஓலை அனுப்பினீர்கள்?” என்று இராசேந்திரன் கேட்டான்.

ONNEMARA PUBLIC LIBRA
1 5 NOV 2010

"உன்னைப் பார்க்க வேண்டும்போல் எனக்குத் தோன்றிய தடா! உன்னைப் பார்க்காமலேயே என் உயிர் போய் விட்டால் என்ன செய்வது என்ற பயம் என்னைப் பிடித்துக் கொண்டது..." என்று அம்மங்கை தேவி நெஞ்சு தழுதழுக்கக் கூறினாள்.

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அம்மா....... உங்களுக்கு ஏது துயரும் நேராது இனி. இதோ நான் வந்துவிட்டேனே..." என்று ஆறுதல் கூறினான் இராசேந்திரன்.

"இனி எனக்கு உண்மையிலேயே எந்த ஆபத்துமில்லையடா மகனே! நீ மகுடம் சூடிக்கொள்வதைப் பார்த்துவிட்டால் தான் நிம் மதியாகக் கண் மூடுவேன். அதற்காகத்தான் உன்னை வரவழைத் தேன்..." என்றாள் அம்மங்கை, கண்களைத் துடைத்துக் கொண்டு.

"நான் கீழைச் சாளுக்கிய நாட்டின் அரியணையில் ஏறி அமர வேண்டும் என்பது தங்கள் கட்டளை என்றால், நான் உற்சா கத்துடன் அதை ஏற்பேன். ஆனால் இந்த நாட்டை ஆளத் தொடங் கிய பிறகு, நீங்கள் பன்னெடுங்காலம் உயிர் வாழ வேண்டும் என்பது என் ஆசை. நான் நாளையே சென்று என் சிறிய தந்தையிடம், என்னிடம் நாட்டை ஒப்படைத்து விடுமாறு கேட்கிறேன்" என்றாள்.

அம்மங்கை தேவி மெல்லப் புன்முறுவல் பூத்தாள். "குழந்தாய், அது அவ்வளவு எளிதான காரியம் என்று நினைக்காதே. நீ எதிர்பார்ப்பதுபோல் உன் சிறிய தந்தை உன்னிடம் நாட்டை ஒப்படைத்துவிடமாட்டார்" என்று கூறியது கேட்ட இராசேந்திரன் திடுக்கிட்டு, "ஏன் ஒப்படைக்க மாட்டார்? இந்த நாடு அவருக்கு உரிமையா?" என்று கேட்டான். மெல்லப் பேசுமாறு அம்மங்கை சைகை செய்தாள். அவர்கள் பேசுவதை சாளர மறைவிலிருந்து ஓர் உருவம் கேட்டுக் கொண்டிருந்தது.

## 44. விஷமும் அமுதமும்

விசயாதித்தன், தன் அந்தரங்க அறையில் குறுக்கும் நெடுக் குமாக நடந்து கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் வேதனை ஒரு பக்கமும், சீற்றம் ஒரு பக்கமுமாக நிறைந்து அவனை நிலை கொள்ளாது செய்து கொண்டிருந்தன. அவன் எதிரே ஒற்றர் இருவர் கைகட்டி நின்று கொண்டிருந்தனர். அவர்கள்தாம் இராசேந்திரன் வேங்கிக்கு வரும் செய்தியைத் தெரிவித்தனர். கங்கை கொண்ட



சோழபுரம் சென்ற இராசேந்திரன், அங்கேயே தங்கிச் சோழநாட்டின் அரசு உரிமைக்காகப் போராடும் நிலையில் கீழைச் சாளுக்கிய நாட்டைப் பற்றியே மறந்து விடுவான் என்று எண்ணிய விசயாதித்தன் திட்டம் நிறைவேறாதிருக்கும் சூழ்நிலை உருவாகி வந்தது.

இராசேந்திரன் வந்து விட்டால் நிச்சயம் அவன் புரட்சி செய் வான், மீண்டும் அரியணையைப் பெற மக்களும் அவனைத்தான் ஆதரிப்பார்கள். இந்த நிலையில் என்ன செய்வது என்று சிந்தித்த வண்ணம் விசயாதித்தன் நடைபோட்டுக் கொண்டிருந்தான். ஒற்றர்கள் தலைகுனிந்து நின்றனர். அவர்களால் இராசேந்திரன் வேங்கிக்கு வருவதைத் தடுக்க முடியவில்லை.

விசயாதித்தன் மகன் சத்திவர்மன் அப்போது வேங்கியில் இல்லை. ஒருவாரப் பயணம் சென்றால் மலைநடுவே உள்ள மங்களபுரத்தை அடையலாம். அங்கே வேட்டையாடச் சென்றிருந் தான். மான்வேட்டை என்றால் சத்திவர்மனுக்கு மிகவும் பிரியம். வேட்டைக்காகச் சிலரைத்துணைச் சேர்த்துக்கொண்டு புறப் பட்டான். அவன் மீண்டும் வேங்கிக்கு வரப் பல மாதங்கள்கூடப் பிடிக்கும். விசயாதித்தனுக்குத் தன் மகன் போக்கு மிகுந்த கவலையை அளித்தது. அவனை நம்பியன்றோ, இராசேந்திரனுக்கு நாட்டை அளிக்காமல், தானே ஆள்வதற்கு வேண்டிய திட்டங் களை வகுத்தான். சத்திவர்மனோ பொறுப்பில்லாமல் அலைகி றான்! அவன் தன் மகனைப் பலமுறை கண்டித்திருக்கிறான்.

"வேங்கியை உலகில் உள்ளவர்கள் மிகவும் ஏன் புகழ் கின்றனர் தெரியுமா?" என்று தன் மகனை நோக்கி ஒரு சமயம் கேட்டான் விசயாதித்தன்.

"நமக்கு அதில் பெருமைதானே?" என்றான் சத்திவர்மன்.

"நீ பெருமைப்படுவது போல் தெரியவில்லையே!"

"ஏன், நான் மிகப் பெருமைப்படுகிறேன். கீழைச் சாளுக்கிய நாட்டு இளவரசனாய் நான் இருப்பது எனக்கு மிக மதிப்பை அளிக்கிறது தந்தையே."

"அதற்குத் தக்கபடி நீ நடந்து கொள்வதாக எனக்குத் தோன்றவில்லை சத்திவர்மா! சாளுக்கிய விக்கிரமாதித்தன், தன் மகளை உனக்கு மணம் புரிந்து கொடுக்க விரும்புகிறான்."

"பேஷாகக் கொடுக்கட்டும்........."

"ஆனால் நாட்டை நீ நிர்வகிப்பாயோ, மாட்டாயோ என்று ஐயமுறுகிறான்......"

"நன்றாக நான் நாட்டை ஆண்டாலும் அவருக்குத்தான் பலன்; ஆளாவிட்டாலும் அவருக்குத்தான் லாபம்."

"என்ன சொல்கிறாய் சத்திவர்மா...?"

"ஆமாம்; கீழைச் சாளுக்கிய நாட்டைத் தன் நாட்டுடன் சேர்த்து மாபெரும் நாடாக்க வேண்டும் என்பதுதானே அவர் திட்டம். நான் சரியாக ஆட்சி புரிந்தாலும், புரியாவிட்டாலும் அவருக்கென்ன? இந்த நாட்டையும் தன்னுடைய நாட்டுடன் சேர்த்துச் சோழ நாட்டின் மீது படையெடுக்க வேண்டும் என்பது அவர் யோசனை"

"சரியான யோசனைதானே........"

"எப்படியப்பா அது நியாயமானதாகும்? அண்ணன் இராசேந்திரனுக்குச் சோழ நாடு கிடைத்து விடும் எனும் எண்ணத்தில்தானே நாமே இந்த நாட்டை ஆண்டு வர முடிவு செய்தோம். இப்போது சோழ நாட்டையும் அபகரிக்கத் திட்டம் தீட்டினால்...?"

சத்திவர்மனின் இந்தப் பேச்சுக் கேட்டு விசயாதித்தன் திடுக்கிட்டான். தான் நினைப்பதுபோல் தன் மகன் ஒன்றும் தெரியாதவனல்லன். ஆனால் ரொம்பவும் தெரிந்தவனாக இருப்பதும் சரியல்லவே! அதுவும், இராசேந்திரனுக்குப் பரிந்து பேசுவது ஆபத்தாயிற்றே என்று எண்ணி, அத்துடன் அந்தப் பேச்சையே விட்டுவிட்டான்.

ஆனால் இப்போது அவனுக்குப் பெரும் கவலை என்னவென்றால், இராசேந்திரனைத் தன் மகன் சந்தித்துவிடக் கூடாது என்பதே. அவன் சந்தித்துவிட்டால் ஒரு வேளை இந்த நாடே தனக்கு வேண்டாம் என்று கூறிவிடப் போகிறானோ என்ற கவலை. அதனால் ஒற்றர்களை அனுப்பி, எங்கிருந்தாலும் உடனே சத்திவர்மனை அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.

ஆனால், அவன் நினைத்ததற்கு மாறாக இராசேந்திரனும், சத்திவர்மனும் சேர்ந்தே தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பதைச் சாளரத்தின் வழியே கண்ட விசயாதித்தன் திடுக்கிட்டான். இருவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் பேசி வந்து கொண்டிருந்தனர். விசயாதித்தனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

# 45. திசை மாறியது

கண்ணுக்கு எட்டிய தொலைவுவரை வண்டி மறைவதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆடவல்லானை நோக்கி தகடூர் வீரர்கள், "தம்பி, பெண்களுக்காக இப்படிக் கண்கலங்கலாமா? விட்டுத் தள்ளு. மேலே ஆக வேண்டிய காரியத்தைக் கவனி" என்று கூறி, அவனைப் பிடித்திருந்த பிடியை விட்டு அங்கிருந்து அகன்றார்கள்.

ஆடவல்லான் கேட்டான் : "நாம் வந்த குதிரைகளுக்கு நோயாமே? காளிங்கா, வேறு குதிரைக் கிடைத்ததா?" என்று.

"இல்லை, இன்னும் இரண்டு நாள்களாகும்" என்று சோகந்தோய்ந்த குரலில் கூறினான் காளி.

"குதிரைக்காக நீ போகாதிருந்தாலாவது அவளைக் காப்பாற்றியிருக்கலாம்" என்று ஆடவல்லான் கூறவும், காளிங்கன் பரபரப்புடன், "என்ன சொல்கிறாய், காப்பாற்றியிருக்கலாமா? அப்படியென்றால் சந்திரகுமாரிக்கு மறுபடியும் ஆபத்து நேர்ந்து விட்டதா?" என்றான்.

ஆடவல்லான் நடந்தவற்றைக் கூறியதும், காளிங்கன் பெருமூச்சு விட்டு, "அப்பாடா, பிழைத்தோம். நீ எண்ணுவதுபோல் சந்திரகுமாரிக்கு ஒருவித ஆபத்தும் வராது. அத்திமல்லர் கூடவே போயிருக்கிறார் என்றால் நமக்கேன் கவலை. நாம் ஊருக்குப் போய் நமது அலுவலை நிம்மதியாகப் பார்க்கலாம்" என்றான்.

சிறிது நாட்களாகக் கோமதியைப் பார்க்காதது அவனுக்கு மனசே சரியில்லை. ஆனால் ஆடவல்லானால் சந்திரகுமாரியை மறந்துவிட முடியவில்லை, அவ்வளவு எளிதாக. அவனது மன அமைதியைச் சந்திரகுமாரியின் கால் தண்டை ஒலி, குலைத்து விட்டது. விழியின் துடிப்பு சலனத்தை ஏற்படுத்திவிட்டது. அவன் எப்படிச் சந்திரகுமாரியை நினைக்காமல் இருப்பான்?

ஆடவல்லான் மௌனமாக இருப்பதைக் கண்ட காளிங்கன், "தம்பி, நாம் இப்பொழுதே புறப்பட்டு விடுவோம். நடந்தே ஊருக்குப் போய்விடுவோம். எனக்குக் குறுக்கு வழி தெரியும். ஊரிலே உன்னைத் தேடுவார்களே, நாம் உடனே போய்ச் சேர வேண் டாமா?" என்று கேட்டான்.

'ஆம்; காஞ்சியில் இருந்து என்னதான் செய்யப் போகிறோம். தகடூருக்கு வேண்டுமானால் போகலாம். அங்கே மாளிகையில் சந்திரகுமாரி வாழ்வதைப் பார்த்து ஏங்கிப் பித்துப் பிடித்தவனைப்போல் அலையலாம். மாளிகையின் வெளித்தோட்டத்தில் அமர்ந்து தேவாரப் பாடல்களைப் பாடி மன அமைதி பெறலாம். என்னைக் காணாமல், தாய் கங்கை கொண்ட சோழபுரத்தில் வேதனைப்படுவாள். தள்ளாத காலத்தில் அவளுக்கு ஏற்படும் அதிர்ச்சிக்கு மருந்தே கிடையாதே' ஆடவல்லான் பலவிதமாக எண்ணினான்.

காளிங்கன் திடீரென பரபரப்புடன், "தம்பி, தம்பி அதோ பார் கங்கபீமன்..." என்றான். கங்கபீமன் நான்கைந்து ஆட்களுடன் சந்திரகுமாரியைத் தேடி அலைந்து, சோர்ந்த முகத்துடன் திரும்பிக் கொண்டிருந்தான். அவனுக்கு ஆடவல்லானைத் தெரியாது. ஆனால் காளிங்கன் முகத்தை வேறு எங்கோ பார்த்ததுபோல் தோன்றியது. மெல்ல கங்கபீமன், காளிங்கனை அணுகி, "உங்களை எங்கோ பார்த்ததுபோல் தோன்றுகிறதே..." என்று பேச்சுக் கொடுத்தான். காளிங்கன், கங்கபீமனை ஏற இறங்கப் பார்த்து, "என்னையா, எங்குமே பார்த்திருக்க முடியாதே..." என்றான். பிறகு, "ஏதாவது எங்களோடு பேச வேண்டும்போல் தோன்றினால், நேரிடையே ஏதாவது கேட்பது; பேசுவது. இப்படி ஏன் சுற்றி வளைக்கிறீர்கள்? நீர் யார்..." என்று கேட்கவும், கங்கபீமன் சற்றுத் திகைத்துப் பிறகு தைரியமான குரலில், "ஆமாம்; ஆமாம். உங்களுடன் பேசவேண்டும் என்றுதான் விரும்பினேன்... நீங்கள் கங்காபுரியிலிருப்பவரன்றோ?" என்று கேட்டான்.

காளி மறுக்க விரும்பவில்லை. "ஆமாம்... ஆமாம் எதற்குக் கேட்கிறீர்கள்?" என்றான்.

"ஆ! அப்படிச் சொல்லுங்கள்... கங்கை கொண்ட சோழபுரத்து ஏரிக் கரையில் உங்களைப் பார்த்ததாக நினைவு..."

"இருக்கலாம்..."

"இருக்கலாம் என்று சொல்லாதீர்கள்... ஆமாம் என்று சொல்லுங்கள்..."

"ஆமாம் என்று சொன்னால் என்ன ஆகும்...?"



"ஒன்றும் ஆகாது! எனக்குத் துணை ஆவீர்கள். நானும் கங்காபுரியினின்று காஞ்சிக்கு வந்தேன். நீங்களும் வந்திருக்கிறீர்கள். நானும் இங்கே திகைத்து நிற்கிறேன். நீங்களும் திகைத்து நிற்கிறீர்கள்."

கங்கபீமன் இவ்வாறு கூறவும், காளிங்கன் சற்று எரிச்சலுடன், "தம்பி! வா போவோம். எல்லாம் இவர் தன்னையே ஒப்பு நோக்கிப் பேசுகிறார். இன்னும் சற்று நேரம் சென்றால் இவர் தேடிவந்த பெண்ணைப் பற்றிக் கூறி ஒப்புவமை செய்வார்..." என்றவுடன், கங்கபீமன் பரபரப்புடன், "ஐயா, ஐயா... நான் வந்த காரியம் தங்களுக்குத் தெரியுமா? வாடி நிற்கும் என்னைப் பற்றி உமக்குத் தெரியுமா? நீங்களும் அவளைத் தேடித்தான் வந்தீர்களா...?" என்று கேட்டான்.

"பார்த்தாயா, பார்த்தாயா! நீங்கள் இப்படிக் கேட்பீர்கள் என்று தெரியும். பிறகு அந்த அழகிய மங்கை எந்தப் பக்கம் சென்றாள் என்று கேட்பீர்கள்!"

"ஆமாம்; ஆமாம். சந்திரகுமாரியை உங்களுக்குத் தெரியுமா? அவள் எந்தப் பக்கம் போனாள்...?"

"சந்திரகுமாரியோ, மந்திரிகுமாரியோ எனக்குத் தெரியாது. ஒரு பெண் இங்கே வந்து பரபரப்புடன் நின்றாள்."

"ஹூம்... அப்புறம்..."

"ஓர் அழகிய வாலிபன் வந்தான். அவளுக்கு அவனைத் தெரியும் போலிருக்கிறது."

"அப்புறம்......"

"அவனும் அவளும் பேசினர்..."

"என்ன பேசினர்...?"

"ஒட்டுக் கேட்கும் வழக்கமில்லை..."

"ஐயா... சொல்லய்யா... அவர்கள் என்ன பேசினர்...?"

"கங்கபீமன் எனும் மாபாதகன் தலையில் கல்லைத் தூக்கிப் போடவேண்டும் என்று பேசினர்..."

"ஓகோ, அவளா அப்படிச் சொன்னாள்? சொல்லுவாள். சொல்லுவாள்... அதுவும் சொல்லுவாள் இன்னமும் சொல்லுவாள்.

அவளைக் கங்காபுரிக்கு அழைத்து வந்தேன் பார்... அது என் தவறு..."

"ஏன் அழைத்து வந்தீர்கள்...?"

"ஹூம்... ஹூம்... அழைத்து வந்தேன்....... அதெல்லாம் இப்போது எதற்கு... அந்தப் பெண் எங்கே ஐயா... என் சகோதரியின் மகள் ஐயா அவள்..."

"ஓகோ! உமது முறைப்பெண் என்று சொல்லும்..."

"முறை தவறிய பெண் என்று சொல்லுங்கள். அவள் எங்கே ஐயா... அந்த வாலிபனுடன் என்ன பேசினாள்? எங்கே சென்றாள்...?"

"வாலிபனுடன் ஓர் இளம் பெண் என்ன பேசுவாள். 'இந்த நகரத்தை விட்டு ஓடிப்போய்விட வேண்டும். கங்கபீமன் எனும் கழுகுக் கண்ணிலிருந்து தப்ப வேண்டும்' என்று கூறி இங்கிருந்து சென்று விட்டாள்..."

"ஐயா... இவ்வளவு சொன்னீர்; இன்னும் ஒன்றை மட்டும் தெளிவு படுத்திவிட வேண்டும்..."

"நீர் என்ன கேட்கப் போகிறீர் என்று எனக்குத் தெரியும்... அந்த வாலிபன் என்ன பேசினான்! எப்படி இருந்தான். எங்கே அவர்கள் சென்றனர்? இவ்வளவுதானே... இவ்வளவும் ஒன்றே ஒன்று அன்று ஐயன்மீர்! மூன்று மாபெரும் கேள்விகள்... உமக்கு அவற்றைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்தால், எமது வேலை என்ன ஆவது...?"

"உம்மைப் பார்த்தால் நல்லவர்போல் தோன்றுகிறது. புண்ணியமுண்டு. சொல்லுங்கள். ஐயா... ஐயா..."

கங்கபீமன் தவிப்பதைப் பார்த்துக் காளிங்கன் நகைத்து, அவனைத் தனியே அழைத்து, "ஐயா, நீர் இனி அந்தப் பெண்ணை மறந்துவிடுவதுதான் நல்லது. அவள் அந்த இளைஞனுடன் வேங்கிக்குப் போய்விட்டாள்" என்று கூறவும், கங்கபீமன் 'ஆ' என்று கூவி பரபரப்புடன், "என்னிடமிருந்து தப்பிவிட முடியாது. வழியிலேயே அவர்களைப் பிடித்து விடுவேன். கோதாவரியிலோ, கிருஷ்ணை ஆற்றிலோ தள்ளிவிடுவேன்..." என்று கூறி அந்த இடத்தைவிட்டு விரைந்தான்.

அவன் சென்ற பிறகு காளிங்கன் விழுந்து விழுந்து சிரித்தான். ஆடவல்லான் அவன் சிரிப்பை அடக்கி, "ஏன் அப்படிப் பொய் சொன்னாய், காளி. சந்திரகுமாரி வேங்கிக்கா போய் விட்டாள்?" என்று கேட்டான்.



"தம்பி, தம்பி. இன்னும் உனக்கு உலக அநுபவம் போதாது. நான் அப்படிச் சொல்லவில்லை என்றால் சந்திரகுமாரி சென்றிருக்கும் இடம் தேடிச் சென்று தொல்லை கொடுத்தவாறிருப்பான்-அவன் திசையை நான் மாற்றி விட்டேன். இனி அமைதியாக நாம் காரியங்களைச் செய்யலாம்" என்றான் காளிங்கன்.

ஆடவல்லான் வேதனையும், எரிச்சலும் சேர, "அவன் திசையை மாற்றி என்ன பலன்? நம் திசைதான் தடுமாறுகிறதே" என்றான்.

"தம்பி! நம் திசை ஏன் தடுமாற வேண்டும். நாம் சௌக்கியமாக ஊருக்குப் போய்ச் சேருவோம். அங்கே உன்னை உன் தாயார் தேடுவார்கள். என்னைக் கோமதி தேடுவாள்..." என்றான் காளி.

"எனக்கென்னமோ ஊருக்குப் போகவே தோன்றவில்லை காளி. சந்திரகுமாரியைக் காணாது நான் எப்படி இருப்பேன்?" என்றான் ஆடவல்லான்.

"தம்பி, உனக்கு நல்ல பைத்தியம் பிடித்துவிட்டது. பெண் பைத்தியம்; மனசை அடக்கிக் கொள் தம்பி. அப்படி என்ன வயதாகி விட்டது உனக்கு. ஆண்டவன் எதிரே அற்புதப் பாடல்கள் பாடிப் பணி புரிந்து வந்த உனக்கு ஏன் இந்த மயக்கம்?" என்றான் காளி.

"எல்லாம் ஆண்டவன் சந்நிதியில் ஏற்பட்ட மயக்கம்தான். அங்கேதான் அவளை முதன் முதலில் கண்டேன். அவளுக்கும் என்மேல்..."

"தம்பி! எல்லாம் பிரமை; அந்தப் பெண் கங்காபுரிக்கு எதற்காக வந்தாள் தெரியுமா? அவள் ஒரு சதிகாரி!"

காளி இப்படிக் கூறியவுடன், ஆடவல்லான் திடுக்கிட்டான். "என்ன சொல்கிறாய் காளி. அவள் ஏன் சதி செய்ய வேண்டும்? அவளை ஒரு கருவியாய் பயன்படுத்தப் பார்த்தான், இப்போது பரபரப்புடன் ஓடினானே அவன். அவள், அவன் வலையிலிருந்து தப்பிவிட்டாள். எப்படி நீ அவளைச் சதிகாரி என்று கூறலாம்...?" என்றான் ஆத்திரத்துடன்.

காளிங்கன் புன்சிரிப்புடன், "தம்பி, கோபிக்காதே... அவள் மனம் மாறியிருக்கலாம். ஆனால், அவள் சிற்றரசர்களிடம் சிக்கி

யிருக்கும்வரை அவள் சதிகாரி என்றுதான் சொல்ல வேண்டும்..." என்றான் காளி.

"வேண்டுமானால் பாரேன் காளி! சந்திரகுமாரி தகடூருக்குப் போய்ச் சேரமாட்டாள். வழியிலேயே தப்பி விடுவாள்."

"நானும் அதைத்தான் சொல்கிறேன். அவள் தகடூருக்குப் போகமாட்டாள். அத்திமல்லர் அவளைப் போகவிடமாட்டார். திருக்கோவலூர் பக்கமே திருப்பி விடுவார்."

"ஒரு காலும் இருக்காது..."

"பாரேன். பாரேன்..."

இவர்கள் விவாதித்துக் கொண்டதற்கு ஒரு முடிவு ஏற்பட்டது. அருகே இருந்த ஏகாம்பரர் ஆலயத்து மணி ஓசை 'டாண் டாண்' என்று ஒலித்தது.

"தம்பி, உச்சி கால பூசையைத் தெரிவிக்கும் மணி ஓசை. கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டுவிட்டு ஊரைப் பார்க்க நடையைக் கட்டுவோம்..." என்றான் காளி.

ஆடவல்லானுக்கு அரை மனதுதான். ஆண்டவனைத் தரிசித்து, அவன் எதிரே தன் மனத்துயரைச் சொல்லி அழ வேண்டும்போல் தோன்றியது. இருவரும் ஏகாம்பரேச்வரர் ஆலயம் நோக்கிச் சென்றனர்.

## 46. வெள்ளத்தில் வந்த உருவம்

ஏகாம்பர ஈசனைத் தரிசிக்கும்போது, ஆடவல்லானுக்கு மனத்தின் சலனமெல்லாம் மெல்ல அகன்று வந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. இவ்வளவு நாள்கள் மறந்திருந்த தெய்வப் பாடல்கள் அவன் நெஞ்சில் குமுறி ஓடி வந்தன. தீபாராதனை முடிந்தது. மணி ஓசை நின்றது. மேளச் சப்தம் நின்றது. ஆடவல்லான் கம்பீரமான குரலில்,

*"சிந்தித்தென்றும் நினைத்தொழுவார்கள்*
*சிந்தையில் திகழும் சிவன் தன்னைப்*
*பந்தித் தவினைப் பற்ற றுப்பானைப்*
*பாலொடானஞ்சும் ஆட்டுகந்தானை*



*அந்தமில் புகழாள் உமைநங்கை*
*ஆதரித்து வழிபடப் பெற்ற*
*கந்தவார் சடைக்கம்பன் எம்மானைக்*
*காணக்கண் அடியேன் பெற்றவாறே"*

என்று பாடினான். அவனை அறியாமல் அவன் கண்களில் நீர் தளும்பி வழிந்தது. அருகே நின்ற காளிங்கனோ, 'ஆகா; ஆகா! இந்த தம்பி என்ன உருக்கமாகப் பாடுகிறது. ஆண்டவன் எதிரே பாடித் துதித்தவாறிருப்பதை விட்டு விட்டு, ஒரு பெண்ணைத் தேடி அலைவானேன்?' என்று எண்ணினான். ஆடவல்லான் அதைப் போன்று பல பதிகங்கள் பாடி விட்டு, திருநீரணிந்து காளியின் பக்கம் திரும்பினான்.

"போகலாமா?" என்று கேட்டான். காளியும் தலையசைத்தான். இருவரும் காஞ்சியை நோக்கி நடந்தே புறப்பட்டனர்.

"தம்பி, உனக்கிருக்கும் பக்தியும், உனக்கிருக்கும் குரலும், தெய்வத் துணை உனக்கு நிறைய இருக்கிறதென்பதைக் காட்டுகின்றன..." என்று காளி வழியில் பேச்சைத் தொடங்கினான். ஆடவல்லான் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய் தம்பி!"

"ஆண்டவன் அருள், எனக்கு ரொம்பவும் இருக்கிறது."

"ஏன் இல்லை. உனது கணீரென்ற குரலும், ஆண்டவன் மீது உனக்கு இருக்கும் பக்தியும், அவன் அருள் இல்லாமல் எப்படிக் கிடைக்கும்? வருத்தப்படாதே ஆடவல்லா... எல்லாம் நன்மையிலேயே முடியும்..." என்றான் காளி.

"நன்மையாக முடிய வேண்டும் என்பதுதானே என் வேண்டுகோள்... என் வேண்டுகோளைப் போன்றே சுந்திரமூர்த்தி சுவாமிகளும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இதே காஞ்சிபுரத்திற்கு வந்தார். அவருக்கு இங்குதான் கண் கிடைத்தது. கண் பெற்ற மகிழ்ச்சியில் அவர் பாடிய பாடலைத்தான் இப்போது நான் பாடினேன்" என்றான்.

இருவரும் பேசிக்கொண்டே நடந்தனர். ஆடவல்லான் சுந்திரமூர்த்தி சுவாமிகளின் சரித்திரத்தை விளக்கிக் கூறிக் கொண்டே வந்தான். கதையைக் கேட்கக் கேட்க காளிங்கனுக்கும் ஆவல் அதிகமாகியது.

"தம்பி, இப்படியே மகான்களின் கதையைச் சொல்லிக் கொண்டே வா. வழி நடைப் பயணக் களைப்புத் தெரியாது" என்று கூறினான் காளி. ஆடவல்லான் கதை சொல்லி வந்தானே யொழிய, இடையிடையில் சந்திரகுமாரியின் நினைவும் அவனுக்கு வந்துவிடும்.

"காளி நீ என்ன சொன்னாய்? அத்திமல்லருடைய ஊர் இங்கு எங்கோதான் இருக்கிறது என்றாய் அல்லவா?"

"ஆமாம் தம்பி, பெண்ணை ஆற்றைக் கடந்தால் அவருடைய நாடுதான்" என்றான் காளி. ஆடவல்லான் மௌனமாக நடந்தான்.

ஆடவல்லான் வானத்தை நோக்கினான். மேற்கே வானம் கறுத்து இருந்தது. எங்கோ தொலைவில் மின்னுவது ஆடவல்லானுக்குத் தெரிந்தது.

"நல்ல மழை பிடித்துக் கொள்ளும்போல் தோன்றுகிறது" என்றான் ஆடவல்லான்.

"மழை வருவதற்குள் நாம் பெண்ணை ஆற்றைக் கடந்து விடவேண்டும்" என்றான் காளி.

"ஏன்?"

"வெண்ணெய் உருகுவதற்குள் பெண்ணை பெருகி விடும் என்று பழமொழி கூறுவார்கள். மேற்கே மழை பெய்தால் இங்கே வெள்ளம் பெருக நாளாகாது. அதனால்தான் சொல்கிறேன்" என்றான் காளி.

"வெள்ளம் வந்தால் நாம் இக்கரையிலேயே தங்கிவிட நேரிடுமே" என்று கவலைப்பட்டான் ஆடவல்லான்.

"அதனால்தான் சொல்கிறேன், மழை பெய்வதற்குள் பெண்ணை ஆற்றைக் கடந்துவிட வேண்டும் என்று."

"வரும்போது அந்தப் பக்கமாக வரவில்லையே."

"வந்தோம். வேகமாக வந்ததால் கவனிக்கவில்லை."

இருவரும் மௌனமாக நடந்தனர், வேகமாக நடந்தனர். ஆனால் அவர்கள் திருக்கோவலூரை அடையும் முன்பே மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது.



ஆடவல்லானும், காளிங்கனும் விரைந்து அருகே இருந்த கிராமத்தை அணுகி சாவடியின் திண்ணையில் தங்கினர். ஆடவல்லான் கொட்டும் மழையை இமைகொட்டாது பார்த்தவாறு இருந்தான். அவன் இதழ்களில் புன்னகை ததும்பியது. வாய் விட்டே சிரிக்கும் நிலை ஏற்பட்டது.

"தம்பி ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டான் காளி.

"சற்று நேரம் முன்புதான் ஆண்டவன் அருளைப் பற்றிப் பேசினாய். சீக்கிரமாக ஊருக்குப் போய்ச் சேர்ந்துவிட எண்ணினோமே, ஆண்டவன் அருள் வேறுவிதமாக இருக்கிறதே என்றுதான் நான் எனக்குள் சிரித்துக் கொண்டேன்" என்றான் ஆடவல்லான்.

"அப்படிச் சொல்லாதே தம்பி! இதுவும் ஆண்டவன் அருளாகத்தான் இருக்க முடியும். இந்த மழை அதிக நேரம் நீடிக்காது" என்றான் காளி.

காளி கூறியது போன்று மழை மறுநாளே நின்றுவிட்டது. காளியும், ஆடவல்லானும் மீண்டும் புறப்பட்டனர். தென் பெண்ணைக் கரையை அவர்கள் அடைந்தபோது ஆற்றிலே இரு கரையையும் தொட்டுக் கொண்டு வெள்ளம் சென்று கொண்டிருப்பதைக் கண்டனர். என்ன செய்வதென்றே அவர்களுக்குப் புரியவில்லை.

"வெள்ளம் குறைந்தவுடன் ஓடம் விடுவார்கள். அதுவரையில் நாம் காத்திருக்க வேண்டும்" என்றான் காளி. ஆடவல்லான் ஏதும் பேசவில்லை. மௌனமாக அங்கேயே மரத்தடியில் அமர்ந்துவிட்டான். அவனுக்குப் பசி சூழ்ந்து கொண்டிருந்தது. காளி அருகேயிருந்த ஊருக்குச் சென்று ஏதாவது உணவு பெற்று வரப் புறப்பட்டான். ஆடவல்லான் மர வேரில் தலை வைத்துக் கொண்டு படுத்தான். கண நேரத்தில் அவனைத் தூக்கம் ஆழ்த்தியது. தன்நிலை மறந்து சிறிது தூங்கிய அவன் சட்டெனக் கண் விழித்தான். மேலும் உறக்கம் வராதிருக்க முகத்தைக் கழுவிக் கொள்ள ஆற்றை நோக்கிச் சென்றான்.

நுங்கும் நுரையுமாக சுழன்றுச் சுழன்று வெள்ளம் நதியில் ஓடிக் கொண்டிருந்தது. கரையிலிருந்த மர வேரை அரித்துக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தது. வெள்ளத்தில் பல குடிசைகள் அடித்து வரப்பட்டன. பெரும் மரங்கள் மிதந்து வந்தன. வைக்கோல் போர்கள் மிதந்து வந்தன. ஆடவல்லானுக்குத் தண்ணீரில்

இறங்கவே பயமாயிருந்தது. பிரமிப்புடன் வெள்ளத்தின் வேகத்தைப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான்.

திடீரென அவன் உள்ளம் சிலிர்க்கும்படியான சம்பவமொன்று நேர்ந்தது.

"ஆ! ஐயோ?" என்று அவன் கூவினான். வெள்ளத்தைக் கண்டு அஞ்சி நின்று கொண்டிருந்த ஆடவல்லான், பரபரப்புடன் நதியில் குதித்தான். கரையருகே ஆழமில்லை. அவன் பார்வை சென்ற திசையில் ஒரு பெண் வெள்ளத்தில் அடித்து வரப்படுவது தெரிந்தது. வெள்ளத்தில் சிக்கிய உயிரைக் காப்பாற்றுவது மனித தர்மம். அதுவும் பெண் ஒருத்தியின் உயிரைக் காப்பது மிகமிக முக்கியம். அதற்கும் மேலாக ஆடவல்லான், தன் உயிரையும் துச்சமாகக் கருதி நதி வெள்ளத்திற்கு அஞ்சாமல் அடித்துவரும் அந்த உருவத்தை நோக்கிச் சென்றதற்குக் காரணம், வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட பெண் வேறு யாருமில்லை-சந்திரகுமாரிதான்!

## 47. வெள்ளமும் உள்ளமும்

வெள்ளம் அடித்து வந்த அந்த மங்கை சந்திரகுமாரி என்பதைத் தெரிந்து கொண்டான் ஆடவல்லான். அவள் கரத்தைப் பிடித்துப் பரபரவென்று கரைக்கு இழுத்தான். அதிர்ச்சியாலும், சிறிது தண்ணீரைக் குடித்திருந்ததாலும் சந்திரகுமாரி மயக்கமுற்றிருந்தாள். ஆடவல்லான் பயந்தே விட்டான். மூச்சு மெல்ல வந்து கொண்டிருந்தது. காளிங்கன் சற்றுத் தொலைவில் வந்து கொண்டிருந்தான். அவனைக் "காளி, காளி" என்று பெருங்குரல் கொடுத்து அழைத்தான்.

கரையில் கிடத்தப்பட்டிருந்த சந்திரகுமாரியைக் கண்ட காளிங்கன் வியப்புற்றான். இவள் எப்படி இங்கு வந்தாள் என்று இருவருமே திகைத்தனர். அதைப்பற்றி ஆராய்வதற்கு நேரமில்லை என்பதைப் புரிந்து கொண்ட இருவரும், அவளை மெல்லத் தூக்கிக்கொண்டு அருகேயிருந்த குடிசையை நோக்கிச் சென்றனர். குடிசையில் கிழவி ஒருத்தி மட்டும் இருந்தாள்.

சந்திரகுமாரியின் மயக்கத்தைக் கிழவி நொடியில் தீர்த்து விட்டாள். சந்திரகுமாரி விழித்தெழுந்ததும் தன்னெதிரே



ஆடவல்லான் அமர்ந்திருப்பதைப் பார்த்துத் திகைத்தாள். கண்களைக் கசக்கிக்கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"தம்பி, நீங்க சற்று வெளியே போங்க. இவள் ஈரப் புடவையை மாற்றிக் கொள்ளட்டும். என்னிடம் கிழிந்த பழைய துணி ஒன்று இருக்கிறது. அதை இவள் உடுத்திக் கொள்ளட்டும். அதற்குள் ஈரத்துணி உலர்ந்துவிடும். அதுவரை நீங்க தெருத் திண்ணை யிலேயே குந்தியிருங்க" என்று கிழவி கூறினாள். கிழவி கூறிய காரணத்தை அறிந்த ஆடவல்லான், புன்முறுவலுடன் வெளியே எழுந்து சென்றான்.

உள்ளே கிழவியும், சந்திரகுமாரியும் பேசிக்கொண்டிருப்பது ஆடவல்லான் செவிகளில் வீழ்ந்தது.

"குழந்தே, உன்னைப் பார்த்தா பெரிய இடத்துப் பெண் போல இருக்கு... நீ வெள்ளத்திலே எப்படி வந்து சிக்கிக் கொண்டாய்...?" என்று கிழவி கேட்டாள்.

"எல்லாம் என் விதி" என்று சந்திரகுமாரி அலுத்துக் கொண்டாள்.

"விதி என்று ஒரேயடியாகப் பழியைப் போட்டு விடாதே. வெள்ளத்திலே தன்னந்தனியாக எப்படிச் சிக்கிக் கொண்டாய்? இந்த ஆம்புளைங்க உன்னை ஆபத்திலே விட்டு விட்டாங்களா?"

"அப்படிச் சொல்லாதீங்க. அவங்கதான் என்னைக் காப்பாத்தினாங்க. ஏன் காப்பாத்தினாங்க என்று இப்ப நினைக்கிறேன். காப்பாத்தாமே போனா நதித்தாய் இத்தனை நேரத்தில் என்னைத் தன்னோடு அழைத்துப் போயிருப்பாள்..."

"ஓகோ! புரிகிறது. நீ வேண்டும் என்றுதான் ஆற்றிலே விழுந்திருக்கே. அப்படி விழலாமா குழந்தை? உயிரைப் போக்கிக் கொள்ள உனக்கு உரிமையில்லை. அதோட பிராணத் தியாகம் செஞ்சா பிசாசுபோல உலாவி வரணும்..." என்று கிழவி கூறவும் சந்திரகுமாரி கலகலவென நகைத்தாள்.

"அப்படியேதான் பிசாசா உலவினா மிகவும் சந்தோஷப்படுவேன். எனக்கு வேண்டாதவர்களைப் பிடித்து ஆட்டுவேன். அவர்கள் காரியத்தில் எல்லாம் குறுக்கே நிற்பேன். அவர்கள் சதித் திட்டங்களையெல்லாம் முறியடிப்பேன். எல்லாருமாகச் சேர்ந்து

கங்கை கொண்ட சோழபுரத்திலே மறுபடியும் பெரும் சூழ்ச்சிக்கு முற்பட்டிருக்கிறார்களே, அவர்களையெல்லாம் குரல் வளையைப் பிடித்து ஆட்டுவேன்..." சந்திரகுமாரி இவ்வாறு பேசியது கிழவிக்கு நடுக்கத்தை அளித்தது. வெளியே இருந்த ஆடவல்லான் திடுக்கிட்டு, "சந்திரகுமாரி-சந்திரகுமாரி உனக்கென்ன?" என்று கூவிக்கொண்டே உள்ளே ஓடிவந்தான். உடலின் கால்பாகத்தை மட்டும் மறைக்கும் ஆடையை அணிந்து, குடிசையின் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்த அவளது மேனியழகைக் கண்டு ஆடவல்லான் பிரமித்து விட்டான்.

சந்திரகுமாரிக்கும் வெட்கம் தாங்கவில்லை. அவள் உள்ளத்தில் பெண்மை உணர்ச்சிகள் அப்போது பூரணமாகக் கொழுந்து விட்டெரிந்தன. சந்திரகுமாரி திரும்பி நின்று கொண்டாள். அவளது முதுகின் அழகையும், தோள் அருகே பரந்து மெல்லக் குறுகி இடையருகே சிறுத்து மீண்டும் வளைந்து வனப்புடன் திகழும் அவளது பின் தோற்றமும் அவனை நிலைகுலைய வைத்தன. உருண்டு திரண்ட கால்கள் குளிரால் சற்று நடுங்கிக் கொண்டிருந்தன. கூந்தல் அவிழ்ந்து ஈரமும் சொட்டிக் கொண்டிருந்தது. ஒரு கரத்தால் ஈரத்தைப் பிழிந்து கொண்டபோது அவளது பருவ அழகு மாவிலைக் கொத்தின் நடுவே தெரிந்தும் தெரியாமலும் திகழும் மாங்கனி போல மிளிர்ந்தது.

கிழவி ஏதும் சொல்வதறியாது திகைத்தாள். ஆடவல்லானை நோக்கி, "தம்பி, நீ ஏதாவது கோபித்துக் கொண்டாயா? குழந்தைக்கு ஏன் மனவருத்தம்? இந்த வயசுலே கோபம் தாபம் எல்லாம் வரும்தான். நானும் இப்படித்தான் என் புருஷனிடம் இதேபோல் சிறுவயதில் கோபித்துக் கொண்டு வந்துவிட்டேன். ஒரு வாரம் அவரும் என்னைத் திரும்பிப் பார்க்கவில்லை. பிறகு என்னைத் தேடி வந்து விட்டார். உயிரை மாய்த்துக் கொள்ளும் துணிவு எனக்கு ஏற்படவில்லை. ஏன் தம்பி உன் பொஞ்சாதியை அப்படி என்ன படாதபாடு படுத்திவிட்டாய்" என்று கேட்டாள் கிழவி.

ஆடவல்லானும் சிரித்து விட்டான். சந்திரகுமாரியின் முகம் சிவந்தது. அவள் முகத்தை மூடிக் கொண்டாள். ஆடவல்லான் ஏதோ சொல்ல வாயெடுத்தான். வெளியே காளிக்குச் சிரிப்பு தாங்கவில்லை. இளங் கொழுந்துகளின் நாணத்தின் நடுவே முதிய கிழவி இருக்க விரும்பாமல் வெளியே சென்றாள்.



சந்திரகுமாரியும் மெல்லத் திரும்பி, "நீங்களும் வெளியே போய் விடுங்கள்; ஆடை காயும்வரை காத்திருக்கக்கூடாதா?" என்றாள்.

"உனக்கு என் மேல் என்ன கோபம், சந்திரகுமாரி?"

"கோபமா...?"

"ஏன் பேயாய்ப் போய்விடுவதாகக் கூறினாய்? மீண்டும் கங்கை கொண்ட சோழபுரத்தில் சூழ்ச்சி நடக்கப் போகிறது என்று கூறினாயே.."

"ஆமாம்... ஆமாம்... நீங்கள் இப்போது இங்கிருந்து போகா விட்டால் நான் பேயாய் மாறி உங்களை விரட்டுவேன்."

"நான் போகிறேன்... சந்திரகுமாரி... நீ தகடூர் செல்லாமல் இங்கு எப்படி வந்தாய்?"

"எல்லாம் விபரமாகக் கூறுகிறேன். இப்போது இங்கிருந்து போய் விடுங்கள்."

ஆடவல்லான், அவளை ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டே வெளியே வந்தான். சிறிது நேரம் கழித்துக் கிழவி வெயிலில் காயப்போட்டிருந்த சந்திரகுமாரியின் காய்ந்த ஆடையைக் கொண்டு கொடுக்கவும், அவள் அதை அணிந்து கொண்டு வெளியே வந்தாள். ஆடவல்லானிடம் அவள் கூறியவை அவனைத் திகைக்க வைத்தது.

வண்டியிலே ஏறி சந்திரகுமாரி காஞ்சியினின்று சென்ற போது, அத்திமல்லரும் அதில் ஏறி அமர்ந்தார். வண்டி தகடூர் செல்லாமல் திருக்கோவலூர் நோக்கிச் சென்றது. தகடூராரும், அத்திமல்லரும் அங்கே சிலவற்றை ஆலோசிக்க விரும்பினர். சோழ அரியணைக்கு அடுத்த வாரிசாக யாரை நியமிப்பது என்பதைப்பற்றி திருக்கோவலூர் மலையமானுடன் ஆலோசனை நடத்தத் தகடூராரும் அங்கே வருவது என முடிவாகியது. அவர்கள் பயணம் மெல்ல நடைபெற்றது. வண்டி ஆடி அசைந்து சென்றது. மேற்கே வானம் கறுப்பது அறிந்த அத்திமல்லர் வண்டியை விரைந்து ஓட்டுமாறு கூறினார்.

தென் பெண்ணையாற்றங்கரையை அடைவதற்குள் பெரு மழை பெய்தது. அவர்கள் அருகே இருந்த சத்திரத்தில் தங்கினர். சந்திரகுமாரி உறக்கம் வராமல் யோசித்தவாறிருந்தாள்.

அவளுக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. பெண்ணாக அவள் பிறந்து விட்ட தால் பல நகரங்களுக்கிடையே பந்துபோல் இங்கு மங்கும் அலை வது வெறுப்பை அளித்தது. ராஜீய விவகாரங் களில் தலையிடுவதும் அவளுக்குப் பிடிக்கவில்லை. அங்கிருந்து தப்பிச் செல்ல முடிவு செய்தாள்.

சந்திரகுமாரி யாருக்கும் தெரியாமல் தட்டுத் தடுமாறி நடந்தாள். சத்திரத்தினின்று செல்லும் சாலை வழியே ஓடினாள். சிறிது தொலைவு சென்றதும் மணல் பாங்கான இடம் வந்தது. அதில் காலை வைத்ததுதான் தாமதம், எங்கிருந்தோ வெள்ளம் அவளைச் சூழ்ந்து கொண்டது. அவ்வளவுதான் அவள் அறிவாள். பிறகு விழித்தபோது கரையில் இருப்பதும், ஆடவல்லான் காப்பாற்றியதும் சொப்பனம்போல் தோன்றின.

"நல்ல வேளை, நீ உயிரை மாய்த்துக் கொள்ள விரும்ப வில்லையா?" என்று ஆடவல்லான் அவளைக் கேட்டான்.

"உயிர் எனக்குச் சொந்தமில்லையாமே" என்று கூறி சந்திர குமாரி நகைத்தாள். அவள் குமிழ்ச் சிரிப்பு, ஆடவல்லானைப் போதை கொள்ளச் செய்தது.

## 48. கலகம்

ஆடவல்லானும், காளிங்கனும் அன்றே கங்கை கொண்ட சோழபுரத்திற்குப் புறப்பட்டனர். அவர்களுடன் சந்திரகுமாரியும் வந்தாள். கங்கை கொண்ட சோழபுரம் சென்றவுடன், தானே தளபதிக்கு எதிராக ஆட்களைச் சேர்த்து அவரை எதிர்க்கப்போவ தாகத் தெரிவித்தான், ஆடவல்லான். "தம்பி, போர் வீரன்போல் பேசுகிறாயே; உனக்கு இவ்வளவு துணிவு ஏற்படும் என்று நான் நினைக்கவேயில்லை" என்றான் காளி.

ஆடவல்லான் துள்ளித் திரும்பி, "இனிமேல் ஒவ்வொரு வரும் போர் வீரனாக ஆகும் நிலை வந்துவிட்டது. நாமெல்லாம் கத்தியைக் கையில் எடுத்தால்தான் எல்லாருக்குமே விமோசனம். நம்மைக் கோழையென்று எண்ணிச் செயல் புரிகின்றனர். இல்லா விடில் சந்திரகுமாரியைக் காஞ்சிக்கும், கங்காபுரிக்குமாக இழுத்து நிற்போமா?" என்றான். காளி சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய் காளி?"



"இல்லை. திருவெண்காட்டு நங்கை உன் பேச்சைக் கேட்டால் என்ன நினைப்பார்கள் என்று நினைத்தவுடன் சிரிப்பு வந்தது" என்றான் காளி.

சந்திரகுமாரி இப்போது பேச்சில் கலந்து கொண்டாள். "அந்த அம்மையாரை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. என்ன அன்பு; என்ன உபசாரம்; அவருக்குப் பணிவிடை செய்து கொண்டே காலத் தைக் கடத்தலாம் என்றுகூட எனக்குத் தோன்றுகிறது" என்றவு டன், காளி மீண்டும் சிரித்து, "ஆகா; அப்படியே செய்யலாம். அதற் கான அறிகுறிகள் காணப்படுகின்றனவே. இல்லாவிடில் தம்பி உன்னை வெள்ளத்திலிருந்து காப்பாற்றியிருக்குமா?" என்றான்.

ஆடவல்லான் பொய்க் கோபத்துடன் காளிங்கன் முதுகில் தட்டினான். சந்திரகுமாரியின் முகத்துணர்ச்சியைப் பார்க்க முடிய வில்லை. அவள், இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு விட்டாள்.

கங்கை கொண்ட சோழபுரம் அடைய அவர்களுக்கு ஒரு வாரத்திற்கு மேல் பிடித்தது. அதற்குள் கங்காபுரியில் பெரிய மாறு தல் ஏற்பட்டிருந்தது. மன்னர் எழுதி வைத்த உயிலைக் கைப்பற்ற தளபதி முயன்றார். இடங்கைப் படையினரின் தலைவனாக ஒருவன் புதிதாக வந்து சேர்ந்திருந்தான். அவன் பெயர் வஜ்ரசேனன். அவன் தளபதியை எச்சரித்து தனது ஆட்களை அனுப்பியிருந்தான். அவர்களைத் தளபதி தன்மபாலர் உடனே சிறையிலடைத்து விட்டார். அத்துடன் வஜ்ரசேனன் இருக்குமிடத்தைக் கூறுமாறு சித்திரவதை செய்தார். அவர்கள் திடமனதுடையவர்கள். உயிரி ழக்க துணிவரேயன்றி, இரகசியம் வெளியிடத் துணியவில்லை. அவர்கள் சித்திரவதை செய்யப்பட்ட செய்தி கேள்விப்பட்டவுடன் தன்மபாலரின் ஆட்கள் ஆங்காங்கே தாக்கப்பட்டனர்.

இப்படிப்பட்டச் சூழ்நிலை இருக்கும்போதுதான் ஆடவல்லானும், சந்திரகுமாரியும் கங்கை கொண்ட சோழபுரம் வந்து சேர்ந்தனர். அப்போது மாலை மங்கும் வேளை. காளிங்கன், தன் குடிசைக்குச் செல்வதற்காக விடைபெற்றுக் கொண்டான். ஆடவல்லானுக்குக் கோயிலுக்குச் சென்று சோழீசரைத் தரிசிக்க வேண்டும் போலிருந்தது.

"தம்பி, நாளை வந்து உன்னைப் பார்க்கிறேன். இன்று பத்தி ரமாக வீட்டிலே இரு" என்று கூறி விடைபெற்றுக் கொண்டான்

காளிங்கன். ஆடவல்லானும், சந்திரகுமாரியும் கோயிலுக்குள் நுழைந்தனர். கோயிலில் ஜன நடமாட்டம் அவ்வளவாக இல்லை. ஒருவார காலம் பெரும் மாறுதலை ஏற்படுத்திவிட்ட உணர்ச்சியை உண்டாக்கியது. எல்லாமே புதியதாகத் தோன்றுவதுபோல் இருந்தது.

கர்ப்பக்கிருகத்தில் 'மினுக் மினுக்' கென்று விளக்கெரிந்து கொண்டிருந்தது. ஆடவல்லான் கண்களில் நீர் தளும்பியது. ஆண்டவனை இவ்வளவு நாள்களாகக் காணவில்லையே என்று அவன் ஏங்கினான்.

"சோழீசா! என் அப்பனே; இனியும் சோதனை செய்யாதே. உன் திருவடிகளைச் சேர்ந்து விட்டேன். துயரமும், துன்பமும் நேராது காப்பாற்றுவாய். இந்த நாட்டையும் நீதான் காக்க வேண்டும்" என்று அவன் வேண்டும்போது, சந்திரகுமாரியும் கண்களை மூடிக்கொண்டு ஏதோ பிரார்த்தனையிலிருந்தாள்.

அவர்களுடைய பக்தி நிலையை வெளியே ஏற்பட்ட ஆரவாரம் கலைத்தது. தடதடவென்று குதிரைகள் ஓடும் ஓசை. 'ஹோ...ஆ' என்ற ஒலி. பிடி, விடாதே என்ற கூச்சல். எங்கோ வாளோடு வாள் மோதும் சப்தம். சந்திரகுமாரியும் நடுநடுங்கினாள். ஆடவல்லான் வெளியே சென்று என்ன நடக்கிறது என்று அறியத் துடித்தான்.

"வேண்டாம், வேண்டாம்" என்று தடுத்து நிறுத்திய சந்திரகுமாரியின் மென் கரங்களின் ஸ்பரிசம், அவன் உடலில் மின்னல் வந்து புகுந்ததைப் போன்ற உணர்ச்சியை ஏற்படுத்தியது.

## 49. வேங்கிக்கு ஓலை

கங்கை கொண்ட சோழபுரத்து அரண்மனையில் பரபரப்பு மிகுந்திருந்தது. மாளிகையிலுள்ள பெண்டிர்களைத் தஞ்சையிலுள்ள பெரிய மாளிகைக்குச் செல்லுமாறு ராணியார் யோசனை கூறினார். இன்னும் சில நாள்களில் கங்கை கொண்ட சோழபுரத்தில் குழப்பமும் கலகமும் ஏற்படும் என்று மன்னருக்கு மிக நெருங்கியவர்கள் கூறினார்கள். வேலியே பயிரை மேய்வதுபோல், தளபதி தன்மபாலரே குழப்பத்தை ஏற்படுத்துகிறார் எனும் பேச்சு எங்கும் நிலவியது. அவருக்கு விரோதமாக இருந்த அவரது தம்பி இளைய தன்மபாலரைத் கொன்றதுகூட அவரேதான் என்று



அழுத்தமாகக் கூறிக்கொண்டனர். இளையவரை ஆதரிக்கும் இடங்கைப் படையினர் சீறி எழத் தொடங்கிவிட்டனர். பிரம்மராயரும் காஞ்சியிலுள்ள இளவரசன் மதுராந்தகனுக்குப் பட்டம் சேரவேண்டும் என்று இப்போது பகிரங்கமாகக் கட்சி சேர்த்து வந்தார். இந்த நிலையில் மாளிகையில் உள்ளவர்களுக்கு ஆபத்து நேரலாம் என்றுணர்ந்து, ராணி பெண்டு பிள்ளைகளைப் பத்திரமான இடத்துக்குக் கொண்டு சேர்க்க விரும்பினார்.

தஞ்சைக்குப் பயணம் என்ற செய்தி மதுராந்தகிக்குச் சுவாரஸ்யமாக இல்லை. இராசேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்தை விட்டுச் சென்ற பிறகு அவளுக்கு மனதே சரியில்லை. தோழி வந்து கூறிய செய்தியோ, இன்னும் வேதனையை வளர்த்தது. மதுராந்தகியைப் பாண்டிய இளவரசனுக்கு மணம் செய்து கொடுத்துப் பாண்டியர்களின் இடைவிடாத தாக்குதலைத் தவிர்க்கலாம் என்று தளபதி மன்னருக்கு யோசனை கூறியுள்ளார் எனும் செய்தியைத் தோழி கூறியபோது, வேதனை ஒருபுறம் வளர்ந்தாலும், தளபதி மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'அவருக்கு நான் என்ன தீங்கு செய்து விட்டேன்? அவர் ஏன் என்னைப் பாண்டிய நாட்டிற்கு அனுப்ப விரும்புகிறார். மேலும் பாண்டிய நாடு பகைவர் நாடு. அந்த நாட்டில் என்னை அனுப்பித் தொல்லைபடட்டும் என்று நினைக்கிறாரோ?' என்று நினைத்தாள்.

தளபதி தன்மபாலர் திட்டமே வேறு. அவர் மதுராந்தகியின் காதலைத் தெரிந்து கொண்டுவிட்டார். கங்கை கொண்ட சோழபுரத்திற்கு இராசேந்திரன் வந்து சில நாள்கள் இருந்தாலும், அவன் சோழ அரியணைக்கு ஏற்றவன் என்று பலர் விரும்புவதையும், அவனை மதுராந்தகி விரும்புவதையும் அந்த இரு காரணங்களால் இராசேந்திரனுடைய உரிமை நிலை நாட்டப்படும் என்று திடமாக நம்பிய தளபதி, மதுராந்தகியை சோழ குடும்பத்தில் இருந்து பிரிக்க விரும்பினார். மதுராந்தகியின் தோழிக்கு இந்தச் செய்தி தெரிந்துவிட்டது. மதுராந்தகியிடம் கூறியவுடன், அவள் வேதனை இப்படி அதிகமாகும் என்பதை எதிர்பார்க்கவில்லை. மதுராந்தகி சோர்ந்து போய் அமர்ந்து விட்டாள். தஞ்சைக்குச் செல்ல ஏற்பாடுகள் துரிதமாக நடந்து கொண்டிருக்கும் வேளையில், மதுராந்தகி இருண்ட அறையில் அலங்காரம் ஏதுமின்றிச் சோகமே உருவானவளாய் அமர்ந்திருந்தாள்.

அப்போது அவளைப் பார்க்க யாரோ வந்திருப்பதாகப் பணியாள் தெரிவித்துச் சென்றான். தன்னைப் பார்க்க யார் வருகிறார்கள் எனும் ஆவலில் கண்ணீரையும் துடைத்து, கொண்டு மதுராந்தகி மாடத்தருகே வந்தாள். படகோட்டியின் மனைவி கோமதி வந்து கொண்டிருந்தாள்.

கோமதி சுற்று முற்றும் பார்த்தவாறு மிகவும் பயத்துடன் வந்து கொண்டிருந்தாள். அவள் முகத்தில் பீதி நிலவியது. மதுராந்தகி, கோமதியை வரவேற்றாள். புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு அவள் கணவன் நலம் விசாரித்தாள். கண்களில் நீர் தளும்ப, "அவரைப் பற்றிய செய்தியே தெரியவில்லை தேவி!" என்று கூறினாள்.

"காளிங்கன் மிகவும் நல்லவன். அவனுக்கு உதவி செய்ய முடியாமல் போய்விட்டதே என்பதை நினைக்கும்போது எனக்கும் வேதனையாக இருக்கிறது. அரசக் குடும்பத்துப் பெண்தான்; ஆனால் எனக்கு இந்த மாளிகையில் என்ன உரிமை இருக்கிறது. என் தாயும், தந்தையும் இருந்தால் எனக்கு இந்தக் குறைகளை யெல்லாம் வைத்திருக்கமாட்டார்கள்?" என்று மதுராந்தகி கூறியவுடன், தன்னிடம் பொருள் ஏதும் கொடுப்பதற்கு இல்லை எனும் என்ற எண்ணத்தில் தேவி அதுபோல் பேசுகிறாள் என்று நினைத்த கோமதி, "தேவி! கடவுள் புண்ணியத்தில் எங்களுக்கு ஒருவிதக் குறைவுமில்லையம்மா. ஏரிக்கரையில் சோழ மாவரசர் அருளினால் சுகமாக வாழ்கிறோம். எங்கள் கவலையெல்லாம் மவராசா நல்லா இருக்கணும் என்பதுதான். எத்தனையோ பயங்கரச் சதியெல்லாம் நடக்கிறது. வேங்கி இளவரசர் எங்கள் குடிசையில் தங்கியிருந்தபோது அத்திமல்லரும் அவரும் பேசிக் கொண்டிருந்தவை என் காதில் வீழ்ந்தன..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே மதுராந்தகி முகம் மலர, "உன் வீட்டில் வேங்கி இளவரசர் தங்கியிருந்தாரா?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"ஆமாம், தேவி. அவர் இந்த நகரத்திலிருந்து புறப்படும் போது என் கணவரிடம் சில முக்கியமான விஷயங்களைச் சொல்லிச் சென்றார். அவற்றுள் ஒன்று உங்கள் நலனைப் பார்த்துக் கொள்வது..."

"என் நினைவு அவருக்கு இருந்ததா?"

"என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள் தேவி. அவரது மனசை நான் தங்களிடம் எப்படி எடுத்துச் சொல்வேன். அதை அறிந்த



நான், இப்போது ஏற்பட்டுள்ள ஆபத்துச் சூழ்நிலையில் தங்களிடம் ஓடி வந்தேன்"-கோமதி கூறிய வார்த்தைகளால் மதுராந்தகி, நெருங்கிய உறவின் முறையோர் அரவணைப்பில் இருப்பது போன்ற உணர்ச்சியை அடைந்தாள்.

கோமதி மேலும் தொடர்ந்தாள்: "தேவி, இனி கங்காபுரியில் இருப்பது சரியன்று என அத்திமல்லர் கூறினார். திருக்கோவலூருக்கு வந்துவிடுமாறு சொல்லச் சொன்னார்."

"திருக்கோவலூருக்கா? அதெப்படி முடியும். தஞ்சைக்குச் செல்லுமாறு ராணியார் கட்டளையிட்டிருக்கிறாரே" என்றாள் மதுராந்தகி.

"தஞ்சையில் யாரம்மா இருக்கிறார்? திருக்கோவலூரிலாவது அத்திமல்லர் இருக்கிறார். அவர் பெருந்தூண்போல் இருந்து உதவி செய்வார்."

"தஞ்சையில் பெருவுடையார் துணைதான். ராணியின் உத்தரவு மீறி நான் திருக்கோவலூர் செல்லக்கூடாது கோமதி. இதையெல்லாம் நினைக்கும்போது இங்கேயே இருந்து விடலாம் என்று தோன்றுகிறது. மன்னருக்கும், மகாராணிக்கும் ஏற்படக் கூடிய துன்பம் எனக்கும்தான் நேரட்டுமே..."

"தேவி! தாங்கள் எங்கு சென்றாலும் தங்களை நிழல்போல் நான் பின்தொடர்வேன். என் கணவர் செல்லும்போது அப்படித் தான் சொல்லிச் சென்றார்" என்றாள் கோமதி. கோமதியின் பரிவும் பாசமும் நிறைந்த வார்த்தைகளைக் கேட்டு மனம் நெகிழ்ந்து விட்டாள் மதுராந்தகி.

மதுராந்தகி சற்று நேரம் மௌனமாயிருந்தாள். ஏதோ யோசித்தவாறிருந்தாள். பிறகு கோமதியை நோக்கி, "கோமதி, காளி எப்போது வருவான் தெரியுமா?" என்று கேட்டாள்.

"எனக்கு எப்படியம்மா தெரியும்? அவரால் என்ன ஆகவேண்டுமோ அதை நான் செய்கிறேன், சொல்லுங்கள்" என்றாள் கோமதி. மதுராந்தகி நகைத்தாள்.

"ஏன் தேவி நகைக்கிறீர்கள்?"

"உன் கணவர் செய்யக்கூடியதை உன்னால் செய்ய முடியுமா? என்று எண்ணி நகைத்தேன்."

"என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள். படகு ஓட்ட வேண்டுமா? கண் விழித்து உங்கள் அருகேயே இருக்க வேண்டுமா?"

"அதைவிடப் பெரிய காரியம். காடு, மலை கடந்து செல்ல வேண்டும். வழியே பெரிய ஆறு வரும். அதைத் தாண்ட வேண்டும்."

"சொல்லுங்கள் தேவி..."

"வேங்கிக்கு ஓர் ஓலை எடுத்துச் செல்ல வேண்டும்."

"யாருக்கம்மா?"

மதுராந்தகியின் செவ்விதழ்கள் துடித்தன. மாம்பழக் கன்னங்கள் மேலும் சிவந்தன. கண் இமைகள் படபடவென அடித்துக் கொண்டன.

"இவையெல்லாம் பெண்ணால் ஆகக்கூடிய காரியமன்று கோமதி. உன் கணவரைப் போன்ற நம்பிக்கையானவர் தேவை... மிகவும் முக்கியமான செய்தியை எடுத்துச் செல்லவேண்டும். வேங்கியில் கவலையின்றி இருக்கும் இளவரசரிடம் சென்று கொடுக்க வேண்டும்..." என்று மதுராந்தகி சொன்னவுடன், கோமதி ஓலை யாருக்கு என்பதைப் புரிந்து கொண்டாள்.

கங்கை கொண்ட சோழபுரத்தில் நடக்கும் செய்தியை அறிவிக்க வேண்டும் எனும் துடிப்பு மதுராந்தகிக்குச் சில நாள் களாக ஏற்பட்டது. கங்கை கொண்ட சோழபுரத்துச் சுய நிலையை இராசேந்திரனுக்குத் தெரிவித்துத் தானும் வேங்கிக்குப் புறப்பட்டு வருவதாக அறிவிக்க இளவரசி விரும்பினாள்.

"ஓலையை எழுதுங்கள் தேவி! நான் அதைப் பத்திரமாகக் கொண்டு செல்லும் பொறுப்பை ஏற்கிறேன்"-கோமதியின் உற்சாகம் நிறைந்த வார்த்தைகள், மதுராந்தகிக்குப் புதுத்தெம்பை அளித்தன. மறுநாள் காலை வருமாறு அவளை அனுப்பி விட்டு, என்ன எழுதலாம் எனச் சிந்திக்கலானாள்.

மாளிகையினின்று இப்படியும் அப்படியும் பார்த்துக் கொண்டு சென்ற கோமதியை ஓர் உருவம் பின் தொடர்ந்தது. சற்று ஜன நடமாட்டமற்ற இடம் வந்தவுடன், "ஏ புள்ளே, சற்று நில்லு" என்று அதட்டியது.

# 50. இரணதீரன் கோரிக்கை

கங்கை கொண்ட சோழபுரத்து எல்லையில் எல்லைக் காளிக் கோயிலுக்கு அருகேயுள்ள வீட்டிற்குள் இரண்டு நாழிகை இடை வெளிக்குள் ஒவ்வொருவராகப் பலர்-முகம் அடையாளம் தெரியாத பலர்-சென்று கொண்டிருந்தனர். பிரமாதிராயர் அந்த வீட்டின் இரண்டாவது கட்டின் நடுக்கூடத்தின் நடுவே உட்கார்ந் திருந்தார். அவர் யாருடைய வரவையோ எதிர்பார்த்துக் கொண் டிருப்பதுபோல் தோன்றியது. முண்டாசு கட்டியவர்களும், சுருள் மீசைக்காரர்களும், சிவந்த கண்களுடன் பார்ப்பதற்குப் பயங்கர மானவர்களுமாகப் பலர், பிரமாதிராயரின் உத்தரவு எதையோ எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"நேரத்துக்கு வந்து விடுமாறு நான் இளவரசரை எவ்வளவோ தடவை எச்சரித்திருக்கிறேன்.ஹூம்..." என்று பெரு மூச்சுவிட்ட பிரமாதிராயர், நடைக்கருகே நின்று கொண்டிருந்த இளைஞனை நோக்கி, "உன்னிடம் அவர் என்ன சொன்னார்?" என்று கேட்டார்.

இளைஞன் எதைச் சொல்லுவான். பிரம்மராயரின் மகளும் மதுராந்தகனும் சல்லாபித்துக் கொண்டிருந்ததை அந்தக் கூட்டத் தில் அவனால் எப்படிச் சொல்ல முடியும்? இளைஞன் மௌன மாயிருப்பதைக் கண்ட பிரமாதிராயர் "புரிந்து கொண்டேன் உன் மௌனத்தை. மதுராந்தகன், தன் வாழ்க்கையையே இத்தகைய மோகாந்தகாரம் நிறைந்த சோம்பலினால் இழந்துவிடப்போகிறான். அவன் கிடக்கட்டும். நாம் இப்போது முடிவு செய்து விடுவோம். யார் யார் எந்தெந்த இடத்தில் சென்று ஆயத்தமாக நிற்பது என்பதை நான் முடிவு கூறுகிறேன். அதன்படி கவனமாகச் செய்யுங்கள்" என்றார்.

வரும் அமாவாசையன்று கங்கை கொண்ட சோழபுரத்து அரண்மனையை வசப்படுத்தி, பொக்கிஷ சாலையைக் கைப்பற்றி, இளவரசன் மதுராந்தகனை அரியணையில் அமர்த்தி விடுவது அவர் யோசனை; திட்டம். அங்கு கூடியிருந்தவர்கள் அனை வரும் சோழநாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்தார்கள். அன்றைய ஆட்சி மீது பல வகையில் வெறுப்புற்றவர்கள். பிரமாதிராயரின் திறமையும், அவர் முன் ஆட்சியில் ஆற்றிய

சேவையையும் அறிந்து அவருக்கு உதவி செய்ய இரவோடு இரவாகக் கங்காபுரிக்கு வந்தவர்கள். ஒவ்வொருவரும் நூறு பேருக்குக் குறையாது படை வீரர்களைக் கொடுத்துதவுவதாக வாக்களித்திருந்தனர். குறைந்தது மூவாயிரம் நாலாயிரம் பேர் சேர்ந்து விடுவார்கள்.

மதுராந்தகனை ஒப்புக்காக ஆட்சியில் அமரவைத்துவிட்டுத் தானே ஆட்சியை நடத்த வேண்டும் எனும் உள் எண்ணம் கொண்டவர். அவர் கற்பனையும், அதன்படி நடத்த வேண்டிய திட்டமும் ஏராளமாக அவர் உள்ளத்திலே பொங்கி நின்றன. அவர் முதல் எதிரி தளபதி தன்மபாலர்தான். அவரைத் தக்க சமயத்தில் சிறை செய்துவிட்டால், தன் காரியம் முடிந்துவிடும் என்று திட்டமிட்டிருந்தார். நோய் வாய்ப்பட்டிருக்கும் அரசரை இருந்த இடத்திலேயே சிறைசெய்துவிட வேண்டும் என்பது அவர் முதல் திட்டம். மாளிகையிலுள்ளவர்களுக்கு எந்தவிதத் தொல்லையும் கொடுக்கக் கூடாது எனும் எண்ணம் அவருக்கு இருந்தாலும், மதுராந்தகியின் மீது அவருக்குள்ள சீற்றம், அவளுக்கு ஏதாவது ஊறு செய்ய வேண்டும் எனும் எண்ணமிருந்ததால், மதுராந்தகியைத் தூக்கிக் கொண்டு போய் எங்காவது மறைத்து வைத்து விடவேண்டும் என்று மற்றொரு திட்டம். ஒரே சமயத்தில் பொக்கிஷம், ஆயுத சாலை இவ்விரண்டையும் வசப்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டிருந்தார். ஒவ்வொரு கோட்டை வாயிலிலும் பலமான படைகளை நிறுத்தி, அந்நியர் உள்ளே வராமலும், கங்காபுரியினின்று எவரும் வெளியே போகாமலும் தடுத்து விடவும் திட்டமிட்டிருந்தார். காதும் காதும் வைத்ததுபோல் ரத்தம் சிந்தாமல் ஆட்சியைக் கைப்பற்ற முடிவு செய்தார். அதற்கு முதல் தடை தளபதி. அவரைச் சமயம் பார்த்துச் சிறை பிடித்துக் கொன்றுவிடப் போட்ட திட்டம்தான் சதியின் சிகரம். அதை நிறைவேற்ற யார் முன்வருகிறீர்கள் என்று கேட்டவுடன், நான் நீ என்று பலர் முன்னுக்கு வந்தனர். கடைசியில் அவர் குடத்தில் ஓலையிட்டு, யார் பெயர் வருகிறது என்று பார்த்தார். இளைய தன்மபாலரின் மகன் இரணதீரனின் பெயர் வந்தது. எல்லாரும் வியப்புடன் அவனை நோக்கினர். அவன் இருபது வயது இளங்காளை. தன் பெரிய தந்தையைக் கொல்வதற்கு அவன் எப்படித் துணிவான் என்று எல்லாரும் வியந்தனர். ஆனால் அந்த இளைஞன் அரிமா போல் துள்ளிக் கர்ஜனையுடன் எழுந்து, "எல்லோரும் வியந்து பார்ப்பது எனக்குத் தெரிகிறது. மௌனம் உங்கள் சந்தேகத்தை உறுதிப்படுத்துகிறது. ஆனால்,



என் தந்தையைக் கோழையைப்போல் தாக்கிக் கொன்ற என் பெரிய தந்தையைப் பழிக்குப்பழி வாங்குவேன். அந்தக் கடமையை எனக்கு ஆண்டவன் அளித்துள்ளார் என்று மகிழ்ச்சி அடைகிறேன். அந்த மகத்தான செயலைச் செய்தால் என் கோரிக்கை ஒன்றையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டும்" என்று முழங்கினான்.

கோரிக்கை என்னவென்று எல்லாரும் வியப்புடன் நோக்கினர். பிரமாதிராயர் இதை எதிர்பார்க்கவில்லை. இளைஞனின் துடிப்பும், ஆவேசமும், அவன் எதிர்க் கேள்வி போட்டுத் திகைக்க வைப்பதும் அவருக்குப் பிடிக்கவில்லைதான். என்றாலும் அந்தச் சமயத்தில் அவனது விரோதத்தைப் பெற அவர் விரும்பவில்லை. அமைதியான அந்த இடத்தின் அமைதியைக் குலைத்து அவர், "கோரிக்கை விட்டுக் காரியம் செய்வது சரியல்லதான். ஆனால் மிக முக்கியப் பணியை நீ செய்ய திருவுளச்சீட்டு வீழ்ந்ததால் உன் கோரிக்கையைச் செவியிலாவது கேட்கிறோம். உன் கோரிக்கை ஏற்கப்பட முடியாததாயின் நீ செய்ய வேண்டியதை விட்டுவிடுவாயா?" என்று அழுத்தந்திருத்தமாகக் கேட்டார். இரணதீரன் கடகடவென நகைத்து, "நான் என் கடமையினின்று தவறமாட்டேன். அதேபோது நான் விரும்பிக் கேட்பதை நீங்கள் தரச் சம்மதிக்காவிடில், அதையும் நிறைவேற்றிக்கொள்ள எனக்கு வெகு நேரம் பிடிக்காது" என்றான்.

அவன் கோரிக்கை என்ன என்று அறிய அனைவரும் துடித்தனர். அவன் கணீரென்ற குரலில், "மதுராந்தகியை எனக்கு மணம் முடித்துத் தர வேண்டும்" என்றான். 'ஆ!' எனும் வியப்புக் குரல் அனைவரிடமிருந்தும் எழுந்தது.

## 51. "எனக்கு வேண்டாம்"

வேங்கியில் விசயாதித்தனுக்கு எப்பொழுதுமே இல்லாத மனவேதனை நிறைந்திருந்தது. சோழ நாட்டிலிருந்து இராசேந்திரன் வந்துவிட்டான் என்பது மட்டுமன்று, தன் மகன் சத்திவர்மன் இராசேந்திரனுடன் நெருங்கிய நட்பு கொண்டு, "அண்ணா, அண்ணா" என்று அவனுடனே சுற்றி வருவது விசயாதித்தனுக்கு உள்ளத்தில் பயத்தை அளித்தது. வேங்கி நகர மக்களும் இராசேந்திரன் மீது அன்பும், மதிப்பும் கொண்டு திகழ்ந்தனர். வீதி

களில் இராசேந்திரன் செல்லும்போது, "இளவரசர் வாழ்க" என்று வாழ்த்தொலி எழுப்புகின்றனர். சத்திவர்மனை எவரும் மதித்த தாகக்கூடத் தெரியவில்லை.

விசயாதித்தன் பெருமூச்சு விட்டான். இராசேந்திரனை ஒழித்துவிட்டால்தான், தான் நிம்மதியாக வாழலாம் எனும் பயங்கர எண்ணம் அவன் மனத்திலுதித்தது. அதைப் பற்றியே அவன் தீவிரமாகச் சிந்திக்கலானான். தன் மகன் ஆட்சிக்குத் தகுதியாகா மல் எங்கெல்லாமோ சுற்றிவருவது அவனுக்குப் பிடிக்கவில்லை. இராசேந்திரன் வேங்கிக்கு வந்திருப்பதும், அவன் தாய் உடனே உரிமையைக் கேட்க வற்புறுத்துவதும் அறிந்த விசயாதித்தன் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்ட விரும்பினான். அதற்கான ஏற்பாடுகள் செய்ய முற்பட்டான்.

இராசேந்திரன் இதையறிந்தவுடன், விசயாதித்தனை நயமாகக் கேட்க அரண்மனைக்கு விரைந்தான். இராசேந்திரனை வரவேற்றான் விசயாதித்தன். அவன் வந்திருக்கும் நோக்கத்தை மிக எளிதில் அறிந்து கொண்டான்.

"இராசேந்திரா, சோழநாட்டின் வளப்பமெல்லாம் எப்படி? கங்காபுரியில் எல்லாரும் நலமா?" என்று பேச்சைத் தொடங்கி னான் விசயாதித்தன்.

"அங்கே எல்லாரும் நலம்தான். மன்னருக்குத்தான் உடல் நலம் மிகவும் குன்றியிருக்கிறது" என்று மறுமொழி பகன்றான் இராசேந்திரன். பிறகு, என்ன பேசுவது என்று விசயாதித்தனுக்கும் புரியவில்லை. இராசேந்திரனும், தான் கேட்க வேண்டியதைக் கேட் காமல் மௌனமாகவே இருந்தான். ஆனால் அவனைக் கூர்ந்து நோக்கிய விசயாதித்தன் பேச்சை வேறுபக்கம் திருப்ப விரும்பி, "நானும் கேள்விப்பட்டேன். அதிராசேந்திரன் மரணப் படுக்கை யில் இருக்கின்றாராமே! பாவம்; அவருக்குக் குழந்தை இல்லை. அடுத்துப் பட்டம் ஏற உரிமை உடையவரை நியமித்திருப்பாரே!" என்று கேட்டான்.

"நான் அதைப்பற்றி விசாரிக்கவில்லை. அந்த நாட்டு உள் விஷயங்கள் நமக்கு எதற்கு? என் உரிமையே கேட்பாரில்லாமல் இருக்கும்போது, மற்ற நாட்டைப்பற்றி எனக்கென்ன?"



இராசேந்திரன் இவ்வாறு கூறவும், விசயாதித்தன் திடுக்கிட் டான். ஆனால் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ள விரும்பாமல், "என்ன அப்படிச் சொல்லி விட்டாய் இராசேந்திரா? சோழநாடு உனக்கு வேற்று நாடா? உன் பாட்டனார் மாவீரர் இராசேந்திரர் உனக்கு வேற்று மனிதரா?" என்று கேட்டான் விசயாதித்தன்.

இராசேந்திரன் மெல்லச் சிரித்தான். "பெண் வயிற்றுப் பிள்ளைக்கு நாட்டைக் கொடுப்பது நியாயம் என்று சரித்திரத்தில் சொல்லியிருப்பதாகக் கேள்விப்படவில்லை. தந்தையின் ஆஸ்தியை மகன் பெறுவதே பெரும் பிரயத்தனமாக இருக்கும் போது, பாட்டனாரின் ஆஸ்திக்கு ஆசைப்படுவது நியாயமாகத் தோன்றவில்லை" என்றான்.

விசயாதித்தன் மௌனமாயிருந்தான். தன்னை மறைமுகமா கச் சுட்டிக் குறை கூறுகிறான் என்பதைப் புரிந்து கொண்டான். இராசேந்திரனிடம் மேற்கொண்டு பேச்சுக் கொடுக்க விரும்பாமல், "இராசேந்திரா! இளம்பிள்ளை நீ. தக்க வேலை ஏதாவது செய்ய வேண்டிய பருவத்தில் இங்கும் அங்குமாக அலைந்து கொண் டிருக்கலாமா? வட எல்லைக் காவல் பொறுப்பை நீ ஏற்றுக் கொண்டுவிடு?" என்றான்.

"நாட்டின் காவலனாக விளங்க வேண்டியவனுக்கு எல்லைக் காவலா?" என்று சீறினான் இராசேந்திரன்.

"எந்த நாட்டின் காவலன் இராசேந்திரா? ஏதாவது கனவு கண்டாயா?"

"கனவு காண்பவர் நீங்கள்தான். வேங்கியை எக்காலமும் ஆளலாம் என்று கனவு காண்பது நிறைவேறாது..."

"இராசேந்திரா, யாரிடம் பேசுகிறாய், என்ன பேசுகிறாய் என்று யோசித்துப் பேசு!"

"நீங்கள் யோசியுங்கள். உரிமையுடையவன் வந்து விட்டேன். தங்களிடம் எனக்குச் சேரவேண்டியதைக் கேட்டுப் பேசுகிறேன். அதற்குத் தக்க மறுமொழி கூறுங்கள்."

"உனக்குச் சேர வேண்டியதா? என்ன பேசுகிறாய்?"

"ஆம், இந்த வேங்கியில் என் தந்தை இறந்தபோது நான் சிறுவன். நாட்டைப் பாதுகாத்து என்னிடம் ஒப்படைப்பதாக உறுதி யளித்திருந்தீர்கள். இப்போது தக்க தருணம் வந்து விட்டது."

"உன் தந்தைக்குப் பிறகு நான் ஆட்சி புரிய ஏற்றுக் கொண்டது உண்மைதான். ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு உன் தந்தை என்னிடம் கூறினார்.. ஆனால், உன்னிடம் ஒப்படைக்கு மாறு எந்தவிதக் கட்டாயமும் ஏற்படவில்லையே... அடுத்து என் மகன் பட்டமேறுவான். அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறேன். இடையே குழப்பம் ஏற்படுத்த நீ யார்?"

"நான் யார் என்பதைத் தெரிவிக்கவே விரும்புகிறேன். யாருக்குப் பட்டம் சூட்ட விரும்புகிறீரோ அவன் அரியணையைக் கண்டால் காத தூரம் ஓட ஆயத்தமாயிருக்கிறான். அப்படிப்பட்ட கோழைகளிடமிருந்து நாட்டைக் காக்க வந்தவன்தான் நான்" என்றான் இராசேந்திரன்.

இராசேந்திரனின் இந்த வார்த்தைகள் விசயாதித்தனுக்கு மிகவும் சீற்றத்தை வரவழைத்தன.

"இராசேந்திரா! சிறுபிள்ளை என்பதால் உனது வார்த்தை களைப் பொறுத்துக் கொள்கிறேன். இன்னொரு முறை நீ இப்படிப் பேசினால் உனக்குத் தக்க தண்டனையளிப்பேன். பேசாமல் இந்த இடத்தை விட்டுப் போய் விடு......" என்று கூறவும், இராசேந்திரன் மிகவும் சாந்தமான குரலில், "நீங்கள் என் சிறிய தந்தை என்பதால் தான் நானும் பொறுத்திருக்கிறேன். இந்த இடத்தை விட்டுப் போக வேண்டியவர்கள் நானல்லன். என் தந்தை உலவிய இடம். என் தாயும் களிப்புடன் வாழ்ந்த இடம். என் தாயை நீங்கள் நடத்தும் விதம் நான் அறிந்தேன். அரசிக்கு ஏற்ற மரியாதையுடன் வாழ வேண்டிய என் தாய், சாதாரண இடத்தில் சோர்ந்து போய் நோயுற்று வாழ்கிறாள். என் தாயின் கண்ணீரைத் துடைக்க நான் சபதம் எடுத்து விட்டேன். என் உரிமையை நிலைநாட்டிக் கொள்ள நான் உறுதி கொண்டு விட்டேன். அமைதியான முறை வழி காட்டா விடில் என் உயிரைப் பணயம் வைத்தாவது உரிமையை நிலை நாட்டத் துணிந்து விட்டேன். தந்தையே, ஹூம்... இப்படி அழைக் கவே நா கூசுகிறது. அறமற்ற முறையில் ஆட்சி அபகரித்தவரே! கடைசியாகக் கேட்கிறேன், என் உரிமையை எனக்குக் கொடுங் கள்..." என்று இராசேந்திரன் கூறவும், விசயாதித்தன் சீறி எழுந்து, "அடா! சிறுபிள்ளை என்பதால் இங்கேயே உன் நாவைத் துண்டிக் காது உன்னை விடுகிறேன்... யாரங்கே..." என்று கூறிக் கை தட்டி னான். காவல் வீரர்கள் விரைந்து வந்தனர்.



"இவனை உடனே காராகிருஹத்தில் தள்ளுங்கள்" என்று கட்டளையிட்டான். இராசேந்திரன் துள்ளினான். தன் உடை வாளை மின்னல் போல் உருவி, "அப்படியே நில்லுங்கள். யாராவது ஓரடி எடுத்து வைத்தால் உங்கள் தலை மண்ணிலே உருளும். உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போய் விடுங்கள்" என்று சீறினான். காவலர்கள் செய்வதறியாது திகைத்த போது, சத்திவர்மன் திடீரென அங்கே தோன்றினான். காவலர்களை நோக்கி, "விலகிப் போய்விடுங்கள்!" என்று கர்ஜித்தான். தந்தையை நோக்கி, "என்னப்பா இதெல்லாம்; அண்ணனை நோக்கி நீங்கள் கூறும் வார்த்தைகள் இவைதானா? நியாயம்தானா?" என்று கேட்டான். மகனின் சொற்களைப் புரிந்து கொள்ளாது விசயாதித்தன் திகைத்தான்.

## 52. வேங்கிக்குச் செய்தி

கங்கை கொண்ட சோழபுரத்துக்கு நடுநாயகமாக விளங்கும் கோயிலில் துதித்துக் கொண்டிருக்கையில், வெளியே குதிரைகள் விரைந்து ஓடுவதையும், கூச்சலும் குழப்பமும் ஏற்படுவதையும் கேட்டுத் திகைத்த ஆடவல்லான், உடனே வீட்டை அடைந்து விட வேண்டும் என்ற எண்ணத்தில், சந்திரகுமாரியையும் அழைத் துக் கொண்டு குறுக்கு வழியாக வீட்டை நோக்கி விரைந்தான். சந்திரகுமாரியின் ஒரு கரத்தைப் பிடித்து ஆடவல்லான் வேகமாக அழைத்துச் செல்லும்போது சந்திரகுமாரியின் உடல் சிலிர்த்தது. இதேபோன்று அவள் கரத்தை, ஒரு சமயம் இராசேந்திரனும் பிடித்து அழைத்துச் சென்றிருக்கிறான். அப்போதும் அவள் உள்ளத்தில் சலனமேற்பட்டது. அவளது உள்ளம் ஒரு நிலையில் லாமல் கலங்கிச் சுழன்று இப்போதுதான் ஒரு நிலைக்கு வந்து சேர்ந்திருக்கிறது. ஆடவல்லானைத் தவிர வேறு யாரையும் நினைக்க முடியாத ஓர் நிலைக்கு அவள் வந்து விட்டாள்.

வீட்டிலே மூதாட்டி திருவெண்காட்டு நங்கை காத்திருந் தாள். ஆடவல்லான் எப்படியும் நலத்துடன் வந்துவிடுவான் என்று அவளுக்குத் தெரியும். ஆனால், இப்படி ஆடவல்லான் ராஜ்ய காரியங்களில் ஈடுபடுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆண்ட வனை நினைப்பதைத் தவிர வேறு எந்தவிதச் செயல்களிலும்

ஈடுபடக்கூடாது என்றே அவள் விரும்பினாள். ஆனால் ஆடவல்லானின் மனப்போக்கை அவளால் மாற்றமுடியாத பருவம் என்பது மூதாட்டியாருக்குத் தெரியாதா என்ன!

சில நாள்களாகக் கங்கை கொண்ட சோழபுரத்தில் நிலவி வந்த கலக நிலைமையும், ஆடவல்லான் இன்னும் வீடுவந்து சேராததும் மூதாட்டியாரின் உள்ளத்தில் வேதனையைத்தான் சேர்த்தது. திடீரென ஆடவல்லானும் சந்திரகுமாரியும் வந்து கதவைத் தட்டியவுடன், அவர்களைக் கண்ட பிறகுதான் போன உயிர் திரும்பியது போலாயிற்று.

ஆடவல்லான் நடந்தவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லி வரும்போது, சந்திரகுமாரிக்கும் வெட்கமாகத்தான் இருந்தது. நேரம் போவது தெரியாமல் அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, யாரோ வந்து கதவு தட்டும் ஓசை கேட்டது.

காளிங்கன் பரபரப்பு மிகுந்தவனாக நின்று கொண்டிருந்தான்.

"என்ன காளி, ஏன் என்னவோ போல் இருக்கிறாய்?" என்று ஆடவல்லான் கேட்டான்.

"வீட்டைவிட்டுக் காலையில் சென்ற கோமதி இன்னும் வீட்டிற்கு வரவில்லை. நகரத்து நிலைமையைப் பார்க்கும்போது எனக்குப் பயம் ஏற்பட்டு விட்டது ஆடவல்லா. கோமதிக்கு ஏதாவது ஆபத்து உண்டாகி விட்டதோ என்று பயமாயிருக்கு ஆடவல்லா" என்று காளி நெஞ்சு தழுதழுக்கக் கூறினான்.

"அதெல்லாம் ஒன்றும் நேர்ந்திருக்காது காளி! சோழீசரை மனத்திலே நினைத்துக்கொள். எல்லாம் சரியாகிவிடும்" என்று மூதாட்டி கூறினாள்.

"நகரத்திலே என்ன ஒரே குழப்பம்? குதிரைகள் ஓடுகின்றன. பெரும் கூச்சல் எழுகிறது. என்ன நேர்ந்திருக்கிறது. என்ன காளி, என்ன நேர்ந்திருக்கிறது" என்று ஆடவல்லான் கேட்டான்.

"என்ன நேர்ந்துவிட்டது என்று தெரியவில்லை. தளபதிக்கு விரோதமாக ஏதோ கலகம் நடக்கிறது போலிருக்கிறது. இரண்டு நாள்களாக அக்கரைக்குப் படகோட்டப் பலர் வந்து என்னைத் தேடியவாறு இருக்கிறார்களாம்" என்றான்.



மூதாட்டியும் பேச்சிலே கலந்து கொண்டாள். "இந்த ஊருக்கு இவ்வளவு காலமாக இல்லாத ஆபத்து ஏதோ வந்திருக்கிறது. நேற்று அர்த்த சாம பூசை நடைபெறவில்லை. கோயில் அர்ச்சகர் பயத்தில் வரவில்லை. ஆண்டவனுக்குப் பூசை இல்லாது போனது இப்போதுதான். யார் யாரோ வெளி ஊரிலிருந்து பலர் வந்திருக்கிறார்கள். என்ன நேருமோ?" என்று கூறினாள். சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவியது.

யாரோ கொல்லைப்புறக் கதவை மெல்ல தட்டும் ஓசை கேட்டது. மூதாட்டி சென்று கதவைத் திறந்தாள். தலையில் முக்காடிட்டுக் கொண்டு கோமதி நின்று கொண்டிருந்தாள். அவள் அவசரஅவசரமாக உள்ளே நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள். "காளி! சொன்னேனே பார்த்தாயா? கோமதி வந்து விட்டாள். கடவுளருளால் எல்லாரும் ஒன்று சேர்ந்து விட்டோம்" என்றாள்.

கோமதி 'உஸ்' என்று சைகை காட்டி, "சத்தம் போடாதீர்கள். என்னைத் தேடிக் கொண்டு பலர் பின் தொடர்கிறார்கள்" என்றாள்.

மதுராந்தகியைச் சந்தித்துவிட்டுக் கோமதி சென்று கொண்டிருந்த போது, அவளைப் பின் தொடர்ந்த தளபதியின் ஒற்றர்கள், அவளைப் பலவிதமாகக் குறுக்கு கேள்விகள் கேட்டும் பலனில்லை. அவர்களிடமிருந்து தப்பிய கோமதி, வேறு எங்கோ செல்வதாகப் போக்குக் காட்டிவிட்டு மறைந்து மறைந்து ஆடவல்லானின் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அங்கே ஒருவித பயமுமின்றித் தங்கியிருக்கலாம் என்ற துணிவு அவளுக்கு இருந்தது. ஆனால் காளி அங்கே வந்திருப்பான் என்று எதிர்பார்க்கவில்லை. காளியைக் கண்டவுடன் கோமதி பரபரப்புடன், "நல்ல வேளையாக நீ வந்து சேர்ந்தாயே! உன்னை இளவரசி தேடினாள். அவசரமாக ஓர் செய்தி அனுப்ப வேண்டுமாம். உடனே போய் இளவரசியைப் பார்" என்றாள் கோமதி.

காளி, "சூ" கொட்டினான். "ஒரு குதிரை கேட்டேன். மாட்டேன் என்று சொன்ன இளவரசிக்கு நான் ஏன் உதவி செய்ய வேண்டும்!" என்றான். கோமதி கோபங் கொண்டாள். "உனக்கு விபரம் ஏதும் தெரியவில்லை. அவசர நிலையும் புரியாது. எவ்வளவு பெரிய ஆபத்தில் அரச குடும்பம் சிக்கியிருக்கிறது

தெரியுமா? மகாராசா என்ன சொல்லிவிட்டுப் போனார்? மறந்து விட்டாயா? நீ செய்யாவிட்டால் நான் செய்கிறேன்" என்றாள்.

அவள் முகத்தில் தோன்றிய கோபத்தைக் கண்டு காளி திகைத்துப் போனான்.

"இளவரசி, வேங்கிக்கு அவசரச் செய்தி ஏதோ கொடுக்கிறாளாம். அதை எடுத்துச் செல்லத்தக்க ஆள் நீதான் என்று முடிவு செய்திருக்கிறாள். அதைவிட வேறு என்ன வேலை...?" என்று படபடத்தாள் கோமதி.

"வேங்கிக்கா? மகராசாவிடமா? நான் உடனே புறப்படுகிறேன்" என்றான் காளி.

"நாளைக் காலையிலே மாளிகைக்குப் போய் ஓலையைப் பெற்றுக் கொள். உன் கோபத்தை இளவரசியிடம் காட்டாதே" என்று கடிந்தாள் கோமதி.

அன்று இரவு காளிக்கு உறக்கமே இல்லை. வேங்கிப் பயணத்தை நினைத்தே படுத்திருந்தான். பொழுது விடிவதை அவன் எதிர்நோக்கியிருந்தான்.

## 53. காளியின் யுக்தி

**கா**ளிங்கன் மாளிகையை அடையும் முன்பே, மதுராந்தகியும் மற்றும் மாளிகையிலுள்ள பெண்களும் தஞ்சைக்குப் புறப்பட்டு விட்டார்கள். ஏழெட்டுச் சிவிகைகளில் அவர்கள் சென்றனர். அவர்களுக்குப் பாதுகாவலாக இரு புறமும் வீரர்கள் சென்றனர். கங்கை கொண்ட சோழபுரத்துக்குப் பெரும் ஆபத்து வரப் போகிறது என்று பெண்டுகள் பேசிக் கொண்டனர். அவர்களில் பலர் முகம் வாடியிருந்தது. சிலர் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தனர். மீண்டும் கங்கை கொண்ட சோழபுரத்தைக் காண்போமா எனும் கவலையும் அச்சமும் அவர்களைச் சூழ்ந்தன.

மதுராந்தகி, தன் உயிரைப் பற்றிக் கவலைப்படவில்லை. கங்கை கொண்ட சோழபுரம் பாழாவதை அவள் விரும்பவில்லை. ஓரளவுக்கு அவளுக்கு நிலைமை புரிந்திருந்தது. சோழ நாட்டைச்



சிற்றரசர்கள் பங்கு போட நினைப்பதை அவள் விரும்பவில்லை. அத்துடன் தன்னைப் பாண்டிய குமாரனுக்கு மணம் புரிவிக்கத் தளபதி திட்டமிட்டிருப்பதையும், தஞ்சைக்குச் சென்றவுடன் அதை நிறைவேற்றிவிட முடிவு செய்திருப்பதையும் அவள் நினைக்கும்போது, இந்தச் செய்தி வேங்கிக்கு எட்டிவிட்டால் போதும் என்ற பரபரப்பில் இருந்தாள். வேங்கியில் இராசேந்திரன் செவிகளில் இவை வீழ்ந்தால் போதும்; பிறகு தனக்கு என்ன வேண்டுமானாலும் நேரட்டும் என்ற உறுதியான முடிவுக்கு வந்தாள். செய்தியை யார் எடுத்துச் செல்வது? தன் கணவரை உடனே அனுப்புவதாகக் கூறிச் சென்ற கோமதியையும் காணவில்லை. காளியின் மூலம் வேங்கிக்குச் செய்தி அனுப்பிவிடலாம் எனும் துடிப்புடனிருந்தாளே?

மதுராந்தகி புறப்படும் நேரம் வரையில் காளியை எதிர்பார்த்தாள். சிவிகை புறப்பட்டுவிட்டது. காளி ஓடோடி வந்தான். மதுராந்தகி செல்லும் சிவிகை எது என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் அவன் சிவிகையுடனே சற்று தூரம் ஓடிவருமாறு நேர்ந்தது. காவல் வீரர்கள் காளியைத் தடுத்து நிறுத்தினர்.

"ஏனய்யா ஓடிவருகிறீர்?" என்று ஓர் வீரன் கேட்டான்.

"ஒன்றுமில்லை; இளவரசியம்மாளுக்கு வேர்க்கடலை என்றால் மிகவும் பிடிக்கும். அதைக் கொடுப்பதற்கு ஓடி வருகிறேன். அதனுடன் என் பெண்சாதி முல்லை மொக்கு ஒரு படி பறித்து வைத்திருக்கிறாள். அதை என்ன செய்வது என்று இளவரசியாரிடம் கேட்க வேண்டும்" என்றான் காளி.

வீரன் வீழ்ந்து வீழ்ந்து சிரித்தான். "முல்லை மொக்கை நீ உன் தலையில் தொடுத்து வைத்துக் கொள்ளேன்" என்றான்.

"சரி; அப்படியே வைத்துக் கொள்கிறேன். இந்த வேர்க்கடலையையும் நானே தின்று விடட்டுமா?" என்று கேட்டான் காளி.

"அண்ணே, இப்படிக் கொடு வேர்கடலையை. வழியில் கரும்பாலையிலிருந்து வெல்ல உருண்டை வாங்கித் தின்று கொண்டே போகிறேன்" என்றான் வீரன்.

"நாம் பேசுவதை இளவரசி கேட்டு விட்டால்... அப்புறம் என்னை நம்பவே மாட்டார்களே" என்று வருத்தப்படுபவன் போல் பாவனை செய்தான் காளி.

"இளவரசியை உனக்குத் தெரியுமா? அவர்கள் கோடி சிவிகையில் வருகிறார்கள். நீ எனக்குக் கொடுத்தாய் என்பதே அவர்களுக்குத் தெரியாது. நீ போய் விடு" என்றான் வீரன்.

இதுதான் சந்தர்ப்பம் என்று காளி சட்டென்று வீரன் காட்டிய பல்லக்கை நோக்கி ஓடி, "அம்மா, அம்மா... இதோ நான் வந்திருக்கிறேன்" என்று கூவினான். காளியின் குரல் மதுராந்தகிக்குக் கேட்டு விட்டது. திரையை விலக்கி அவள் காளியைக் கண்டு உளம் மகிழ்ந்தாள். என்ன பேசுவதென்றே தெரியவில்லை. ஓலையும் எழுதிக் கொண்டு வரவில்லை. காளி சிவிகையுடன் ஓடி வந்து கொண்டிருந்தான். குதிரை வீரனும் காளியை நெருங்கிக் கொண்டிருந்தான்.

"அம்மா, அம்மா காவல்காரன் வருகிறான். வேங்கிக்கு என்ன சொல்ல வேண்டுமோ சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று பதறினான். மதுராந்தகிக்கு என்ன சொல்வது என்றே புரிய வில்லை. கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்து, "இதை வேங்கி மன்னரிடம் அளித்து விடு. கங்காபுரியைக் காக்க விரைவில் வருமாறு சொல்லு" என்றாள்.

காளி மோதிரத்தை வாங்கிக் கொள்வதற்கும் காவல் வீரன் அங்கே வந்து காளியை நோக்கி, "என்ன அது? என்ன அது?" என்று அதட்டினான். காளி சிரித்துக் கொண்டு, "வேர்க் கடலையை என்னிடமே கொடுத்து விட்டாள் தேவி. உன்னிடம் கொடுத்து விடுமாறு கூறுகிறாள்" என்றான்.

"எங்கே அது?"

"கடலைதானே... வீட்டிலே இருக்கிறது. கொஞ்சம் இப்படியே நில்லு. நான் ஓடிப் போய்க் கொண்டு வருகிறேன்" என்று கூறி ஓட்டம் பிடித்தான். அவனைப் பின் தொடர்வதா அல்லது சிவிகையுடன் செல்வதா என்று திகைத்தான் வீரன். அதற்குள் காளி சாலையின் குறுக்கே பாய்ந்து, தோப்புக்குள் நுழைந்து ஓடி மறைந்து விட்டான்.



மதுராந்தகியைப் பரிசாகக் கேட்ட இரணதீரன், அப்போது தோப்பின் வழியே வந்து கொண்டிருந்தான். தளபதியைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் எனும் பெரும் பணியை அவன் தோளில் சுமத்திய அனைவரும், மதுராந்தகியை அவனுக்கு மணம் புரிந்து கொடுக்கச் சம்மதித்தனர். தஞ்சை செல்லும் வழியிலே மதுராந்தகியை வழிமறித்துக் கவர்ந்து சென்று விடுவது என்றும், தன்மபாலரைத் தீர்த்துவிட்டு அவரது வாளுடன் வரும் இரணதீரனுக்கு மதுராந்தகியைக் கவர்ந்து மறைத்து வைத்திருக் கும் கூடத்திலேயே மணம் செய்து விடுவது என்றும், எல்லைக் காளிக் கோயிலருகே சதியில் ஈடுபட்டவர் அனைவரும் சம்மதித்திருந்தனர்.

இரணதீரன் அப்போது தன்மபாலரின் உடைவாளுடன் வந்து கொண்டிருந்தான். மதுராந்தகியைக் கவர்ந்து சென்று வைத்திருக்கும் இடத்திற்குச் சென்று மணமாலை சூட்டும் ஆர்வத்துடன் குறுக்கு வழியே வந்து கொண்டிருந்தான். ஆனால் சதிகாரர்கள் எதிர்பார்த்ததுபோல மதுராந்தகியை அவர்களால் கவர முடியவில்லை. இரணதீரனோ குறிப்பிட்டபடி தளபதியை விண்ணுலகுக்கு அனுப்பிவிட்டு வந்து விட்டான்.

காளிங்கன் குறுக்கு வழியே அவசர அவசரமாக ஓடி வருவதைப் பார்த்த இரணதீரன், தங்கள் வகையைச் சேர்ந்த ஆட்களில் ஒருவன் என்று எண்ணி, தான் செய்த மகத்தான செயலைத் தெரிவிக்க விரும்பி, "தீர்த்துக் கட்டிவிட்டேன் தளபதியை" என்று உற்சாகமாகக் கூறிவிட்டு, "நீ எங்கேயப்பா செல்கிறாய்? அவசரம் அவசரமாக ஓடி வருகிறாயே. மதுராந்தகியை எங்கே அடைத்து வைத்திருக்கிறார்கள்? இளவரசிக்கு ஒருவிதக் குறைவுமின்றி வைத்திருக்கிறார்களா?" என்று கேட்டான்.

காளிங்கன் ஒரு கணம் திகைத்தான். ஏதோ பயங்கர சூழ்ச்சி நடக்கிறது என்று மட்டும் அறிந்து கொண்டான். "மதுராந்தகியை உடனே நீங்கள் பார்த்துதான் ஆக வேண்டுமா?" என்று கேட்டான்.

இரணதீரன் பரபரப்புடன், "என்ன அப்படிக் கேட்டு விட்டாய். உனக்கு செயலின் முக்கியமே தெரியாது போலிருக் கிறது. எதற்காக இந்தத் தளபதியின் வாளுடன் வருகிறேன்? மதுராந்தகிக்கு மாலை அணிவித்து உடனே சோழ அரியணை யில் அமரவேண்டும் என்பதற்காகத்தான்" என்றான்.

காளிங்கன் ஒரு கணத்தில் புரிந்து கொண்டான். மதுராந்தகிக்கு ஏதும் ஆபத்து நேர வழியில்லை. அவள் தஞ்சைக் குப் போய்ச் சேர்ந்துவிடுவாள். ஆனால் இந்த இரணதீரனால் கங்காபுரிக்குப் பெரும் ஆபத்து நேரும் போலிருக்கிறதே என்று எண்ணினான். "தளபதியைக் கொன்று விட்டேன்" என்று அவனே தன் வாயால் கூறும்போது காளிங்கன் உடல் நடுங்கியது.

இத்தகைய பாதகன் ஏது செய்யவும் துணிவான். இவனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று முடிவு செய்த காளிங்கன் இரணதீரனை நோக்கி, "அடடா... மதுராந்தகியை நீங்களா மாலையிடப் போகிறீர்கள்? கெட்டது காரியம். இதோ பாருங்கள் மதுராந்தகியின் மோதிரம். மதுராந்தகியை வேங்கிக்கு அல்லவா அழைத்துச் செல்கிறார்கள். இளவரசியின் மோதிரத்தைப் பாண்டியகுமாரனிடம் சேர்ப்பதற்காக நான் போகிறேன். இளவரசி பாண்டிய குமாரனை மணப்பதில் எனக்குத் துளிக்கூட விருப்ப மில்லை. அதுதான் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே இந்த வழியே வந்தேன்" என்றான்.

காளியின் யுக்தி பலித்துவிட்டது. இளவரசி வேங்கிக்குக் கொண்டு போகப்படுகிறாள் எனும் செய்தி இரணதீரனைத் திடுக்கிட வைத்தது. உடனே அவளைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனும் துடிப்பு ஏற்பட்டது. காளிங்கன் துணை அதற்கு நிச்சயம் தேவைப்படும் என்று முடிவு செய்தான். அதனால் காளியை நோக்கி, "ஐயா, உங்களை எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் மிகவும் முக்கிய செய்தியுடன் வருகிறீர்கள். இளவரசியை மணக்க வேண்டும் என்பதற்காகவே நான் என் பெரிய தந்தை யைக் கொலை செய்தேன். பறவை பறந்து விட்டதே. அதை விட்டுவிட முடியாது. உங்களுக்கு விருப்பமிருந்தால் என்னுடன் உதவிக்கு வரமுடியுமா?" என்று கேட்டான்.

"ஆகா; எப்படியாவது இந்த நகரத்தை விட்டு விரைந்து புறப்பட்டால் வழியிலேயே இளவரசியைத் தடுத்து நிறுத்தி விடலாம். அதற்கு இரண்டு நல்ல குதிரைகள் வேண்டும்" என்றான் காளி.

"இரண்டு என்ன, இருநூறு குதிரைகள் தருகிறேன். இப்போதே வா. என் குதிரைகள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு உடனே பறப்போம்" என்றான் இரணதீரன்.

# 54. நினைத்ததும் நடந்ததும்

கங்காபுரியின் அமைதி குலைந்தது. தளபதி திடீரெனப் படுகொலை செய்யப்பட்டார் எனும் செய்தி, எங்கும் காட்டுத் தீ போல் பரவியது. அது அனைவரையும் திடுக்கிட வைத்தது. குழப்ப நிலையை எதிர்பார்த்து நகரின் முக்கிய இடங்களைக் கைப்பற்றிக் கொள்வதில் இடங்கைப் படையினர் முனைந்தனர். அதைத் தடுக்க வலங்கைப் படையினரும், மற்றவரும் முனைந்த னர். ஆங்காங்கே கைகலப்புகள் நேர்ந்தன.

வேளக்காரப் படையினர் மன்னரைக் காப்பாற்ற முனைந்த னர். ஆனால் மன்னர் உடல்நிலை மிக மோசமாகியது. அவரது நினைவு தவறியது. அவரைச் சிறைப் பிடித்து எங்கோ அழைத்துச் சென்று விட்டதாகச் சிலர் வதந்தியைக் கிளப்பினர். மக்கள் ஒன்றும் புரியாமல் திகைத்தனர். சிலர் நகரின் குழப்ப நிலை கண்டு அஞ்சி, நகரை விட்டு வெளியேற முனைந்தனர். இந்தக் குழப்ப நிலையில் சுயநலமிகளும், நல்லவர் போல் வேடம் பூண்ட தீயர்களும், அகப்பட்டதைக் கொள்ளையடிக்க முயலவும், அவர்களைக் காவல் வீரர்கள் தடுக்க முயலவும், எங்கும் சண்டையும் பூசலும் நிறைந்தன.

இந்தப் போதில் வேங்கியில் விசித்திரமான மாறுதல்கள் நடைபெறத் தொடங்கின. இராசேந்திரனுக்குப் பட்டத்தை மறுத்த விசயாதித்தனும், அவன் மகனும் நீண்ட நேரம் விவாதித்தனர். சத்திவர்மன் தனக்குப் பட்டமே வேண்டாம் என்று தந்தையிடம் திட்டமாகக் கூறிவிட்டான். இராசேந்திரனோ தன் சிறிய தந்தை தன்னைச் சிறையிலடைக்கு மளவுக்கு வந்து விட்டதால், தானும் வைராக்கியத்துடன் வேங்கி அரியணையை அடைவதற்கான ஏற் பாடுகளைச் செய்யலானான். இரகசியமாக நம்பிக்கையான ஆட் களைப் படையில் சேர்க்கலானான். இராசேந்திரனது உதவிக்கு வர, நாட்டில் பலர் துடித்தனர். விசயாதித்தனும் எச்சரிக்கையுடன் இருப்பதற்கான ஏற்பாடுகளில் முனைந்தான். தன் உயிருக்கு எந்த நேரமும் ஆபத்து நேரும் என்ற எண்ணத்தில் காவலைப் பலப்படுத்தினான். நிரந்தரமாகப் பயத்தினின்று தப்ப ஒரே வழி

இராசேந்திரனைச் சிறையில் அடைப்பதுதான் என்று முடிவு செய்தான்.

ஆனால் காலம் இராசேந்திரனுக்குச் சாதகமாக அமைந்தது. இராசேந்திரன் வேங்கிக்கு அருகிலுள்ள காட்டில் இதுவரைக் கவனிப்பாரற்றுக் கிடந்த வசந்த மாளிகையைத் தன் திட்டங்களை உருவாக்கும் இடமாகக் கொண்டு செயல்பட்டு வந்தான். நூற்றுக்கணக்கிலிருந்து, ஆயிரக்கணக்கில் ஆதரவாளர்ப் படைகள் சேர்ந்தன. நகரின் முக்கியஸ்தர்களும் ஆதரவு தெரிவிக்க முன் வந்தனர். ஒரு நல்ல நாளில் இராசேந்திரனை வேங்கி அரியணையில் அமர்த்தி விடவும் அவர்கள் துடித்தனர். ஒரு நாளைக் குறிப்பிட்டு அன்று இராசேந்திரனுக்கு நாட்டை விட்டுக் கொடுக்க வேண்டும், அவனது உரிமையை ஏற்க வேண்டும் என்று பெரியவர்கள் விசயாதித்தனை வேண்டித் தூது அனுப்பினர்.

ஆனால் விசயாதித்தனோ அவர்கள் குறிப்பிட்ட நாளில், தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டும் விழா நடைபெறும் என்று முரசு அறிவித்தான். நகரில் மாவிலைத் தோரணங்கள் கட்டினான். கோலாகலமாக நகர் விளங்க ஏற்பாடு செய்தான். இது கண்ட நகரத்துப் பெரியவர்கள், அதே நேரத்தில் இராசேந்திரனை வேங்கியின் மன்னனாகப் பட்டம் சூட்டிவிட என்று முடிவு செய்தனர்.

வசந்த மாளிகை கோலாகலமாக அலங்கரிக்கப்பட்டது. இராசேந்திரனுக்கு மங்கல நீராடல் நடைபெற்றது. கண்ணைப் பறிக்கும் ஆபரணங்கள் அவனுக்கு அணிவிக்கப்பட்டன. புத்தாடை அணிந்து இராசேந்திரன் கம்பீரமாகக் காணப்பட்டான்.

குறிப்பிட்ட நேரத்தில் இராசேந்திரனை அரியணையில் அமரச் செய்து, வயது முதிர்ந்த நகரப் பெரியவர் அந்த வைபவத்திற்கு என்று தயாரிக்கப்பட்ட மகுடத்தை அவன் தலையில் சூட்டி, "வாழ்க இராசேந்திரன்; வாழ்க வேங்கி நாட்டை உய்விக்க வந்த குலோத்துங்கன் வாழ்க வாழ்க!" என்று வாழ்த்தினர். வாழ்த்தொலி வானைப் பிளந்தது.

"காட்டின் நடுவே நமது மன்னருக்கு மகுடம் சூட்டுகிறோம். வேங்கியின் பரம்பரை மாளிகையில் கோலாகல மகுடா



பிஷேகம் செய்யும் நாள் அதிக தூரத்தில் இல்லை. நாம் இனி இராசேந்திர சக்கரவர்த்தியைக் குலோத்துங்க சக்கரவர்த்தி என அழைப்போம். இந்தச் செய்தியை ஐம்பத்திரண்டு நாடுகளுக்கும் அறிவிப்போம்" என்று நகரத்துப் பேரறிஞர் முழங்கினார்.

கானகத்தில் இராசேந்திரன் குலோத்துங்கனாக மகுடம் சூட்டப்பட்ட அதே வேளையில், தன் மகன் சத்திவர்மனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டத் திட்டமிட்டிருந்தான் விசயாதித்தன். சபை கூடியிருந்தது. நடன மாதர்கள் அற்புதமாக ஆடினர். பல வித வாத்தியங்கள் முழங்கின. அரச புரோகிதர்கள் காத்திருந்தனர். ஆனால் சத்திவர்மனைத்தான் காணவில்லை.

விசயாதித்தன் வேளை தவறிவிடப் போகிறதே என்ற பரபரப்புடன் சத்திவர்மனை அழைத்துவர ஆட்களை ஏவினான். ஆனால், சத்திவர்மனை எங்கு தேடியும் காணவில்லை.

## 55. வந்துவிடு, வாழலாம்

திருவெண்காட்டு நங்கைக்கு இவ்வளவுநாள் இல்லாத கவலை மனத்திலே வந்து சேர்ந்து விட்டது. ஊரும் உலகமும் சீர்கெட்டு இருப்பது போதாதென்று, வீட்டிலே ஆடவல்லானும் இப்படி மனம்மாறி இருப்பதே அவளுக்கு வேதனை அளித்தது. கோயிலில் திருப்பதிகம் ஓதியவாறு சிவ சிந்தனையில் மனத்தை ஈடுபடுத்தி நாள்களை நல்ல முறையில் கழித்து வந்த தன் மகன் ஆடவல்லானும் இவ்வாறு சந்திரகுமாரியிடம் எப்போதும் பேசுவதும், அவள் விரும்பும் வேளையில் பாடுவதும், அவளை ஆடச் சொல்லிப் பொழுதைக் கழிப்பதுமாக இருந்துவருவது மூதாட்டிக்கு மனத்தில் வேதனையை அளிக்காமல் என்ன செய்யும்? போதாததற்கு அவன் கோயிலுக்குப் போவதும் கிடையாது. ஸ்ரீகாரியம் பார்ப்பவர் இரண்டு முறை எச்சரித்து விட்டார்.

சந்திரகுமாரியும் நல்ல பெண்தான். நற்குணம் நிறைந்தவளாகவே காணப்படுகிறாள். அப்படியிருக்கும்போது அவளைக் கண்டிக்கவும் முடியவில்லை. மேலும் தன் வீட்டிற்குத் தஞ்சம் என்று வந்திருக்கிறாள். அவளை வெளியேறுமாறு சொல்வது நியாயமா?

ஆனால் இருவர் உள்ளத்திலும் முளைத்திருப்பது அழியாத காதல் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? அதற்குச் சோதனைகள் அவசியமென்றால் அச்சோதனைகளில் மகனும் சந்திரகுமாரியும் வென்றால் திருமணத்தை முடித்து விடலாம். திருவெண்காட்டு நங்கை இவ்வாறுதான் எண்ணினாள். அதனால் ஜாடையாக சந்திரகுமாரியை அழைத்து, வயது வந்த பெண் ஓர் ஆடவனுடன் இவ்வாறு நெருங்கிப் பழகுவது கூடாது என்று லேசாகத் தெரிவித்தாள்.

சந்திரகுமாரி திடுக்கிட்டாள். ஆடவல்லானிடம் இதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் மூதாட்டியாரை நோக்கி அவ்வாறே நடந்து கொள்வதாக வாக்களித்தாள். திருவெண்காட்டு நங்கைக்கு மிக மகிழ்ச்சிதான். ஆனால் ஆடவல்லானோ சந்திரகுமாரியைச் சந்திக்க முடியாமல் தவித்தான். அவளுடன் பேசாமல் இருப்பது பைத்தியம் பிடித்ததுபோல் தோன்றியது. அவளைக் காணாத ஒவ்வொரு நொடியும் அவன் நெஞ்சில் தாபத்தை வளர்த்து வந்தது. அவள் தோள்களைப் பிடித்துக் குலுக்கி ஏன் மனமாற்றம் என்று கேட்க வேண்டும்போல் தோன்றியது. அவளது மூங்கிலைப்போன்ற கரங்களைத் தன் கரத்துடன் சேர்த்துப் பிணைத்து, ஏன் முன்போல் பேச மாட்டேன் என்கிறாய் என்று கேட்க வேண்டும் என்ற பரபரப்பு அவனுக்கு ஏற்பட்டது.

அன்று வேளை வந்தது. வீட்டுப் புறக்கடை மல்லிகைக் கொடியில் இருந்து மல்லிகை மொக்குகளைப் பறித்துக் கொண்டிருந்த சந்திரகுமாரியின் தோளின்மீது, யாருடைய மென் மூச்சோ மெல்ல உராய்ந்தது. சந்திரகுமாரி திடுக்கிட்டுத் திரும்பினாள். ஆடவல்லான் பாசமும், நேசமும், ஆர்வமும், ஆத்திரமும், அடக்க முடியாத ஆசையுமாக நிறைந்த கண்களுடன் நின்று கொண்டிருந்தான்.

சந்திரகுமாரி ஏதும் பேசவில்லை. அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது. மெல்ல ஆடவல்லானின் கரத்தை நகர்த்தி, "அம்மா வந்துவிடப் போகிறார்கள்!" என்றாள்.

"வரட்டுமே" என்று ஆத்திரத்துடன் கூவினான் ஆடவல்லான்.



"தவறாக நினைத்துக் கொள்வார்கள்."

"தவறாக ஏன் நினைத்துக் கொள்கிறார்கள்? நம்மைப் பற்றி அம்மாவுக்கு இதற்கு முன்பு தெரியாதா?"

"தெரியும். ஆனால் வயதுப் பெண் ஆடவனுடன் தனியே பழகக்கூடாது என்று சொல்கிறார்கள்."

"அம்மாவா சொன்னாள்?"

"ஆமாம்; அம்மாவும் பெண் இனம்தானே. பெண் தன் உயரிய கடமையை, குணத்தை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். அதைத்தான் எனக்கும் கற்றுக் கொடுத் திருக்கிறார்கள்."

சந்திரகுமாரி இவ்வாறு கூறவும் ஆடவல்லான் மௌனமாயிருந்தான். பிறகு மெல்ல நகைத்து, "சரி, அம்மாவைக் கேட்கிறேன். நீயும் நானும் இன்றுதான் பழகினோமா? ஏன் அப்படிக் கூறுகிறார்கள்?" என்று கூறவும், சந்திரகுமாரி பரபரப்புடன் அவன் கரத்தைப் பிடித்து நிறுத்தி, "இதை எல்லாம் நீங்கள் கேட்கக் கூடாது. கொஞ்ச நாள் நாம் பொறுத்திருப்போம். பிறகு அம்மாவே நாள் பார்த்து நம் இலட்சியம் ஈடேறச் செய்து விடுவாள்" என்றாள்.

ஆடவல்லான் முகத்தில் மகிழ்ச்சி ஒளி பிறந்தது. சந்திரகுமாரியை அவன் மேலும் நெருங்கி, "அப்படியென்றால் என்னை மணம் புரிந்து கொண்டு இந்த ஊரிலேயே தங்கிவிட உனக்குச் சம்மதம்தானே" என்றான். அவன் கரங்கள் அவளிடம் விளையாடின.

அவள் இலேசாகத் திமிறிக்கொண்டாள். அதிலும் ஓர்வித நளினமிருந்தது. ஆடவல்லான் ஒரு கணம் தன்னிலை இழந்து அவளைப் பலவந்தமாகத் தன் அருகே இழுக்கவும், அவள் கையிலிருந்த கூடையினின்று மல்லிகை மெல்லரும்புகள், சிதறி வீழ்ந்தன. சந்திரகுமாரியின் உடல் வியர்த்தது. அவள் எப்படியோ ஆடவல்லானிடமிருந்து விடுபட்டுக் கொண்டு உள்ளே ஓடி விட்டாள். ஆடவல்லான் உடல் படபடத்தது. தன்னுடைய உள்ளம் எவ்வாறு திடீரென இதுபோல் மிருக நிலையை அடைந்தது என்பது பற்றி அங்கேயே நின்று அவன் சிந்திக்கலானான். பிறகு வெளியே சென்று விட்டான்.

ஆடவல்லான் அங்கிருந்து சென்றவுடனேயே சந்திரகுமாரி கதவைத் தாளிட்டுவிட்டு, ஆடவல்லான் திடீரெனத் தன்னிடம் நடந்து கொண்ட விதத்தால் ஒரு புறம் இன்பமும், மறுபுறம் பயமும் அடைந்தவளாய் அமர்ந்திருந்தபோது கதவு தட்டும் ஓசை கேட்டது.

திருவெண்காட்டு நங்கைதான் வந்திருப்பாள் என்ற எண்ணத்தில் கதவைத் திறந்த சந்திரகுமாரி திடுக்கிட்டாள். சத்தமிடக்கூட அவளுக்கு நா எழவில்லை. கங்கபீமன் நின்று கொண்டிருந்தான்.

"என்னை எதிர்பார்த்திருக்க மாட்டாய் அல்லவா சந்திரகுமாரி?" என்றான் கங்கபீமன் ஒருவிதமாகச் சிரித்தவாறு. சந்திரகுமாரிக்குப் பேசவே நா எழவில்லை.

"என்னையாவது அடையாளம் தெரிகிறதா? உனது தாய் மாமன் கங்கபீமனை நீ மறந்து விட்டாயா?" என்றான் கங்கபீமன் மிகவும் நெளிவு நிறைந்த குரலில்.

சந்திரகுமாரி திக்பிரமை பிடித்தவள்போல் நின்று கொண்டிருந்தாள். கங்கபீமன் உள்ளே நுழைந்து, அவள் கூறு முன்பே அங்குள்ள பாத்திரத்தைக் கவிழ்த்துப் போட்டு அமர்ந்து, "சந்திரகுமாரி, பாவம், உனக்கு ரொம்பவும் அலைச்சல் இல்லையா? கங்காபுரியினின்று காஞ்சி; காஞ்சியினின்று திருக்கோவலூர். ஹூம்... என் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தால் இந்தத் தொல்லையெல்லாம் நேர்ந்திருக்காதல்லவா?" என்றான்.

சந்திரகுமாரிக்கு இப்போது கோபம் கோபமாக வந்தது. "இங்கே வேறு பெரியவர்கள் துணையில்லை, நீ போய் விடு. ஒரு பெண் தனியாக இருக்கும்போது வந்து பேசக்கூடாது என்பது உனக்குத் தெரியாதா?"

கங்கபீமன் இதைக் கேட்டு இடி இடியென்று நகைத்தான். அதில் பயங்கரம் கலந்திருந்தது. சந்திரகுமாரியும் நடுக்கத்துடன் என்ன செய்வதென்று புரியாமல் நின்று கொண்டிருந்தாள். கங்கபீமன் மௌனமாயிருக்கவில்லை.

"வேறு யாரும் இங்கில்லையென்று எனக்குத் தெரியும் சந்திரகுமாரி. தெரிந்துதான் நான் வந்திருக்கிறேன். யாரும் இல்லாதபோதுதான் உன்னுடன் பேச வேண்டும். என்னைக்



கண்டால் உனக்குப் பிடிக்கவில்லை என்று எனக்குத் தெரிந்து விட்டது. ஆனால் இந்த ஊருக்கு உன்னை அழைத்து வந்தது நான்தான் என்பதையாவது நீ நினைவில் வைத்துக் கொள்..." என்றான் கங்கபீமன்.

சந்திரகுமாரிக்கு இப்போது சற்றுத் துணிவு பிறந்தது. "வேங்கியிலிருந்து இங்கு வராமலே இருந்திருக்கலாம். சாளுக்கியன் பேச்சைக் கேட்டு என்னை அழைத்து வந்தாய். ஆனால் என்னிடம் கூறியதோ-சோழநாட்டு அரண்மனையில் ராஜநர்த்தகி பதவி வாங்கித் தருவதாக நினைவிருக்கட்டும்" என்றாள்.

"ஆமாம், சொன்னேன். இப்போதும் இல்லை என்று கூறவில்லையே. தகடூரார் உன்னை மிகவும் விரும்பினார். அவர் மாளிகையில் நீ அரசிபோல் வாழ்ந்திருக்கலாம். உனக்கு விருப்பமில்லை. இப்போதும் ஒன்றும் மூழ்கிப்போய்விடவில்லை. வா. இப்போதே வா. அவர்கள் எல்லாரும் இந்த ஊருக்கே வந்து விட்டார்கள். மறைந்து மறைந்து காரியம் செய்யாமல் பகிரங்கமாகவே எல்லாம் செய்ய வந்து விட்டார்கள். தகடூரார்தான் கங்கை கொண்ட சோழபுரத்து சிங்காசனத்தில் அமரப் போகிறவர். அவர் மனத்திற்குப் பிடித்தவளாக நீ ஆகிவிடுவதில் சிரமமே கிடையாது... அதைக் கூறத்தான் நான் வந்தேன்" என்றான்.

"நாட்டை அபகரிக்கும் திட்டத்தைத் தவிர இவர்களுக்கு வேறு வேலை கிடையாதா? இப்போது இங்கேயே வந்து விட்டார்களா? முன்பே ஊர் அமளிப்படுகிறது. இதில் இவர்கள் வேறு சேர்ந்துவிட்டார்களா?" என்று எண்ணி சந்திரகுமாரி வேதனைப்பட்டாள். சந்திரகுமாரி யோசிப்பதைக் கண்ட கங்கபீமன், தன் திட்டம் நிறைவேறிவிடும் எனும் துணிவில் முகத்திலே களிப்பை வரவழைத்துக் கொண்டு, "சந்திரகுமாரி, இந்த என் ஒரு வார்த்தையை மட்டும் கடைசியாகக் கேளு. உனக்கு ஒரு நாளும் தீங்கு செய்யமாட்டேன். என்னுடன் இப்போதே வந்துவிடு. உனக்குத் தகடூராரைப் பிடிக்காவிடில் பாண்டியகுமாரனுடன் வாழலாம். அவனும் வேண்டாம் என்றால், உன் தாய் மாமனான என்னைவிட உரிமையுடையவர் யார்? நீ யாரை நேசித்தாலும் கடைசியாக உன் பக்கம் நன்மைதான். சாளுக்கிய விக்கிரமாதித்தனிடமிருந்து எனக்குச் செய்தி

வந்துவிட்டது. சோழ நாடு அரசனில்லாமல் இன்னும் சிறிது நாள்களில் திண்டாடப்போகிறது. அப்போது சாளுக்கியப் படைகள் கங்காபுரியைத் தாக்கி எளிதில் வசப்படுத்திக் கொள்ளும். எதிர்த்தவர்கள் அனைவருக்கும் கூண்டோடு மேலுலகம்தான். ஆனால், நீயோ உப்பரிகையில் உல்லாசமாக உலவுவாய். உனக்கு அவகாசம் தருகிறேன். யோசித்துச் சொல்... நாளை மாலையில் இதே நேரம் வருவேன். என்னுடன் வருவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு கங்கபீமன் பதிலை எதிர்பார்க்காமலேயே புறப்பட்டுவிட்டான். சந்திரகுமாரி செய்வதறியாது திகைத்தவாறிருந்தாள். வெகு நேரம் சிந்தித்தாள். அவள் ஒரு முடிவுக்கு வரும்போது ஆடவல்லானும், மூதாட்டியும் வீடுவந்து சேர்ந்தனர். கதவைத் தட்டினர். சந்திரகுமாரி தள்ளாடியவாறே சென்று கதவைத் திறந்தாள். அவளுக்கு அவர்களைக் கண்டவுடன் அளவிலாத் துக்கம் பொங்கி வந்தது.

## 56. அரியணை யாருக்கு?

கங்கை கொண்ட சோழபுரத்து நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது. மக்கள் சகஜ வாழ்வுக்கும் ஆபத்து ஏற்பட்டது. மாளிகையிலிருந்து மன்னர் இறந்துவிட்டார் எனும் வதந்தி மிதந்து வந்தது. இந்தச் செய்தி நகரில் கூடியிருந்த சிற்றரசர்களைத் திகைக்க வைத்தது. செய்தியின் உண்மையை அறிந்து வர அத்திமல்லர் மாளிகைக்குச் சென்றார். மாளிகை வெறிச்சோ என்று இருந்தது. பெண்கள் அனைவரும்தான் தஞ்சைக்குப் போய் விட்டனரே!

அத்திமல்லரையே உள்ளே வர அவர்கள் அனுமதிக்க வில்லை. பிரமராயரின் சதித் திட்டத்தால் அவர்கள் மாளிகை முழுவதையுமே ஆக்ரமிக்கத் திட்டமிட்டிருந்தனர். காஞ்சியி னின்று வந்திருந்த மதுராந்தகனின் சொந்தப் படைகள் ஆக்ரமிப் புக்கு உதவின. தளபதி இறந்துவிட்டார். முதல் அமைச்சரைக் காணோம். அவரைச் சிறையில் தள்ளியிருப்பதாக ஒரு வதந்தி. அத்திமல்லர் நொடியில் விஷயத்தை உணர்ந்தார். மோசம் வந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டார். மன்னர்



உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளக்கூட முடியாத நிலை அவருக்கு அந்த மாளிகையில் ஏற்பட்டு விட்டது பெரும் ஆத்திரத்தை அவருக்கு விளைவித்தது.

உடனே அவர் ஒரு முடிவுக்கு வந்தார். அங்கிருந்து விரைந்து வேளக்காரப் படையினர் இருக்குமிடம் சென்றார். வேளக்காரப் படையினர் ஒரு காலத்தில் சோழநாட்டில் உயிரைக் கொடுத்து மன்னரைக் காப்பற்றுவதாக உறுதி எடுத்துக் கொண்ட பரம்பரை யினர். கங்கை கொண்ட சோழர் காலத்தில் அவர்கள், தம் கடமை வழுவாதிருந்தனர். பிறகு அவர்களுடைய ஊக்கம் குறைந்தது. அவர்களை ஆதரிக்க ஆளில்லாமல் போகவே அப்படையினருள் பலர் வெவ்வேறு தொழில் செய்யப் போய்விட்டனர்.

ஆனால் வயது முதிர்ந்தும் கடமையில் வழுவா வேளக்காரப் படையினர் இருந்தனர். அவர்கள் நகரினின்று சிறிது தூரத்தில் காவிரிக்கரையில் குடியிருந்தனர். அவர்களிடம் அத்திமல்லர் விரைந்தார். அவர்களுள் சிலர் அத்திமல்லரை அறிவார்கள். ராமாயணக் கதையை ஒரு கிழவர் சொல்லவும், கேட்டவாறு அமர்ந்திருந்த அவர்களை நோக்கி அத்திமல்லர் "இராமாயணக் கதையைப் பிறகு கேட்கலாம். ஆபத்து ஆபத்து" என்று கூவினார்.

ஆபத்து என்றவுடன் துள்ளி எழுந்த வேளக்காரரில் ஒருவர், "ஆபத்தா, யாருக்கு, எங்கே, எப்படி?" என்றார்.

"மன்னருக்குத்தான் ஆபத்து. அவர் உயிருக்கு ஆபத்து. அவர் நேற்றே இறந்துவிட்டதாக ஓர் வதந்தி. ஆனால் சூழ்ச்சிக் காரர்கள் மாளிகைக்குள் நெருங்கவிட மறுக்கிறார்கள். உங்கள் கடமையை மறந்து நீங்கள் இப்படிக் கதை கேட்டுக்கொண்டிருப் பது நியாயமா?'' என்றார்.

அவ்வளவுதான் அவர் சொன்னார். அரசருக்கு ஆபத்து என்ற சொல் அவர்கள் செவிகளில் ரீங்காரமிட்டது. கண் இமைக்கும் நேரத்தில் அவர்கள் வாள், வேலுடன் வந்து குதித்தனர்.

அத்திமல்லர் அமைதியாகச் சிற்றரசர்கள் கூடியிருந்த இடத்திற்கு விரைந்தார். அவர்கள் மிகக் கவலையுடன் இருப்பது தெரிந்தது.

"மன்னர் நிலை என்ன?" கேட்டார் கொங்கு வேளிர்.

"எந்த நிலையாயிருந்தால்தான் என்ன? இனியும் தாமதப் படுத்தக்கூடாது?" என்றான் சீயகங்கன்.

அத்திமல்லர் இப்போது சீறினார். "என்ன செய்வதாக உங்கள் உத்தேசம்? மாளிகைக்குள் நுழையவே எனக்கு முடிய வில்லை. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்களாம்?"

பாண்டிய குமாரன் துள்ளினான். "ஓய்! உமது பேச்சில் பெரும் சூது இருக்கிறது. நீங்கள் ஏதோ மனத்தில் கொண்டு தடுத்து வருகிறீர்கள். நீங்கள் ஒன்று சேராவிடினும் நான் இப்போதே மதுரை செல்கிறேன். எங்கள் படைகள் செய்யவேண்டி யதைச் செய்யும்" என்று கூறி விரைந்தான். அவன் சென்ற பிறகு கூச்சலும் குழப்பமும் அங்கே நிலவின. உடனடியாகப் படை களைக் கொண்டு கங்கை கொண்ட சோழபுரத்தையும் மற்றும் முக்கியமான இடங்களையும் கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்று அனைவரும் கூச்சலிட்டனர்.

அத்திமல்லர் திடீரெனத் தன் வாளை உருவி, எல்லோரை யும்விட உரத்த குரலில் பேசத் தொடங்கவும், கூச்சல் அடங்கியது. அவர் ஆவேசம் வந்தவர்போல் பேசினார்.

"நாட்டில் கூச்சலும் குழப்பமும் செய்யும் நாம் யார் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும் என நினைக்கிறேன். அராஜகத் தையும், குழப்பத்தையும் நிறுத்தி நல்ல ஆட்சியை நிலை நிறுத்த நாம் கூடியுள்ளோம். ஆனால் நடப்பது என்ன? நம்மால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை..... மன்னர் இறந்துவிட்டவுடன் யார் சிங்காதனம் ஏறப் போகிறோம்? சோழ நாட்டு அரியணை உரிமை யாருக்கு என்று முடிவு செய்து கொண்டல்லவா நாம் படைகளைப் பயன்படுத்த வேண்டும். யார் அரியணை ஏறினாலும் முதலில் பாண்டிய நாட்டுடன் போர் தொடுக்க வேண்டும். அதற்கான பலம் நம்மில் யாரிடமிருக்கிறது?" என்றார் அத்திமல்லர்.

அங்கு கூடியிருந்தவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தனர். அத்திமல்லரே மீண்டும் பேசினார். "ஏன் வாயடைத்து விட்டீர்கள்? உடனே நாம் முடிவு செய்ய வேண்டும். கங்காபுரியின் பரம்பரை அரியணையில் யார் ஏறி அமர்கிறீர்கள்? இல்லை. சோழ நாட்டைத் துண்டு போட்டு ஆளுக்குக் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறீர்களா?" என்று கேட்டார்.



இப்போது சீயகங்கன் எழுந்து, "அதுவே சரி. துண்டு போடுவோம்" என்றான். மற்றும் எல்லாரும் 'ஆம் ஆம்' என்று முழங்கினர். அத்திமல்லர் பெரிதாக நகைத்தார். "உங்களைப் போன்றவர்கள் இந்தப் பொன்னி நாட்டைத் துண்டுபோட்டு எடுத்துக் கொண்டு போய், மறுகணம் விரோதிகளிடம் சுலபமாக இழந்து விடுவீர்கள். செய்யுங்கள். செய்யுங்கள். அப்படித் துண்டு போட்ட பிறகு கங்கை கொண்ட சோழபுரத்தை யார் எடுத்துக் கொள்வீர்கள்? சோழ பொக்கிஷம் யாருக்கு? அதை முடிவு செய்து விட வேண்டாமா?"

அத்திமல்லரின் இந்தச் சாதுர்யமான கேள்விக்கு எவராலும் விடை கூற முடியவில்லை. திகைத்தனர்.

"இப்போதே முடிவு செய்தாகவேண்டும். இதற்குள் வேளக்காரப் படையினர் மாளிகையைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டிருப்பர். மன்னருக்கு என்ன நேர்ந்தது என்பதும் தெரிய வரும். உடனே சொல்லுங்கள்" என்றார்.

எல்லாரும் 'திரு திரு'வென விழித்தனர். அப்போது அத்திமல்லரே சொன்னார்: "ஏன் தகடூரார் கங்காபுரியை ஆளட்டுமே."

'ஹி ஹி' என்று கூச்சல் எழுந்தது, மற்ற குறுநில மன்னர் களிடமிருந்து.

## 57. இராசேந்திரனுக்கு அழைப்பு

ஒவ்வொரு வார்த்தையும் அத்திமல்லர் கூறும்போது குறுநில மன்னர்கள் எதிர்த்தனர். அவர்களால் ஒன்றுபட்டு எதும் முடிவு செய்ய இயலவில்லை. அவர்கள் போக்கிலேயே எல்லாம் முடிவு ஆகட்டும் என்று மௌனமாயிருந்தார் சற்று நேரம். சோழ நாட்டைப் பிரித்துக் கொள்வதில் உடன்பாடு வந்தும் கங்கா புரியிலுள்ள பொக்கிஷத்தை யார் அடைவது என்பதில் ஒருவருக் கும் உடன்பாடு ஏற்படவில்லை.

"அத்திமல்லரே, இப்படி மௌனமாயிருந்துவிட்டால், நடப்பது எப்படி?" என்றார் கொங்கு வேளிர்.

"நான் என்ன செய்ய முடியும், நான் யோசனைதான் கூறலாம். உங்களை ஒப்புக்கொள்ளக் கட்டாயப்படுத்த முடியுமா?" என்றார்.

அத்திமல்லரது வார்த்தை ஒவ்வொன்றும் சீயகங்கனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. சோழ நாட்டிற்குக் கப்பம் செலுத்தாத சிற்றரசாக வேண்டும் எனும் துடிப்பு அவனைத் துள்ளச் செய்தது. அவன் ஆத்திரத்துடன் கூறினான்: "அத்திமல்லர் ஒரு நாளும் நம்மை ஆதரிக்க மாட்டார். அவர் பரம்பரை சோழ குலத்துடன் கொள்வினை கொடுப்பினை கொண்டிருக்கிறது. பழைய அன்பு எப்படி மாறும்? ஒரு வேளை நம்மையெல்லாம் வாயை மூடி இருக்கச் சொல்லிவிட்டுத் தானே சிங்காசனத்தில் அமர்ந்தாலும் அமர்ந்து விடுவார்" என்றான்.

அத்திமல்லர் அமைதியாக, "ஆமாம், சோழர்குல நலன்தான் என் நலனும். நீங்கள் எல்லாம் எந்தக் காரணத்திற்காக புரட்சி செய்யத் திட்டமிட்டுள்ளீர்? சோழ நாட்டை ஆளத் தக்க வாரிசு இல்லையென்ற எண்ணத்தில்தானே? ஆனால் எப்படியோ தக்க வாரிசை நியமித்து உயில் எழுதியுள்ளார் மன்னர். அதன்படி நடக்க வேண்டியதுதானே?" என்றார்.

"மன்னர் எந்த முடிவு கூறினாலும் நான் கட்டுப்பட ஆயத்தமாயிருக்கிறேன். மன்னரைத்தான் காணமுடியவில்லையே" என்றார் தகடூரார்.

"அதற்காகத்தானே ஓடோடி வந்தேன். வேளக்காரப் படையினர் இந்த நேரத்தில் மன்னரைப் பாதுகாத்திருப்பர். நாம் நேரே மாளிகைக்குப் போய் மன்னரைக் காண்போம்" என்றார் அத்திமல்லர்.

எல்லாரும் ஆமோதித்தனர். மாளிகை நோக்கி சிற்றரசர்கள் அனைவரும் விரைந்து சென்றனர். அத்திமல்லர் கூறியபடி மாளிகையின் துரோகிக் காவலர்களை வென்று, வேளக்காரப் படையினர் முக்கிய இடங்களில் காவல் புரிந்து நின்றனர்.

ஆனால், மன்னர் இதுவரை படுத்திருந்த இடத்திலிருந்து அழுகுரல் எழுந்து கொண்டிருந்தது. சோழ குலத்துக் கடைசி விளக்கு, விஜயாலய சோழர் ஏற்றி வைத்த வீர விளக்கு அணைந்து விட்டது. இவ்வளவு நாள் வரை உயிருக்கு மன்றாடிக் கொண்டு ஒரு வார்த்தைகூடப் பேசாது இருந்த அதிராசேந்திர சோழ தேவர் சுவர்க்கஸ்தராகி விட்டார்.



ஆனால் இறக்கும்போது அவர்கள் எதிரே வேளக்காரப் படையின் தலைவர் வேலன் அமுதன் நின்று, வாள் எடுத்து வணங்கி நின்றதைக் கண்டு, சோழ நாட்டிற்கு இனி ஆபத்து இல்லை என்பதறிந்து அமைதியாக உயிர் நீத்தார். அந்தத் துக்கச் செய்தியைக் கேட்க, மன்னரின் உயிரற்ற சடலத்தை, பார்க்கவே அவர்கள் வந்தனர். அத்திமல்லர் கண்களிலிருந்து நீர் ஆறாய் பெருகியது.

மன்னர் இறந்து நாள்கள் பல பறந்து கொண்டிருந்தன. கங்கை கொண்ட சோழபுரத்துக் குழப்பம் தீர்ந்தபாடில்லை. மன்னர் இல்லாத நாடாக சோழநாடு திகழ்ந்தது. வடங்கை, இடங்கைப் படைகள் மோதிக்கொண்டன. பாண்டியப் படைகள் எல்லையிலே படையெடுத்து கிராமங்களைச் சூறையாடின. மதுராந்தகி கிடைக்காததால் மனம் உடைந்த இரணதீரன், பொல்லாதவர்களைச் சேர்த்துக் கொண்டு நெற்களஞ்சியங்களைக் கொள்ளையடிக்கலானான். அவனைத் தடுத்து நிறுத்த தக்க ஆட்கள் இல்லை.

இந்த நிலையில் கவலை மிகக் கொண்ட குறுநில மன்னர்கள் திகைத்தனர். திடுக்கிட்டனர். என்ன செய்வது என்று ஆலோசித்தவாறிருந்தனர். அத்திமல்லரிடம் விரைந்து வந்தனர்.

"ஏதாவது செய்தாக வேண்டும்" என்றனர்.

"என்ன செய்ய முடியும். இந்த நிலையில் தக்கவரை அரியணையில் ஏற்றி அமர வைக்க வேண்டும். அது ஒன்றே சரியான வழி."

"யாரைத் தேர்ந்தெடுப்பது?"

"காஞ்சியில் இருக்கிறாரே, மதுராந்தகன்... அவரை அரசராக ஏற்போம்?"

"காஞ்சியில் எங்கே இருக்கிறார். எல்லாம் இங்கேதான் இருக்கிறார். நடந்த கலகங்களுக்கு அவரே முழுப்பொறுப்பு. மேலும் காலஞ்சென்ற மன்னரின் கருத்துக்கு அது ஏற்றதில்லை."

"மன்னர் என்ன எழுதியிருக்கிறார்? அது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"அவர் உயில் என்னிடம் இருக்கிறது" அத்திமல்லர் இவ்வாறு கூறியவுடன், அனைவரும் திகைத்தனர். அத்திமல்லரை ஒருவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை. மன்னரின் உயிலை முன்பே தெரிந்து, அதைத் தன்னிடம் எடுத்து வைத்திருக்கும் அவர், ஏன் இப்படிச் சதிக் கூட்டங்களிலே கலந்து கொண்டார் என்று எல்லாரும் வியப்படைந்தனர்.

"நீங்களெல்லாம் திகைப்பீர்கள் என்று தெரியும். முதலிலேயே யாரை அடுத்து வரும் பட்டத்து உரிமையாளராக மன்னர் நியமித்திருக்கிறார் என்று நான் அறிவேன். ஆரம்பத்திலேயே சொன்னால் நீங்கள் ஒப்புக்கொள்ள மாட்டீர்கள். உங்கள் வழிப் படியே எல்லாவற்றையும் நடைபெற வைத்துக் கடைசியாகக் கூற முடிவு செய்தேன்" என்று கூறி மன்னரின் உயிலைக் காட்டினார் அத்திமல்லர்.

அதில் குறிப்பிட்டுள்ளவற்றைப் படித்த சிற்றரசர்கள் அனைவரும் வியந்தனர்.

"இராசேந்திரன், இராசேந்திரன்-அம்மங்கை தேவியின் மகன். இளவரசர் எங்கே இருக்கிறார். இவ்வளவு நாள் எங்கே எங்கே இருந்தார்... இப்போதே அவரைத் தேடி அழைத்து வருவோம்" என்று தகடூரார் பரபரப்புடன் பேசினார்.

அத்திமல்லர் அமைதியுடன், "நாம் அவசரப்பட்டால் ஏதும் நடக்காது. இராசேந்திரன் வேங்கியில் இருந்தான். நாம் எல்லாரும் ஒருமுகமாக வேண்டினால் ஒரு வேளை வரலாம். ஓர் ஓலை எழுதி அதில் அனைவரும் கையெழுத்திட்டு அனுப்புவோம். கீழைச் சாளுக்கிய நாட்டின் அரசரான அவர், நமது வேண்டுகோளை ஏற்கும் வகையில் எழுதுவோம்" என்றார் அத்திமல்லர்.

அனைவரும் மௌனமாகவே இருந்தனர். சீயகங்கன் மட்டும் சீற்றத்துடன், "இங்கே ஒருவரும் கிடைக்காமலா வேங்கிக்கு ஓடவேண்டும்...... அத்திமல்லரின் வார்த்தைகளில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது" என்றான்.

"ஏன். வேண்டுமென்றால் நீங்களே சோழ சக்கரவர்த்தியாக அமருங்களேன். நான் தடுக்கவில்லை" என்றார் அத்திமல்லர்.

மற்ற சிற்றரசர்கள் 'கொல்'லென்று நகைத்தனர். சீயகங்கனுக்கு ஆத்திரம் பொங்கியது. அங்கிருந்து எழுந்து வெளியேறி விட்டான்.



மற்றவர்கள் ஒன்றுகூடியோசித்தனர். இராசேந்திரனைக் கங்காபுரிக்கு வரவழைப்பது என்று முடிவு செய்தனர். அந்த ஓலையை யார் எடுத்துச் செல்வது என்ற பெரும் பிரச்னை எழுந்தது. கடைசியில் அத்திமல்லர் மீதுதான் அந்தப் பொறுப்பும் விழுந்தது.

வேங்கியை நோக்கி இப்போது இருவர் பயணமாயினர். காளிங்கன் சில நாள்களுக்கு முன்பே மதுராந்தகியின் செய்தியுடன் புறப்பட்டுச் சென்றான். இப்போது அத்திமல்லர். மதுராந்தகியின் செய்தியுடன் புறப்பட்ட காளிங்கன், தன்னுடன் வந்த இரணதீரனை வடபெண்ணை ஆற்றங்கரையில் எளிதில் ஏமாற்றிவிட்டு அவன் குதிரையைப் பறித்துக் கொண்டு பறந்தான். ஆனால் இவர்கள் எல்லாம் செல்லும் முன்பு வேங்கியில் எதிர்பாராத மாறுதல்கள் பல நேர்ந்திருந்தன.

## 58. எதிர்பாராத முடிவு

இளவரசுப் பட்டம் சூட்டும் நாளன்று சத்திவர்மனை காணாது விசயாதித்தன் தவித்தான். ஆத்திரமும், பரபரப்பும் அவனிடம் சூழ்ந்து நின்றன.

சபை மண்டபத்துக்குச் சிலர் பரபரப்புடன் ஓடி வந்தனர். அவர்கள் கூறிய செய்தி கேட்டு விசயாதித்தன் தலை சுழல அங்கேயே வீழ்ந்து மூர்ச்சையானான். 'காட்டில் வேட்டையாடச் சென்றிருந்த சத்திவர்மனை காட்டு யானை ஒன்று தாக்கிக் கொன்று விட்டது' என்ற செய்தி அனைவரையும் திடுக்கிடச் செய்தது. காட்டிலே முடிசூடிக் கொண்டு, தாயை வணங்க வந்த இராசேந்திரனையும் இந்தச் செய்தி திகைக்க வைத்தது. ஆனால் தாயை அவன் வணங்கி நின்றபோது, அம்மங்கைதேவி அவனை அரசருக்கான உடையுடனும் தலையில் மகுடத்துடனும் கண்டு வியந்தாள்.

"இதெல்லாம் என்ன மகனே?"

"மக்கள் எல்லாம் சேர்ந்து எனக்கு மகுடாபிஷேகம் செய்து வைத்தனர். குலோத்துங்கன் எனப் பட்டமும் சூட்டினர், தாயே......"

மகன் கூறியது கேட்டுச் சற்று நேரம் மௌனமாயிருந்தாள் அம்மங்கை. பிறகு கோபத்துடன், "இதுபோல் இரகசியமாக மகுட மணிவது எனக்குப் பிடிக்கவில்லை. இப்படிக் கோழையைப் போன்று காட்டிலே முடிசூடிக் கொள்வது வீரப் பரம்பரைக்கு ஏற்ற தில்லை?..."

தாயின் இந்தச் சொற்கள் இராசேந்திரனின் உள்ளத்தில் பெரும் வருத்தத்தை ஏற்படுத்தின. அவன் அப்போதே மகுடத் தைக் கழற்றி, "அம்மா, என்னை மன்னித்து விடுங்கள். எனக்கு இந்த நாட்டின் மகுடத்தைப் பலாத்காரமாக அடைய ஆசை யில்லை. என் சிறிய தந்தையே விரும்பிக் கொடுத்தால் அல்லாது நான் ஏற்க மாட்டேன். தாங்கள் இப்படி உரிமையிழந்து, வேதனை யுடன் வாழ்கிறீர்கள் என்று ஒருகணம் தவறான பாதையில் சென்று விட்டேன்......" என்று அவன் கூறும்போது, அம்மங்கை குறுக்கிட்டு, "மகனே, உன் உரிமையை நீ பெற வேண்டும் என்று நான்தான் உனக்குக் கட்டளையிட்டேன். ஆனால் இப்படி ரகசிய மாக அடைய முயலச் சொல்லவில்லையே" என்றாள்.

இராசேந்திரன் நிமிர்ந்து நின்று, "தாயே புரிந்து கொண்டேன். மகுடத்துடன் என் சிறிய தந்தையிடம் செல்வேன். இதே மகுடத்தை அவரது காலடியில் வைத்து வணங்கி உரிய மகுடத்தைக் கேட்பேன். இல்லாவிடில் வாளெடுத்துப் போர் புரிவேன். வெற்றி கிடைத்தால் சரி, இல்லாவிடில் வீரசுவர்க்கம் அடைவேன்..." என்று கூறி விசயாதித்தனிடம் விரைந்தான்.

இராசேந்திரன் விசயாதித்தனிடம் செல்லும் முன்பே வழியி லேயே சத்திவர்மனுக்கு நேர்ந்த முடிவு தெரிந்தது. இராசேந்திர னால் ஓரடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. சகோதர பாசம் அவன் உடலைத் துடிக்க வைத்தது. வருத்தமும் மேலிடத் தன் சிறிய தந்தையிடம் சென்றான்.

நேர்மாறான எண்ணம்கொண்ட இருவரும் சந்தித்துக் கொண்டனர். விசயாதித்தன் கண்ணிலிருந்து நீர் ஆறாய்ப் பெருகியது. இராசேந்திரன் கண்களில் நீர் தளும்பியது.

இராசேந்திரன், தன் கரத்திலிருந்த மகுடத்தை அவர் காலடியில் வைத்து தலை குனிந்து சொல்வதறியாது நின்றான். அவன் சொல்ல வந்தது வேறு, சொன்னதோ-

"தந்தையே! தங்களுக்கு எதிர்பாராது நேர்ந்துவிட்ட துயரம் என் உள்ளத்தையும் வாட்டுகிறது. இந்தத் துயரச் செய்தியின்



போது நானும் ஏதாவது கூறித் தங்கள் இதயத்தைப் புண்படுத்த விரும்பவில்லை. நான் இரகசியமாக மகுடம் அணிந்து கொண் டதை என் தாய் ஏற்கவில்லை. இதோ தங்கள் காலடியில் மகுடத்தை வைத்து விட்டேன்" என்றான்.

விசயாதித்தன், இராசேந்திரனைத் தாவி அணைத்துக் கொண்டு, "இராசேந்திரா... காட்டிலே உனக்கு மகுடம் சூட்ட முனைகிறார்கள் என்பதை நான் கேள்விப்பட்டேன். குலோத்துங்கன் எனப் பெயரும் உனக்கு அளித்ததாக அறிந்தேன். நாட்டிலே, அழகிய அரண்மனையில் நடக்க வேண்டிய அந்த விழா இப்படிக் காட்டிலே நடைபெறுவதற்கு நான் அன்றோ காரணம். உன் தாய் மகா உத்தமி. நான் வாக்கு மீறிய துரோகி. ஆண்டவன் என்னைத் தண்டித்து விட்டார். உனது உரிமையைப் பறித்து, உனக்கும் முடிவு நேரிட வேண்டும் என்று எண்ணிய எனக்குத் தண்டனை கிடைத்து விட்டது. நான் யாருக்காக இதுவரை பாடுபட்டு நாட் டாசை பிடித்து அலைந்தேனோ, அவன் என்னை விட்டுப் போய் விட்டான். இனி எதற்கு வாழ்வு? இராசேந்திரா, குலோத்துங்கன் என்று உனக்குச் சூட்டப்பட்ட பெயர் மிகப் பொருத்தமானது. கீழைச் சாளுக்கிய நாட்டைக் காப்பாற்ற வந்தவன் நீ. உன்னால் தான் இந்த நாடு வாழ வேண்டும். இந்தா, மகுடத்தை எடுத்துக் கொள். நானே முன்நின்று கோலாகலமாக விழா ஏற்படுத்தி மகுடாபிஷேகம் செய்து வைக்கிறேன். கண்ணீரைத் துடைத்துக் கொள்" என்றான்.

இராசேந்திரன், உடனே மகுடத்தைப் பெற்றுக் கொள்ள வில்லை. அவன் செய்த சபதம் பெரும் வியப்பை அளித்தது.

## 59. குலோத்துங்கன் சபதம்

இராசேந்திரன் கூறியவற்றைக் கேட்டு விசயாதித்தன் திடுக்கிட்டான்.

"தந்தையே! ஆம்; நீங்கள்தான் இப்போது தந்தை. தந்தை என்று அழைக்கும் அருமை மகனை அற்ப ஆயுளில் பறிகொடுத்து நிற்கும் தங்களை அவ்வாறு அழைக்கும் தகுதிமுறை எனக்குத் தானே இருக்கிறது. தந்தையே! தங்கள் மனத்தை நோகச் செய் திருந்தால் பொறுத்தருளுங்கள். வேங்கி நாட்டைப் பெற வேண்

டும் என்றுதான் வந்தேன். ஆனால் இப்போது என் மனம் மாறி விட்டது. அருமை மகனை இழந்து நிற்கும் தங்களுக்கு மேலும் வருத்தத்தை உண்டு பண்ண விரும்பவில்லை. நான் ஒரு சபதம் செய்து விட்டேன். உறுதிபூண்டு விட்டேன். தங்களுக்கு எவ்வளவு நாள் கீழைச் சாளுக்கிய நாட்டை ஆள வேண்டும் எனும் ஆசையும் ஆர்வமும் இருக்கின்றனவோ அதுவரையில் இந்த நாட்டைத் தாங்கள் ஆள்வதற்கு நான் விட்டுக் கொடுக்க முடிவு செய்து விட்டேன். தங்களுக்குப் பிறகுதான் நான் பட்டம் சூடுவேன். இது உறுதி; அதனால் நான் இங்கிருந்து போகிறேன். நாட்டைச் சிறப்பாக ஆளுங்கள்'' என்று கூறிவிட்டு இராசேந்திரன் அங்கிருந்து மெல்ல நகர்ந்தான்.

''இராசேந்திரா! குலோத்துங்கா! என்ன வார்த்தை கூறி விட்டாய். என்ன சபதம் செய்து விட்டாய். என் இதயம் இதைத் தாங்காது குலோத்துங்கா... குலோத்துங்கா...'' என்று கூவிக் கொண்டே ஓடி வந்தான் விசயாதித்தன். இராசேந்திரன் குதிரை மீது ஏறி விரைந்தான். எங்கே செல்கின்றோமென்ற எண்ணமே இல்லாது சென்றான். இனி அவன் இப்போது வேங்கிக்கு வர மாட்டான்.

வழியில்தான் காளிங்கன் இராசேந்திரனைச் சந்தித்து விட்டான்.

''மகாராசா...''

''அடடா... யார் காளியா? இவ்வளவு தொலைவு எங்கே வந்து விட்டாய். என்ன நேர்ந்துவிட்டது? காடு மலை கடந்து என்னைத் தேடி வந்து விட்டாயா?'' என்று இராசேந்திரன் பரபரப்புடன் கேட்டான். காளிங்கன் நடந்த செய்தி முழுமையும் ஒன்றுவிடாமல் கூறினான்.

மதுராந்தகிக்கு ஆபத்து என்றவுடன் குலோத்துங்கனால் மௌனமாயிருக்க முடியவில்லை. ''காளி! நான் ஏதோ சிந்தனையில் எங்கோ செல்லப் புறப்பட்டேன். ஆனால் என் மனம் மாறி விட்டது. தஞ்சைக்கு இப்போதே விரைவேன். மதுராந்தகிக்கு ஏற்பட்ட இடர் எதுவாயினும் தீர்ப்பேன். அவளை மணக்க முன்வரும் எவரையும் முறியடிக்காது நான் வாளை உறையில் போட மாட்டேன். சில நாள்களுக்கு முன்புதான் ஒரு சபதம் செய்தேன். இது அடுத்த சபதம்'' என்றான்.



காளிங்கன் யாத்திரை வெற்றிகரமாக முடிந்தது. காளிங்கனும், இராசேந்திரனும் குதிரையில் விரைந்தனர்.

இராசேந்திரனுக்குச் சிற்றரசர்கள் எழுதிய ஓலையை எடுத்துக் கொண்ட அத்திமல்லர் புறப்பட்டுச் சிறிது தொலைவு கூடப் போயிருக்கமாட்டார். சீயகங்கன் அவரைப் பின் தொடர்ந்தான். கதிரவன் மறைந்து இருள் சூழும் சமயத்தில் வழியே மறைந்திருந்து சுருள் கத்தியால் அத்திமல்லரை நோக்கி வீசினான். அந்தக் கத்தி அத்திமல்லரின் முதுகில் ஆழமாகப் பாய்ந்தது. அவர் சுருண்டு வீழ்ந்தார். சீயகங்கன் சிற்றரசர்கள் எழுதிய ஓலையை எடுத்துக் கொண்டு ஓடி மறைந்தான்.

அத்திமல்லர் கொலை செய்யப்பட்ட செய்தி காட்டுத் தீ போல அனைவர் செவியிலும் எட்டியது. எல்லாரும் அடைந்த துயரத்திற்கு எல்லையேயில்லை. காஞ்சிபுரம் வந்தடைந்த இராசேந்திரன் செவியிலும் அந்தத் துக்கச் செய்தி எட்டியது. இராசேந்திரன் அடங்கா சினம் கொண்டான்.

''காளிங்கா... தஞ்சைக்குச் செல்வதைவிட இப்போதே கங்காபுரிக்குச் செல்வோம். அங்குள்ள சிற்றரசர்கள் ஒவ்வொருவரையும் சித்திரவதை செய்வோம். அவர்கள் பல மாதங்களாகச் செய்து வந்த சூழ்ச்சி, ஓர் உத்தமர் உயிரைக் குடி கொண்டு விட்டது. சோழ நாட்டைப் பலப்படுத்த அந்த உத்தமர் செய்த சேவை மகத்தானது. அவர் எனக்காக எவ்வளவோ பாடுபட்டார். அமரரான அவர் பெயரால், என் தாயின் பெயரால், இந்தப் பொன்னி நாட்டின் உயர்வுக்காக உயிர் நீத்த உத்தமன் பெயரால், நான் சபதம் செய்கிறேன்: சோழ நாட்டினின்று சூழ்ச்சிக்காரர்களையும், கொலைகாரர்களையும், வெறியர்களையும் ஓட்டி ஒழிக்காது நான் உறங்கமாட்டேன். புறப்படு காளிங்கா! உணவு கொள்ளாது, உறக்கம் கொள்ளாது, கங்காபுரிக்குப் பறப்போம். இந்த வாளுக்கு நல்ல விருந்து கொடுக்கிறேன்'' என்று முழங்கினான்.

''மகாராசா, இது மூன்றாவது சபதம்'' என்றான் காளிங்கன்.

''ஆம், இது முக்கியமான சபதம்'' என்றான் இராசேந்திரன்.

கங்காபுரிக் கோட்டைக்குள் இராசேந்திரன் நுழையும்போது பெரும் அதிசயம் நடந்தது. கோட்டை வாயிலில் தகடூராரும், வேளக்காரப் படைத் தலைவர் அமுதனாரும் காத்திருந்தனர்.

"வருக, வருக, சோழ நாட்டு மன்னரே வருக, வருக" என்று தகடூரார் வரவேற்றார். ஆனால் இராசேந்திரன் அவரை ஏறிட்டுப் பார்க்கவில்லை. குதிரை மீது மிகக் கம்பீரமாக உருவிய வாளுடன் சென்று கொண்டிருந்தான். அவன் நோக்கமெல்லாம் சிற்றரசர்கள் தங்கியிருந்த மண்டபத்திலேயே இருந்தது.

தகடூராருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவரும் விரைந்து மற்ற சிற்றரசர்கள் தங்கியிருக்குமிடம் நோக்கிச் சென்றார்.

இராசேந்திரன் மண்டபத்திற்குள் பளபளக்கும் வாளுடன் சீறிக் கொண்டே நுழைந்து, "அத்திமல்லரைக் கொல்லும் துணிவு கொண்டவர் என் எதிரே வரட்டும், என் வாளுக்குப் பதில் சொல்லட்டும். கோழைத்தனமாக அவரை முதுகில் தாக்கியவர், இந்த வாளுக்கு எதிரே நிற்கட்டும்" என்று கர்ஜித்தான்.

அதற்குள் தகடூரார் அங்கே வந்து விட்டார். இராசேந்திரன் வந்து விட்ட செய்தி கேட்டு வெளியே மக்கள் கூடினர். ஆரவாரம் செய்தனர்.

"இராசேந்திர சோழர் வாழ்க!"

"சோழ குலம் காக்க வந்த உத்தமர் வாழ்க! வாழ்க!" என்ற வாழ்த்தொலிகள் விண் அதிர முழங்கின. தகடூரார் இராசேந்திரனை நெருங்கி, "அத்திமல்லர் இறந்ததில் எங்கள் எல்லாருக்கும் ஏற்பட்ட வருத்தம் எல்லையற்றது. அவரைக் கொன்ற மாபாவியை நாங்கள் அறிவோம். அவனுக்குத் தண்டனை கொடுக்க சோழ அரியணையில் தக்கவர் வீற்றிருக்க வேண்டுமே. தாங்கள்தான் ஏற்றவர் என்று நாங்கள் முடிவு செய்தோம். எங்களை ஒருமுகமாக அந்த முடிவுக்கு வரச் செய்தவர் அத்திமல்லர்தாம். ஆனால் அவர் இருந்து, தங்கள் மகுடாபிஷேகத்தைக் காணக் கொடுத்து வைக்க வில்லை. ஆனால் எங்கள் மனம் மாறிவிட்டது. சோழ நாட்டைத் துண்டாட நினைத்ததற்கு எந்தத் தண்டனைக் கொடுத்தாலும் ஏற்க சித்தமாயிருக்கிறோம்... கருணை கூர்ந்து கோபம்விட்டுச் சோழ நாட்டின் பரம்பரை அரியணையில் ஏறி, நாட்டின் நற் பெயரை வளர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

இராசேந்திரன் முடியாது என்பதற்கு அடையாளமாகத் தலையை பலமாக அசைத்து, "இந்த நாட்டை ஆள்வதற்காக



நான் வேங்கியினின்று வரவில்லை. அந்த நாட்டு அரியணையைத் துறந்து சபதம் செய்து வந்திருக்கும் என் எதிரே இருபெரும் கடமைகள் உள்ளன. சோழர் குலக் கொடியைத் தஞ்சைக்கு அனுப்பி வருந்துமாறு செய்து விட்டீர்கள். அவளைப் பலவந்தமாக மணக்க முற்படுவோனை முறியடிப்பது என் முதல் கடமை. அத்திமல்லரைக் கொன்றவரைப் பூண்டோடு அழிப்பது இரண்டாவது கடமை. இதை முடித்து விட்டுத்தான் எனக்கு மறுவேலை, வேளக்காரப் படைத் தலைவர் எங்கே? மன்னர் உயிரைக் காப்பதாகச் சபதம் ஏற்றிருந்த அந்தப் படை வீரர்கள் எங்கே?" என்று முழங்கினான். வேளக்காரப் படைத் தலைவர் வந்து வணங்கி நின்றார்.

"ஐயா, வேளக்காரப் படை வீரத் தலைவரே! சோழரைக் கொன்றவரைக் கண்டுபிடித்துத் தண்டனை தரவேண்டுமா? வாரும் என்னுடன். உடனே கொலைகாரரைத் தேடிக் கொண்டு வந்து கங்காபுரியின் நாற்சந்தியில் நிறுத்துவோம்" என்றான்.

சிற்றரசர்கள் ஏதும் கூற முடியாமல் அமர்ந்திருந்தனர். வெளியே மக்கள் வாழ்த்தொலி அதிகமாகியது. அப்போது வாயில் கதவருகே ஏதோ பரபரப்பு ஏற்பட்டது. தாடி மீசையுடன் முண்டாசு அணிந்த ஓர் உருவம் தள்ளாடியவாறு நடந்து வந்தது.

"குலோத்துங்கா, உன்னைவிட வயதில் பெரியவர்களான சிற்றரசர்களின் சொற்படிக் கேள். சோழ அரியணை உனக்காகக் காத்திருக்கிறது. அந்தப் புனிதமான இடத்தில் அமர்ந்து நீ ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன. அமரராகிவிட்ட அதிராசேந்திர சோழ தேவர் உனக்குக் கட்டளையிட்டுச் சென்றுள்ளார். தாமதம் செய்ய நேரமில்லை. பாண்டியர் படைகள் எல்லையைக் கடக்கத் திட்டமிட்டுள்ளன. உடனே மாளிகைக்குப் புறப்பட்டுச் செல்..." என்றார்.

அந்தக் கூட்டத்தில் கூடியிருந்த சிற்றரசர்கள், இராசேந்திரனை நோக்கி இவ்வளவு உரிமையுடன் கூறுபவர் யார் என்று வியப்புடன் நோக்கினர்.

இராசேந்திரன் வந்தவரை அடையாளம் புரிந்து கொண்டு விட்டான். ஒரேகணம். மறுகணம், "பாட்டா... நீங்களா?" என்று கூவிக்கொண்டே ஓடி அவரைத் தழுவிக் கொண்டான்.

அவன் உடலில் ஏற்பட்ட பரபரப்பும், அவன் கண்களில் ததும்பிய நீரும், அவர் முதுகைத் தடவியும், அவர் கரங்களை எடுத்து கண்ணில் ஒத்திக் கொண்டும் செய்த செய்கை எல்லாரையும் மேலும் வியப்பில் ஆழ்த்தியது.

"பாட்டா, எனக்கு இப்போதுதான் உயிர் வந்தது."

"எனக்கு முன்பே வந்துவிட்டது" என்று கூறி, தாடி மீசையைக் களைந்தார் அத்திமல்லர்.

அந்தச் சபை மண்டபத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. குறை ஏதும் இல்லாது நிறைந்த மனத்துடன் எல்லாரும் நிமிர்ந்து நின்றனர். "குலோத்துங்க மன்னர் வாழ்க!" என்ற கோஷம் வானைப் பிளந்தது.

## 60. வாழ்க மாமன்னர்!

இந்தச் சரித்திரப் புதினத்தை, ஆரம்பித்த இடத்துக்கு வந்தே முடிக்கவும் நேர்கிறது. சோழ கங்கப் பேரேரி எந்த மாறுதலையும் அறியாதது போல் தனது அலைக்கரங்களைக் கரையிலே தவழவிட்டு விளையாடிக் கொண்டிருந்தது.

அந்த அழகிய ராஜ ஹம்ஸப் படகு ஒன்று சென்று கொண்டிருந்தது. அடடே! அதை ஓட்டுபவன் யார்? அடையாளம் தெரியவில்லையே? காளிங்கன்தான். நல்ல வண்ண விசித்திரமாக உடை உடுத்தியிருந்தான். படகிலே அத்திமல்லருடன், இராசேந்திரனும் அமர்ந்திருந்தான். அவர்களுடன் இரண்டு ஓவியர்களும், மற்றப் பணியாட்களும் இருந்தனர். மறுகரையிலிருந்த சித்திர மண்டபத்திலுள்ள அழகிய ஓவியங்களில் விட்ட இடத்தினின்று தீட்டுவதற்காக இராசேந்திரன் ஓவியர்களை உடன் அழைத்து வந்திருந்தான். "இராசேந்திரா-இல்லை, இல்லை-குலோத்துங்கா-அப்படித்தானே அழைக்க வேண்டும்... நாள் குறித்தாகி விட்டது முடிசூட்டு விழாவிற்கு. நீ எங்கே சம்மதிக்காமல் இருந்து விடுவாயோ என்று நான் பயந்துவிட்டேன்..." என்றார் அத்திமல்லர்.

அத்திமல்லர் பிழைத்து வந்ததே பெருங்கதை. ஓலையை எடுத்துக் கொண்டு வேங்கிக்குச் செல்கிறேன் என்று புறப்பட்டவர், வழியிலே வேறு ஆளை நியமித்து விட்டுத் திருக்கோவலூருக்குப் போய் விட்டார். அத்திமல்லர் என்று எண்ணி சீயகங்கன் வேறு ஒருவரைக் குத்திவிட்டான்-அத்திமல்லரும் உடனே உண்மையை வெளிப்படுத்தாமல், பிறகு தக்க சமயத்தில் தெரிவித்தார். சிற்றரசர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்து, அவர்கள் அனைவரையும் இராசேந்திரன் எதிரே ஒருமனதாக மன்னரென ஒப்புக்கொள்ளச் செய்த பிறகே சுய உருவத்தை வெளிப்படுத்தினார்.



கங்கை கொண்ட சோழபுரத்தில் மக்கள் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. இராசேந்திர சோழனைக் காண்பவர்கள், கங்கை கொண்ட சோழனைப் பார்ப்பது போலவே இருப்பதாகப் பேசிக் கொண்டனர். தஞ்சைக்குச் சென்ற மாளிகைப் பெண்கள் அனைவரும் குதூகலத்துடன் திரும்பி வந்து விட்டனர். எப்போது கங்கை கொண்ட சோழபுரம் அடைவோம் என்ற துடிப்பிலேயே சிவிகை யில் திரும்பி வந்து கொண்டிருந்தாள் மதுராந்தகி.

கங்கபீமன், சந்திரகுமாரியைச் சந்தித்துப் பயமுறுத்திச் சென்ற அன்று இரவே ஆடவல்லானிடம் சந்திரகுமாரி, மறுநாளே அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விடவேண்டும் என்று வற்புறுத்தினாள். ஆடவல்லானுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. சந்திரகுமாரிடன் வேறு எங்காவது சென்று மகிழ்ச்சியுடன் வாழத் துடித்தான். மறுநாள் பொழுது புலராமுன்னம் தாயிடம் சொல்லிக் கொள்ளாமல் இருவரும் ஏரிக்கரையை நோக்கிப் புறப்பட்டனர். அங்கிருந்து படகில் ஏறித் தப்பிச் சென்றுவிடுவது என்பது அவர்கள் எண்ணம். படகில் படகோட்டி ஒருவன் முக்காடிட்டு அமர்ந்திருந்தான். படகு புறப்பட்ட பிறகு, மெல்லிய பொழுது புலரத் தொடங்கிய பிறகுதான், ஓட்டுபவன் கங்கபீமன் என்பது சந்திரகுமாரிக்கும், ஆடவல்லானுக்கும் தெரிய வந்தது. பிறகு என்ன நடந்தது என்று சொல்லத் தேவையில்லை. நடு ஏரியில் ஆடவல்லானும், கங்கபீமனும் முஷ்டி யுத்தம் புரிந்தனர். படகு ஆடியது; கவிழ்ந்தது.

காளிங்கன் அந்த இடத்தைச் சுட்டிக் காட்டினான் இராசேந்திரனிடம். இராசேந்திரன் மறைந்த ஆடவல்லானுக்கும் சந்திரகுமாரிக்காகவும் இரு சொட்டுக் கண்ணீர் விட்டான்.

"இந்த நாட்டிற்காக எவ்வளவோ பேர் செய்த தியாகம் மகத்தானது. என் கண் எதிரே சந்திரகுமாரி ஆடுவது போன்ற பிரமை ஏற்படுகிறது. அவள் நினைவாக சித்திர மண்டபத்தில் ஓவியமொன்று தீட்டவேண்டும். இந்த நாட்டில் நாட்டியக் கலை உயர வழி செய்ய வேண்டும்" என்றான்.

அத்திமல்லரும் தியாகிகள் இருவரின் சேவையைப் போற்றிவிட்டு, இராசேந்திரன் துயர நினைவை மாற்ற விரும்பி, "குலோத்துங்கா, என் சபதம் அனைத்தும் நிறைவேறிவிட்டன. பட்டம் ஏறும் முன்பு திருமணம் முடிந்து விடவேண்டும். உன்னுடன் அரியணையில் அமர மதுராந்தகியைவிட வேறு யாருக்குத் தகுதி? திருமணத்தைப் பற்றி நான் மறந்தே விட்டேன், அதற்கும் நாள் நிச்சயிக்க வேண்டும்" என்றார்.

இராசேந்திரன் நாணமுற்று முகத்தைத் திருப்பிக் கொண்டான். காளிங்கன் துடுப்பை இன்னும் வேகமாகப் போட்டுக் கொண்டு பாடினான்.

*வானத்தின் மீதேறி எங்கள் மாமன்னருக்கு*
*வரிசைகள் கொண்டு வருவோம்.*
*கூனப் பிறையடைந்து மாமன்னரின்-புலிக்*
*கொடியை நாட்டி வருவோம்!*

அந்தப் பாடல் திக்குத் திசையெல்லாம் பரவி "வாழ்க மகாராசா! வாழ்க குலோத்துங்க மகாராசா" என்று எதிரொலித்தது.

•

✲✲✲✲✲

CPL 703469